என் சுய சரிதை

டாக்டர்

சவரிராயன் ஏசுதாசன், எப் ஆர். சி. எஸ். இ.

எழுதியது.

திருப்பத்தூர்—வடஆற்காடு ஜில்லா

மே 1971

இரண்டாம் பதிப்பு

என் சுய சரிதை

டாக்டர்
சவரிராயன் ஏசுதாசன், எப். ஆர். சி. எஸ். இ.
எழுதியது.

திருப்பத்தூர்—வடஆற்காடு ஜில்லா

மே 1971

இரண்டாம் பதிப்பு

என் தகப்பனாரும் தாயாரும்.
(திரு. யோவான் தேவசகாயம் சவரிராய பிள்ளை அவர்களும்
திருமதி மிக்கேல் அருளம்மாள் அவர்களும்.)

பிரதிஷ்டை

என் பெற்றோருக்கு

அணிந்துரை.

பெரியண்ணன் அவர்களின் சுயசரிதைக்கு ஒருவர் அணிந்துரை எழுதுவது அர்த்தமற்றதாகவும், அவசியமற்றதாகவும் இருக்கும். அப் பெரியாரின் வாழ்க்கையை அறிந்து, அவர்களோடு பலகாலம் சம்பா ஷித்து அவர்களுடைய அரிய குறிக்கோள்களைக் கேட்டு அவற்றில் லயித் தவர்கள், பெரியண்ணனின் வாழ்க்கை என்றும் நிலையுள்ளதென்று உறுதி செய்வார்கள். பெரியண்ணன் உயிரோடிருந்த காலத்தில் அவர்கள் முக்கியப்படுத்திப் பேசின ஜீவியத்தின்நோக்கம் என்னவென்றால் "நம்முடைய ஜீவியம் மரணத்திற்குப் பின்னும் தொடர்ந்து நிலைநிற் கின்ற காரியமாதலால், பூலோகத்தில் வசிக்கும் நாட்கள் ஆயத்தப்படுத் தும் நாட்களாகவே இருக்கவேண்டும்" என்பதே. ஆகவே, அவர்களு டைய பூலோக வாழ்க்கையின் சரித்திரம் மட்டும்தான் முடிவுபெற்றது என்று கருதமுடியும். அவர்களுடைய ஜீவன் (ஆத்மா) நம்மோடும் கடவு ளோடும் சம்பந்தப்பட்டே இருக்கின்றது.

பெரியண்ணனின் வாழ்க்கையின் கடைசி பத்து ஆண்டுகள் அவர்கள் கைப்பட எழுதாமல் புத்தகம் முடிவுபெற்றிருப்பது நம் துர்பாக்கியமே. பழுத்த பழமான முதிர்ந்த பாகத்தை நாம் ருசிக்கும் பேறு பெறவில்லை. ஆசிரமத்தில் உடன்பயின்றவர்களுக்கு மட்டுமே அவர்களுடைய கடைசி கால அரும்பெரும் குணங்களை ஒருவாறு அறிந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. பெரியண்ணன் அவர்களின் மன்னிக்கும் பெருந்தன்மையும், உறுதியான விசுவாசமும், அளவற்ற அன்பும், பொறுமையும் ஒரு விசேஷ விதத்தில் விளங்கியதை ஆசிரமவாசிகள் அறிந்திருக்கிறார்கள். பெரியண் ணன் அவர்களின் பரந்த அறிவும், விரிந்த நோக்கும், ஆழ்ந்த அன்பும், அவர்கள் மறைந்த பின்னரே நமக்கு விளங்குகின்றன. அவர்கள் பிற் காலத்தில் இயற்றியப் பக்திப் பாடல்கள் நமது மனத்தை உருக்குவன வாக மட்டும் அல்லாமல், நம்மை நாம் உணர்ந்து கொள்ளும் அரிய பாடல்களாகவும் இருக்கின்றன. அவர்களுடைய அன்பின்வலைக்குள் அகப் பட்டவர்கள், அவர்களுடைய அரிய நட்பிற்கும், பராமரிப்புக்கும் ஆளாகி விடுவார்கள். எச்சமயத்தைச் சார்ந்தவராயினும், எக்குலத்தவராயினும், எந்நாட்டவராயினும், எப்பருவத்தை உடையவராயினும், அவர்கள் எல் லோரும் பெரியண்ணனின் அன்பில் ஒரே ஸ்தானத்தைப் பெற்றிருப்பார் கள். அன்பு என்ற பதத்திற்கு அவர்களுடைய ஜீவியமே அர்த்தமாக விளங்கி நின்றது. அவர்களுடைய பெயருக்கு (**இயேசுதாசன்**) தக்கன வாகவே அவர்களுடைய குணங்கள் பலவிதத்திலும் பொருத்தமானதாய் விளங்கின.

ஒருவன் தான் பெற்ற தரிசனத்திற்கும், அழைப்பிற்கும் உண்மையுள்ளவனுய் இருப்பானுயின் அவன் ஜீவியமே அவன் வம்சமாய் கருதப்படும் என்றதாத்பரியத்தை அவர்கள்அடிக்கடி கிராமமக்களிடம் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். ஒருவர் தம்முடைய மூதாதையரின் வம்சத்தை அறிந்து சொல்லக்கூடுமானுல், அது மூன்று அல்லது நான்கு தலைமுறைக்குள்ளேயே அடங்கிவிடும். ஆனுல், பல நூற்றுண்டுகளுக்குமுன் ஜீவித்து மறைந்துபோன கௌதம புத்தரையோ, பரிசுத்தபிரான்ஸிஸ் அசிஸியையோ நாம் பாராட்டி கண்ணியப்படுத்திப்பேசும்போது, அவர்களை நன்கு தெரிந்தவிதமாக பேசிக்கொள்வோம் என்று பெரியண்ணன் சொல்லுவார்கள். பரிசுத்தவான்களின் ஜீவியம் அழியாத வம்சத்தைப்பெற்றுநிலைக்கும் என்பதை வற்புறுத்தி ஆசிரம வைத்தியசாலை மண்டபத்தில் பெரியண்ணன் அவர்கள் கிராமத்தாரிடம் தெளிவாக எடுத்துப் பேசுவதுண்டு. இத்தகைய கருத்தைக்கொண்டு ஜீவியம் செய்தவர்கள் எவ்விதத்திலும் மறைந்துபோனவர்களாக ஆகமாட்டார்கள்.

பெரியண்ணனின் சுயசரிதையை இரண்டாம் பதிப்பாக அச்சிட்டு வெளியிடுவது, மேற்சொன்ன உண்மைகளுக்குத் தக்க சான்றுகும். அநேகர் விரும்பிகேட்டுக் கொண்டதன்பேரில், இந்த இரண்டாம் பதிப்பு அச்சிடப்படுகிறது. முதற்பதிப்பில் காணப்படும் சில புகைப்படங்களின் பிளாக்குகள் கிடைக்காமற் போனதால், அவைகள்இப்பதிப்பில் இடம் பெற முடியவில்லை. வாசகர்கள், தயவுகூர்ந்து இந்தக்குறையைப் பொறுத்துக் கொள்வார்களாக!

இவ்விரண்டாம் பதிப்பை அச்சிடும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட தங்கவயல், திரு. சாதுசுந்தரமணி அவர்களுக்கு நாம் என்றும் நன்றி கடன் பட்டவர்களாக இருக்கின்றேம். பெரியண்ணன், டாக்டர் இயேசுதாஸ் அவர்களை பல ஆண்டுகளாக நன்கு அறிந்தவரும் அவர்களுடைய அரியப்பாடல்களுக்குப் பொருத்தமான இனிய மெட்டு அமைத்து கொடுத்தவரும் இவர்களே ஆவர். பெரியண்ணன் அவர்களுக்கு திரு. சாதுசுந்தரமணி செய்த ஓர் அரியதொண்டாக இது விளங்கும். குற்றம் களைந்து குணம் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

டாக்டர். இராஜா சவரிராயன்,
கிறிஸ்துகுல ஆசிரமம், திருப்பத்தூர்.

என் சரிதை

அத்தியாயம் 1.

முன்னோர்களும், சிறு பிராயமும்.

பாளையங்கோட்டையில் 1882-ம் வருஷம் ஆகஸ்ற்று மீ 31ம் தேதி வியாழன் முற்பகல் நான் பிறந்தேன். அந்த சமயத்தில் எங்கள் குடும்பத்தில் ஒரு விசனகரமான சம்பவம் நேரிட்டிருந்தது. என் பெற்றோருக்கு மிகவும் அருமையாயிருந்த எனக்கு மூத்த சின்னச் சகோதரி நான் பிறக்கிறதற்கு ஒன்பது நாளைக்கு முன்னே (22-8-1882) மரித்து விட்டது. அப்போது துக்கம் நிறைந்த என் தாயாரின் மனோகதி எப்படியிருந்திருக்கும்! நான் பிறந்த அந்த வியாழக்கிழமையை அவர்கள் நினைக்கும் போதெல்லாம் எலிசபேத் மரியம்மாளென்று பேர்கொண்ட தன் நேச குமாரத்தியை என் தாயார் நினைக்காம விருப்பதில்லை.

நான் சிறு பையனாயிருக்கும்போது வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் ஒழுங்காய் நடந்துகொள்ளுகிறதில்லை. பள்ளிக்கூடத்துக்குப் போவதைவிட தெருப் பாலத்துக்கடியிலும், அல்லது மரங்கள் நடுவிலும் ஒன்றுஞ் செய்யாமல் ஒளித்துக் கொண்டிருப்பது எனக்கு நிரம்பப் பிரியம். அந்தக் காலத்தில் உபாத்தியாயர் என்றால் மிக கடுக்கம் என் உடம்பில் அவருடைய பிரம்பு தொடாத இடங்கிடையாது. நான் சின்ன வயதில் பழையகாலத்து வழக்கப்படி தலையில் குடுமி வைத்திருந்தேன். என் தகப்பனார் அது விஷயத்தில் அதிக கண்டிப்பாயிருந்தார்கள். நான் உபாத்தியாயர் அடிக்கும்போது ஓடிப்போய்விடாதபடி அவருக்கு என் குடுமி நல்ல கைப்பிடியாயிருந்தது! கொஞ்சகாலத்திற்குப் பிறகு (1894) நான் முதலாம் பாரம் என்ற ஐந்தாவது வகுப்பிலிருக்கும்போது இன்னும் இரண்டு பையன்களோடு சேர்ந்து முடியைக் கத்தரித்து "கிராப்" செய்து கொண்டேன்.

நான் சிறுபையனாயிருக்கையில் என்னை அறிந்தவர்கள் எவரும் எனக்குப் பக்தியுண்டாகும் என்று அபிப்பிராயப்பட்டிருக்கவே மாட்டார்கள். என்றாலும் அந்தக்காலத்தில் அதிக மும்முரமான வைராக்கியமாய் பாளையங்கோட்டையில் வேலை நடப்பித்த இரக்ஷணியசேனையாரின் கூட்டங்கள் மூலமாய் என் உள்ளத்தில் சில வேளைகளில்

ஆழமான அசைவுவுண்டானதுண்டு. மரணம் என்றால் எனக்கு மிகப் பயம். திடீரென்று இடிமுழங்கினால் அல்லது ஊரில் விஷபேதி ஆரம்பித்துவிட்டால் நான் பயந்து நடுங்கி ஜெபம் பண்ணுவேன். இரக்ஷணிய சேனை பிரசங்கிகள் மரணம், நியாயத்தீர்ப்பு, நரகம், முதலியவைகளைப் பற்றி வற்புறுத்திப் பேசுவார்கள். அவர்கள் சிறு பிள்ளைகளுக்காக வைக்கிற கூட்டங்கள் என்னைப் பயந்து நடுங்கச் செய்யும். அவர்கள் அழைப்பின்படி நான் உடனே மனஸ்தாப மேடைக்கு நடுக்கத்தோடு போய் முழங்கால் படியிடுவேன். ஆனால் இதினாலுண்டான பிரயோஜனம் நிலைக்கவில்லை. எனினும் அச்சேனையாருடைய ஜாதி நிறவேற்றுமையில்லாத சாமான்னிய தியாக ஜீவியமும், உத்தமும், விரோதங்கள் துஷ்டராலுண்டான கஷ்டங்கள், கல்லெறிகள் மத்தியில் பயமில்லாமல் அவர்கள் பிரசங்கித்ததும், எனக்கு அவர்கள்மேல் பிரியமுண்டாக்கியது ஐரோப்பியர்சள் தமிழ் மக்கள்போல் குடுமிவைத்து வெறுங்காலோடு நடந்து ஏழை இந்திய மக்களோடு வித்தியாசமில்லாமல் ஒரே வீட்டில் வசித்து வந்து, துன்பங்களை சந்தோஷமாய் சகித்து சுவிசேஷ வேலை செய்வார்கள். இதைப்பார்த்து என் மனம் உருகும்,

நான் ஆங்கில திருச்சபையில் பிறந்து ஞானஸ்நானம் பெற்றவன். என் முற்பிதாக்கள் ரோமன் கத்தோலிக்க சபையைச் சேர்ந்தவர்கள். எங்கள் கோத்திரப்பிதாவாகிய நரசிங்கமூர்த்தியா பிள்ளை இந்து மதத்தைச் சேர்ந்த ஒரு சமுசாரி; ஒரு சிவன்கோயில் பூசாரியாய் இருந்தார், தென் திருவாங்கூரில் கோட்டார் என்ற ஊருக்கு சற்று வடக்கே, ராமாபுரம் கிராமத்திற்கு கிழக்கே வண்டிக்காரன்புதூர் என்றிருந்த ஒரு கிராமத்தில் அவர் வசித்தார். அங்கே சந்நியாசி உடை தரித்துக்கொண்டுவந்த இயேசு சபைக்குரு ஒருவருடைய போதனை மூலமாய் 1690ம் வருஷம் கிறிஸ்தவனானார். வண்டிக்காரன் புதூர் இப்போது அழிந்துபோயிருந்தாலும், பழைய சிவன் அம்மன் கோவில்களும், ஊருணியும் இன்றுமிருக்கின்றன.

நரசிங்கமூர்த்தியா பிள்ளை சிவ பக்தன். முதல் மனைவிக்குப் பிள்ளையில்லாததால் இரண்டாம் விவாகம் செய்து அந்த அம்மாளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்திருந்தது. இவன் சிறுவனாயிருக்கையில் இறந்துவிட்டான், ஆறாத் துயரடைந்த நரசிங்கமூர்த்தியா பிள்ளை சிறுவனின் பிரேதத்தை தகனம் செய்ய ஒப்புக்கொடுக்காமல் மயானத்தில் அழுதுகொண்டிருந்தார். இச் சமயத்தில் காமனாதித்தன் புதூருக்கு அவ்வழியே போகும் ஒரு இயேசு சபை குரு வந்தார். அக்காலத்தில் இக்குருக்கள், “எல்லாருக்கும் எல்லாமாக வேண்டும்” என்ற பவுலப்போஸ்தலன் சொற்படி சோமன் பட்டத்தார், காவி நிலையங்கி குல்லா, சிரசு வேஷ்டி, யோகவல்லாவெட்டு, பாதகுறடு, யோக தண்டா முதலியன அணிந்தவர்களாய், கையில் ஜெபமாலையுடன் சுற்றித் திரிந்து சுவிசேஷத் தொண்டு செய்வார்கள். குரு, அழுது

கொண்டிருந்த நரசிங்கமூர்த்தியாபிள்ளைக்கு வேத புத்தகத்தில் கடவுள் குழந்தையில்லாத வயது சென்றவர்களுக்கும் குழந்தை கிடைக்கச் செய்த சரித்திரங்களை எடுத்துரைத்து, வியாகுலமடைந்த அவர் மனதைத் தேற்றி பிரேதத்தை அடக்கத்திற்குக் கொடுத்துவிட புத்தி சொன்னார். சுவாமியாருக்கு நரசிங்கம் பிள்ளை சீஷனாகி கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவிக்கொண்டார். நரசிங்கம் பிள்ளைக்கு நல்ல தம்பியா பிள்ளையென்றும், இரண்டாவது மனைவிக்கு சாமியடியா ளென்றும் பெயர் கொடுக்கப்பட்டது. இவர்களுக்கு இரு குழந்தைகள் பிறந்தன. மூத்தவர் பெயர் சவரிமுத்து, இளையவர் பெயர் நல்லு. இவர்கள் முன்னோர்கள் சேத்தூர் முதலான பாளையப்பட்டுகளில் உயர்ந்த உத்தியோகத்திலமைந்திருந்தார்களாம். ஆனால் அதிகாரி களுக்கும் இவர்களுக்குமுண்டான மனஸ்தாபத்தினாலே பயந்து நாஞ்சி நாட்டிற்கு ஓடி ஒளிக்க நேரிட்டதாம் திருவாங்கூரின் தென் பாகம் நாஞ்சி நாடென்று அழைக்கப்படும். இது உண்மையில் தமிழ் நாட்டின் ஓர் பாகமே. இலங்கை வடபாகமான யாழ்ப்பாணம்போல. என் முற்பிதாக்கள் திருவனந்தபுரம் சமீபத்திலுள்ள நேமத்திலு மிருந்திருக்கிறார்கள். பின் காலத்தில் வடக்கன்குளம், குருவிநத்தம், அச்சங்குளம் என்ற திருநெல்வேலி ஜில்லாவின் பல கிராமங்கள் இவர்கள் சொந்த இடங்களாகவிருந்தன. நாஞ்சிநாடு அல்லது தென் பாண்டிக்கும் திருநெல்வேலிக்குமுள்ள சம்பந்தம் தொன்று தொட்டுள் ளது. நரசிங்கமூர்த்தியா பிள்ளை மகன் சவரிமுத்துபிள்ளைதான் என் முற்பிதா. இவர் தமிழில் பாண்டித்தியமுள்ளவர். வீரமாமுனியென்ற தமிழ் பெயர் அணிந்துகொண்டவராகிய இத்தாலிய குரு பெஸ்கி பாதிரியார் சிறந்த தமிழ் வித்வான். இவர் இயற்றிய தேம்பாவணி யென்ற நூலை சவரிமுத்துபிள்ளை தமது கையால் அக்கால வழக்கப்படி எழுத்தாணியால் ஏட்டில் எழுதி வைத்தார் இந்த தேம்பாவணி கொஞ்சம் குறைய 200 வருஷங்களாயினும் இன்னுமிருக்கிறது என்று என் தகப்பனார் எனக்குச் சொல்லியிருக்கிறார்கள் இந்த ஏடு இப்போது கிறிஸ்துகுல ஆசிரமத்திலிருக்கும் என் முற் பிதாக்களின் ஏடுகளுக்குள்ளிருக்கலாம். இளையவர் நல்லுப் பிள்ளை. நல்லுப்பிள்ளை கரையாளன் என்ற பெயருடைய இவர் கவிராய தத்துவமுள்ளவர். இவரும், இவர் மகன் வடக்கன்குளம் மரியதாஸ் பிள்ளையும் இயற்றிய பல அருமையான கீதங்கள் ஆசிரமப்பாமாலையில் பிரசுரமாகி நாங்கள் பாடி வருகிறோம்.

என் பாட்டனார் சவரிராய பிள்ளை 1801ம் வருஷம் நவம்பர் மாதம் 29ம் தெய்தி வடதிருநெல்வேலி கரிசல்காட்டிலிருக்கும் அச்சங் குளம் என்னும் கிராமத்தில் பிறந்தவர். 1836ம் வருஷம் நவம்பர் மாதம் 3ம் தெய்தி அக்காலத்தில் திருநெல்வேலியில் சுவிசேஷ வேலை செய்த ஜெர்மன் மிஷனரி குரு ரேனியூஸ் ஐயர் மூலமாய் புரோடஸ்டாந்து சபையைச் சேர்ந்துகொண்டார். 1874ம் வருடம் ஆகஸ்டு மாதம் 17ம் தெய்தி இடைச்சி விளையில் தன் மூத்த மகன் மதுரேந்திரம் ஐயர்

அவர்கள் வீட்டில் கிறிஸ்துவின் இளைப்பாறுதலில் பிரவேசித்தார். என்னுடைய தகப்பனார் இந்தப் பெரியாரை தன்னுடைய ஜீவிய சரித்திரத்தை எழுதக் கேட்டபோது, என் பாட்டனார், "அப்பா நான் எழுத ஆரம்பித்தேன், ஆனால் நான் நிசமான சரித்திரம் எழுத வேண்டுமானால் என் குறைவுகள், பிழைகள் ஆண்டவருக்கும் மனுஷருக்கும் விரோதமாய் நான் துணிந்து நடப்பித்த என் துரோகங்கள், இதுகளெல்லாம் கண்டு எழுதவேணும், அதுகளை ஒளித்து மறைத்து விட்டு நான் நல்லவன்போல் எண்ணும்படிக் காண எழுத்து எழுத எனக்கு மனமில்லை" யென்ற கருத்தாய் துயரமாய் உத்தரவு சொல்லி விட்டார்களாம். இந்த என் சரிதை எழுதும் நான் இதை எனக்கு நன்றாக அழுத்தி ஞாபகப்படுத்திக் கொள்வதின் முக்கியத்தை உணர்ந்து இதினால் எச்சரிப்படைவேனாக!

என் சொந்த தகப்பனார் யோவான் தேவசகாயம் சவரிராய பிள்ளை 1843ம் வருஷம் அக்டோபர் மாதம் 26ம் தெய்தி வியாழன் தன் தகப்பனுக்கு பத்தாவது குழந்தையாகப் பிறந்தவர்கள். ரோமான் சபையிலிருந்து புராடஸ்டாண்டு சபையைச் சேர்ந்த என் தாயாரை 1869ம் ௵ விவாகம் செய்தார்கள். என் தாயின் சொந்த ஊர் வடக்கன்குளம். அச்சமயத்தில் என் தகப்பனாருக்கு மிஷன் பள்ளிக்கூடத்தில் வேலை. இவர்கள் மேலதிகாரியான மிஷனரி பாதிரியார் தமது மிஷன் விடுதி பாடசாலையில் படித்த ஓர் பெண்ணையே என் தகப்பனார் கட்டவேண்டுமென்று வற்புறுத்தினார். இதற்கு சம்மதியாததினால் என் தகப்பனாரை வேலையை விட்டுப் போகும்படி சொல்லி விட்டார்.

ஒரு மாதத் தவணை கொடுத்திருந்தார். என் தகப்பனார் கண்ணீரோடு அதிக ஊக்கமாய் ஜெபித்து வந்தார்கள். பாளையங்கோட்டைக்கு கிழக்கே "ஹைகிரவுண்டு" என்ற திறப்பான இடத்தில் வளைந்து வரும் பாதைக்கு அப்புறம் பனங்கோப்பிருக்கிறது. முன் காலத்தில் இது அடர்த்தியான வடலி, இங்கு போய் மறைவாய் தரையில் முகம் குப்புறவிழுந்து கண்ணீரோடு கடவுளை மன்றாடி மிஷனரி பாதிரியார் மனதை மாற்ற தினமும் ஆண்டவரைப் பிரார்த்தித்து வந்தார்கள். தவணையின் கடைசி நாள் 30-11-1869 மிஷனரி பாதிரியாரிடம். நீண்ட காகிதங்களில், மூன்று பக்கம் விபரமாக, ரோமானிலிருந்து ஒரு பெண்ணை சுவிசேஷ சபைக்குக் கொண்டுவருவதின் மேன்மையை விளக்கி பல காரணங்களுடன் எழுதி, பாதிரியார் கையில் கொடுத்தார்கள். இவர்கள் மனம் புண்ணாயிருந்தது. மிஷனரி மனமோ கல்லாயிருந்தது. வேலையை விட்டுத் தள்ளிவிட்டார். அன்று அவர் நாய் செத்துப்போன விசனந்தான் மிஷனரிக்கு வெகு பிரதானமாயிருந்ததாம்! வீடு திரும்பி இன்னொரு வாலிபனோடு "என்னைப் படைத்த பரம்பொருளே" என்ற பாட்டுப்பாடி, சங்கீதம் 25: 46, வாசித்து ஜெபித்தார்கள். உடனே அவர்களுக்கு புதுபலமும் சமாதானமும் உற்சாகமும் வந்துவிட்டன, ஆண்டவரில் தைரியமடைந்தார்கள்.

5

எனக்குப் பள்ளிக்கூடம் போவது எவ்வளவு அருவருப்பாக இருந்ததோ அதுபோல கோவிலுக்குப் போவதும் இஷ்டங் கிடையாது. எங்கள் வீட்டில் எங்களோடிருந்த என் பாட்டியம்மாளாகிய என் தகப்பனருடைய தாயார் மேல் எனக்கு நிரம்பப்பிரியம். அவர்கள் நிரம்ப வயது சென்றவர்களாயும் கண் மங்கலாயுமிருந்தார்கள். நான் நன்ருய் சாப்பிடும்படி எனக்கு உணவூட்டி அநேக சிறு கதைகள் சொல்லுவார்கள். இதனால்தானே என்னமோ எனக்கு எப்போதும் வயதுசென்று நரைத்துப்போன கிழவிகள் மேல் நிரம்ப இஷ்டம்! எனக்குக் கோவிலுக்குப் போவது பிரியமில்லாவிட்டாலும், தினம் எங்கள் வீட்டுக்குச் சமீபமாயிருந்த சின்னக் கோவிலுக்கும், ஞாயிற்றுக் கிழமைகளில் பெரிய கோவிலுக்கும், என் பாட்டியம்மாளை நான் அடிக்கடி கைப்பிடித்துக் கூட்டிக்கொண்டு போக வேண்டியதாயிருந்தது. என் தகப்பனருக்கு இது விஷயத்தில் என்மேல் நிரம்பப் பிரியம். பிரசங்க வேளையில் குருவானவர் பிரசங்க பீடத்தில் எப்போது வேதாகமப் புஸ்தகத்தை மூடுவார் என்று ஆவலோடு பார்த்துக்கொண்டிருப்பேன்! என் பாட்டியம்மாள் மரித்த பிறகு கிறிஸ்து பிறந்த பண்டிகை முதலிய திருநாட்களைத் தவிர, மற்றப்படி நான் கோயிலுக்குப் போகிறது மிகவும் அபூர்வம். கிறிஸ்து பிறந்த பண்டிகை வந்தால் எங்களுக்கு மிகவும் கொண்டாட்டம். என் குடுமியில் பூ வைத்துக்கொண்டு புது உடுப்புப் போட்டுக்கொண்டு டப்பாஸ் மத்தாப்பு கொளுத்துவேன். என் தாயார் வெகு ருசியுள்ள ஆப்பம் முதலிய பலகாரங்கள் செய்து கொடுப்பார்கள். தன் பிள்ளைகள் மேல் ஆர்வமான அன்புள்ளவர்கள் தன்னை முற்றிலும் மறந்து எங்களுக்காக அதிகக் கவலைப் படுவார்கள். தெய்வ அன்பு எவ்வளவு அதிகமாயிருக்குமென்று எங்கள் தாயார் அன்பு என்னை உணரச்செய்தது. அவர்கள் மிக இளகிய நெஞ்சுள்ளவர்கள் ஆனதால் கண்டிப்பாய் இருக்கமாட்டார்கள். எங்கள் தகப்பனரோ உருக்கமான அன்பும் உறுதியான கண்டிப்பும் உள்ளவர்கள். நாங்கள் அவர்களுக்குக் கீழ்ப்படியாமல் இருக்கமுடியாது. பலத்த விசுவாசமும் பக்தியுமுள்ளவர்களாயிருந்தாலும் தங்கள் பிள்ளைகளை மார்க்க விஷயத்தில் கட்டாயம் பண்ணுவதில்லை. மாமூலாக அவர்கள் குடும்ப ஜெபம் நடத்துகிறதில்லை. ஆனால் வீட்டிலாவது வெளியே காட்டுப் பக்கங்களிலாவது சமயம் ஏற்றதாயிருக்கும்போது எங்களைப் பாட்டுப்பாடச் சொல்லி ஜெபம் செய்வார்கள். அவர்களுடைய உள்ளந்தரங்க துக்கங்களையும் சந்தோஷங்களையும் தனிமையாயிருக்கும்போது பாட்டுகளின் மூலமாயும் சத்தமிட்டு ஜெபித்தும் கடவுளண்டை ஊற்றிவிடுவார்கள்.

மொகரம் பண்டிகை வரும்போது எங்களூரில் வாலிபர் லங்கோடு கட்டிக்கொண்டு, புலி மாதிரி தங்கள் உடம்பில் வரிவரியாய் வருணம் பூசி வேஷம் போட்டுக்கொண்டு, காளை மாட்டு வண்டிகள் மேல் வைக்கப்பட்டு பகட்டாய் அலங்கரிக்கப்பட்ட கூண்டுகளுக்குள் நின்று ஆடிக்

கொண்டு, ஊர்வலம் போவார்கள். இது இளைஞருக்கு ஒழுக்கமானதல்ல; தீமை விளைவிக்கவும் கூடும். இப்படிப்பட்ட வேடிக்கைகளைப் போய்ப் பார்க்க எங்கள் தகப்பனார் எங்களுக்கு இடம் கொடுக்கமாட்டார்கள். ஆனால் நான் அவர்களுக்குத் தெரியாமல் கள்ளத்தனமாய் பார்க்கப்போவதுண்டு. ஒரு விசை இதைக் கண்டுபிடித்து என்னைக் கூப்பிட்டு விட்டார்கள். கடுமையான தண்டனை கிடைக்குமென்று நடுங்கிக்கொண்டு வந்தேன். இதற்குப் பதிலாக அவர்கள் என்னை மேல்மாடிக்கு தனியே ஒரு அறைக்குள் கூட்டிக்கொண்டு போனார்கள். நான் ஒரு மூலையிலே பயந்து பதுங்கிக் கொண்டு நிற்கும்போது, நான் அந்த அவலக்ஷண வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டிருந்தபோது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அந்நிமிஷத்தில் தமது தூதரோடு வானத்தில் வெளிப்பட்டிருந்தால் என் நிலைமை எப்படியிருந்திருக்குமென்றுகேட்டார்கள். அந்த நேரத்தில் இயேசுவானவர் நல்லவேளை வரவில்லையென்பதைப் பற்றி நான் என்னைத் தேற்றிக் கொள்ளவில்லை! என் தகப்பனார் கையில் ஒரு சவுக்காவது பிரம்பாவது இல்லையென்று கண்டு மிகவும் சந்தோஷமடைந்தேன். நான் ஒரு சின்னப் போக்கிரியல்லவா? என்றாலும் என் மனதில் இந்தச் சம்பவம் ஆழமாய்ப் பதிந்தது. என் தகப்பனார் செய்தது ஞாபகத்தை விட்டுப் போகவில்லை.

என் சிறுபிராய நாட்களை நான் நினைத்துப் பார்க்கும்போது கெட்ட தோழரான பையன்கள் பெண்களுடைய சகவாசம் சிறுவருக்கு தீய பழக்கங்களை கற்பிக்குமென்று உணருகிறேன். பிள்ளைகளுக்கு விளங்காதென்று தப்பாய் நினைத்துக்கொண்டு பெரியோர் அவர்கள் முன்னே செய்கிற பேசத்தகாத சம்பாஷணைகள் சிறுவருக்கு மிகுந்த கெடுதி உண்டாக்குகிறதென்று உற்றறிகிறேன். பிள்ளைகளுக்கு அநேக காரியங்கள் விளங்கக்கூடும். அல்லது பெரியோர் எண்ணுகிறதிற்கு மிகவும் அதிகமாய் அவர்கள் உத்தேசிக்கக்கூடும். பிள்ளைகள் சில விஷயங்களைப்பற்றி அறிய விரும்பும்போது, அவர்களுக்கு நல்ல முறையாக கற்பித்து திருப்தி பண்ணாமல் பயமுறுத்திப் பேசாமலிருக்கும்படி கண்டிப்பதால் வேறுவித தவறான வழிகளில் சிறுவர் அதைக் கண்டுபிடித்துக் கொள்ள ஏதுவாகிறது.

பள்ளிக்கூடத்தில் நான் படிக்கிற காலத்தில் என் படிப்பு மேலே உயர்கிறதும் கீழே இறங்குகிறதுமாயிருந்தது. ஆரம்ப வகுப்புகளில் புத்திசாலியாய்ப் படிப்பில் வேகமாய் முன்னுக்கு வந்தேன். அப்புறம் கவனமற்றுப் படிப்பில் வெறுப்புள்ளவனாகிவிட்டேன். பாட்டுப் பாடுவதில் எனக்கு நல்ல குரல் இருந்தது. நான் படிப்பில் தேர்ச்சியடையப் போவதில்லையென்று மனந்தளர்ந்து என் தகப்பனார் "உன்னை அந்நிய நாடுகளுக்கு பாட்டுப்பாடுகிற பிச்சைக்காரனாய் அனுப்பவேண்டும்" என்று ஒருவிசை சொன்னார்கள்.

என் பெற்ருேரும் குடும்பமும்.

என் மூத்த அக்காள் (அப்போது 15 வயது) ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவதில் நிரம்ப வைராக்கியமுடையவர்களாய் இருந்தார்கள், அவர்களுடைய பக்தியும் நல்ல மாதிரியும் என்னை வசப்படுத்தி எனக்குப் பிரயோஜனமாயிருந்தது. நான் கடவுளுடைய பிள்ளையாக மாறவேண்டுமென்பதுபற்றி என்னிடத்தில் வெகு ஆர்வத்துடன் பேசுவார்கள். இந்த முகாந்தரத்துக்காக அந்த அக்காளிடம் நான் நெருங்குகிறதில்லை. அக்காள்மேல் ஐயாவுக்கு விசேஷித்த பிரியம். நான் அதற்காக வெகு பொறாமைப்படுவேன். என் அண்ணன்மார் மூன்றுபேருக்கும் நான் கீழ்ப்பட்டிருந்ததால் என்னைப்பற்றி எனக்கே ஒரு இளப்பம். என் இளவயதில் என் குடும்பத்தாரால் எனக்குண்டான அநுபவத்தின்மூலமாய், ஒரு சிறு பிள்ளையினுடைய வருங்கால ஜீவியம், நன்மைக்காகவோ தீமைக்காகவோ அவன் வீட்டாரால் வசப்படுத்தப்படுகிறது என்றறிவேன். இதனால் சிறுவருக்கு அவர்கள் குடும்பவளர்ப்பு எத்தனை முக்கியமென்று எனக்கு நன்றாய் வற்புறுத்துகிறது. பிள்ளைகளின் பொறுப்பு உத்தரவாதம் இலேசானதல்ல. "(என் பேரில் நம்பிக்கையாயிருக்கிற) இந்தச் சிறுவர்களில் ஒருவன் இடறிவிழக் காரணமாயிருக்கிறவன் எவனோ அவன் கழுத்தில் ஏந்திரக் கல்லைக்கட்டி சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமுத்துகிறது அவனுக்கு நலமாம்" என்று இயேசுநாதர் சொன்னார். இந்தக் கொடிய தீர்ப்பு சிறுவரை இடறச்செய்கிறவர்களுக்கு மாத்திரமா? தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பிள்ளைகளின் ஆத்தும நன்மையைப்பற்றி அசட்டையாயிருப்பவர்களுக்கும் அல்லவோ? நான் ஒரு கிறிஸ்தவப் பள்ளிக்கூடத்தில் தான் படித்தேன். ஆனால் என்னை கடவுளுக்கு நேராகத் திரும்பும்படி அங்கே என்னை வசப்படுத்த எதுவும் இருந்ததோவெனச் சந்தேகம். ஆனால் வாலிபனை ஒரு உபாத்தியாயர் வேதாகம சாஸ்திரங்களைச் சொல்லிக்கொடுத்த விதம் எனக்குச் சிறு பிராயத்தில் எழுப்புதல் உண்டாக்கினது.

என் தகப்பனாருக்கு காப்பி கொஞ்சமேனும் உதவாது. பிசாசு கண்டுபிடித்தது காப்பி என்பார்கள். விடியற்காலத்தில் பிள்ளைகளாகிய நாங்கள் கஞ்சி சாப்பிடுவதே அவர்களுக்குப் பிரியம். ஆனால் அம்மைக்கும் எங்களுக்குமோ காப்பிதான் பிரியம். எங்களைக் காப்பி குடிக்கும் பழக்கத்தை விடச்செய்ய பலவிதமான நல்ல இனிமை முதலியவற்றால் வசப்படுத்தப் பார்ப்பார்கள். அவசியமானவைகளை தாராளமாய் எங்களுக்கு சவரக்ஷணை செய்வார்கள். ஆனால் வீட்டில் எவ்வித வீண் செலவிற்கும் இடம் கொடுக்கமாட்டார்கள். சாப்பிடும் வேளையில் நாங்கள் யாராவது ஆகாரத்தை மீந்திருக்க வைத்தால் அவர்கள் தானே நாங்கள் விட்டுப்போவதைச் சாப்பிட ஆரம்பித்துவிடுவார்கள்; இதைப்போல் எங்களுக்கு வெட்கமும் துக்கமும் உண்டாக்குவது வேறில்லை. இதனால் ஆகாரத்தை வீணுக்கப் பயப்படுவோம்.

சிறுவனாயிருக்கையில் எனக்கு நல்ல குரலுண்டு, அதனால் என்னைப் பாடச்சொல்லுவார்கள். யார் வீட்டிலாவது மரணம் நேரிட்டால் அக்காலத்தில் பெண்கள் ஒப்பு வைத்து ஓலமிட்டழுவார்கள். பிரேதத்தை வீட்டிலிருந்து தூக்கும் வேளையில் ஒப்பும் ஓலமும் துயர அழுகைச் சத்தமுமதிகமிருக்கும். இச்சமயங்களில் நான் துக்க வீட்டிற்கருகில் போய் ஒப்பாரிகளைக் கேட்டு வீட்டிற்கு வந்த பின் அதேபடி ஒப்பாரி வைப்பேன். என் அம்மைக்கு அப்போது மிக கோபம்வரும், "ஆக்கம் கெட்ட மூதேவி போதும் நிறுத்து!" என்று கோபிப்பார்கள். நான் சரியான குரங்குத்தனமாய் நடந்துகொள்வேன்.

நமது பெண்களை மிகு சாமர்த்தியமுள்ள கவிராயினிகளென்றே சொல்லவேண்டும். எழுத்து வாசனையில்லாவிடினும் தங்களுக்கு அருமையானவர்கள் மரிக்கும்போது கல்லான இருதயமும் உருகும்படி எத்தனை சாமர்த்தியமாய் தகுந்த மோனையுடன் ஒப்புவைத்தழுவார்கள். இறந்தவர்களின் நற்குணங்களையும் அவர்கள் சரித்திர சம்பவங்களையும் மனம் பொங்கி அடுக்கடுக்காய் வருணித்து, அணிஅணியாக பதங்களை அமைத்து அவர்கள் ஒப்பாரி வைத்து ஏங்கியழுவதைக் கேட்கும் எவர் மனம்தான் கசிந்து கண்ணீர் தானே ஓடாதிருக்கும்! என் தகப்பனாருடைய பாட்டனார் மதுரேந்திரம் பிள்ளை நாட்டாண்மை செய்வதில் சிறந்தவர். ஊர்வழக்குத் தீர்க்க மக்கள் அவரிடம் ஓடி வந்து அவர் தீர்ப்பை ஏற்றுக்கொள்வார்கள். நாட்டு வைத்தியம் தெரியும். தோவாளைக்கு ஏதோ வைத்திய சம்பந்தமாய்ப் போயிருக்கையில் வாந்திபேதி கண்டு இறந்துவிட்டார்கள். ஆறாத்துயரடைந்த அவர்கள் பத்தினி,

"சந்தியிலிருந்து சமஸ்தானம் பேசினால்,
கொம்பிலிருக்கும் குயிலும் திடுக்கிடுமே"!

என்ற விதமாய் ஒப்பு வைத்து அந்த என் பூட்டியார் அழுதார்களாம். என் பாட்டியார் இறந்துவிட்டபோது அவர்கள் பேத்தி ஒரு பெரியம்மாள்,

"கண்ணிலிருந்தாலும், என்னைப் பெற்ற ஆத்தாள், எனக்குக் கரியாதொரு நாளும்.

உமையிலிருந்தாலுய், என்னைப்பெற்ற ஆத்தாள், எனக்கு உறுத்தாதொருநாளும்"

என்று ஒப்பு வைக்க ஆரம்பித்தார்கள், உடனே என் பெரிய தகப்பனார் ஒருவர் அந்த அம்மாள் வாயைப் பொத்தி அழுகையை நிறுத்தி வைத்துவிட்டார்கள். இன்னும் கொஞ்சம் பாட்டுக் கேட்டு நான் படித்துக்கொள்ளலாமென்றிருந்த சிறுவனாகிய எனக்கு அந்த வேளையில் என் பெரியய்யா மேல் மிகக் கோபமுண்டானது! நான் என்

தாயாருக்கு மிகுந்த தொந்தரவு கொடுக்கும்போது, தமாசாக மற்ற சகோதர சகோதரிகளிலும் நான் சற்று கறுப்பாயிருப்பதற்குக் காரணம் நான் அவர்கள் பிள்ளையல்ல, வீட்டுச் சமையல்காரியாகிய விதவை கண்ணம்மாள் மகன் என்று சொல்லிப் பரியாசம் செய்வார்கள். எனக்கு இது மிக மனவருத்தம் உண்டாக்கும். இத்தமிழ் மக்களாகிய நாம் நமது சிறுவர்களுக்கு அவர்கள் இளம் வயதிலேயே கறுப்பு நிறத்தைக் குறித்து இகழ்ச்சியான எண்ணமுண்டாகச் செய்வது எவ்வளவு தவறான காரியம்! சிறுவர்களுக்கு தங்களைப்பற்றி இகழ்ச்சியான எண்ணம் உண்டாகச் செய்வது அவர்களுக்கு மிகக் கேடு செய்வதாகாதா? வெள்ளை மனிதருக்கு அடிமைகளாக நாமிருக்கச் செய்வது இப்படி நமது நிறத்தை நாமே இகழ்வது ஒரு பிரதானமான காரணம் என்பது நிச்சயம். நாம் நம்மை சுயேச்சையாகவே மனதார இப்படி அடிமைகளாக்கி, நமக்குள் இகழ்ச்சி உண்டுபண்ணி, நம்மைக் கீழாக்கி கொள்ளுகிறோம்.

இந்தக் கண்ணம்மாள் என்ற எங்கள் சமையல்காரி ஒரு ஏழை இந்து விதவை. அவளுக்குப் பின் காலத்தில் வியாதி வந்து மிகக் கஷ்டப்பட்டு வேலையை விட்டுவிட நேரிட்டது. ஒருநாள் அதிகாலை இருட்டோடே என் தகப்பனார் என்னைப் படுக்கையிலிருந்து எழுப்பி ஐந்து ரூபாய் என் கையில் கொடுத்து, "நீ ஓடிப்போய் ஒருவருக்கும் தெரியாமல் இந்தப் பணத்தை ஏழைக் கண்ணம்மாளிடம் கொடுத்து விட்டு வா" என்று சொல்லி என்னை அனுப்பிவைத்தார்கள். நான் போகுமுன் என் தகப்பனார் "திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைப்படாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன் மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது". என்ற பரிசுத்த யாக்கோபு எழுதிய திருவசனங்களை என்னிடத்தில் சொல்லி அனுப்பினார்கள். இது எப்படியோ எவர்கள் காதிலோ எட்டி அவர்கள் என் தகப்பனாரிடத்தில் கண்ணம்மாளுக்கு அவர்கள் என்வசம் அனுப்பிய பணம் அவளிடம் சேரவில்லையென்று அவள் சொன்னதாக என் தகப்பனாரிடம்வந்து சொல்லிவிட்டார்கள். என் தகப்பனார் தன் பிள்ளைகளுக்கு விரோதமாக எந்தவித பிராதும் ஒரு நாளும் செவிகொடுத்து கேட்கமாட்டார்கள். ஆனால் எனக்கு இது மிக மனவருத்தமுண்டாக்கியதால் நான் கண்ணம்மாளிடம் விசாரித்ததில், தான் இந்தப் பணம்பெற்ற விஷயத்தைக் குறித்து ஒருவரிடமும் சொல்லமாட்டேனென்று அவள் எனக்கு வாக்குக் கொடுத்திருந்தால் அவள் தன்னிடம் கேட்டவர்களிடம் இப்படி மறுக்க நேரிட்டதென்று அவள் சொன்னதாகச் சொன்னாள். என் செய்வாள் ஏழைக் கண்ணம்மாள்? பணம் பெற்றதை ஒருவரிடமும் சொல்லக்கூடாதென்று அவளிடம் நான் வாக்குறுதி வாங்கியிருந்தேனே.

எனக்கு 10 வயதாயிருக்கும்போது 1893ம் வருஷம் வெயில்கால விடுமுறைக்கு இடைச்சி விளை என்ற நல்லம்மாள்புரத்திற்கு என் தகப்பனாரின் மூத்த அண்ணாகூஷி மதுரேந்திரம் சவரிராயன் ஐயர் அவர்கள் வீட்டிற்குப் போயிருந்தேன். என் பெரியப்பா சிறந்த பக்தர். ஏழைகளுக்கு பலவிதமான தொண்டு செய்து பாடுபடுவார்கள். நாட்டு வைத்தியம் தெரியுமாதலால் அவர்கள் வீட்டில் பல கஷாயங்கள், தைலங்கள் முதலிய பல மருந்துகள் செய்யப்படும். சுற்றிலும் செந்நிறமான மணல் தேரிகள் குன்றுகள் போல் திரண்டிருக்கும். ஒரு குதிரையில் பல கிராமங்களைச் சந்திக்கச் சுற்றிப்போவார்கள். இப் பாகங்களில் குடிக்க நல்ல தண்ணீர் கிடைப்பது கஷ்டம். பெரியப்பா வீட்டைச் சுற்றியுள்ள ஏராளமான பனைகளிலிருந்து, பதனீர் இறக்கப்படும். காலையில் என் நண்பர் துரையும் நானும் பனையடி சென்று பதனீர் சாப்பிடுவோம். பிற்பகலில் வீட்டிற்கருகான ஒரு குடிசையில் பதனீர் காய்ச்சி கருப்புக்கட்டி செய்வதைப் பார்த்துக்கொண்டிருப்பேன். எனக்கு கோயிலுக்குப் போவதிலுள்ள வெறுப்பை முன்னமே தெரிவித்தேனே, நல்லம்மாள் புரத்திலிருக்கையில் தினமும் காலையும் மாலையும் கோயிலாராதனைக்கும் போகவேண்டும். இல்லாவிட்டால் பெரியப்பா கோபத்திற்காளாவேன். ஒரு நாள் திருட்டுத்தனமாய் போகாதிருந்ததற்கு நானும் என் தோழன் துரையும் பெரியப்பா முன் தோப்புக்கரணம் போடவேண்டியதிருந்தது!

அத்தியாயம் 2

மனந்திரும்பி குணப்படுதல்

என் பெற்றோர் முன்னோரும் கிறிஸ்தவர்களாயிருந்தும் நான் மெய்க் கிறிஸ்தவனல்ல என்ற மனச்சாகூஷியோடே 13 வயது மட்டும் வளர்ந்தேன். இதை வாசிக்கிறவர்களுக்கும், விசேஷமாய் வாசிக்க நேரிடும் வாலிபர்களுக்கும் என் மனம் திறந்து உண்மையாயிருக்க விரும்புகிறேன். நான் சிறுபையனாயிருக்கும் போது சின்னஞ் சிறுமிகளோடுதான் அதிகமாய் நேரங்கழிப்பேன். அதனால் என்னை வீட்டிலும் வெளியிலும் பையன்களும் மிகவும் பரியாசம் பண்ணுவார்கள். நான் இதை ஏன் சொல்லுகிறேனென்றால் கடவுள் நம்முடைய பலவீனத் தன்மையையும் நன்மையாக மாற்றக்கூடும் என்பதற்கே.

என் சின்னையா மகள் கடவுளை நேசித்த தன் சிநேகிதியைப்பற்றி ஒருவிசை என்னிடம் சொன்னாள். ஓரிரவு இந்தச் சிநேகிதி பாளையங் கோட்டையில் தன் சொந்த வீட்டில் கொடூரமாய்க் கொல்லப்பட்டாள்.

1896ம் வருஷம் ஜுன் மாதம் 24ம் தேதி இராத்திரி நான் ஒரு கனுக் கண்டேன். அந்தக் கொலையுண்ட பெண் என்னிடத்தில் மோக்ஷத்தின் சந்தோஷங்களைப் பற்றிச் சொன்னபின் அவளும் என் சின்னையா மகளும் என் பக்கத்தில் முழங்காற்படியிட்டு என் குணப்படுதலுக்காக ஜெபம் பண்ணினதாகக் கண்டேன். அந்தச் சொப்பனம் நான் விழித்த பிறகு என் உள்ளத்தில் ஆழமாய்க் கிரியை செய்தது. என் மனதில் கலக்கமுண்டானது. எனக்குள் தொனித்த சத்தத்துக்கிணங்கி நான் இவ்வளவு நாளாய் அசட்டை பண்ணின வேதாகமத்தை எடுத்து சிறு பிள்ளைகளுக்காக அன்று வாசிக்கும்படி குறிக்கப்பட்ட பாகத்தை வாசித்து ஜெபஞ்செய்தேன். அப்போது எனக்கு 13 வயது, கொஞ்சங் குறைய 14, 3ம் பாரம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன். நான் மறுநாட்காலை பள்ளிக்கூடத்துக்குப் போனபோது என் வகுப்புப் பையன் ஒருவன் உயரமாய் வளர்ந்தவன், வகுப்பில் அவன்தான் கோமாளி, கேலிக்காரன்-என்னிலுள்ள மாறுதலைக் கண்டு கொண்டான். நாங்களிருவரும் பள்ளிக்கூட ரஸ்தாவில் போய்க்கொண்டிருக்கும்போது அவன் திடீரென்று நின்று, "என்ன சங்கதி? ஏன் ஒரு மாதிரியாயிருக்கிறாய்?" என்று கேட்டான். நான் உண்மையைச் சொன்னால் இந்தப் பையன் என்னைப் பரிகாசம் பண்ணித் தொந்தரவு செய்வான் என்று பயந்ததினால் எனக்கு மிகுந்த அச்சம் உண்டாயிற்று. ஆகவே பேசாமலிருந்தேன். ஆனால் அவன் பிடிவாதமாய்க் கேட்டுக் கொண்டேயிருந்தான். தன்னைப்பற்றிப் பயப்பட அவசியமில்லை யென்று உறுதியாய்ச் சொன்னான். எனக்கு நேரிட்டதைப்பற்றி நான் அவனுக்கு விரிவாய்ச் சொன்னேன். அவன் பேசாமல் கேட்டுக்கொண்டிருந்ததுமல்லாமல் என் புதிய கிறிஸ்துவ ஜீவியத்தில் முன்செல்லும்படி தைரியப்படுத்தி உற்சாகப்படுத்தினான். இது என்ன விநோதம்! என்னைப் பரியாசம் பண்ணி இகழ்ச்சி செய்வான் என்று நான் எண்ணின பையனிடமிருந்துதான் முதல் முதல் தைரியமுண்டாக்கும் வார்த்தை வந்தது எனக்கு எவ்வளவோ நம்பிக்கையைக் கொடுத்தது. இந்தப் புதியதாய்க் கண்டுபிடித்த அநுபவத்தில் நான் வளர வளர என் மனச்சாட்சி மிக்க கூர்மையாயிற்று. இது ஒரு வகையில் எனக்கும் என் கூடப்படித்த என் வகுப்புப் பையன்களுக்கும் தொந்தரவுண்டாக்கினது, சரியெது, தப்பு எது, என்று தீர்மானிக்க அதிக நுட்பமாய் ஆராய்ந்தேன். வயதிலும் அநுபவத்திலும் சிறுவனாயிருந்ததால் வகுப்பில் எனக்குச் சரியாய் தோன்றினதைச் செய்ய மிகுந்த எச்சரிக்கையாயிருந்தது மாத்திரமல்ல, மற்றவர்கள் குற்றம் செய்யாதபடி தடுக்கவும் மிகவும் முயற்சித்தேன்.

உபாத்தியாயர் எங்களுக்கு சிற்சில சமயங்களில் கேள்விகள் போட்டு உத்தரவை எழுதும்படி சொல்லுவார். "நிறுத்து" என்று சொன்னவுடனே நாங்கள் எழுதின காகிதங்கள் ஒருவரோடொருவர் மாற்றி மற்றவர்கள் உத்தரவுக்கு மார்க் போடவேண்டும். தண்டனைக்குத் தப்பும்படி குறைந்தபக்ஷம் வாங்கவேண்டிய மார்க்குகளையாவது

பெற்றுக்கொள்ளும்படி பையன்கள் ஒருவருக்கொருவர் உதவிசெய்யப் பிரயாசப்படுவார்கள். இது தவறான காரியம். உபாத்தியாயர் "நிறுத்து" என்று சொன்னவுடனே நான் நிறுத்தினதுமன்றி என் பக்கத்திலிருக்கிற பையன் பாவஞ்செய்யாதபடி அவன் கையிலிருந்து அவன் காகிதத்தையும் பிடுங்கி இழுத்துவிடுவேன். அவனுடைய உத்தரவுக் காகிதத்தை மனச்சாக்ஷிக்கு மாறுமல் மார்க்குப் போடுவதோடு எனக்கு அடுத்த பையன் எனக்கு உண்மையாய் மார்க் போடுகிறானென்பதைப் பற்றியும் நன்றாய்க் கவனித்துக் கண்டிப்பாயிருப்பேன். இதனால் நானும் அவனும் வகுப்பில் அடிக்கடி கடைசியில் இருக்க நேரிட்டது. ஒரு நாள் என் பக்கத்துப் பையனுக்குப் பொறுக்க முடியவில்லை. அவன் என்னைப் பார்த்து "இசுதாசன், இன்னும் ஒரு வாரம் நான் உன் பக்கத்தில் இருக்க நேரிட்டால் அதோ அந்தக் கிணற்றில் போய் விழுந்து அமிழ்ந்துவிடுவேன்," என்றான். இதெல்லாம் எனக்கு நிரம்ப விசனமாயிருந்தது. ஆனால் என் மனச்சாட்சிக்கு கீழ்ப்படிவதைத் தவிர எனக்கு வேறே வழியில்லை. அப்படிக் கீழ்ப்படியாவிட்டால் என் கிறிஸ்தவ ஜீவியத்தை இழந்துவிடுவேன் என்று உணர்ந்தேன். எங்கள் பள்ளிக்கூடத்தில் வகுப்பில் மார்க்போடுவதற்காக ஒருவர் உத்தரவுக்காகிதத்தை இன்னொருவரிடம் மாற்றுகிற ஒழுங்கு இருக்குமட்டும் எனக்கும் மற்றப் பையன்களுக்கும் சரியான சமாதானமில்லாமல் இருக்க ஏதுவாயிற்று.

என் தகப்பனார் சிரஸ்தாராயிருந்த ஜில்லாக் கோர்ட்டில் ஒரு மகமதிய நாஜர் இருந்தார். அவர்களிருவருக்கும் நிரம்பச் சிநேகம். அவர் மகனும் (எனக்கு ஒரு வயதிற்கு மூத்தவன்) நானும் தோழராயிருந்தோம். எனக்கு அவன் மேல் நிரம்பப் பிரியம். நாங்களிருக்கும் ஒன்றாய் உலாத்தப் போய் விளையாடுவோம். சில வேளைகளில் கிறிஸ்து மார்க்கத்தைப்பற்றி பலமாய்த் தர்க்கிப்போம். நாங்களும் அவர்களும் நெருங்கிய பழக்கமாயிருந்ததால் ஜெனனை உட்புறத்துக்குப் போக எனக்கு இடங்கொடுப்பார்கள். அவனுடைய மூத்த அக்காள் படித்த நாகரீகமான பெண். அவளும் என் அக்காளும் சேர்ந்து கிறிஸ்துவப் பாட்டுப் பாடுவார்கள். அவள் தலைப்பிள்ளைப் பேறுகாலத்துக்குப் பிறகு இறந்துபோனாள். அதனால் அவர்கள் வீட்டார் பட்ட துயரம் கொஞ்சநஞ்சமல்ல. ஒருநாள் சாயங்காலம் "பாபு" என்ற செல்லப் பெயருள்ள அந்த என் சிநேகிதனும் நானும் ஆற்றோரமாயிருந்த அவன் அக்காளின் கல்லறைக்குப் போய் ஒன்றாய் நின்று ஜெபம் பண்ணினோம். அது எனக்கு இன்னும் நன்றாய் ஞாபகமிருக்கிறது. அப்போது அவன் ஜேப்பாகிய சட்டைப்பையில் ஒரு சின்னப் புதிய ஏற்பாடு புஸ்தகத்தை இரகசியமாய் வைத்திருந்தான் என்று தெரிய வந்தது. அவன் தாயார் அவனுக்கு அதை இனமாய்க் கொடுத்தாளாம் யாரோடாவது அந்நியோந்நிய ஐக்கியத்துடன் கண்ணுக்குக் கண் சிநேகமாயிருப்பது எனக்குச் சிறுவயது முதல் மிகுந்த ஆவல்.

பிற்பாடு நான் திருநெல்வேலிக் கல்லூரியில் படிக்கும்போதும் ஒரு இந்து வாலிபன் எனக்கு நண்பனாயிருந்தான். அப்புறம் சென்னை சென்றபின் ஒரு ஆங்கிலோ இந்தியவைத்திய மாணவன் ஒருவன், இதன்பின் ஐரோப்பாவில் ஜெர்மன் மாணவன் ஒருவன் இப்படியாக எனக்கு நெருங்கிய சிநேகிதர்கள் இருந்தார்கள். இப்படி எனக்கு எப்போதும் இதர ஜாதி, தேசம், மதம் முதலானவர்களோடேயே நட்பிருந்தது. நான் தற்சமயத்தில் ஸ்காத்லாந்து தேசத்து ஒரு நண்பனோடு சேர்ந்து பரஸ்பர அன்புடன் ஜனசமூக சம்பந்தமாய் வேலை செய்துவரும் ஆசிரமத்துக்கு ஆதாரமாய் என்னை ஆயத்தம்பண்ணுகிறதற்கு இது பிரயோஜனமாயிற்று. கடவுளுடைய கரம் ஒரு மனிதனை எப்படி நடத்தி, அவனுடைய ஜீவியத்தையும் அவனுடைய சாதாரண சிநேகங்களையும் நிலைவரமான உண்மையான நோக்கத்திற்காக அமைத்து உருவாக்குகிறது என்பது எவ்வளவு ஆச்சரியம்.

நான் உயர்தரப் பாடசாலையிலிருக்கும்போது தென்னாப்பிரிக்காவில் போயர் யுத்தம் ஆரம்பித்தது. தமது சுதேசாபிமானம் மிகவுமுள்ள எங்கள் பாடசாலை மேற்பார்வையாளர் ஒரு ஆங்கிலேயர். பிரிட்டிஷ் வழக்கை மிகவும் புகழ்ந்தும், போயர்களை "மிலேச்சர்" என்று இழிவாகவும் எங்களுக்கு ஒவ்வொருநாளும் சொல்லுவார். சில நாட்களுக்குப் பிறகு போயர் யுத்தத்தைப்பற்றி எங்களை ஒரு வியாசம் எழுதச் சொன்னபோது நான் அவருக்கு இஷ்டமானபடியே போயர்களை நிரம்ப இகழ்ந்து எழுதினேன். எனக்கு முதல் மார்க்கு கிடைத்தது ஆனால் நான் 6ம் பாரம் வகுப்புக்குப் போனபோது டபிள்யூ. டி. ஸ்டெட் என்பவர் பிரசுரஞ்செய்த பத்திரிகையில் வந்தச் சண்டையைப் பற்றி வாசிக்கத் தொடங்கினேன். இதோடு ஆழ்ந்து யோசித்ததினால் என் சொந்த ஆலோசனையும், அபிப்பிராயமும் வரவர மாறி பக்ஷம் செய்வது மகா தவறு என்று எண்ணினேன். மறுபடி எங்கள் ஆங்கிலேய மேல்பார்வையாளர் எங்களைப் போயர் யுத்தத்தைப்பற்றி எழுதச் சொன்னபோது நான் தைரியமாய் யுத்தத்தைக் கண்டனஞ் செய்து. இயேசு கிறிஸ்து, ஜோசப் சேம்பர்லேன் ஸ்தானத்தில் இருந்தால் என்ன செய்வார் என்று கேள்வி போட்டேன். தலைவர் இந்தத் தடவை எனக்குக் கடைசி மார்க் போட்டதால் எல்லா மாணவரிலும் கடைசி இடத்துக்கு வந்துவிட்டேன். போயர் யுத்தத்தைப்பற்றி வருஷ முடிவில் நடந்த ஒரு ஸ்காலர்ஷிப் பரிசு போட்டிப் பரீக்ஷையிலும் இந்த மனப்போங்காகவே எழுதினேன் ஆனால் இந்த முறை எங்களைப் பரீக்ஷித்தவர் எங்கள் பள்ளிக்கூடத்து இந்தியத் தலைமை உபாத்தியாயராயிருந்ததால் எனக்கு முதல் மார்க் கிடைத்துவிட்டது! ஸ்காலர்ஷிப் பரிசும் பெற்றுக் கொண்டேன். போயர் யுத்தம் முடிந்தது, பிரிட்டீஷ் ஜெயத்தைப் பற்றி நன்றியறிதலோடு ஸ்துதி பாடுவதற்கு எங்கள் கோயிலில் ஸ்தோத்திர ஆராதனை வைத்தபோது அதெல்லாம் கிறிஸ்து மார்க்கத்துக்கு ஏற்றதல்லவென்று நான் கோயிலுக்குப் போகமாட்டேனென்று

நின்றுவிட்டேன். என் மகமதிய சிநேகிதன் பாபு நான் போயர் சிநேகிதன் என்று தமாஷ் பண்ணினான். தேசீய சுதந்திரத்துக்குப் போராடியும் தன் சொந்த மனைவிக்கு சுயாதீனம் கொடுக்க மறுத்த மில்டன் என்பவரின் ஜீவிய சரித்திரத்தில் நான் வாசித்ததைச் சுருக்கமாய் என் தினசரிக் குறிப்புப் புஸ்தகத்தில் ஒருநாள் எழுதி வைத்தேன். சுயாதீனம் வேண்டுமென்று வைராக்கியமாய் ஆசித்துப் போராடுபவர்கள் தாங்கள் மற்றவர்களுக்குச் சுயாதீனம் கொடுப்பதில் மிகவும் பின் வாங்குவார்கள். "பிரித்தானியார் ஒருபோதும் ஒருவருக்கும் அடிமைகளாக மாட்டார்கள்" என்று உரத்த சத்தமிட்டுப் பாடுகிற பிரித்தானியார் இந்தியர்போன்ற மற்ற தேசத்தாருடைய சுயாதீனத்தைப் பிடுங்கிவிடுகிறார்கள் என்று எழுதினேன். 1896ம் வருஷம் 5ம் பாரம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த காலம் முதல் தினசரிக் குறிப்புகள் "டைரி" எழுதத் தொடங்கினேன். எனக்கு நேரே இளைய தங்கை பூவாயம்மாள்தான் எனக்கு முதல் முதல் அந்த புஸ்தகம் கொடுத்தது. அது என் தகப்பனாருக்கு இலவசமாய் யாரோ வியாபாரி அனுப்பின சுதேச மருந்து விளம்பரமடங்கிய ஒரு சின்ன நாளாகமக் குறிப்புப் புஸ்தகம். முதலில் நான் எழுதின விருத்தாந்தங்களெல்லாம் அநேகமாய்ப் பிறப்பு, இறப்பு, வருவார், போவார் முதலியவைகளைப் பற்றிய பதிவுகளே! இதை எழுதுவதில் நான் பழகப் பழக முக்கியமான பொருளுள்ள விஷயங்கள் எழுதுவதில் தேர்ந்துவிட்டேன். இன்று வரை என் நம்பிக்கைகள், என் பயங்கள், சந்தோஷங்கள், சோதனைகள் இன்னும் ஆழமாய் என்னுள்ளத்தில் எழுச்சி உண்டாக்கும் சகல காரியங்களையும் வெளியிட்டு ஊற்றிவிடும் என் அந்தரங்க சிநேகிதன் என் தினசரிக் குறிப்புப் புஸ்தகந்தான். பள்ளிக்கூடத்தில் சரித்திரப் பாடத்திலும், கணக்குப் பாடத்திலும் நான் கெட்டிக்காரனாயிருந்தேன். ஆனால் க்ஷேத்திரக் கணிதம் எனக்கு வெறுப்பாயிருந்தது. தாய் பாஷையை அசட்டை செய்து கீழாக்கும் ஆங்கில பாஷையில் பாண்டித்தியம் அடைவதுதான் இந்தியா தேசத்தில் உயர்தரப்படிப்பு என்று சொல்லப்படுகிறது. காலத்திற்கு ஏற்றபடி நானும் ஆங்கில பாஷையில் தேறுவதற்கே மிக ஆவல் கொண்டேன். ஆங்கிலேயர் அவர்கள் சொந்தப் பாஷையில் பேசுவதைக் கேட்பதற்காக ஓய்வுநாள் சாயந்திரங்களில் பாளையங்கோட்டையிலிருந்து ஆங்கிலேய தேவாலயத்துக்கு ஒழுங்காய்ப் போவேன். இந்தக் கோவிலுக்குப் போகிற இந்தியர் கோவிலில் கடைசியிலுள்ள இரண்டு மூன்று ஆசனங்களில் உட்காருவது வழக்கம். இது ஒரு சட்டமோ என்னமோ தெரியாது. ஆனால் அதுவே மாமூலாயிருந்தது. வெகு முயற்சியுடன் ஆங்கிலப் புஸ்தகங்களை வாசிப்பேன். இன்னும் பாடசாலை உயர்தர வகுப்பில் தங்கியிருந்தும் மெக்காலே, ஜான்சன், அடிசன் முதலியோர் எழுதிய புஸ்தகங்களை வாசிப்பேன். கையில் எழுதுகோலும் குறிப்பெழுதக் காகிதமும் வைத்துக்கொண்டு ஸ்மைல்ஸ் என்பவர் எழுதின "தனக்குதவி தானே" என்ற புஸ்தகத்தையும் கருத்தாய் வாசித்தேன்.

நான் வாசித்தவைகளை என் சொந்த அநுபவத்திலும் பயிற்சிக்கும்படி பிரயாசப்படுவேன். அன்றுடம் செய்யவேண்டிய விஷயங்களைப் பதிவு செய்து அவைகளை மனச்சாக்ஷியோடு கிரமமாய் நிறைவேற்றப் பார்ப்பேன். எங்கள் வீட்டுக்குச் சமீபமாய் நல்ல தண்ணீர் வாய்க்கால் ஒன்று இருந்தபோதிலும் நான் அதிகாலையில் இருட்டோடே ஒரு மைலுக்கு அப்பாலுள்ள தாம்பிரவருணி ஆற்றுக்கு ஸ்நானம் செய்யும்படி போவேன்.

ஒன்றிரண்டு பேரோடு நெருங்கிச் சிநேகமாயிருக்க எனக்கு நிரம்பப் பிரீதியிருந்தாலும் சாதாரணமாய்ப் பலபேரோடு நெருங்கிப் பழக எனக்கு அவ்வளவு இஷ்டமில்லை. ஆகையால் நான் அடிக்கடி தனித்திருந்தேன். அதனுல் என்னை ஜனங்கள் நிரம்ப அடக்கமுள்ளவனென்று எண்ணினர்கள். எங்கள் பள்ளிக்கூடத்தில் பையன்களும், உபாத்திமாரும் "டென்னிஸ்" என்ற கைப்பந்தாட்டம் விளையாடுவார்கள். அது தற்காலத்து வீண் செலவுஉண்டாக்கும் விளையாட்டு என்று நான் நினைத்ததால் அந்தப் பந்து விளையாட்டில் சேராமல் சாயந்திரங்களில் வெகுதூரம் உலாத்தப்போவேன். சில வேளைகளில் போக வரப் பத்து மைல் தூரங்கூட நடப்பேன்.

கிறிஸ்துவைப்பற்றி மற்றவர்களுக்கு அறிவிக்க எனக்கு மிகவும் அபிமானம் இருந்தபடியால் வழிப்போக்கனை யாராவது கிராமத்தான் கூட நடந்து அவனுக்குக் கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லுவேன். சம்பளத்துக்காக இந்த வேலை செய்கிறேனென்று ஒருவன் ஒருநாள் இளக்கமாய்ச் சொன்னன். இது எனக்கு மிகுந்த விசனத்தை உண்டாக்கிற்று. சுற்றுப்புற கிராமங்களிலுள்ள கிறிஸ்தவர்களைச் சந்தித்து அவர்களைத் தைரியப்படுத்திப் பேசிவருவேன். அடிக்கடி ஒதுக்கமான தனித்த இடங்களில் முழங்காற்படியிட்டு ஜெபிப்பேன். இப்படித் தனியே நடந்துபோகும்போது சில வேளைகளில் யாராவது பெரியவர் என்னிடம் பக்ஷமாய்ப் பேசி நல்ல ஆலோசனைகளைச் சொல்லுவார். ஒருநாள் தாம்பிரவருணி ஆற்றோரமாய் நடந்துகொண்டு போகும்போது அறிமுகமில்லாத ஒருவர் என்னைப் பார்த்துத் தனிமையாய் இந்த வழி போகக்கூடாதென்று எச்சரித்தார். சிலநாட்களுக்கு முன் அப்படிப்போன ஒரு ஆளுக்கு நேரிட்ட துக்க சம்பவத்தைப்பற்றியும் சொன்னர், ஆனாலும் நான் தோழரைத் தெரிந்துகொள்வதில் மிகவும் நுட்பம் பார்த்ததால் தனியேதான் உலாத்தப் போய்க்கொண்டிருந்தேன். நான் இருட்டு முன் வீட்டிற்கு வராவிட்டால் என் தாயார் நான் திரும்புமட்டும் எங்கள் வீட்டுத் தாழ்வாரத்தில் கவலையொடு வெளியே பார்த்துக்கொண்டே நிற்பார்கள். என் பெற்றோரும், உபாத்தியாயரும் சந்தோஷப்படத் தக்கதாக நான் ஒழுங்காய்ப் படித்து வந்தும் சர்வகலாசாலை முதற்பரீக்ஷையில் எப்படியோ தவறிவிட்டேன். மெட்ரிக்குலேஷன் பரீக்ஷையும், எப். ஏ. பரீக்ஷையும் இரண்டாவது தடவைதான் தேறினேன். படிப்பில் நான் காட்டிய அக்கறையையறிந்த என் உபாத்திமாருக்கே இது விளங்கவில்லை.

அந்தக்காலத்தில் நான் இந்தத் துர்ப்பாக்கியங்களுக்காக அளவுக்கு மிஞ்சி விசனப்பட்டாலும் இப்போது அதை நினைக்கும் போது ஜீவியத்தின் பற்பல அபஜெயங்களினால் அதைரியப்பட்டுப் போகாமல் விடாமுயற்சியோடு தளராமல் முன்செல்வதற்கு இது தகுந்த ஆயுதப்பயிற்சியென்று உணருகிறேன். கடைசியிலே சித்தி பெறுவதற்கு வழியாயிருக்கும் விடாமுயற்சியை கைவிட்டு அதைரிய மடைந்து விடுவதுதான் அபஜெயம். முதல் தடவையிலேயே நமக்கு ஒரு காரியம் கைகூடிக் கிடைக்காமல் போவது அபஜெயமல்ல.

"கீர்த்தியும் அவமானமும் எந்த ஸ்திதியினாலும் வருகிறதில்லை

நீ செய்யவேண்டிய வேலையைச் சரிவரச் செய் அதுவே
உன் கீர்த்தி".

நான் பரீக்ஷையில் தவறிப்போனபோது என் இனத்தார் ஒருவர், கடவுள், தமது பிள்ளையாயிருக்கும்படி பிரயாசப்படும் பையனுக்கு ஏன் உதவி செய்யவில்லையென்று பரியாசம் பண்ணினார். இந்த வார்த்தை என் தகப்பனாரவர்களுக்கு மிகுந்த வருத்தம் உண்டாக்கிற்று. நான் உடனே 'இம்மைக்கென்று மாத்திரம் எதிர்நோக்கும் நம்பிக்கையை நாம் கிறிஸ்துவில் வைத்தவர்களாயிருந்தால் எல்லா மனிதரிலும் பரிதபிக்கத் தக்கவர்களாயிருப்போம்' என்று அவருக்குச் சொல்ல என் தகப்பனாருக்கு மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. நான் படிக்கிற காலத்தில் கலாசாலைப் பரீக்ஷகளெல்லாம் வருஷத்துக் கொருமுறை டிசம்பர் மாதந்தான் நடக்கும். 1900ம் வருஷம் டிசம்பர் மாதம் நடந்த பரீக்ஷையில் மெட்ரிக்குலேஷன் பரீக்ஷை தேறி உயர்தரப் பாடசாலையை விட்டு திருநெல்வேலியிலிருந்த சி. எம். எஸ். கல்லூரியில் சேர்ந்தேன். அதற்குத் தலைவராயிருந்த ஹென்றி சாப்டர் ஐயர் எங்கள் குடும்பத்தை நன்றாய் அறிந்தவர். நான் அவர்முன் போய் ஆஜரானபோது, 'சவரிராயன்களையெல்லாம் ஒருவர்மேல் ஒருவராய் நிறுத்தினால் ஒரு நல்ல உயரமான பனைமரமாகும்' என்றார். நான் அப்பொழுது 5 அடி 11 அங்குலம் உயரமாயிருந்தேன். அவர் நிரம்ப நல்ல சுபாவமுள்ளவர். தமாஷ் செய்வதில் முதலாள். அவர் ஆங்கிலப் பாடமெடுக்க வகுப்புக்கு வந்தால் பையன்களுக்குச் சந்தோஷமாயும் சிரிப்பு முழக்கமாயும் இருக்கும். ஆங்கில பாஷை வியாசங்களில் நான் தான் முதலில் நிற்பேன். ஒரு பிராமணப்பையன் தான் சில வேளைகளில் எனக்குப் போட்டியாயிருப்பான். ஒருநாள் எங்கள் தலைவர் பிரித்தானியாக்காரர் இந்தியாவை ஆளுவதை விட்டுப் போய்விட்டால் இந்தேசத்துக்கு என்ன நடக்கும் என்பதைப்பற்றி ஒரு வியாசம் எழுதச்சொன்னார். அவர் தம் சுயதேச ராஜாங்க அபிமானி. நானோ வைராக்கியமான இந்திய தேசாபிமானி! நான்தான் இந்த ஒருவிசை மாத்திரம் கடைசி மார்க் வாங்கினேனென்று சொல்லத்தேவையில்லை!

அதோடு என் வியாசத்துக்கடியில் 'நிரம்பக் கேவலம்' என்றும் எழுதி விட்டார்! எனக்கு இப்போது அதிக அக்கரை உண்டானது. தேசீக அன்பு என்னில் மூண்டது. தேசசேவைக்காக என்னை ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று பேரவா உண்டாயிற்று. நான் ஒருநாள் கல்லூரியை விட்டு வெளியே வரும்போது பெரிய வாசல்பக்கம் பஞ்சாப் தேசத்தான் ஒருவனைக் கண்டேன். அவன் அந்நியனுயிராமலிருந்தால் என் உடன் தேசத்தான் என்ற பிரியத்தால் கட்டித்தழுவியிருப்பேன். எங்கள் தலைவர் இந்திய தேசீய காங்கிரஸை அடிக்கடி கேலியாகப் பேசுவார். இதன் பயனோ நேர்விரோதமாக எனக்குச் சுதேச சம்பந்தமான காரியங்களில் எல்லாம நிரம்ப அன்புண்டாகச் செய்தது. இது மனோ சாஸ்திர சாத்தியமல்லவோ? இந்திய தேசீய முன்னேற்றங்களில் அனுதாபங்காட்டாத ஆசிரியர் இருக்கும் கல்லூரிகளிலிருந்துதான் வைராக்கியமுள்ள தேசாபிமானிகள் புறப்படுகிறார்கள்.

இந்த வயதில் எனக்கு நேரிட்ட இரண்டு சம்பவங்களைச் சொல்லுகிறேன். எங்கள் கல்லூரியில் வேதாகமப்பாடம் சம்பந்தமாக கிறுஸ்து மார்க்கம் சத்தியம் என்பதை ரூபிக்கும் அத்தாக்ஷி புத்தகம் படிக்க வேண்டியதிருந்தது. ஆனால் இந்த படிப்பு சந்தேகங்களை விடுவிக்கிறதற்குப் பதிலாக புதுச்சந்தேகங்களை உண்டாக்கிவிட்டது போலிருந்தது! நான் முன்மாதிரியாய் நோக்கின கிறிஸ்தவர்கள் சிலர் கண்மூடி வைராக்கியஸ்தரானதாலும், என் சிறு வயதுக்குத் தக்கபடி கண்டிப்பாயும், என் மனச்சாக்ஷிக்கு நுட்பமாயும் கீழ்ப்படிந்து எதையும் சந்தேகிக்காமல் வந்தாலும் மார்க்க விஷயத்தில் நான் சமாதானமாயும் திருப்தியாகவுமிருந்தேன். வேதாகமம் முழுவதும் அதன் ஒவ்வொரு வசனமும் கடவுளால் ஏவப்பட்டு எழுதினது என்று நம்பினேன் ஓய்வுநாளை வெகு கண்டிப்பாய்க் கைக்கொள்ளுவேன். என்னிமித்தமாக என் தாயார் சனிக்கிழமையே எல்லா சாமான்களும் வாங்கி வைப்பார்கள். இல்லாவிட்டால் ஞாயிற்றுக்கிழமை அவசரமில்லாமல் சமையல் பண்ணினது எதையும் பத்துக் கற்பனையில் ஒன்றை மீறினதாக எண்ணி நான் சாப்பிட மறுத்துவிடுவேன்.

என் தாயாரும் தகப்பனாரும நான் நுட்பம் பார்த்ததற்கு எல்லாம் இணங்கி இடங்கொடுத்தது எனக்கு இப்போது நினைக்க ஆச்சரியமாயிருக்கிறது. இந்த விஷயங்களில் நான் சொன்னபடி செய்து ஓய்வுநாளைக் கைக்கொள்ளும் காரியங்களில் என்னை வருத்தப்படுத்தப் பயப்படுவார்கள். ஓய்வுநாளில் எது அவசியமான சமையல் எது அனாவசியம் என்று நான் தான் சர்வதிகாரிபோல் கட்டளை கொடுப்பேன்! இதைப்பற்றி நான் இப்போது யோசிக்கும்போது என்னுடைய அன்பான இளக்க நெஞ்சுள்ள தாயாருக்கு எவ்வளவு தொந்தரவுவுண்டாக்கியிருப்பேனென்று மிகவும் வருந்துகின்றேன். ஏதாவது ஞாயிற்றுக்கிழமையில் அவர்கள் அருமையாய் எனக்காகச் சமைத்த பதார்த்தங்களை நான் சாப்பிடமாட்டேனென்றுசொல்வது அவர்களுக்கு

எவ்வளவு மனவேதனையாயிருந்திருக்கும். சில வேளைகளில் நான் மட்டுக்கு மிஞ்சிவிடுவேன். ஒரு தடவை (ஒரே ஒரு தடவைதான்) என் தகப்பனார் என்னைச் சாந்தமாய்க் கண்டிக்க வேண்டியதாயிருந்தது. அன்றிரவு என் தாயார் கட்டிலின் மேலிருந்த ஒரு பளுவான மெத்தையைத் தூக்கியெடுக்க வேண்டியிருந்தது. என்னை உதவிக்குக் கூப்பிட்டார்கள். நான் வேதாகமம் வாசித்துக்கொண்டிருந்தேன். "அம்மா நான் வேதாகமம் வாசித்துக்கொண்டிருக்கிறேனென்று நீங்கள் பார்க்கவில்லையா" என்று முரட்டுத்தனமாய்ச் சொல்லிவிட்டு, அவர்களுக்கு உதவி செய்ய எழுந்திராமல் வாசித்துக்கொண்டேயிருந்தேன். ஐயா இதைத் தற்செயலாய்க் கேட்டார்கள். உடனே என் அறை வாசலண்டை வந்து, 'பலியையல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்' என்பதின் கருத்து என்னவென்று கற்றுக்கொள்ளுங்கள் என்று இயேசு சொன்ன வார்த்தைகளைச் சத்தமாய்ச் சொன்னார்கள். பின்பு, "உன் ஏழைத் தாயார் பளுவான மெத்தையைத் தூக்குகிறதற்கு உன்னை உதவி செய்யக் கேட்கிறாள் வேதம் வாசிப்பதினால் முடியாது என்று சொல்லுகிறாய்," என்று சொல்லிவிட்டுப் பேசாமல் போய்விட்டார்கள். அம்மாவுக்கு உதவிசெய்யப் போகும்படி அவர்கள் என்னைக் கட்டாயம் பண்ணவில்லை. அப்போது என் தகப்பனார் சொன்னது எனக்கு விளங்கவில்லை. என் பக்தி விரிவில்லாமல் ஒடுக்கமுள்ள தன்மையாயிருந்ததென்று இப்போது உற்றறிகிறேன். நான் மனச்சாக்ஷிக்கு உண்மையாயிருப்பவள் என்று அந்த அருமைப்பெற்றோர் உணர்ந்ததால் அவர்கள் அன்பின் நிமித்தம் என் பாலிய மன ஐயங்கள் எல்லாம் பொறுத்து என் மனச்சாட்சியை மதித்து மரியாதை பண்ணினார்கள். இது விஷயத்தில் அவர்கள் எவ்வளவு ஞானமும் தூரதிருஷ்டியும் உள்ளவர்களாயிருந்தார்கள்! இவ்விதமாய்ப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளிலிருக்கப்பட்ட நல்மனச்சாட்சி, நல்ல தீர்மானங்களுக்கு மதிப்புக் கொடுக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

இக்காலத்தில் நடந்த ஒரு சம்பவத்தை இப்போது சொல்லுகிறேன். நான் இதுவரை சந்தேகப்படாத பக்திக்கடுத்த விஷயங்களைப் பற்றி இப்போது மிகுந்த சந்தேகம் மனதில் உண்டாகத் தொடங்கினது. இயேசுக்கிறிஸ்து என்று ஒருவர் இருந்தாரா? பூலோகமும் மனுஷப் பிராணிகளும் நிசமாகவே உண்டா? அதெல்லாம் மாய்கையல்லவா? என்னைச் சுற்றிச் சில காரியங்களிருக்கின்றனவென்று நான் நினைக்கிறது ஜாலமோ? உண்மை என்று சொல்லக் கூடியது ஏதாவது நிசமாகவே உண்டா? இந்த மனநிலைமையில் அநேக நாட்கள் கழிந்தன. ஒருவரும் இதைப்பற்றி அறியாவிட்டாலும் நான் முற்றிலும் நிர்ப்பாக்கியளாயிருந்தேன். அப்போது 1902ம் வருஷம் மே மாதம் விடுமுறை நாட்கள். என் குடும்பத்தார் சிலரோடு குலசேகரபட்டணம் என்ற கடற்கரையூருக்குப் போயிருந்தேன். ஒருநாள் சாயங்காலம் கடல் முனையில் தீபஸ்தம்பம் (கலங்கரை விளக்குக்கூண்டு) வைக்கப்பட்டிருந்த மணப்பாறை என்ற பக்கத்தூருக்கு தனியே உலாத்தப்

போனேன். கடற்கரையில் அலைகளைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந் திருந்தேன். அலைகள் முழக்கமாய் எனக்கு நேரே மோதிவந்தன. இருள் என்னைச்சுற்றி நெருக்கினது. நான் கொடிய மனவேதனைப் பட்டு, 'ஐயோ! என் இருதயம் இந்தக் கொந்தளிக்கும் கடலைவிட அதிகமாய்த் தத்தளிக்கிறதே' என்று அங்கலாய்த்துக்கூவினேன். இதோ ஒரு நிமிஷத்தில் என் முன்னே ஒரு காட்சி கண்டேன். இயேசுவும் அவரைச்சுற்றி பன்னிரண்டு சீஷரும் உட்கார்ந்திருந்தார் கள். இயேசுவின் முகம் மிகுந்த உருக்கமாகக் கருணையோடு எனக்கு நேராய்த் திரும்பினது. அவர் என்னைப் பார்த்து, "நீயும் என்னை விட்டுப் போய்விடுவாயோ?". என்று சொன்னார். ஆண்டவரே, யாரிடம் போவேன்? நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே", என்ற மறுமொழி உடனே சுயேச்சையாய் என் இருதயத் திலிருந்து தானே புறப்பட்டது. என் உள்ளத்தின் கொந்தளிப்பு உடனே அமர்த்தப்பட்டது. ஆத்ம சமாதானம் அடைந்தேன். சாந்தி! சாந்தி! சாந்தி!

அடுத்த சம்பவம் மறுவருஷம் நடந்தது. வெயில்காலத்தில் சுகத்துக்காக ஏதாவது மலைக்கு அல்லது குளிர்ச்சியான இடத்துக் குப்போவது என் தகப்பனாரவர்களுக்கு அவசியமாயிருந்தும் அவர் கள் தனியே எங்கும் போகமாட்டார்கள். போனால் தன் வீட்டார் யாவரும் கூடப்போகவேண்டுமென்று விரும்புவார்கள். அதிகச் செலவு பிடிக்குமாதலால் மலைக்குப்போவது கூடாத காரியம். அதற்குப்பதிலாக வேனிற்கால விடுமுறை நாட்களில் சுகமான நல்ல இடங்களுக்குக் கூட்டிக்கொண்டு போவார்கள். ஒரு தடவை திருவனந்தபுரம்போனோம். இதற்காக மாட்டுவண்டிகளில் நீண்ட பிரயாணம் செய்தோம் இரண்டு தடவை அழகிய கடற்கரைக்காட்சி தங்கிய கன்னியாகுமரி முனைக்குபோனோம். 1903ம் வருஷம் கோடை காலத்தில் திசையன்விளைக்குப்போனோம். அது என் தகப்பனார் அவர்கள் சிறு பிராயமாயிருந்தபோது வளர்ந்த ஊர். வயதுசென்ற என் இனத்தார் ஒருவர் அருவருப்பான தொழிலாகிய சாராயக்கடை வைத்து அவ்வூரில் அப்பொழுது வசித்தார். ஆனால் இதற்கு முரணாக தினம் வேதம் வாசித்து பக்தியுள்ள கிறிஸ்துவனாயிருக்கும்படி பிரயா சப்பட்டுக்கொண்டிருந்தார்! அவர் சாராயக்கடைக்கு முன்னே அவர் பிரியமாய் வாசித்துவந்த சர்ச்மிஷன் சமாச்சாரப் பத்திரிக்கைகள் ஒரு குவியலாகவும், அவருடைய பெரிய வேதாகமப்புஸ்தகமும், இன்னும் பற்பல பக்திக்கடுத்த புஸ்தகங்களும் வைக்கப்பட்டிருந்தன! ஆனால் அவர் எனக்கு ஒரு பெரிய நன்மை செய்தார். "சகோதரர் ஹோா" என்னப்பட்ட ரக்ஷண்ய சேனை உத்தியோகஸ்தர் ஒருவர் எழு தின அஸிஸி பட்டணத்து பிரான்சிஸ் மகாத்மா என்பவரின் ஜீவிய சரித்திரப்புஸ்தகம் ஒன்றை என் கையில் கொடுத்தார். நான் இப் புஸ்தகத்தை வாசித்து முடித்ததும் அது என்னைப் பரவசப்படுத்திற்று.

பிரான்சிஸ் மகாத்மா மாதிரியைப் பின்பற்ற வேண்டுமென்று பேர வாக்கொண்டேன். "நானும் ஓர் சந்நியாசியைப்போல காவி வஸ்திரம்தரித்து எல்லாவற்றையுந் துறந்து சுற்றித்திரிந்து பிரசங்கம் செய்வேன். இந்த லௌகீகக்கல்வியும், கலாச்சாலைப்பரீட்சைகளும். மற்றும் நிலையற்ற மாயைகளும் என்னத்திற்கு?'' என இப்படி என் உள்ளத்தில் தர்க்கித்து அதிகக் கலக்கமுற்றேன். நாங்கள் பாளையங்கோட்டை திரும்பினோம், என் மனம் குழம்பிக்கொண்டேயிருந்தது. ஆனால் இது ஒருவருக்கும் தெரியாது. ஒரு செவ்வாய் காலை, அது சாதாரணமாய்க் கோயில் ஆராதனை நடக்கிற நாளல்ல ஆனால் அன்று நான் மிகவும் கண்ணியமாய் எண்ணின ஒரு பேர்பெற்ற பிரசங்கியார் வந்திருப்பதாகவும், அன்று காலை கோவிலில் பிரசங்கம் பண்ணப்போவதாகவும், ஒரு விளம்பரம் வந்தது. நான் போனேன். 2 கொரி. 5ம் அதி. 14ம் வாக்கியத்தின்மேல் பிரசங்கஞ் செய்தார். இயேசுவினுடைய இருதயம் மற்றவர்மேலுள்ள அன்பினால் அனல் மூண்டுகொண்டிருந்த போதிலும், அவர் ஊழியம் ஆரம்பிக்கும்முன் தம் பெற்றோருக்கு அடங்கியிருந்து 30 வருஷகாலமாய்ப் பொறுமையுடன் காத்திருந்தார் என்று அவர் பிரசங்கத்தில் சொன்னார். மனகுழப்பம் சந்தேகங்களினால் வருந்திய இந்த நேரத்தில், எனக்கு இந்தச் செய்தியை அறிவிக்கவே, கடவுள் தன் தூதரை அனுப்பினாரென்று என் உள்ளத்தில் பட்டது. என் ஜீவிய வேலையை ஆரம்பிக்கும் சமயம் இன்னும் வரவில்லையென்றும், வருங்காலத் தொண்டுக்கு ஆயத்தமாக நான் என்னைப் பொறுமையுடன் பயிற்சி செய்துகொள்வதற்கு இது நல்ல பாடமென்றும் தெளிவாய்க் கண்டேன்.

கல்லூரியில் ஒரு இந்து வாலிபன் எனக்குத் தோழராயிருந்தார். அவருக்கும் எனக்கும் நமது தாய் பாஷையாகிய தமிழ்ப் பாஷைமேல் நிரம்ப அபிமானமுண்டாயிற்று. எங்களுடைய சிநேகம் அவரை இயேசுகிறிஸ்துவண்டை இழுக்க ஏதுவாயிற்று. அவர் ஞானஸ்நானம் பெற்று பகிரங்கமாய்ச் சாட்சி கொடுத்தார். அவரும் (வக்கீல் ஏ. வி. பவுல் அவர்கள், தூத்துக்குடி) இன்னொரு கிறிஸ்துவ வாலிபரும், கல்லூரி ஆசிரியர் அன்புடையான் அவர்களும் நானுமாகச் சேர்ந்து மத்தியானஞ் சாப்பிட்ட பின்பு தினந்தோறும் தனியே ஒரு அறையில் போய் ஜெபம் செய்வோம். நாங்கள் இப்படிச் சந்திப்பது கல்லூரியிலுள்ள மற்றவர்களுக்குத் தெரிந்திராது என்று நினைக்கிறேன். நான் 14 வயதாயிருக்கும்போது திடப்படுத்தல் பெற்றேன். மற்ற அநேக பையன்கள் என்னோடு திடப்படுத்தல் பெற்றதால் இது எனக்குக் கூச்சமாயிருக்கவில்லை. ஆனால் நற்கருணை சேர எனக்கு அச்சமாகவும் இதைப்பெற சபைக்கு முன்னாலே எழுந்துபோக கூச்சமாகவும் இருந்தது ஆனால் இந்தக் கல்லூரி உபாத்தியாயர் எனக்குப் புத்திசொல்லி மிகுந்த பிரயாசத்தோடு என்னைச் சம்மதிக்கப் பண்ணினார். இவ்விதமான ரோசம், சொரணை அடிக்கடி எனக்கு துர்ப்பலமாக இருந்திருக்கிறது. அதுவே பலமாகவுமிருந்திருக்கிறது. நற்கருணையெடுக்கும்படி

எல்லோருக்கும் முன்பாக எழுந்து கிராதியண்டைபோய் ஆங்கிலத் திருச்சபையின் வழக்கத்தின்படி சபையார் முன்பே முழங்காற்படியிடுவது எனக்குப் பெரிய வேதனையாயிருந்தது ஒரு தடவை எல்லோரும் நற்கருணை எடுத்து முடியுமட்டும் பின்தாங்கி வெட்கப்பட்டு காத்திருந்தேன். நான் கடைசியில் போனபோது குருவானவர் எல்லாவற்றையும் முடித்துவிட்டதால், நான் சபையார் எல்லாருக்கும் முன்பாக நின்று காத்துக்கொண்டிருக்கையில் அவர் என்னிமித்தம் வஸ்துக்களைத் திரும்பவும் பிரதிஷ்டை பண்ணவேண்டியிருந்தது! நான் வியர்த்துக் களைத்து நெடுமூச்செறிந்து ஆராதனை முடிந்தவுடன் வெட்கப்பட்டுக்கொண்டு ஒரே ஓட்டமாய் வீட்டுக்குள் புகுந்து என் அறைக்குள் சென்று, மனம் சற்று நிம்மதியாகுமட்டும் தனியே படுக்கையில் வீழ்ந்து கிடந்தேன்.

2½ மைல் தூரத்திலிருந்த என் கல்லூரிக்குப் போவதற்கு என் தகப்பனார் எனக்கு ஒரு மட்டக்குதிரை ஒன்று கொடுத்தார்கள். நான் நெட்டையாய் இருந்தபடியால் என் பாதங்கள் அதன்மேல் ஏறினவுடன் தரைமட்டும் தொங்கின! நான் ஒவ்வொரு நாளும் ரஸ்தாவில் குதிரையின் மேல் சவாரிசெய்துகொண்டு போகும்போது, அநேகர் என்னைக் கேலி பண்ணுவார்கள். "எவ்வளவு பெரிய குதிரைமேல் எவ்வளவு சின்னப்பிள்ளை!" என்று ஒரு சிறுமி ஒருநாள் சொன்னாள். தகப்பனார் எனக்குக் கொடுத்த இந்த வெகுமதியிலிருந்து என்னை விடுதலை செய்யவேண்டுமென்று அவர்களைக் கெஞ்சினேன். ஆனால் அவர்கள் எனக்கு ஒரு கதையைச்சொல்லி, "ஏழையினுடைய குதிரையைப் பார்த்துப் **பிச்சைக்காரர்கள் ஏன் சிரிக்கவேண்டும்?**" என்று என்னைத் தொந்தரவு செய்கிறவர்களுக்கு சுடச்சுட விடை கொடுக்கும்படி வேடிக்கையான ஆலோசனை சொன்னார்கள்,

முதல்நாள் குதிரைமேல் ஏறிக் கல்லூரிக்குப் போனபோது அதின் முதுகு மேலிருந்து இறங்கப் பிரயாசப்படுகையில் விழுந்துவிட்டேன். கூட்டமாய்ப் பார்த்துக்கொண்டிருந்த மாணவர்களெல்லாம் இந்த வேடிக்கையைக் கண்டு கைதட்டினார்கள். நான் குதிரைச் சவாரி செய்ய வேண்டியதிருப்பதால் ஐரோப்பிய உடை தரிக்கவேண்டுமென்று எங்கள் வீட்டில் குடும்ப சங்கம் தீர்மானம் பண்ணிவிட்டதென்று என் தகப்பனார் ஒருநாள் என்னிடம் சொன்னார்கள். ஒருநாள் குதிரை கட்டவிழ்ந்து ஓடிவிட்டது. அதைப் பிடிக்கும்படி நான் என்னால் கூடியவரை துரத்திக்கொண்டே ஓடினேன். அதே நேரத்தில் பள்ளிக்கூட உபாத்தியாயர் ஒருவர் வகுப்பில் ஆங்கில செய்யுட்பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அன்று அவர்கள் படித்த செய்யுள் ஜான் கில்பினும் அவன் குதிரையும் என்பதாயிருந்தது. என்னையும் என் குதிரையையும் சுட்டிக் காட்டி அன்று அவர்கள் படித்த கதைக்குக் கண்ணாலே கண்ட காட்சி அதுதான் என்று சொன்னாராம்! பையன்கள் பிற்பாடு எனக்கு இதைச் சொன்னார்கள்.

அத்தியாயம் 3

உத்தியோகம் தெரிந்துகொண்டது.

நான் ஏழு வயது மாத்திரமுள்ள சிறுவனுயிருக்கும்போது நானும் சில பையன்களும் சேர்ந்து நாங்கள் பிற்காலத்தில் என்ன வேலை பார்ப்போமென்று சீட்டுப் போட்டோம். நான் டாக்டராயிருப்பே னென்று சீட்டு விழுந்தது. நான் பெரியவனுகி வைத்தியனுனபோது வரப்போகிற என் மனைவிக்கு ஒரு மூட்டை புடைவைகள் இனும் பண்ணுவேனென்று கம்பீரமாய் அந்தப்பையன்களிடம் சொன்னேன். இந்த வாக்கு நாளதுவரை நிறைவேருமலேயே இருக்கிறது!

படிக்கும் காலமெல்லாம் வைத்தியனுகவேண்டுமென்ற ஆவல் என் உள்ளத்தில் இருந்தது. இந்த எண்ணத்தோடு நான் கல்லூரியில் (உடலியல் நூல் பிஸியாலஜி) பாடத்தைத் தெரிந்துகொண்டேன். பக்கத்தில் எங்கேயாவது ஆடு அடித்தால், நான் போய் அதின் உடல் அமைப்பைப் படிப்பேன். 1903ல் எப். ஏ. பரீக்ஷை தேறினேன். நான் பி. ஏ. பட்டம் பெற்ற பின்பு என்னை வேதாகம சாஸ்திரக் கல்லூரிக்கு அனுப்பவேண்டுமென்று என் தகப்பனுர் யோசனை பண்ணிக்கொண் டிருந்தார்கள். ஆனுல் என் அண்ணன்மார்களில் ஒருவர் என் விருப் பத்தை அறிந்து வைத்தியக் கல்லூரிக்கு அனுப்பவேண்டுமென்று ஆலோசனை சொன்னுர். பி. ஏ. பட்டம் பெற்று வைத்தியக் கல்லூரி யில் படித்துக்கொண்டிருந்த என் சொந்தக்காரர் ஒருவர் பி. ஏ. பட்டத்திற்கு படிப்பதால் வீண் கால கஷ்டமேயொழியப் பயனில்லை யென்றும் உடனேயே வைத்தியக்கல்லூரியில் சேரவேண்டுமென்றும் ஆலோசனை சொன்னுர் ஜூலை மாதம்தான் அந்தக் கல்லூரியில் சேர வேண்டுமாதலால் நான் பட்டணம் போய் அந்த மாதம் தொடங்கு மட்டும் சென்னை கிறிஸ்டியன் காலேஜில் விலங்கு நூல் எனும் உயிர் சாஸ்திரம் (பயாலஜி) வகுப்பில் படிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டது. என் தகப்பனுர் என்னிடத்தில் "வைத்திய வேலையின் மோசம் என்னவென்ருல், ஒருவருடைய மனம் மனிதர்களுடைய உபத் திரவங்களைக் குறித்து அடிக்கடி பார்த்துக் கடினப்பட்டுப் போவதே, அதைப்பற்றி எச்சரிக்கையாயிரு. வைத்திய வேலை ஆண்டவருடைய வேலை. வியாதியஸ்தன் மரித்துப்போனுல் அவனுக்கு நீ செய்த பரிகாரத்திற்குப் பணம் வாங்காதே" என்று புத்திமதி சொன்னுர் கள். நான் பட்டணத்துக்குப் புறப்படவேண்டிய நாள் வந்தபோது அன்று காலை நான் ரெயிலுக்குப் போகுமுன், மேலே தனியே என் அறைக்கு வந்து 40ம் சங்கீதத்தை என்னை வாசிக்கச் சொல்லி, என் பக்கத்தில் முழங்காலூன்றி உருக்கமாய் ஜெபித்தார்கள். ஜெபம் பண்ணும்போது அவர்கள் உதடு துடித்து அவர்கள் உடம்பெல்லாம்

அதிர்ச்சியுடன் குலுங்கினதைக் கவனித்தேன். அவர்களை உயிரோடே பார்க்கவும், கேட்கவும் எனக்கு சிலாக்கியங் கிடைத்த சமயம் அது தான் கடைசித் தடவையென்று நான் அப்போது நினைக்கவேயில்லை. இளைஞனாகிய நான் முதல் தடவையாக வீட்டை விட்டு தூரப்போகிறேன். அந்தக் காலத்தில் பட்டணத்துக்குப் படிக்கப் போவது வெகு தூரமான இடம் போவதாக எண்ணப்பட்டது. எனது பெற்றோருடைய அன்பான ஆதரவுக்கும், நடத்துதலுக்கும் அடியில் இவ்வளவு நாளாயிருந்த நான் இப்போது என் உத்தரவாதப்படி ஜீவிக்க வேண்டியகாலம் வந்துவிட்டது. இந்த வைத்தியப் படிப்பு அதிகச் செலவுள்ளதானதால் என் தகப்பனுருக்குப் பணச் சம்மந்தமாய் பெரிய பொறுப்பு நேரிட்டது. அவர்கள் அப்போதுதான் சர்க்கார் உத்தியோகத்திலிருந்து நீங்கி உபகாரச் சம்பளம் (பென்ஷன்) வாங்க ஆரம்பித்திருந்தார்கள். அந்த பென்ஷன் பணம் எங்கள் வீட்டுச் செலவுக்குத்தான் போதுமானதாயிருந்தது. என்றாலும் அவர்கள் தைரியமாருந்தார்கள். என்னை வைத்தியக் கல்லூரிக்கு அனுப்புவதைப்பற்றிச் சந்தோஷமாய்ச் சொன்ன ஒருவரிடத்தில், "அப்படிக் கஷ்டமாயிருந்தால் இந்த வீடு இருக்கிறதென்று" ஒரு தடவை சொன்னார்கள். அங்குமிங்கும்போய் எனக்குப் பணஉதவி (ஸ்காலர்ஷிப் கிடைக்கும்படி பல பெரியாரிடமிருந்து சிபாரிசுக் கடிதங்களெல்லாம் வாங்கினார்கள். ஆனால் எனக்கு அப்படி பணஉதவி கிடைக்கவில்லை. எனக்கு பட்டணத்துக்கு எழுதின கடிதங்களில் அவர்கள் ஆழ்ந்த சிந்தனைகளையெல்லாம் வெளியிடுவார்கள். ஒரு கடிதத்தில் அரிபிளவை முதலிய சுகமாகக் கூடாத வியாதிகளைக்கூட கிரணம் வீசிச் சுகப் படுத்துவதற்கு ரேடியம் என்ற ஒளி வஸ்து கண்டுபிடித்த மனிதர் இன்னொருவனுடைய சின்ன நிலத்தை அபகரிப்பதற்காக, கணக்கில்லாத ஜனங்களை அழிக்கும்படி பயங்கரமான ஆயுதங்கள் கண்டு பிடிக்க. அப்படிப்பட்ட விஞ்ஞான சாஸ்திர அறிவை உபயோகப் படுத்துகிறார்களென்று நினைப்பது மிகுந்த பிரமிப்பாயிருக்கிறதென்று எழுதினார்கள். அதற்கு உதாரணமாக அப்போது நடந்த ருஷியா—ஜப்பானிய சண்டையைக் குறிப்பிட்டார்கள். தமது திவ்ய சாயலாக மனிதன் பரிசுத்தமாயிருக்க வேண்டுமென்று ஆதியில் கடவுள் தீர்மானித்த நோக்கத்திலிருந்து நீதி நெறி தவறி, மிகவும் இழிவான மிருகத் தன்மைக்கு அதோகதியாய் மனிதர் விழுந்துவிட்டதற்கு, இது சாட்சியென்று சொல்லி அந்தக் கடிதத்தை முடித்தார்கள். ஏப்ரல் 1904ல் என் தகப்பனுருக்குக் காதில் சீழ் புறப்பட்டுக் கஷ்டப்பட்டார்களென்று கடிதம் வந்தது. அவர்களுக்கு நீரிழிவுமிருந்தது. மே மாதம் 7ம் தேதி இரவு, கூடுமானால் உடனே புறப்பட்டு வரும்படி ஒரு கடிதம் வந்தது. மறுநாள் மாலை புறப்பட்டு 9ம் தேதி பிற்பகல் பாளையங் கோட்டை சேர்ந்தேன். வீடு சேர்ந்து விராந்தாவில் கூட்டமாய்க் கூடியிருந்தவர்களைப் பார்த்த பின்புதான் பயந்து கலங்கினேன்.

என் தகப்பனார் அன்று முற்பகல் தங்கள் பரம இளைப்பாறுதலுக்

குள் பிரவேசித்துவிட்டிருந்தார்கள். முந்தின நாள் 8—5—1904 மாலை பிள்ளைகளெல்லாரையும் கூடிவரச் செய்து, மூத்த மகன் பவுல் அண்ணனை பரி. யோவான் 17ம் அதிகாரத்தை வாசிக்கச் சொல்லி, அதன்பின் அவர்களை ஜெபம் செய்யக் கேட்டதால் அண்ணனும் ஊக்கமாய் ஜெபித்தார்களாம். இப்படித் தங்கள் பிள்ளைகளை கிறிஸ்துவின் அன்பின் கட்டில் ஒற்றுமையாக நிலைத்திருக்கப் புத்தி சொல்லி ஆண்டவரின் மார்பின்மேல் இளைப்பாறிவிட்டார்கள். 10-5-1904 முற்பகல் அவர்கள் சரீரத்தை தங்கள் குடும்பத்துக்காக அவர்கள் ஆயத்தம் செய்ததும், அடிக்கடி தியானத்துக்குப் போகுமிடமாயிருந்ததுமான அக்ஷயவிளையென்று அவர்கள் பெயரிட்டிருந்த கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் செய்ய எல்லா ஒழுங்கும் செய்திருந்தது. அக்ஷயவிளையென்றால் அழிவில்லாத விதை விதைக்கப்படும் வயல். குருட்டுப் பிள்ளைகள் பள்ளிக்கூடமருகேயிருக்கிற இப்படிப்பட்டக் குடும்பக் கல்லறைத் தோட்டத்தை அத்தியக்ஷர் பிரதிஷ்டை செய்ய மறுத்துவிட்டதினால், பாதிரிமார் மாத்திரம் ஒருவரும் கல்லறைக்கு வரவில்லை. மற்ற கிறிஸ்தவர்கள் வந்தார்கள். அப்போது பாளையங் கோட்டை சபை குருவாயிருந்த அண்ணன் தேவதாஸ் ஐயர் அவர்கள் கூட மிஷனரிமார் உத்தரவு மீறப் பயந்து அடக்கத்திற்கு முன் வீட்டிற்கு மாத்திரம் வந்து ஜெபஞ்செய்தார்கள். ஐயாவுடைய சரீரத்தைப் பெட்டியில் எடுத்துக்கொண்டு எல்லாரும் அக்ஷயவிளை சேர்ந்தோம். என் அண்ணன் பவுல் அவர்கள் அடக்க முறைமை ஆராதனையை நடத்தி முடித்தார்கள். வேலையாட்கள் கற்களையெடுத்துக் குழிமேற் பரவி மூடி சாந்து பூசினார்கள். சூரியன் அஸ்தமித்து இருள் ஆயிற்று. மாலை வெளிச்சத்தில் வீட்டுக்குத் திரும்பினோம்.

> கண்ணிருண்டு காதடைத்து பேச்சு மூச்சொடுங்கும் சாவில்.
>
> அண்ணலே! சிலுவைக் காட்சி காட்டிடு உன் இன்ப மார்பில்
>
> கண்மூடிக் களைப்பாறுவேன்.

ஐயா இறந்த 25-வது வருஷாந்திர திவசம் ஓர் மலையின்மேல் அமைதியாய் செலவழித்த நேரத்தில் என்னுடைய தினசரி குறிப்பு புஸ்தகத்தில் எழுதியிருப்பதாவது.— "இன்று என்னருமை ஐயா பரமதவியடைந்த 25-ம் வருஷாந்திர திவசம். கால் நூற்றாண்டு சென்று விட்டது. ஆனால் அவர்கள் சரீரமும், நடை பேச்சும், எனக்கு இப்போ மறைந்திருந்தாலும் அவர்கள் ஆவியின் சகவாசம் பலமாக இன்றும் என்னோடு குடிகொண்டிருக்கிறது. பூலோகத்தில் சரீரத்தில் தரித்திருக்கிற பக்தர்களை மாத்திரமல்ல, கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்திருக்கிற பரம பக்தர்களையும் பூலோகத்திலிருக்கிற பக்தர்களையும் கிறிஸ்துவின் அன்பு ஒன்றாக இணைக்கிற வல்லமையுள்ள கட்டு. கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மை பிரிப்பது யாது?

மரணமோ? அல்ல: எதுவும் பிரிக்கமுடியாது." அதே வேளையில்தான் இந்தப் பாட்டையும் தினசரி குறிப்பு புத்தகத்தில் எழுதிவைத்தேன்.

"நம்மைசூழ்ந்து கொண்டிருக்கிற மேகம் போன்ற திரளான சாக்ஷிகள்

எபிரேயர் 12 : 1.

1. வெற்றி சிறந்து விளங்கும் விண் லோகத்தார்
பற்றிய இறைவனின் பரமபதம் சேர்ந்தார்,
சிற்றின்ப லோக மெதிர்த்துப் போராடுவோர்
சுற்றி மேகத்திரள் சாக்ஷிபோல் சூழுவார்.

2. இத்தரைப் போரில் தவித்துத் தியங்குவார்
அத்தரைச் சோபன ஜெய ஒலி செவிபட
சித்தியோடிறைவனின் சேவகம் சிறந்திட
பத்தியின் பட்டயம் பலமுடன் வீசுவார்.

3. எத்தனை திவ்விய சுகிர்தமாம் ருசிதரும்
அத்தனின் ஐக்கிய பக்தர் பரவசம்.
சித்தர் மெய் வீரருடன் விசுவாசிகள்
இத்தரைப் போரில் சுகிக்கும் சகவாசம்.

4. பக்தனே பயமுற்று பலங்குன்றி பதறுதே
சக்தியோ டுதவும் சகாயரை மறவாதே
முக்தியடைந்தோரின் முன்னடித் தடமதே
சித்தி வழிதனில் சேர்க்குமுன் திடமிதே.

அத்தியாயம் 4.

சென்னப்பட்டணம்.

முன்னமேயே வைத்தியக் கலாசாலையில் இருந்த என் இனத்தார் என்னை மதராஸில் புகைவண்டி ஸ்தானத்தில் சந்தித்து, அவருடைய மாணவ சிநேகிதர் ஒருவரிருந்த பென் ஹாஸ்டல் என்ற விடுதியில் அவரோடு நான் சிறிது நாட்கள் தங்கியிருக்கும்படி ஒழுங்கு செய்தார். அங்கு மலையாள சீரிய கிறிஸ்தவ மாணவர்கள் அநேகரிருந்தார்கள். நான் முன்னமே சீரிய (சூரியானி) கிறிஸ்தவர்களைப் பற்றிக் கேள்விப் பட்டிருந்தேன். அவர்கள் நம் தேசத்தில் பூர்வீகத் திருச்சபையைச் சேர்ந்தவர்களாய் இருந்ததால் என்னை உடன் கிறிஸ்தவச் சகோதரனாக அன்புடன் வரவேற்றுக்கொள்வார்களென்று நினைத்தேன். ஆனால் அவர்கள் என் விஷயத்தில் அசட்டையாய் இருந்ததுமாத்திரமல்ல, அவர்கள் 'மேற்றிசைச் சங்கம்' என்று ஒன்றாய்ச் சேர்ந்துகொண்டு சீரிய கிறிஸ்தவரல்லாத மலையாளக் கிறிஸ்தவர்களைக்கூட அந்த சங்கத்தில் சேர்க்காமல் விலக்கித் தங்களைப் பிரித்து நடந்துகொண்டதைப் பார்த்தபோது, எனக்கு மிகவும் ஆச்சரியமாயும், விசனமாயும் இருந்தது. ஆனால் அவர்களுக்குள் ஒருவர் மாத்திரம் இதற்கு வித்தியாசமாயிருந்தார், அவர் என்னோடு பக்ஷமாய்ப் பேசினார், எம். என். ஆபிரகாம் என்னப்பட்டவரும் (இப்போது மார்த்தோமா சபை பிஷப் ஆபிரகாம் அத்தியக்ஷர்) நானும் நெருங்கிய சிநேகிதரானோம். அந்தக்காலத்து இந்தியக் கிறிஸ்தவர்கள் சுதேசக் கிறிஸ்தவர்கள் என்றும், சீரியக்கிறிஸ்தவர்கள் சீரியர் (சுதேசக் கிறிஸ்தவர்களென்றல்ல) என்றும் சொல்லிக்கொண்டார்கள். சுதேசி என்று சொல்லப்படுவது அப்போது கண்ணியமாக எண்ணப்படவில்லை. பட்டணத்திலுள்ள ஜெனரல் ஆஸ்பத்திரியில் மேல்மாடி மச்சில் ஐரோப்பியருக்காக விசேஷமாய்ப் பிரித்து வைக்கப்பட்டவையும் எல்லா வசதி சவுகரியங்களுமுள்ளதுமான பெரிய அறைகளிலும், ஐரோப்பியர் அல்லது சட்டைக்காரருக்காகத் தனியே வைத்திருந்த ரெயில் வண்டியிலும் சுதேசிகளை உள்ளே விடமாட்டார்கள். ஆனால் சுதேசி என்ற பட்டப்பெயரை மறுத்துவிட்ட எவரானாலும் சரி பர்மாக்காரர், சீரியக் கிறிஸ்தவர்கள் முதலானவர் அங்கு தங்க இடம் கிடைக்கும். இந்த வசதிகளுக்காக நம்முடைய வாலிபர்கள் அநேகர் ஐரோப்பியத் தொப்பிகளை மாட்டிக்கொண்டு, தங்கள் பெயர்களை மாற்றி சட்டைக்காரனென்று நடித்து வந்தார்கள். இது என்ன இழிவும் கேவலமுமானது! வெள்ளைக்காரரின் ராஜாங்கத்தின் நிமித்தம் உண்டான பலன், நமது நாட்டுச் சுதேசிகள் தங்களைத் தாங்களே இகழும் நெடுங்கால வழக்கமே. மேலும் கறுப்பு மனிதர் தங்களுக்குள்ளேயே சற்று வெளிர்த்த நிறத்தை அழகென்று மேலாக மதிக்கும் மூடத்தனமும், தப்பு அபிப்பிராயமும் நம்மை கீழாக்கிக் கெடுத்துப்

பலவீனமாக்கிவிடுகின்றன. உலக முழுவதும் தங்களைக் கேவலமாய் எண்ணினாலும், தங்களைத் தாங்களே இகழும் மோசமான சுய இகழ்ச்சியின் மனநிலைக்கு வராமல், சுய மரியாதைப் புத்தியுள்ளவர்கள் விஷயத்தில் நம்பிக்கை வைக்க இடமுண்டு. ஆனால் தங்களைத் தாங்கள் இகழ்ந்து கேவலமாய் நினைக்கிறவர்களுடைய நிலைமை மிகவும் பரிதாபம். கடவுள்தான் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும்! வெள்ளைக்காரருடைய அதிகாரம் அவர்களுடைய தற்கால போர்த் திறமையினால் மாத்திரமல்ல, கறுப்பு நிற ஜாதிகள் தங்களை அறியாமலே வெள்ளைக்காரர்தான் மேம்பாடானவர்கள், தாங்கள் கீழ்ப்பட்டவர்கள், என்று உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு, தெரிந்தும் தெரியாமலும் அவர்களுக்கு மனதார அடங்கி அடிமையாகிறார்கள். இப்படியில்லாவிட்டால் வெள்ளைக்கார ஆட்சி அதிகாரம் நீடித்திருப்பது கூடாத காரியம்.

ஒரு இந்தியனும், ஐரோப்பியனும் ஒன்று சேர்ந்து சம நிலையாக வேலைசெய்ய விரும்பும் ஸ்தாபனத்தில் உண்டாகிற முக்கியமான கஷ்டம் என்னவென்றால், (அந்த ஐரோப்பியன் தன் இந்திய உடன் ஊழியனுக்கு முதன்மையான ஸ்தானத்தைக் கொடுக்கும்படி எவ்வளவு விரும்பினாலும்கூட) அவர்களுக்கு அடியிலிருக்கிற மற்ற இந்தியர்கள், ஐரோப்பியனுக்குத்தான் அதிக மரியாதை கொடுக்கிறார்கள் இது மகா மன வேதனையானது. தங்களுக்கு மேலாக இருக்கிற ஐரோப்பியனுடைய கட்டளைக்கு ஏனென்று கேட்காமல் உடனே கீழ்ப்படிவார்கள். ஆனால் தங்களுக்கு மேற்பட்ட இந்தியனுடைய வார்த்தைக்கு அந்த மாதிரி உடனே கீழ்ப்படியும் ஆவியைக் (குணத்தைக்) காட்டுகிறதில்லை. இந்தியனும் ஐரோப்பியனும் ஒன்றாய்ச் சரிசமானமாய் வேலை செய்கிற இடங்களைப்பற்றிச் சொல்லுகிறேன். இந்தியன் மாத்திரம் தலைமையாயிருக்கிற இடத்தைப்பற்றியல்ல. ஐரோப்பியனையும், இந்தியனையும் ஒப்பிட்டுப் பேசி இந்தியன் குறைகளைச் சுட்டிக்காட்டி, ஐரோப்பியனை மெச்சிக்கொள்வது நமது மக்களின் மனோநிலை. தன் ஜனத்திற்காக மானமும், சுயமரியாதை உணர்ச்சியுள்ள ஒரு இந்தியன் ஒரு ஐரோப்பியனோடு கூட்டுறவாக வேலை செய்வதில் இப்பேர்ப்பட்ட வித்தியாசத்தைச் சகிப்பதுதான் எல்லாவற்றிலும் அதிகக் கஷ்டமானது. ஐரோப்பியன் ஏதாவது ஒரு விஷயத்தில் தாழ்மை காட்டினால் இந்தியன் அதை மதித்து மிகவும் மெச்சிப் பேசுவான். ஆனால் அந்த ஐரோப்பியனோடு வேலைசெய்கிற அவன் உடன் இந்தியன் எவ்வளவுதான் சுய வெறுப்பு தாழ்மை காட்டினாலும், அதைப்பற்றி அற்பமாகத்தான் எண்ணுவான். நம் தேசத்தில் வைராக்கியமான சுதந்திரப் போரிடும் தேசாபிமானிகள்கூட அநேகர் ஐரோப்பியனுக்குத்தான் உயர் மதிப்புக் கொடுக்கிறதைப் பார்த்து நான் சில வேளைகளில் மகா ஆச்சரியப்படுவதுண்டு. என் அநுபவத்திலிருந்து இதற்கு அநேக திருஷ்டாந்தங்கள் சொல்லக்கூடும். ஆனால் அது ஆட்களைக் குறிப்பிட்டுப் பேசுவதாகும்! கறுப்பு

மனிதர் தங்களுடைய சுதந்திரத்தை அடையவேண்டுமானால் தங்களுடைய கேவலமான நிலைமையின் காரணங்களை அறியும்படி தங்கள் உள்ளங்களைச் சோதித்தறிந்து ஆராயவேண்டும்

பென் ஹாஸ்டலில் இரண்டு வாரம் இருந்துவிட்டு ஒய். எம். சி. ஏ. என்ற வாலிபக் கிறிஸ்தவ சங்க விடுதிக்கு மாறினேன். அங்கே என் அறையில் (மூன்று பேர் இருக்கக்கூடிய அறை) ஒரு பர்மாக்கார வைத்திய மாணவனும், ஒரு மலையாளியும் இருந்தார்கள். போ டிலோன் என்ற பெயருள்ள அந்தப் பர்மாக்காரனுடைய ஆங்கிலப்பேச்சு எங்களெல்லாருக்கும் வெகு வேடிக்கையாயிருந்தது. எங்கள் விடுதியில் அநேக விநோதமான தோழர்கள் இருந்தார்கள். ஒரு கிறிஸ்தவ மாணவனுக்கு மார்க்க விஷயமெல்லாம் பயனற்ற வீண் காரியமாயிருந்தது. வைத்தியக் கல்லூரியில் படிக்கிற நான் தமிழ் வேதாகமம் வாசிக்கிறது அவனுக்கு விநோதமாயிருந்தது. என் பிறந்தநாளன்று எனக்கு ஒரு சிறு புஸ்தகம் இனாமாகக் கொடுத்தான். அதின் முதல் வெள்ளொற்றைத்தாளில் 'நிச்சயமான தற்காலம் நிச்சயமில்லாத வருங்காலத்தைவிட மேலானது' என்று எழுதியிருந்தான். ஆனால் அவன் என்னை அதிகமாய் நேசித்தான். வெளிப்பார்வைக்கு பக்தியற்ற விதமாய் மும்முரமாய்ப் பேசினாலும், என் விஷயத்தில் நிரம்பப் பற்றும் மரியாதையுமுள்ளவனாய் இருந்தான். இன்னொரு மாணவனுடைய பிரியமான வேலை என்னவென்றால், வருகிற வாலிபரிடத்திலெல்லாம் பிரமச்சாரியத்தைப்பற்றிப் புகழ்வதும் விவாகத்தைக் கண்டனஞ்செய்வதுமே! நான் அவனோடு மிகவும் வைராக்கியத்துடன் விவாகமே உயர்ந்தது என்று தர்க்கிப்பேன்.

சிறுவர்கள் மடியிலேறி முத்தமிடும் தந்தை தாயார்

சிறந்து வாழும் மனையல்லோ இல்வாழ்க்கையின் இனிமை

என்ற ஆங்கிலச் செய்யுளை எடுத்துச் சொல்லுவேன். அந்த என் இந்தியச் சிநேகிதர் இப்போது ஓர் ஆங்கிலமாதை விவாகஞ் செய்து மூன்று பிள்ளைகளுக்குத் தகப்பனாயிருக்கிறார். ஆனால் நான் அப்போதிருந்தபடியே இன்றும் இருக்கின்றேன்! பிரமச்சாரியத்தைப்பற்றி மிதமிஞ்சி மும்முரமாய் ஓயாது பேசுகிற வாலிபன் சீக்கிரம் விவாகம் செய்துவிடுவான்! அதற்கு எதிரிடையாய்ப் பேசுகிறவன் பிரமச்சாரியாக இருந்து விடக்கூடும்!

சென்னையில் எனக்கு மிகவும் நெருங்கிய இஷ்டனாயிருந்த சிநேகிதன் ஒரு ஆங்கில—இந்திய வைத்திய மாணாக்கன். அவன் தகப்பன் ஸ்காட்லந்து தேசத்தவர். தாய் ஆங்கில—இந்தியப் பெண். அவள் தாயார் இப்போது விதவையாகி பிரசவத்தாதி (மருத்துவச்சி) வேலை சொந்தமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எங்கள் விடுதியில்

ஆங்கில-இந்திய வாலிபர் அநேகர் இருந்தார்கள். அதனால் சந்தடி அதிகமாயிருந்தது. சாப்பாட்டு அறையில் அவர்கள் தனியே உட்காரு வார்கள். ஆனால் நான் அவர்களோடு சிநேகமாயிருந்தபடியாலும், ஜாதிநிற வித்தியாசம் பார்ப்பது எனக்குப் பிடிக்காததாலும், அடிக்கடி அவர்களோடு போய் உட்காருவேன். இது சில வேளைகளில் இந்திய வாலிபருக்கு மனஸ்தாபமாயிருந்தது. ஆனால் நான் தைரியமாய் நின்றேன்.

மதராஸ் வைத்தியக் கல்லூரியில் நான் படித்த வருஷங்களை ஞாபகப்படுத்திக்கொள்வது எனக்கு அவ்வளவு சந்தோஷமாயில்லை. எங்களுக்குப் படித்துக்கொடுத்த ஆசிரியர்களெல்லாம் பிரிட்டீஷ்காரர் கள் தான். உண்மையில் அவர்கள் யுத்தச் சேனை சம்பந்தமான இராணுவ உத்தியோகஸ்தர்கள். அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஐ. எம். எஸ். (இந்தியச் சேனைச் சேவகம்) என்ற பட்டம் அவர்களுக்கு மாந்திரீக (வல்லமை) அதிகாரம் கொடுத்துவிட்டதுபோலும். எந்த விதமான வைத்தியமும் அவர்கள் செய்யக்கூடும் என்று கருதப் பட்டது. எந்த விஷயங்களைப் படித்துக்கொடுக்கச் சொன்னாலும் படித்துக்கொடுக்கும்படி பாண்டித்தியம் அடைந்தவர்கள்போல் அவர் கள் எண்ணப்பட்டார்கள். அவசரத்துக்கேற்றபடி ஒரு சந்தர்ப்பத்தில் இரணவைத்தியனையும், அல்லது இன்னொரு சந்தர்ப்பத்தில் மருந்து வைத்தியனையும், ஏற்படுத்தப்படுவார்கள். உத்தியோகத்தில் அமர்த் தப்படுகிறவர் யாராயிருந்தாலும் அவர் கல்லூரியில் தமது உத்தியோ கப்படி பாடங்கற்றுக் கொடுக்கும் ஆசிரியராகிவிடுவார். நான் அறிந்த ஒருவர் லண்டன் எம். ஆர். சி. பி. மருந்து வைத்திய வேலை பார்த்த போது ஒளஷத சாஸ்திரம் கற்றுக்கொடுக்கும் பாடங்கள் உபந்நியாசம் செய்கிறவராயும், ஜெனரல் ஆஸ்பத்திரியில் முதல் இரண வைத்திய வேலை பின்பு பார்க்கும்போது இரண வைத்திய சாஸ்திரியாகவும், உபந்நியாசகராகவும், இதன் பின்பு பிரசவ ஆஸ்பத்திரி வேலை கிடைத்த தால் பிரசவ சாஸ்திரத்தில் உபந்நியாசகராகவும் இருந்தார். இன்னொருவர் முதலில் ஜெனரல் ஆஸ்பத்திரி வைத்தியராக அமர்ந்த வுடன் நோய்க்கூறு சாஸ்திர ஆசிரியராகவும் அதன் பின்பு கண்ணாஸ்பத்திரி மேல் விசாரணை அதிகாரியாக அமர்ந்த போது கண்சாஸ்திரியாகவுமிருந்தார். அந்தந்த வருஷத்தில் மூன்றா வது வைத்தியராக உத்தியோகம் பெற்றவர் யாரானாலும் அவர்தான் உயிர் (விலங்கு) சாஸ்திரங்களைக் கற்றுக்கொடுப்பார்.

மாணாக்கர்களுக்கும் பிரிட்டீஷ் ஐ. எம். எஸ். உத்தியோகஸ்தர் களுக்கும் உள்ள சம்பந்தம் அடிமைகளுக்கும் எஜமான்களுக்கும் உள்ள சம்பந்தம் மாதிரிதான் இருந்தது. அவர்கள் எங்களை அதிகக் கடுமை யாய் நடத்தினார்கள். பன்றிகள், அசுத்தமான கூலிகள் என்று ஒருவர் மாணவர்களைத் திட்டுவதுண்டு. அவர்களில் ஒருவர் எங்களுக்குப் பயங்கரமாயிருந்தார். ஞாயிற்றுக் கிழமையில் (நாங்கள் கேள்விப்பட்ட படி) குடித்து வெறிகொள்வார். ஆகவே திங்கள் காலைகளில் அவர்

என் தம்பி எபநேசர்
(சாமுவேல் எபநேசர் சஞ்சீவி சுந்தரம்)

ஆஸ்பத்திரிக்கு வருவதை பயத்தோடும் நடுக்கத்தோடும் நாங்கள் எதிர்பார்ப்போம்.

அந்த நாட்களில் புதிதாய் வரும் மாணவர்களுக்கு ஆங்கில-இந்திய மிலிடேரி வைத்திய மாணவரால் மிகுந்த தொந்தரவு உண்டு. 1904 ஜூலையில் நான் கல்லூரிக்குப் போனவுடன் நானும் அப்படியே துன்பப் படுத்தப்பட்டேன். இது மிகுந்த குரூரத்தனமாய்ச் செய்யப்பட்டது. பையன்களைப் பிடித்திழுத்து காயப்படுத்துவது, அவர்கள்மேல் வர்ணம் பூசுவது, அவர்கள் குடைகளை உடைப்பது, குளத்துக்குள் அவர்களை அமிழ்த்துவது, பேதியாகிற மருந்துகளை அவர்களைப் பலவந்தமாய் விழுங்கச் செய்வது, பிணங்கள் வைக்கப்பட்ட இடங்களில் அடைத்து வைப்பது முதலிய சித்திரவதைகள் எல்லாம் செய்வார்கள். இந்த அக்கிரமங்களெல்லாம் சட்டைக்காரர் எனும் ஆங்கில-இந்திய இராணுவ மாணாக்கர்களே செய்துவந்தார்கள். அந்தக் காலத்தில் இந்த வகுப்பார் கல்வி விஷயத்தில் இந்திய மாணவர்களைவிட நிரம்பத் தாழ்ந்திருந்தார்கள். ஆனால் அவர்கள் சர்க்கார் ஆதரவு பெற்று வந்ததால் இந்தியரைத் தங்களுக்குக் கீழானவர்களென்று அவமதித்து தாங்களும் ஐரோப்பியர்களும் சரிசமானமானவர்களென்று எண்ணிக் கொண்டார்கள். அவர்களுக்குச் சர்க்காரிடமிருந்து உபகாரப் பணமும் தாராளமாய்க் கிடைத்ததால் சாதாரண இந்திய மாணவரை விட நல்ல பொருளாதார நிலைமையிலிருந்தார்கள்.

நான் மதராஸிலிருக்கும்போது சாயங்காலங்களில் நான் பிரியமாய்ப் போகிற இடம் கடலோரத்திலுள்ள அகன்ற மணல்தரையே. இங்கே நான் என் துக்கங்கள், பயங்கள், ஐயப்பாடுகள் எல்லாவற்றையும் மறந்துவிடுவேன். இந்தக் குளிர்ந்த காற்றில் உட்கார்ந்து அலைகளைப் பார்த்துக்கொண்டேயிருப்பதால் என் மனதும் ஆத்துமாவும் இளைப்பாறுதல் அடையும்.

1907ம் வருஷம் டிசம்பர் மாதம் என் இளைய சகோதரி பூரணி அம்மாள் கலியாணத்துக்காக பாளையங்கோட்டைக்குப் போனேன். அந்த மாதம் 21ம் தேதி சனிக்கிழமை அந்த விவாகம் நடந்தது. 26ம் தேதி சாயங்காலம் வேறே ஒரு வீட்டிலும் நடந்த இன்னொரு கலியாண வீட்டுக்குப் போய், நானும் என் தம்பி ஏபனேசரும், என் தாயாரும் ஒன்றாய்த் திரும்பி வந்தோம். ஏபனேசருக்கு அப்போது 13½ வயது அவன் அறிந்த எல்லாராலும் நேசிக்கப்பட்டு மிகுந்த அருமையான பையனாய் நடந்துவந்தான். அவன் வகுப்பில் முதல் ஸ்தானத்தில் இருந்தபடியால் அவனுக்கு ஒவ்வொரு வருஷமும் சம்பளமில்லாமல் படிக்கும் உரிமை கிடைத்தது. அன்று சாயங்காலம் அவன் நல்ல சுகமாயும், நிரம்ப சந்தோஷமாயும் காணப்பட்டான். நேரத்தோடே படுக்கப்போனான். ஆனால் திடீரென்று நடுச்சாமத்தில் அவனுக்கு விஷபேதி கண்டது. நான் அதே அறையில்தான் படுத்திருந்தேன்.

முழங்காலூன்றி மகாவேதனையோடு ஜெபித்தேன். அவன் நிரம்ப
அமைதியாயிருந்தான். இப்போது அந்த விஷபேதியைப்பற்றி எனக்
கிருக்கிற அறிவு சிகிச்சை அநுபோகப் பழக்கத்தால் கடந்த வருஷங்
களில் நூற்றுக்கணக்கான விஷபேதி கண்ட வியாதியஸ்தரை நான்
சுகப்படுத்தி வந்திருக்கிறேன். என் அருமையான எபனேசருக்கு
அந்தக்கொடிய வியாதி நேரிட்டபோது சரியான வைத்தியஞ் செய்ய
எனக்குத் தெரியாமற்போய்விட்டதே என்று நினைத்தால் எனக்குத்
தாங்கமுடியாத வருத்தமாயிருக்கிறது. நாங்கள் செய்யக்கூடியதை
யெல்லாம் செய்தோம். பாளையங்கோட்டையிலிருந்த பெரிய டாக்டர்
களெல்லாம் வந்து பார்த்தார்கள். ஆனால் அந்தச் சிறு பரிசுத்த
வானுக்குக் கடவுள் குறிப்பிட்ட வேளை வந்துவிட்டது. அன்றிரவு
ஒவ்வொரு நிமிஷமும், மறுநாள் பகல் முழுவதும் பாடு பார்த்த எங்
களுக்கும், முக்கியமாய்த் துயரமும் கவலையும் நொறுக்கி இருதயம்
நொந்துபோன என் ஏழைத்தாயாருக்கும் சொல்லமுடியாத வேதனை
யாயிருந்தது. மறு நாள் பையன் பிழைத்துக்கொள்வான்போல்
தோன்றிற்று. அவனைப் பார்த்துக் கொண்டிருந்த மேஜர் ஹார்வி
என்ற பிரதம வைத்தியர் அப்படியே நினைத்தார். அன்றிரவு ஒன்ப
தரை மணிக்கு என் தாயாரும் அண்ணன்மார் பவுல், யோசேப்பு
இருவரும், என் மைத்துனர் டாக்டர் ஈசாக்கு காவீசும், நானும்
அவன் படுக்கையைச் சுற்றி நின்றோம். திடீரென்று எபனேசர் முகம்
பிரகாசித்தது தெளிவான சத்தத்தோடே அம்மாவைப் பார்த்து
“அம்மா, அழவேண்டாம், நான் ஆண்டவரிடம் போகிறேன்’ என்றான்.
அங்கலாய்த்துக் கொண்டிருந்த என் தாயார், “என் கண்ணே, கடவுள்
உன்னை என்னிடமிருந்து பிடுங்கிவிடுவது அநியாயம்” என்க, எபனே
சர், “அம்மா அப்படிச் சொல்லவேண்டாம். ஆண்டவருடைய ஞானம்
நமக்குத் தெரியாது. நான் சிறுவனாய் ஆண்டவரிடம் போவதா?
அல்லது பெரியவனாய்க் கெட்டுப்போவதா? எது நல்லதம்மா? அம்மா,
அழவேண்டாம்” என்று சொல்லிவிட்டுத் தன் தலையைத் திருப்பி
மேலேபார்த்து, “ஆண்டவரே நான் உம்மிடத்துக்கு வருகிறேன்.
என் அம்மைக்கு ஆறுதல் கொடும்” என்று ஜெபித்தான். பின்ப
பாதக்கருகில் நின்ற எங்களிடம் “நீங்களெல்லாரும் என்னை நன்றாய்ப்
பார்த்தீர்கள், நன்றிசொல்லுகிறேன்” என்றான் என்னைப்பார்த்து
“ஒரு பாட்டுப் பாடேன்” என்றான். “என்னப்பாட்டு, ஐயா?” என்று
கேட்டபோது, ‘Safe in the arms of Jesus’ என்றான். உடனே
கண்ணீரோடு பாடினோம். பின்பு, என்னைக் கைவிடாதேயாளா,
இரங்கும் இயேசுநாதா சுவாமி’ என்ற பாட்டைப்பாடு” என்றான்
அதையும் கண்ணீரோடு பாடினோம். யோவான், 17ம் அதிகாரம்
வாசித்தோம் எபனேசரின் ஆத்துமா அவன் சிநேகித்த இயேசு
விடம் சென்றது. அவர் மார்பில் அவன் தூங்கிவிட்டான். வருஷங்
கள் அநேகம் சென்றுவிட்டாலும் இதுமட்டும் பல சோதனைகள்,
அவநம்பிக்கையுண்டாக்கும் சந்தர்ப்பங்களில் இந்தச் சம்பவம்

(என்னருமைத் தம்பியின் மரணக்காட்சியும் அவன் கடைசி வார்த்தைகளும்) என்னை பலப்படுத்தி உறுதியுடையவனுக்குகிறது.

பட்டணத்தில் நான் வைத்தியக் கலாசாலையில் இருந்த காலத்தைக் குறித்துச் சொல்லிக்கொண்டுபோக எனக்குப் பிரியமில்லை. அந்த ஞாபகங்கள் எனக்குச் சந்தோஷமானவைகளல்ல என்று முன்னமேயே சொல்லியிருக்கிறேன். எனக்கு முன்னே படித்துக்கொண்டிருந்த என் இனத்தாராகிய வைத்திய மாணவர் இந்தக் கலாசாலை மேல் மிகவும் வெறுப்படைந்து வைத்தியப்படிப்பை முடிப்பதற்காக எடின் பரோவுக்குப் போய்விட்டார். நான் என் ஆரம்பப் பரீக்ஷையில் மாத்திரம் தேறியிருந்தேன். அப்போது 1908 ம் வருஷம் நானும் அவர் மாதிரியைப் பின்பற்றி எடின்பரோவுக்குப் போக வேண்டுமென்று தீர்மானம் பண்ணிவிட்டேன். ஆனால் அதற்குப் பணம் எங்கிருந்து வரும்? என் அண்ணன்மாரில் ஒருவர், "அதற்கு ஒரு வழிதானுண்டு. அது ஒரு பணக்காரப் பெண்ணைக் கலியாணம் பண்ண வாக்குக் கொடுப்பதுதான்", என்று சொன்னார்கள். அந்த யோசனையை மகா கேவலமென்று தள்ளிவிட்டேன். நான் என்னை அப்படி விற்றுப்போடுவேனோ? இதற்கு முன்னதாக நான் இரண்டாம் வருஷம் வகுப்பிலிருக்கும்போதே என் தகப்பனார் இறந்துபோய் விட்டதால், எனக்கு நேரே மூத்த அண்ணன் அந்த வருஷம் பி.எல். பரீக்ஷை தேறினலொழிய என் படிப்புக்காக பணம் அனுப்ப அவர்களால் சாத்தியப்படாது, என்று பெரியண்ணன் எனக்கு எழுதியிருந்தார்கள். அந்த என் அண்ணன் அந்த வருஷம் பரீக்ஷையில் தவறிவிட்டார்கள். நான் விடுதிக்கு வந்து மகா மனவேதனையோடு முழங்காலில் விழுந்தேன். ஒரு வங்காளக் கிறிஸ்தவ சிநேகிதன் இதையறிந்து என் அறைக்கு வந்து, "கடவுளுடைய அஸ்திபாரம் எவ்வளவு உறுதி" என்ற பாட்டைப்பாடி, என்னோடு ஜெபித்து என்னைத் தைரியப்படுத்தினன். மறுநாள் என் தங்கை பூவாயி அம்மாள் கடிதம் வந்தது. அதில் பெரியண்ணன் கடிதத்தைப்பற்றி வருத்தப்படவேண்டாமென்றும், என் படிப்பு முடியுமட்டும் தான் எனக்கு வேண்டிய வகையைப் பார்த்துக்கொள்வதாகவும் எழுதிக்கடைசியில், "கடவுள் எந்த வகையியாவது சவரக்ஷணை செய்வார்" என்ற அருமையான ஆங்கில பாட்டை முழுவதும் எழுதியிருந்தாள். அப்போது அவளுக்கு 19 வயதுதான். ஆனல் அவள் விசுவாசம் ஆச்சரியமாயிருந்தது. அவள் சொன்னபடியே செய்தாள். வீட்டில் ஒரு பாகத்தை வாடகைக்கு விட்டு, மற்றும் வீட்டுக் காரியங்களில் சிக்கனமாயிருந்து, ஒவ்வொரு மாதமும் எனக்கு வேண்டிய பணம் அனுப்பிக் கொண்டிருந்தாள். நானும் சென்னப்பட்டணத்தில் மிகவும் ஒறுப்புடன் சிக்கனமாய்க் காலங்கழித்தேன். என் மூத்த அக்காளும் சிறிது பணஉதவி செய்து கொண்டுவந்தார்கள்.

ஆனல் ஐரோப்பாவுக்குப் போவதெப்படி? என் அண்ணன்மார்

எனக்கு வேண்டியதைச் செய்யச் சம்மதித்தார்கள். நான் புறப்படு முன் பட்டணத்துக் கல்லூரியில் எவ்வளவு படிக்கமுடியுமோ அவ்வளவு படித்து முடித்துவிட்டால், எடின்பரோ படிப்புக்கு வேண்டிய பணச்செலவு குறையுமாதலால், நான் அந்தப்பாடங்களைப் படித்து முடித்த பிறகு பணத்துக்கு ஏற்பாடு செய்வதாக வாக்களித்தார்கள். அதிர்ஷ்டவசமாக அப்போது கர்னல் கிராப்போர்டு எனப்பட்ட பிரிட்டிஷ் ஐ. எம். எஸ். உத்தியோகஸ்தர் ஒருவர், (வழக்கத்துக்கு மாருக நல்ல குணசாலி. தகப்பன்போல நல்ல மனசுள்ளவர்) அச்சமயம் கலாசாலைத் தலைவராயிருந்தார். நான் ஆஸ்பத்திரியில் அவருடைய வார்டுகளில் வேலைசெய்து பயின்றபோது என்மேல் விசேஷித்த கவனம் எடுத்துக்கொண்டார். முந்தின வருஷத்துப் பரீக்ஷையில் தேறுமுன்னே கடைசி வருஷத்துப் படிப்பைப் படிக்க இந்தக் காலத்தில் உத்திரவு கொடுக்கமாட்டார்கள். ஆனால் அப்போதிருந்தக் கல்லூரித் தலைவர் தம்மிஷ்டம்போல் செய்ய எல்லா அதிகாரமுள்ள சர்வாதிகாரம் பெற்றிருந்தார். அந்தக் காலத்திலிருந்த மதராஸ் வைத்தியக் கல்லூரி மதராஸ் சர்வ கலாசாலைச் சங்கத்துக்குத் தானே நியமங்கள் ஏற்படுத்தித் தனக்குந்தானே சட்டமாயிருந்தது போலும்!

கல்லூரித் தலைவர் நான் கேட்டுக்கொண்ட அனுமதி மாத்திரமல்ல, எடின்பரோவில் என் படிப்பைப் பூர்த்தி செய்வதற்கு அவசரமான நற்சாட்சிப் பத்திரங்களெல்லாம் கொடுப்பதாகச் சொன்னார். எனக்கு ஆச்சரியமாயும் சந்தோஷமாயுமிருந்தது. என் காலத்துக்குப் பிறகு மதராஸ் கல்லூரி எவ்வளவோ மாறுதலடைந்து இக்காலத்தில் மிகவும் நன்றாயிருக்கிறது 100க்கு 90 பேர் இந்திய ஆசிரியர். அவர்களும் படிக்கிற வாலிபரும் நிரம்ப ஒற்றுமையாயிருக்கிறார்கள். கல்லூரிகள் இரண்டு இருக்கிறது மல்லாமல் தலைவர்களும் இந்தியர்கள். அதுவுமன்றி தாங்கள் கற்றுக்கொடுக்கிற பாடங்களில் பாண்டித்தியம் அடைந்தவர்கள் அந்தக் காலத்தைப் போலல்ல. இப்போது வருடத்துக்கு இரண்டுமுறை பரீக்ஷைகள் நடக்கின்றன. முன் பரீக்ஷையில் தேருத பாடங்களுக்கு மாத்திரந்தான் மாணவர் திரும்பிப் பரீக்ஷை எழுதவேண்டும். என் காலத்தில் எல்லாப் பாடங்களிலும் ஒரே நேரத்தில் தேறவேண்டும். இல்லாவிட்டால் ஒன்றுவது தேறினதாகாது. பின்பு ஒருவருடம் கழித்துத்தான் பரீக்ஷையில் தேறச்சமயம் கிடைக்கும்.

1908ம் வருஷம் மே மாதம் கடல்கரைக்கு தன் குடும்பத்துடன் மாறுதலுக்காக ராமபட்டிணம் என்ற (ஆந்திர தேசம்) ஊருக்குப் போய்த் தங்கியிருந்த என் மூத்த சகோதரியிடம் போயிருந்தேன், எனது தாயாரும், இளைய சகோதரி இன்ஞசியம்மாளும் அங்கு வந்திருந்தார்கள். அச்சமயத்தில் எனக்கு அதிக குளிர்காய்ச்சல் வந்துவிட்டது. தனது கடைசி மகன் எபநேசர் மரணத்திற்குப் பின் மிகவும் பலங்குன்றி ஒடுங்கியும்போயிருந்த தாயார் இரவெல்லாம் எனக்குப்

பாடுபார்த்ததால் அவர்களுக்கு (மூச்சடைப்பு) ஆஸ்துமா வியாதி வந்து மிகக் கஷ்டப்பட்டார்கள். நான் என தங்கை இன்னுசியம்மாளுடன் பாளையங்கோட்டை சென்ற பின் திரும்பி பர்மாவில் ரங்கூனிலிருந்த என் தங்கை பூவாயி அம்மாளிடம் சென்றேன். என்னை வழிவிட்டனுப்ப வேண்டுமென்ற ஆவலுடனே பலவீனமாயிருந்த என் தாயார் சென்னை வந்தார்கள். பிள்ளைகள் மேலுள்ள அன்பால் தன் பலத்தையும் சுகத்தையும், தியாகிப்பதே என் தாயின் சுபாவம். பென்டக்கோட்டை என்ற கப்பலில் பர்மா சென்றேன். இதுதான் கடல் பிரயாணத்தில் மாத்திரமல்ல, இந்தியாவை விட்டு வெளிசெல்வதிலும் எனக்கு முதல் அநுபவம். தலை கிறுகிறுப்போடு மன ஆயாசமும் கலந்திருந்தது. கடல் கிறுகிறுப்புக்கு நல்ல மருந்தென்று சொல்லிய உடன் பிரயாணியாயிருந்த ஒரு ஈரேஷ்ய (சட்டைக்கார) வாலிபன் உஸ்கி சாப்பிட்ச் சொல்லி என்னை வருந்தி உபசரித்தான். அதைத் தொட மாட்டேனென்று மறுத்துவிட்டேன். அவன் நன்ருகக் குடித்துவிட்டு மிக உஜாராகப் பாட ஆரம்பித்துவிட்டான். ரங்கூன் சேர்ந்ததும் என் மைத்துனர் டாக்டர் ஈசாக்கு தாவீது அவர்கள் என்னைச் சந்தித்து அங்கு தான் வேலை செய்துகொண்டிருந்த பெரிய ஆஸ்பத்திரி சமீபமாயிருந்த தனது வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போனார்கள். என் தங்கை மிக சந்தோஷமாய் என்னை வரவேற்ருள் ரங்கூனில் முதல் ஒரு மாதம் தங்கியிருந்த பின்பு என் மைத்துனரை பஸீன் என்ற ஊருக்கு மாற்றி விட்டபடியால் அங்கும் போய்த் தங்கி ஆகமொத்தம் மூன்று மாதங்கள் பர்மாவில் இருந்தேன். பர்மா ஜனங்கள் மிகுந்த திறந்த மனமுடையவர்களும் அந்நியருக்கு உபசாரம் செய்கிறவர்களுமாயிருந்தார்களென்பது என் அநுபவம். பல பர்மா சிநேகிதருடன் பழகி அவர்கள் வீடுகளுக்கும் போனேன் எங்கு போனாலும் எந்த நேரமென்ருலும் வந்தவர்களுக்கு தேயிலைப் பானம் கொடுப்பார்கள். அதில் ஏராளமான தகர டப்பா பால் கலந்திருக்குமாதலால் மிதமிஞ்சி இனிப்பாகயிருக்கும். பர்மா பெண்கள் மிக சுறுசுறுப்புள்ளவர்கள் ஆனால் ஆண்கள் சோம்பலுள்ளவர்களென்பதாகத் தெரிந்தது. பெண்கள்தான் பல வேலைகளையும் சுறுசுறுப்பாய் செய்வதையும் ஆண்கள் இங்குமங்கும் சாவகாசமாய் உட்கார்ந்து நேரம் போக்குவதையும் பார்த்தேன். பெண்கள் மிகவும் நீண்ட பெரிய சுருட்டுப் பிடிப்பார்கள். கொஞ்ச நேரம் பிடித்தபின் மீந்ததை ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு சிறிது நேரத்திற்குப் பின் அதையே திரும்பவும் எடுத்துப் பிடிப்பார்கள். இந்திய வியாபாரிகள், விசேஷமாய் செட்டிகள் தங்கள் தொழில்களில் மிக சித்தியடைந்து வாழ்ந்துகொண்டிருந்ததாகத் தெரிந்தது இந்தியருக்கும் பர்மாக்காரருக்கும் அந்தக்காலத்தில் மிக நெருங்கிய சிநேகமிருந்தது. கலப்பு விவாகமும் மிக சாதாரணமாயிருந்ததாகத் தெரிந்தது. பர்மாக்காரருக்குள் ஜாதிபேதமில்லாமையால் எவருடனும் (ஐரோப்பியர், இந்தியர், சீனக்காரர்) இலகுவாய்க் கலந்து கொள்ளவும் எவரையும் விவாகஞ்செய்துகொள்ளவும் அவர்கள் பின் தங்கவில்லை. விசேஷமாய் ரங்கூனில் இப்படிப்பட்ட கலப்பு வம்சத்

தினர் பலரிருந்தார்கள். பர்மா பெண்கள் பட்டுடைகள் தரித்து, கூந்தலை சீவி ஜோடித்து அதில் பூ வைத்து தங்களை அலங்கரித்துக்கொள்வார்கள். ஆண்களும் பெண்களும் தலைமுடியை நீளமாக வளர்ப்பதினால் சில வேளை இருவருக்கும பேதமறிவது புதிதாய் பர்மா செல்லும் அந்நியருக்குக் கஷ்டமாயிருக்கும். பர்மாவில் நல்ல மழை பெய்வதால் எங்கும் செழிப்புண்டு. பர்மா ஜனங்கள் பொதுவாக புத்தமதத்தினர். இலங்கையிலிருந்து புத்தமார்க்கக் குருக்களே முதலில் அங்கு சென்று மதப்பிரசாரம் செய்ததால் இலங்கைத் தீவைபபற்றி அவர்களுக்கு நல்ல அபிமானமுண்டு. பர்மா பாஷை அச்சரங்கள் தமிழ் அச்சரங்கள் போலேயே தொனிக்கும். அ, ஆ, இ, ஈ, என்றே தொடங்குகின்றன. பர்மாஜனங்களின் குருக்களுக்கு பூங்கிகள் என்ற பெயர். இவர்கள் பிரயமாச்சாரிகள் ஒரு வேளைத்தான் ஆகாரமுண்பார்கள். அதற்காக காலைதோறும் தெருவில் வரிசையாகச் சென்று கையில் ஏந்திப்போகும் பாத்திரங்களில் ஜனங்கள் தாங்களே வலியகொடுக்கும் சாதம் முதலியதை வாங்குவார்கள். நீண்ட காவிவஸ்திரத்தை ஒரு சேலை போல் உடம்பின்மேல் போர்த்திருப்பார்கள். இவர்கள் தங்கும் மடமொன்றுக்குப் போய் அங்கிருந்த பிரதம குருவிடம் பேசினேன். ஆங்கிலமறிந்த ஒரு பர்மா நண்பன் மொழிபெயர்த்தார். எவராவது மரிக்கும்போது இந்த பூங்கி குருக்களுக்கு ஜனங்கள் ஏராளமான காணிக்கைகளை இனமாகக் கொடுப்பார்கள். பிரேதம் கொண்டு போகிறவர்கள் பின்னே இந்த காணிக்கைகளெல்லாம் வண்டிவண்டியாகச் செல்லும். வாத்தியங்கள் கொட்டுகள் ஆரவாரமாகச் செல்லும். பர்மா ஜனங்கள் இலகுவாக சண்டை போட்டுக்கொள்ளுவார்கள். நானிருக்கும்போது இரவுகளில் சண்டைகளினால் கோர காயங்கள் பட்டவர்களை அடிக்கடி பார்ப்பதுண்டு. கால் பந்து விளையாட்டுப் போட்டிகள்கூட சிலவேளைகளில் சண்டையாக முடிந்துவிடும். கண்ணுடி சீசாக்கள், கற்கள் முதலியனவற்றை விட்டெறிய ஆரம்பித்து விடுவார்கள். ஆனல் சூதுவாது இல்லாதவர்கள் என்றே சொல்ல வேண்டும். இந்தியருக்கும் அவர்களுக்கும் அளவளாவிய நெருங்கிப் பழகும் சிநேகமிருந்தது. நான் இருந்த சமயத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் பர்மாக்காரருக்கும் இந்தியருக்கும் பேதமுண்டாக்கத் தக்கதான ஒரு சட்டம் உண்டாக்கினர்கள். பர்மாக்காரர் இந்தியருக்கு தங்கள் நிலத்தை விற்கக்கூடாதென்ற சட்டம் இது.

இந்த ஆரம்பம்தான் பிற்காலத்தில் எழும்பிய பர்மா இந்தியக் கலகங்களுக்கு முதல் காரணமென்றெண்ண இடமுண்டு. ஒரு தேசத்தை ஆளும் அந்நியர் எப்போதும் அத்தேசத்தினருக்குள் உண்டாகக் கூடிய பிரிவுகளை தங்கள் அரசாட்சியைப் பலப்படுத்துவதற்கு ஆதாரமாக உபயோகப்படுத்திக்கொள்வது வழக்கம் "பிரித்து ஆள்" என்பது அந்நிய ஏகாதிபத்தியத்தின் பரம்பரை பிரமாணம். பர்மாவில் கரேன்காரர் என்ற மலை ஜனங்களுண்டு. இவர்கள் புத்த மதத்

மதத்தினரல்ல. இவர்களுக்குள் கிறிஸ்து மார்க்கம் அதிகம் பரவியிருக்கிறது. முழுக்கு ஞானஸ்நான சபையைச்சேர்ந்த அடோனிராம் ஜட்ஸன் என்ற மிஷனெரி குருதான் இவர்களுக்குள் முதலில் பெரிய வேலை செய்தவர். இவர்கள் கோயில்கள் ஆராதனைக்கும் போயிருந்தேன், நன்றாகப்பாடும் இனிய குரலுள்ளவர்கள். சாதாரண பர்மா ஜனங்களோ, வைராக்கியமுள்ள புத்த மதத்தார். இவர்களில் கிறிஸ்தவர்களானவர்கள் சொற்ப தொகையினர்தான்.

அத்தியாயம் 5.

ஐரோப்பாவுக்கு முதல் பிரயாணம்.

1910-ம் வருஷம் மேமாதம் 18-ம் தேதி கொழும்பில் நான் ஜெர்மானியக் கப்பல் ஒன்றில் புறப்பட்டேன். நான் முன்னே சொன்ன என் தங்கை பூவாயி அம்மாள் டாக்டர் ஐ. டேவிட் அவர்கள் மனைவி இவ்விடத்தில் இருந்தாள். இரண்டுமூன்று நாட்கள் நான் அவர்களுடன் தங்கிய பின் அவர்களிருவரும் என்னை வழி விட்டனுப்பினார்கள். ஒருநாள், நான் வீட்டு நினைவாலும், கடல் பிரயாணக் கிறுகிறுப்பாலும் களைத்துக் கப்பலின் மேல் தட்டில் உட்கார்ந்திருக்கும்போது, ஒரு போர்த்துக்கீஸ் வாலிபன் என் கிட்டவந்தான். அவன் என் கையிலிருந்த லத்தீன் புஸ்தகத்தை நான் படிப்பதைப் பார்த்து, (தானாகவே லத்தீன் கற்றுக்கொள்ளுகிறது என்ற புஸ்தகம்) லத்தீன் பாஷையில் என்னோடு பேசத்தொடங்கினான். எனக்கு விளங்கவேயில்லை. ஆனால் அன்பு பாஷைத் தடைகளையெல்லாம் நீக்கிவிடுமாதலால், நாங்கள் ஒன்றாய்ப் பிரயாணம் பண்ணின மீதி நாட்களெல்லாம் தோழராகிவிட்டோம். வார்த்தைகளினால் சரியாய்ப் பேசக்கூடாவிட்டாலும், சைகைகளினால் பேசிக்கொண்டோம்! அவனுக்கு ஏறக்குறைய 19 வயதிருக்கும். சீனைவுக்குச் சமீபமான மெக்கா என்ற ஒரு போர்த்துக்கீஸ் குடியேற்றத் தீவிலிருந்து ஐரோப்பாவுக்குப் போகிறவன். ரோமான் கத்தோலிக்க சபையைச் சேர்ந்த வேதசாஸ்திரி மாணவன், நாங்களிருவரும் சாயங்காலங்களில் ஒன்றாகப் பிரார்த்தனை செய்வோம். கர்த்தருடைய ஜெபத்தை அவன் எனக்கு லத்தீன் பாஷையில் சொல்லிக்கொடுத்தான் நான் புராடெஸ்டெண்ட், அவன் ரோமான் கத்தோலிக் என்றாலும், கிறிஸ்துவின் அன்பில் நாங்கள் ஒன்றாய் இணைக்கப்பட்டிருந்தோம். எங்களிருவர் விசுவாசத்திலும் ஏதாவது பிரிவிருந்ததாக எங்களுக்குத் தோன்றவில்லை. அலோஷியாஸ் குட்டேரிஸ் என்ற பெயருள்ள அந்த இளைஞன் என்னை அன்பாய்ப் பிரிய நண்பனென்று லத்தீனில் அழைப்பான். நாங்கள் (24—5—1910) சேர்ந்த முதல் துறைமுகம் ஏடன். பாறைகளாயிருந்தது அரேபியா-ஆப்பிரிக்கா கலப்பு ஜாதிப் பையன்கள், கடலுக்குள் கப்பலிலிருந்து பிரயாணிகள் எறியும் காசுகளை தண்ணீரில் மூழ்கி எடுத்துக்கொள்வார்கள். பல் துலக்குங் குச்சிகளைக் கட்டுக் கட்டாய்க் கொண்டுவந்து சத்தமாய், "துரைசானி, துரைசானி" என்று கப்பல் மேல்தட்டில் நின்றுகொண்டிருக்கும் ஐரோப்பியப் பெண்களைப் பார்த்து அவைகளை வாங்கும்படி கூவுவார்கள்! உஷ்ணமான செங்கடலைக் கடந்து, அடுத்த துறைமுகம் போர்ட்செயிட் என்ற இடம் வந்தோம். அந்த இடம் பற்பல ஐரோப்பிய ராஜாங்கங்களுக்குப் பொதுவான துறைமுகமாயிருந்தது மாத்திரமல்ல, ஐரோப்பாவின் துன்மார்க்கமும், ஆசியாவின் கேடுபாடுகளும் கலந்து சேர்ந்த ஸ்தல

மாயிருந்தது. தற்கால எகிப்திய அரசாட்சியின் கண்டிப்பான அடக்கு முறையில் இப்போது மிகவும் அபிவிருத்தி அடைந்திருக்கிறது கப்பலிலிருந்த ஜெர்மானியர்கள் மிகவும் உற்சாகமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒவ்வொரு துறைமுகத்தைவிட்டுப் புறப்படும்போதும் சந்தோஷமாய் வாத்தியம் வாசித்து முழங்குவார்கள்.

மே மாதம் 31ம் தேதி சாயங்காலம் நான் மேல்தட்டில் உலாவிக் கொண்டிருந்தபொழுது, அலோஷியாஸ் குட்டேரிஸ் என்னிடம் வந்தான். அவனுடைய புதிய ஏற்பாட்டுப் புஸ்தகத்தை எடுத்துக் கொண்டுவந்து லத்தீன் பாஷையில் பரி. யோவான் 17-ம் அதிகாரத்தை வாசித்து, என்னைப் பரிசுத்த பிதாவின் பாதுகாப்புக்கு ஒப்புக்கொடுத்தான். ஏனென்றால் அவன் நேப்பிள்ஸ் பட்டணத்தில் இறங்கப்போகிறவன். "நாம் இனி ஒருவரையொருவர் பூமியில் பார்க்கமாட்டோம், ஆனால் நாம் ஒருவரையொருவர் பரிசுத்த பிதாவின் சமுகத்தில் பரலோகத்தில் சந்திப்போம்" என்று சொன்னான். எனக்கு அவனை விட்டு பிரிவது நிரம்பத் துக்கமாயிருந்தது.

இதற்குப் பத்து வருஷங்களுக்குப் பின்பு 1920-ம ஆண்டில் லண்டன் பட்டணத்தில் "ஷேக்ஸ்பியர் குடிசை" என்று அழைக்கப்பட்ட கிறிஸ்தவ வாலிப சங்க சிற்றுண்டி விடுதியில் ஒருநாள் தேயிலைப் பானம் அருந்திக்கொண்டிருக்கும்போது, எனக்கெதிரே உட்கார்ந்திருந்த ஒரு போர்த்துக்கீஸ் வாலிபனோடு சம்பாஷிக்கத் தொடங்கினேன். திடீரென்று அவனைப் பார்த்து, நான் முதல் தடவையாக ஐரோப்பாவுக்குப் படிக்கும்படியாக வந்தபோது, என்னோடு கப்பலில் பிரயாணம் பண்ணின அருமையான போர்த்துக்கீஸ் வாலிபனைப் பற்றிச் சொன்னேன். உடனே அந்த அந்நியன் என்னைப் பார்த்து, "குட்டேரிஸ்! குட்டேரிஸ்!" என்றான். அவன் கண்களில் கண்ணீர் ததும்ப, பெல்ஜியம் தேசத்தில் தன் ஆருயிர்த் தோழனாகப் பழகிய அலோஷியாஸ் குட்டேரிஸின் மரண நேரத்தைப்பற்றி எனக்குச் சொன்னான். மனுஷர் ஒருவரையொருவர் சந்திக்கும் விதம் எத்துணை ஆச்சரியமானது!.

அங்கே அவன் வேதசாஸ்திரக் கல்லூரியில் படிக்கும்போது நான் இப்போது இந்த விடுதியில் தற்செயலாய்ச் சந்தித்த போர்த்துக்கீஸ் வாலிபனோடு பிரிய நண்பனாயிருந்தானாம். இந்த உலகத்தில் மனிதர் ஒருவரையொருவர் தற்செயலாய்ச் சந்திக்க நேரிடுவதில்கூட என்ன ஆச்சரியமான தெய்வ நடத்துதல் தெரிகிறது! அலோஷியசும் நானும் சென்ற ஐரோப்பியப் பெரும்போர் ஆரம்பிக்கும் வரை ஒருவருக்கொருவர். லத்தீன் பாஷையில் கடிதப் போக்குவரத்துச் செய்தோம். யுத்தம் தொடங்கினதும் அது நின்றுவிட்டது. என் அருமைச் சிநேகிதனைப் பற்றி மேற்கண்டவிதமாய்க் கடைசிச் செய்தியை அறிந்தேன். "நாம் திரும்பச் சந்திக்குமட்டும் சாந்தி, சாந்தி, சாந்தி; பாவியப் பரிசுத்தவானே, என் பிரிய சிநேகிதா!"

கப்பல் இத்தாலியா தேசத்துறைமுகம் நேப்பிள்ஸ் நகரம் சேர்ந்தது. கூடவந்த ஒரு டச்சு (ஹாலந்தியர்) பிரயாணியுடன் கரைக்குப் போனேன். வாலிபப் பையன்கள் ஒரு கூட்டமாக எங்களைச் சூழ்ந்து கொண்டு எங்களுக்கு ஊர்காட்டியாக வருவோம் என்று தொந்தரவு செய்தார்கள். அவர்கள் முடிச்சு அவிழ்ப்போர் (ஜேப்புத் திருடர்) என்று உடனே எனக்குத் தோன்றினதால், என் பணப்பையிலிருந்த காசைக் கால்சட்டை (சல்லடம்) ஜேப்பில் போட்டுவிட்டு, காலிப் பையையும், கொஞ்சம் தபால் முத்திரைகளையும் மாத்திரம் மேல் சட்டை ஜேப்பில் மறதியாய் விட்டுவிட்டேன். இவைகளை மெள்ள கைபோட்டு அந்த வாலிபர்கள் எடுத்துவிட்டார்கள். நல்லவேளையாய் என் கைகளை கால்சட்டை ஜேப்பிலேயே நான் வைத்துக்கொண்டிருந்ததால் அந்தப்பணம் மாத்திரம் பத்திரமாயிருந்தது. ஐரோப்பிய மண்ணில் கால் வைத்தவுடனே இதுதான் என் முதல் அநுபோகம்! அப்போது வேனிற்காலம். ஆகவே அன்று பிற்பகல் இத்தாலியக் கடைக்காரரெல்லாம் சோம்பேறித்தனமாய் அரைத்தூக்கமாயிருந்தார்கள். தூக்கமாயிருந்த ஒரு கடைக்காரனிடம் என் டச்சு நண்பர், "நீ முழுச் சோம்பேறிப் பயல்" என்று ஆங்கிலத்தில் சொன்னார். உடனே தூக்கத்திலிருந்து எழுந்து, "ஆம் ஆம்" என்று விடை சொன்னான்! அவனுக்கு அந்த ஒரு ஆங்கில வார்த்தைதான் தெரியும் போலும். "நேப்பிள்ஸ் பட்டணத்தைப் பார்த்ததும் தான் சாக வேண்டும்" என்று ஒரு பழமொழியுண்டு ஆனால் அந்த நகரத் தெருக்கள் மிகவும் அசுத்தமாயிருந்தது. சுகாதார விஷயங்களில் நிரம்பக் கேவலமாயிருந்தது. தெருக்களிலுள்ள மூத்திர ஒதுக்கிடங்கள் அதிக நாற்றமாயிருந்தன. நடந்துபோகிறவர்களுக்கு அருவருப்பாயிருந்தது. அது 1910ம் வருஷம் இப்போது சர்வாதிகாரி முஸோலினி தர்பாரில் இத்தாலி தேசம் எவ்வளவோ மாறிவிட்டது என்றாலும் நான் 1935ம் வருடம் மறுபடி நேப்பிள்ஸ் பார்த்தபோதுகூட எனக்கு அது அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஒரு சிறுமி என்னைப் பார்த்து, 'ஸ்பானியாக் காரன், ஸ்பானியாக்காரன்' என்று சத்தமிட்டது. 3—6—1910ல் ஜினேவா துறைமுகம் சேர்ந்தோம். நான் கரையிறங்கினேன். அது மலைக்குன்றுகள் நடுவிலுள்ள மிக அழகான பட்டணம். அங்குள்ள பிரசித்திபெற்ற கல்லறைத் தோட்டத்தில் இத்தாலியருடைய சித்திரந்தீர்த்த சலவைக்கல்லால் வெட்டப்பட்டவையும், கண்ணைக் கவர்ந்து மனதுருகச்செய்வதுமான வேலைப்பாடுகளைப் பார்க்கலாம். இந்த சித்திர வேலையில் அவர்கள் மிகவும் கைதேர்ந்த நிபுணர்கள்.

நான் கண்ட பட்டணங்களையும், அங்குள்ள விசேஷித்த பொருட்காட்சிகளையும் பற்றி விஸ்தரித்துக்கொண்டு போவது என் நோக்கமல்ல. என் சொந்த ஜீவியத்தின் ஞாபக விசேஷங்களையும், நான் நெருங்கிப் பழகும்படி நேரிட்ட ஆட்களைப்பற்றியும், எழுதுவதுதான் என் நோக்கம் என்றாலும் ஜினேவாவில் நேரிட்ட இரண்டொரு சம்பவங்களைச் சொல்லுகிறேன். சிற்ப மகிமையுள்ள அங்குள்ள

அழகிய தேவாலயங்களையும், அவைகளை அலங்கரித்திருக்கும் அதி சித்திரமான சலவைக் கற்பதுமைகளையும் பார்க்கப்பார்க்க இன்னும் பட்டணத்துக்குள் தூரமாகச்சென்று பார்க்க எனக்கு மிகுந்த ஆசை யுண்டாயிற்று. எனக்கு வழிகாட்ட ஒருவரும் இல்லை. இத்தாலியபாஷை யும் ஒரு வார்த்தைகூடத்தெரியாது. ஒரு கோவிலில், ஒரு அழகிய சம்மனசுபோன்ற சிறுவன் எனக்கு வந்தனம்செய்து, நிரம்ப சாந்த மாயும், மரியாதையாயும் பேசி, அவன் சொன்ன வார்த்தையொன்றும் எனக்கு பிடிபடாவிட்டாலும், சைகையினால் ஏதாவது எனக்கு உதவி செய்யப் பிரியப்படுவான்போல் காட்டினான். நான் இப்படி அலைந்து கொண்டிருக்கும்போது, மலைகளின் நடுவேஞரிடத்தில் அகப்பட்டுக் கொண்டேன். கப்பலுக்குத் திரும்பிப்போக வழி தெரியவில்லை. பிற் பகல் ஆகிவிட்டது. நாலுமணிக்கே கப்பல் புறப்பட்டுவிடும். எனக்கு ஒரு யோசனை வந்தது. கப்பல் படமிருக்கிற ஒரு கார்டை வாங்கி, என் சிநேகிதன் அலோஷியஸ் குட்டேரிஸினிடமிருந்து நான் கற்றுக் கொண்ட லத்தீன் வார்த்தைகளெல்லாம் உபயோகப்படுத்தி, அந்தப் படத்திலிருந்த கப்பலைக்காட்டி வழிகேட்டேன். ஒரு நல்லகுணமுள்ள இத்தாலியன் என்னைச் சரியான வீதியில் மின்சாரவண்டி ஏற்றி விட்டான். இன்னொரு நல்ல மனிதன் என்னுடைய ஆங்கிலேய நாண யத்துக்குவேண்டிய சில்லரைமாற்றிக் கொடுத்தான். ஆகவே கப்பல் புறப்படப்போகிற சமயத்தில் வந்து சேர்ந்துவிட்டேன்; புறப்பட்டு ஜிப்ரால்டர் வந்து சேர்ந்தோம். கூடப்பிரயாணம்செய்த ஒரு ஆங்கி லேயப் பிரயாணி அதின் வல்லமையான (அரண்) கோட்டைகளைப் பெருமையுடன் எனக்குச் சுட்டிக் காட்டினான். இங்கிலாந்து தேசக்துத் தென்கரைக்குச் சமீபமாய் வரும்போது இரவில் கப்பல் திடீரென்று நின்றுவிட்டது. மூடுபனியிருளில் அகப்பட்டுக்கொண்டதால் அதை நிறுத்திவிட்டார்கள் என்று காலையில் அறிந்தேன். எதிர்க்கப்பல் எதுவும் இதோடு மோதிடாதபடி அன்று பகலெல்லாம் மணி அடித் துக்கொண்டேயிருந்தது. வேயிட் தீவிலிருந்து ஊதும் சங்கு தொனி யும் கேட்டது மூடுபனி நீங்கினவுடனே நாங்கள் புறப்பட்டு சௌத் தாம்டன் துறைமுகத்துக்கு சாயங்காலம் போய்சேர்ந்தோம். (11—6—1919) சேர்ந்தவுடனே நான் லண்டன் வாட்டர்லு ஸ்டேஷ னுக்கு ரயிலேறி அன்றிரவே லண்டன் வந்து சேர்ந்தேன். நான் லண்டனில் தங்க வில்லை. நேரே எடின்பரோ போவதற்குக் குதிரை வண்டியில் கிங்ஸ் கிராஸ் என்ற புகைவண்டி ஸ்தானம் சென்றேன். ஒரு சிறு சங்கதி எனக்கு விநோதமாயிருந்தது. வாட்டர்லு ஸ்டேஷன் சேர்ந்தவுடனே நாகரீகமாய் உடுத்தியிருந்த ஒரு ஆள் (நான் அவனை ஒரு ரயில்வே உயர் உத்தியோகஸ்தனென்று நினைத்தேன்) ஏதா வது பயணமூட்டைச் சாமான் இருக்கிறதா என்று என்னிடம் கேட் டான். நான் என் சாமன்களைச் சுட்டிக் காட்டினவுடனே. அவன் தோள்மேல் எள்மேல் என் பெட்டியையும், இன்னொரு சாமானைத் தன் கையில் தூக்கிக்கொண்டு ஸ்டேஷனுக்கு வெளியே என்னைக் கூட்டிக் கொண்டு போனான். எனக்கு நிரம்ப ஆச்சரியமாயிருந்தது.

இந்தியாவில் பிரிட்டிஷ்காரர்கள் பெரிய துரைகளென்றும், தோள் மேல் சாமான் தூக்கப் பெருமை பண்ணுவார்களென்றும், நான் நினைக்கப் பழக்கப்பட்டிருந்தபடியால் வெள்ளை மனிதன் இப்படி கூலி வேலைசெய்வது என்னைத் திடுக்கிடச் செய்தது. நான் கூலியாகக் கொடுத்த காசை அவன் சிரிப்போடும், நன்றியறிதல் சொல்லியும் ஏற்றுக் கொண்டது எனக்கு பின்னும் பிரம்மிப்பாயிருந்தது. நான் இங்கிலாந்தில் இறங்கின நேரம் முதல், சௌதாம்டன் துறைமுகத்திலிருந்து லண்டனுக்குப் பிரயாணம் பண்ணுகிற வழியில், நான் படித்த ஆங்கிலப் பாடங்களும், புஸ்தகங்களும் ஞாபகத்துக்கு வந்தன. வேயிட் தீவு "ஏழைகளுடைய சின்ன சரித்திரங்கள்" ("annals of the poor") என்ற புஸ்தகத்தை நினைப்பூட்டியது. "கிரேஸ் டார்லிங்" கதையை நான் சிறுவனாயிருக்கும்போது படித்திருந்தேன். கிராமப் பக்கங்களிலுள்ள பசும்புல் வெளிகள் மேய்கிற ஆடுமாடுகள், முதலிய வைகளைப்பற்றி நான் பாடசாலைகளிலும், கல்லூரியிலும் வாசித்திருக்கிறேன். ஷேக்ஸ்பியர் மில்டன் முதலிய மகாகவிகளுடைய தேசத்தைப் பார்க்கவேண்டுமென்று சிறு வயதில் வாஞ்சித்த இங்கிலாந்து தேசத்தை நிசமாகவே பார்த்துவிட்டேன்! அன்று சாயங்காலம் பொழுது சாயுமுன்னிருந்த வெளிச்சத்தில் சௌதாம்டனிலிருந்து ரெயிலில் போகும்போது, பரவசமாய் மனோராஜ்யம் செய்துகொண்டே போனேன். நாங்கள் அந்தத் துறைமுகத்தில் இறங்கின சாயந்திரம் மேகம் மந்தாரமாயிருந்தது. யாரோ ஒருவர், 'இதோ சூரியன் பார்' என்றார். சூரியனைப் பார் என்று சொல்வது எனக்கு மிகுந்த விநோதமாயிருந்தது. என் சொந்த தேசத்தில் சூரியனைப்பார்க்க யாரால்கூடும்? இந்தியாவிலிருந்து போன வெள்ளைக்காரப்பிள்ளை இங்கிலாந்தில் முதல்முதல் சூரியனைக் கண்டபோது 'இதைச் சந்திரனென்று நாங்கள் இந்தியாவில் சொல்லுவோம்' என்ற கதைபோல் நானும் அந்தப் பிள்ளையைப்போலச் சொல்லலாமென்றிருந்தது.

அத்தியாயம் 6.

எடின்பரோ நகரம் ஸ்காத்துலாந்து தேசம்

நான் இறங்கிய புகைவண்டி ஸ்தானம் வாட்டர்லு என்ற பெயருடையது. ஓர் குதிரைவண்டியில் கிங்ஸ்கிராஸ் என்ற புகைவண்டி ஸ்தானம் சேர்ந்தேன். போகிற வழியில் லண்டனின் இரவு தெருக்காட்சி பார்த்தேன். இரவு வண்டியேறி பிரயாணம்செய்தேன் தூங்கி விட்டுத் திடீரென்று விழித்தால் பட்டப்பகல் வெளிச்சமாயிருந்தது. எடின்பரோவுக்கு காலை ஏழுமணிக்கு வண்டி சேர்வதால் அதைக் கடந்து வேறெங்கும் போய்விட்டேனென்று பயந்துவிட்டேன். ஆனால் என் சேப்புக்கடியாரம் பார்த்தால் அப்போதுதான் நடுஇரவு கடந்து ஒன்றரைமணி. ஐரோப்பாவின் வடபாகங்களில் கோடை காலத்தில் இரவு சுருக்கம், அதிசீக்கிரம் வெளிச்சம் வந்துவிடுமென்ற பூகோளசாஸ்திர சத்தியத்தை உணர்ந்தேன். எடின்பரோவில் ஜூன் மாதம் 22ம் தெய்தி இரவு 11 மணிமட்டும் விளக்கு அவசியமில்லாமல் நான் கடிதம் எழுதியிருக்கிறேன். நடுஇரவு கடந்து ஒரு மணிக்கு பகல் வெளிச்சம் போலிருக்கும் ஆனால் குளிர்காலத்தில் இதற்கு நேரெதிராய் முற்பகல் 10 மணிமட்டும் இருட்டாயிருக்கும். திரும்ப பிற்பகல் மூன்று மணிக்கு இருட்டிவிடும். சிலவேளை பகல் முழுவதும் விளக்கு வெளிச்சம் அவசியமாயிருக்கும்.

நான் எடின்பரோ சேர்ந்தது ஞாயிறு காலை. ஊரெல்லாம் தூங்கிக்கொண்டிருந்தது. நான் சந்திக்க எதிர்பார்த்த என் நண்பர் வீடுமாற்றிவிட்டதால் எனக்கு கஷ்டம் ஏற்பட்டுவிட்டது. என் கூட வந்த வண்டிக்காரன் ஒரு விடுதிஅறை ஏற்படுத்திக்கொள்ள எனக்கு உதவி செய்தான். முதல் அவன் காட்டிய வீட்டில் விடுதித்தலைவி அன்று ஓய்வுநாளானசால் இடம் கொடுக்கமாட்டேனென்ருள். ஓய்வு நாளில் ஓர் அந்நியனை தெருவில் விரட்டிவிடுவதோ, இடம் கொடுத்து தவுதேோ, எது சரியென்று நான் அவளுடன் வருந்திப் பேசியும், அவள் இணங்கவில்லை சிறிது நேரம் அமைதியாய் எனக்குள் ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்து, எதிர்வீட்டு மெத்தையில் ஒரு விடுதி வீட்டைத் கட்டினேன். மலர்ந்த முகத்துடன், வயது சற்று அதிகமுள்ள ஒரு அம்மை வாசலைத்திறந்து, என்னை உள்ளே அழைத்து ஒரு நல்ல அறையைக்காட்டி. வாடகையையும் சொல்லி, என்னை உபசாரத்துடன் வரவேற்றுக் கொண்டாள். சீக்கிரம் நல்ல ஆகாரம் கொண்டு வந்து கொடுத்ததை நான் சாப்பிட்டபின், படுக்கையில் நான் அயர்ந்து தூங்கிவிட்டேன். எடின்பரோவில் இந்த விடுதி வீடுகள் ஒன்ருேடொன்று சேர்ந்து தொடர்ச்சியாகவும், அடுக்கடுக்கான மச்சுக் கட்டிடங்களாகவுமிருக்கும். பொதுவான ஒரு வெளிவாசல் பக்கங்களில் இவ்வீடுகளுக்குரிய தனித்தனி மணிகளின் கம்பிப்பிடிகளுமிருக்கும். இவற்றிலொன்றை இழுத்து அடித்தால், மேலேயிருந்து அந்த

வீட்டு அம்மையார் ஒரு தாம்ப்பாளை இழுக்கக் கீழேயிருக்கும் பொதுக் கதவு திறக்கும். எடின்பரோவில் இந்த வீடுகளுக்கு பல படிகள் ஏறி மேலே செல்வதே ஒரு பெரிய தேகாப்பியாசமாகும்! விடுதித் தலைவி யின் பட்டியல்படி மாணவர் அறை வாடகை ஆகார செலவிற்கு, வாரந் தோறும் பணம் கொடுத்துவிடவேண்டும். தன் ஐவேசின்படி மாணவர் செலவை ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம். நான் தங்கிய வீட்டில் ஒரு இந்திய மாணவனிருந்தார். இவர் உதவியால் என் நண்பர் கோஷ் தங்கியிருந்த வீட்டைக் கண்டுபிடித்தேன். என் நண்பரும் அவர் சகோதரியும் டாக்டர்கள். வங்காள இந்தியக் கிறிஸ்தவர்கள். சென்னை யில் என் மனத்துயரமான வேளையில் என்னைத் தேற்றியதாக நான் முன்னே குறிப்பிட்ட நண்பர் இவர்தான். நான் முதல் தங்கின விடுதி 22 வாரந்தா பார்க்கு ரோடு, அம்மையின் பெயர் ஷிவஸ் அம்மாள். கடைத்தெரு சென்றபோது "நான் அந்நியனாயிருந்தேன், என்னை வர வேற்றுக்கொண்டாய்" என்ற வேத வசனமுள்ள ஒரு படத்தைக்கண்டு வாங்கி, இந்த அம்மையாருக்கு என் நன்றி தெரிய இனமாகக் கொடுத் தேன். என் நண்பர் எனக்கு தன்னிருப்பிடத்தில் இடம் அமர்த்தி ஏற்கனவே ஒழுங்கு செய்திருந்ததினால், நான் ஷிவஸ் அம்மையார் விடுதியில் அதிக நாட்கள் தங்கமுடியாமற்போயிற்று.

முதல் ஞாயிறு. பக்கத்திலிருந்த ஒரு கோயிலுக்கு தெய்வ ஆரா தனை செய்யப்போயிருந்தேன். அங்கு நான் ஒருவனே கறுப்பு நிறமா யிருந்ததினால், எனக்கு அந்த வெள்ளை மனிதர் கூட்டத்தில் கூச்சமா யிருந்தது. ஆராதனை முடியவும் ஒரு மாணவன் வந்து, என்னிடம் அன்பாய் பேசினார் இந்த மாணவன் நியூஸிலாந்து தேசத்திலிருந்து வந்திருந்த பாக் கேட் என்பவர். பலஸ்தீன தேச நாசரேத்தில் இப்போது மிஷனெரி டாக்டராயிருக்கிறார். மற்ற தனது நண்பர்களுக் கும் அந்த கோயில் பாதிரியாருக்கும் என்னை அறிமுகப்படுத்தி விட்டார். பாதிரியார் பெயர் அந்திரூஸ் அர்கார்ட்டு. இவர் நான் எடின்பரோவில் தங்கியிருந்த காலத்தில் மிக அன்பு பாராட்டி, தனது வீட்டிற்கு ஞாயிறுதோறும் இரவு ஆகாரத்திற்கழைத்து உபசரிப்பார். அந்த கோயில் சபை சம்பந்தமாய் ஒரு வன போசனச் சங்கமிருந்தது. சனிக்கிழமைகளில் பக்கத்து ஊர்கள், மலைகள், விசேஷித்த காட்சிகள், ஸ்தாபனங்கள் பார்க்கப்போகும்படி இந்தச் சங்கம் ஒழுங்கு செய்யும். பல வாலிப ஆண்கள் பெண்கள் இதற்கு விசேஷமாய் வருவார்கள். இதனால் பல இடங்கள் பார்க்கவும், நல்ல நண்பர்களுடன் பழகவும் எனக்கு நல்ல சமயம் கிடைத்தது. என்னையும் இந்தச் சங்க பஞ்சா யத்திற்கு அங்கமாக்கிவிட்டார்கள்.

அலக்சாந்தர் டேயிலர் என்ற இன்னொரு வைத்திய மாணவனுட னும் நான் நெருங்கிய சிநேகிதனானேன். 1911ம் வருஷம் வசந்த காலத்தில் இவர் என்னை ஸ்காத்துலாந்து வடபாகத்திலுள்ள தமது கிராமமாகிய பர்குஹெட் என்ற ஊருக்கு தனது வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போனார். இவர் தகப்பனார், தாயார், இளைய சகோதரி,

தம்பி இவர்களெல்லாம் அங்கு எனக்குக் காட்டிய அன்பும் பக்ஷமும் கொஞ்சமல்ல. அலக்டேயிலர் எனக்கு ஆருயிர்த் தோழனாகிவிட்டார். இந்த ஊர் ஜனங்கள் அநேகமாய் மீன்பிடிக்கும் செம்படவர். அவர்கள் என்னைப் போன்ற இந்தியனைப் பார்ப்பது அபூர்வம். அவர்கள் வேண்டுதலின்படி சில கூட்டங்களில் நான் பேசச் சம்மதித்தேன். நான் பேசப்போகிறேன் என்று அறிந்தவுடன், ஊர் முழுவதும் நெருக்கடியாக கூட்டசாலையில் வந்துவிட்டபடியால் இடம் கிடைப்பது அரிதாய்ப் போய்விட்டது. நான் பேசும்போது, முன் உட்கார்ந்திருந்த சிறுமிகள் என் காலைத் தடவி, நானும் அவர்களைப்போன்ற மனிதன் தானென்ற சந்தேகத்தை நிவிர்த்தி செய்துகொள்ள முயன்றனர். பின்னும் சில பெண்கள் என் வெண்மையான பற்களை என் கறுப்பு நிறத்தோடு ஒப்பிட்டு "ஆஹா, இந்தக் கறுப்பு மனிதன் கள்ள பற்கள் வைத்திருக்கிறான்", என்றனர். கறுப்பு மனிதனுக்குக் கறுப்பு பற்களிருக்கவேண்டாமோ? கூட்டம் முடிந்தவுடன் ஒரு மனிதன், என் நண்பர் அலக்சாந்தர் டேயிலரிடம் ஓடி வந்து, நான் பேசினதைக் குறித்து வியப்புற்று, "ஆஹா, அந்தக் கறுப்பு மனிதன் ஐம்பது வெள்ளை மனிதரைப் பார்க்கிலுமதிக நன்மை செய்வான், அவன் உத்தமன்". என்று சொன்னான். என் நண்பர் சகோதரி என்னிடத்தில் "ஆ, இந்தக் கூட்டத்தில் எங்களூர் வாலிபப் பெண்கள் எல்லாருக்கும் உன்மேல் காதலுண்டாகிவிட்டது", என்று என்னைக் கேலி செய்தாள்.

மேல் நாட்டு ஜனங்களுக்குப் பொதுவாய் நமது இந்திய மக்களைக் குறித்து சரியான அறிவு கிடையாது. ஆப்பிரிக்காவிலுள்ளவர், தீவு தீவாந்தரங்களிலுள்ள மனிதர், இந்திய மக்கள் இவர்களெல்லாம் ஒரு ஜனம் போல் ஏதோ விபரீதமான தவறான எண்ணங்களுண்டு. இந்திய மக்கள் மிக அநாகரீகமானவர்கள் என்றும் அவர்களில் பலர் எண்ணுவதுண்டு. அவர்கள் நம்மைப்பற்றி கேட்கிற உபந்நியாசங்களும், வாசிக்கும் புத்தகங்களும் இதற்கு ஒரு பெரிய காரணம்.

எடின்பரோவில் நான் படித்த காலத்தில் அங்கு வைத்திய சாஸ்திரம் கற்றுக்கொடுத்த நிபுணர்களுக்கும் இங்கு அக்காலத்தில் சென்னையில் கற்றுக்கொடுத்த ஆங்கில வைத்தியர்களுக்கும் பெரும் வித்தியாசம் கண்டேன். சென்னையிலிருந்த சர்க்கார் உத்தியோகஸ்தராகிய ஐரோப்பிய வைத்தியர்கள் தாங்கள் கற்றுக்கொடுத்த பாடங்களில் நிபுணர்களல்ல. எடின்பரோவிலோ சாஸ்திரிகள் அதே வைத்திய சாஸ்திரத்தில் ஆயுள்காலமெல்லாம் பயின்ற நிபுணர்கள். சென்னையில் இந்த ஐரோப்பியர்கள் மாணவர்களை கூலிக்காரர்மாதிரி நடத்தினார்கள். மாணவர்கள் பயந்து நடுங்குவார்கள். எடின்பரோவிலோ அந்த சாஸ்திரிகள் மாணவர்களோடு அன்புடன் சாதாரணமாக நெருங்கி பழகி நடந்துகொண்டார்கள். மாணவர்களும் பயமின்றி சாஸ்திரிகளுடன் உறவாடி நடந்துகொள்ளுவார்கள். அவர்கள் படித்

துக் கொடுப்பதும் வெகு தெளிவாகவும் இலகுவாகக் கிரஹித்துக் கொள்ளத்தக்க விதமாகவுமிருந்தது, மாணவர்கள் தாங்களே யோசித்துக் கண்டுப்பிடித்துக்கொள்ளும் முறையாகவும் கற்றுக்கொடுப்பார்கள். சென்னையில் முகமுகமாய் கேள்விகள் கேட்கும் பரீக்ஷைசமயத்தில் ஐரோப்பிய வைத்தியர்களின் முரட்டுத்தனமும், சுணங்கிய முகமும், குழப்பமுண்டாக்கும் கேள்விகளும் மாணவர்களைக் கலங்கச் செய்துவிடும். எடின்பரோவிலோ இப்படிப்பட்ட பரீக்ஷையில் சாஸ்திரிகள் அவர்கள் முன் உட்கார்ந்திருக்கும் மாணவர்களை உற்சாகப் படுத்தி, அவர்களுக்குத் தைரியமுண்டாக்கி, அவர்கள் எவ்வளவு தூரம் மெய்யான அறிவடைந்து அவசியமானவைகளை அறிந்திருக்கிறார்களென நல்லவிதமாய்க் கேட்டு அறிவார்கள்.

அங்குள்ள சாஸ்திரிகளில் பைரம்பிராம்வெல் என்ற ஒரு வயோதிப வைத்தியர் இருந்தார். இவர் வைத்தியசாலையில் எங்களுக்கு மிக அருமையான விதமாய் பலவித ரோகங்களைப்பற்றிக் கற்றுக் கொடுப்பார். சில வேளைகளில் மிகுந்த தமாஷ் செய்வார். வைத்திய சாலையில் "வாத்துத்தொட்டி" என்று மாணவர்கள் வேடிக்கையாக அழைக்கும் நடுவில் பள்ளமான வட்டவடிவமுள்ள தமது வகுப்பு அறையிலே வாரந்தோறும் ஒரு விசேஷித்த வகுப்பு நடத்துவார். அதற்கு மாணவர்கள் பெருங் கூட்டமாக வருவார்கள். வியாதியஸ்தரை ஒருவர் பின் ஒருவராக அறைக்குள் வரச்சொல்லி அவர்கள் நோய்களைப் பற்றி எங்களிடத்தில் கேள்விகள் கேட்டுப் படித்துக் கொடுப்பார். ஒருநாள் நடுக்கவாதம் நோயுள்ள ஒருவன் அறைக்குள் பிரவேசித்தான். "தனவான்களே, இந்த மனிதன் நோயென்ன?" என்றார். உடனே மாணவர்கள் நடுக்கவாதம் என்று உத்தரவு கொடுத்தார்கள். "இதற்கு சிகிச்சையென்ன?" என்றார். சற்றுநேரம் மிகுந்த அமைதி, ஒரு மாணவனும் உத்தரவு சொல்லத் துணியவில்லை "ஆஹா தனவான்களே, அடுத்த வருஷம் உங்களில் சிலர் வைத்தியத்தொழில் ஆரம்பித்துவிடுவீர்கள். உங்களிடத்தில் முதல் சிகிச்சை பெறவரும் மனிதன் நடுக்கவாதக்காரனாயிருந்தால்,நீங்கள் இந்தவிதமாக அவனுக்கு என்ன சிகிச்சை செய்யவேண்டுமென்று தெரியாமல், இப்படி சும்மா உட்கார்ந்துகொண்டிருந்தால் உங்கள் பெயர், பிரஸ்தாபம் முழுவதும் கெட்டுப்போகுமே! ஆதலால் நான் உங்களுக்கு ஒரு நல்லாலோசனை சொல்லுகிறேன். மறவாதீர்கள். அந்த நடுக்கவாதக்காரனை உடனே வீடு திரும்பி, மறுநாள் அவன் மூத்திரப்பரீக்ஷை செய்யவேண்டிய திருப்பதினால் மூத்திரத்துடன் உங்களிடம் வரச்சொல்லுங்கள். அவன் மூத்திரத்துடன் மறுநாள் திரும்புமுன், நீங்கள் உங்கள் வைத்திய சாஸ்திரப் புத்தகத்தை எடுத்து, நடுக்குவாதத்தைப்பற்றி அதில் எழுதியிருக்கிற எல்லாவற்றையும் கவனமாய் வாசித்து, அவன் திரும்பி வரும்போது வேண்டிய சிகிச்சை செய்ய ஆயத்தமாயிருங்கள்!" என்று பிராம்வெல் சாஸ்திரி சொல்லி முடிக்கவும், அங்கு கூடியிருந்த மாணவர் கூட்டமெல்லாம் கொல் என்று அறையின் முகடு

அசையத்தக்கதாய்ச் சிரித்துவிட்டார்கள். மருந்து சிகிச்சை சாஸ்திரப் பரீக்ஷையில் முகமுகக் கேள்விகள் கேட்கும் பரீக்ஷைக்கு நான் போன போது இவர்தான் என்னைப் பரீக்ஷித்தார், இவர் அச்சமயத்தில் ஒரு தகப்பன்போல் அன்புடன் நடந்து என்னைப் பரீக்ஷித்ததை நான் ஒருக்காலும் மறக்கமாட்டேன்.

எடின்பரோவிலிருக்கையில் அங்கு படித்துக்கொண்டிருந்த ஒரு ஜெர்மன் நண்பன் ஹான்ஸ்ஹைய்பெல்ல்டர் என்பவரோடும் நெருங்கிய நண்பனானேன். தென் ஜெர்மானியில் டில்லிங்கன் என்ற ஊரில் இவர் இப்போது டாக்டர் வேலை செய்கிறார்.

1911ம வருஷம் ஜூலை மாதம் நான் டாக்டர் பரீக்ஷை முழுவதும் தேறிவிட்டேன். 27—7—1911 தெய்தி நான் எடின்பரோவிலிருந்து புறப்பட்டு லண்டன் வந்து சேர்ந்தேன். கொஞ்சங்குறைய மூன்று வாரம்போல் அங்கு தங்கியிருந்து லண்டனில் நான் பார்க்கவேண்டிய பல இடங்கள், ஸ்தாபனங்கள் முதலியன நன்றாகச்சுற்றிப் பார்த்தேன். கையில் லண்டன் படம் ஒன்று வைத்துக்கொண்டு, ஒரு வழிகாட்டியின் உதவியும் நாடாமல் தனியே, பகல் முழுவதும் சில வேளைகளில் இரவு வெகுநேரமட்டும் ஓயாது நான் நகரத்தைச் சுற்றிப்பார்த்தேன். லண்டனிலுள்ள பெரிய காட்சி சாலையாகிய பிரிட்டீஷ் மியூஸியம் என்ற ஸ்தாபனத்திலே பலகாட்சியும் பார்க்க அதற்கென்றே பல நாட்கள் வேண்டும். இங்கு என் தகப்பனரால் அச்சிடப்பட்ட என் முற்பிதாக்கள் சரித்திரம் புத்தகசாலையிலிருப்பவைக்காக ஒரு சீட்டு எழுதிக்கேட்டு. அத் தமிழ் புத்தகங்களை அகில உலகத்திலுள்ளவைகளிலும் மிகப்பெரிய இந்தக் காட்சிசாலையில் இருப்பதைப்பார்த்து மிகவும் அகமகிழ்ந்தேன். என் பிதாவினல் இவைகள் இந்தக் காட்சி சாலைக்குக் கொடுக்கப்பட்டிருந்தன. லண்டனில் ஹைட்பார்க்கு என்ற பொதுஜன பெருந்தோட்டத்தில் மாலையிலும், இருட்டிய பின்னும் பெருங்கூட்டமாய் ஜனங்கள் இருப்பார்கள். பலவித அரசியல் கட்சியார், மதப்பிரிவுக்காரர்கள் முதலியனர் இங்குமங்கும் நின்று வைராக்கியமாய் உபந்நியாசம் செய்து தங்கள் தங்கள் கொள்கைகளைப் பிரசாரம் செய்வார்கள். இருட்டிய பின் இங்குமங்கும் மரத்தடிகளில் வாலிப ஆண்களும் பெண்களும் தங்கள் காதல்களை நிறைவேற்றச்செய்யும் நாடக காட்சிகளும் நிரம்பியிருக்கும். அதினல் இங்கு இரவில் வரும் வாலிபருக்கு இது ஒரு பெரிய சோதனையான இடமுமாகும். நம்முடைய தேசத்திலிருந்து படிக்கப்போகும் வாலிபரில் சிலரும் இவ்விதமாய் மோக இச்சைகளுக்குரிய வலைகளில் சிக்கிக் கெட்டுப்போகிறதுமுண்டு. ஐரோப்பாவில் இப்படிப்பட்ட பெரும் நகரங்களில் இரவு பலவித விளக்குகள், மின்சார வேடிக்கைப் பிரசாரங்கள் முதலியவை இரவைப் பகல் போலாக்கிவிடும். இந்த வருஷத்தில் ஆகஸ்டு மாதம் உஷ்ணமாகவேயிருந்தது. குளிர் தேசங்களில் வீடுகள் குளிருக்காக காற்றோட்டத்திற்கு வசதியில்லாதபடி கட்டப்பட்டிருக்கும். இதனல்

இச்சமயம் லண்டனில் வீட்டிற்குள்ளிருந்ததால் வெகு கஷ்டமாக அனலாயிருந்தது. ஒரு ஞாயிறு பரிசுத்த பவுலின் அத்தியக்ஷாலயத்தில் நடந்த ஆராதனைக்குப் போயிருந்தேன். ஓயாது பார்க்க வருகிறவர்கள் சந்தடியினால் அமைதி கிடையாது. எதிரொலியினால் ஆராதனையின் தொனி தெளிவாயில்லை. கிண்ண கோபுரத்தில் ஒரு மூலையில் மெதுவாய்ச் சொல்வது இன்னொரு மூலையில் உரக்கத் தெளிவாய்க் கேட்கும்.

ஆகஸ்டு மாதம் 15ம் தெய்தி சௌதாம்படன் சேர்ந்து பார்பிளிங்கர் என்ற பெயருடைய ஜெர்மன் கப்பலில் கொழும்பிற்குப் புறப்பட்டேன், பிரான்சுக்கு மேற்கேயுள்ள பிஸ்கே என்ற குடாக்கடலில் கொந்தளிப்பு அதிகம். பொங்கி உயரமாயெழும்பும் அலைகளின்மேல் கப்பல் ஏறுவதும், இறங்குவதும், இருபக்கம் சாய்ந்து அது ஆடுவதும் என் குடலைப் புரட்டி பயங்கர கடல்நோயுண்டாக்கிற்று. பின்பு இந்து மகா சமுத்திரத்தில் அரபிக்கடலிலும் இங்கப்பாடுதான். அது மாரி காலமல்லவா? தலைசுற்றிக் கூமட்டும். இப்படிப்பட்ட சமயங்களில் உயிரோடிருப்பதுவும் பிரயோசனமோவென்ற சந்தேகங்கூட உண்டாகிவிடலாம்!. ஆனால் மற்றப் பாகங்களில் கப்பல் அவ்வளவு ஆடாமல் வந்ததால் சந்தோஷமாயிருந்தது. கப்பலில் என்னுடன் பிரயாணம் செய்த ரீபண்டிராஸ்டு என்ற ஒரு ஜெர்மன் வாலிபனோடு நன்றாகப் பழகி சிநேகமாகிவிட்டேன். இவர் வீட்டிற்கு ஜெர்மனிக்கு பின் காலங்களில் மும்முறை போய்த் தங்கியிருந்திருக்கிறேன். இவர் மூத்த மகள் பவுலாவுக்கு நான் ஞானத்தகப்பன். இத்தாலியாவிலிருக்கும் ஜெனோவா நகரத்தில் காம்போஸான்டோ என்ற சலவைக்கல் சித்திர வேலைகள் நிரம்பிய கல்லறைத்தோட்டம் பார்த்தேன். நான் சிறு பையனாகை பாளையங்கோட்டையிலிருந்தபோது இரக்ஷணிய சேனையிலிருந்த மேஜர் மூஸாபாய் என்ற நண்பரும் அந்தக் கப்பலில் பிரயாணம் செய்தார் அவர் தினந்தோறும் என்னுடன் காலையில் வேதம் வாசித்து ஜெபிப்பார். நான் கப்பலில் திரும்ப வரும்போது மாலை வேளைகளில் இந்துமகா சமுத்திரத்தில் (அரபிக்கடலில்) சூரிய அஸ்தமனக் காட்சி பார்க்க மிக அருமையாகயிருக்கும். மேல்தட்டில் கப்பலின் முன் பாகம் கூராகச் சேரும் அணியத்தின் முனையிலே நின்று அமைதியாக மாலை வேளைகளைச் செலவழிப்பேன். அடிக்கடி என் ஜீவியத்தின் அடுத்தபடி என்ன என்று தெரியாது தியங்கி,

"இருள் எனைச் சூழ்ந்ததந்தோ, அன்புள ஒளியே, என்னை
அருள்வழி நடத்து, கங்குல் இருண்டது வீடோ தூரம்,
திருவுளம் இரங்கி என்றன் சீறடி நீகா, சேய்மை
அரியது காணவேண்டேன், அமையும் ஓர் அடி கண்டாலே"

இப்பாட்டின் மூலமாகிய ஆங்கிலத்தில் நான் பாடி ஜெபிப்பேன்.

நான் இந்தியா திரும்பச் சேர்ந்தபின் நான் செய்யவேண்டியதென்ன, கடவுளின் சித்தமென்ன, என் ஜீவ நோக்கம் நிறைவேற நான் என்ன செய்யவேண்டும் என்று திகைத்து யோசிப்பேன். மாணவனாயிருக்கும்போது, படிப்பை முடித்து பரீக்ஷையில் மாத்திரம் சித்தி பெற்றுவிட்டால் அதன்பின், எல்லாக் கவலையும் தீர்ந்துபோய்விடுமென்றதுபோல் தோன்றும். ஆனால் மெய்யான கவலையும் திகைப்பும் மாணவன் தன் படிப்பை முடித்தபின்தான் ஒன்றொன்றாய் வரும்.

அத்தியாயம் 7

இலங்கையில் சர்க்கார் உத்தியோகம்.

9—9—1911ம் தெய்தி கொழும்பில் இறங்கி என் தங்கை பூவாய் அம்மாள் (டாக்டர் ஈசாக்கு தாவீது அவர்கள் மனைவி) வீட்டில் தங்கினேன். நான் இலங்கை சர்க்கார் உத்தியோகத்தில் டாக்டர் வேலை செய்யவேண்டுமென்று அவளுக்கு அதிக ஆவல். இந்தியாவில் அப்போது சர்க்கார் வேலையில் சேரும் இந்திய டாக்டர்கள் ஐ. எம். எஸ். என்ற பதவியடைந்த மகான்கள் கீழேதான் அடிமைத்தனமாக வேலை செய்யவேண்டும். இந்த உயர் பதவியிலிருப்பவர்கள் அநேகமாய் ஆங்கிலேயர்தான். இலங்கையில் சம்பளம் குறைவென்றாலும் சுதேசிகளான டாக்டர்களுக்கு சுயாதீனமதிகமுண்டு. இதனால் எனக்கு இலங்கையில் வேலை செய்ய சற்று பிரியமிருந்தது. ஆனாலும் என் ஜீவியத்தின் நிலையான தொண்டு இந்தியாவிலேயே செய்யவேண்டுமென்பதுதான் என் பேர் அவா. பண விஷயங்களில் எனக்கு ஆச்சமயத்தில் பெரிய பொறுப்பு இருந்தது. அதினால் என் இஷ்டப்படி ஆண்டவரின் ஊழியத்தை இந்தியாவிலே சுயாதீனமாகச் செய்ய இன்னும் எனக்கு வழி தெளிவாயில்லை. தற்காலிகமாக இலங்கை சர்க்கார் உத்தியோகமே செய்து, பண விஷயமாக எனக்கிருந்த கடமையைத் தீர்க்குமட்டும் சர்க்கார் உத்தியோகம் செய்யத் தீர்மானித்தேன். பாளையங்கோட்டைக்கு என் அருமைத் தாயாரைப் பார்க்கவந்தேன். வருகிற நாளைத் திட்டமாய் எழுதாமல் திடீரென்று வீடுசேர்ந்தேன். அவர்கள் சந்தோஷத்திற்கு மட்டில்லை. சந்தோஷத்தினால் அவர்களுக்கு என்ன செய்வது, சொல்வதென்றுகூடத் தெரியவில்லை! உடனே சமயலறைக்கு ஏதோ எனக்கு ஆகாரம் ஆயத்தம் செய்ய ஓடினார்கள். சந்தோஷமாய் அவர்களுடனும் பாளையங்கோட்டையிலிருந்த என் இளைய தங்கை இன்னாசியம்மாள் (தாஸ்கிருஷ்ணையா அவர்கள் மனைவி) உடனும் சில நாட்கள் செலவிட்டேன்.

அக்டோபர் 1911 இலங்கை சர்க்கார் கீழ் டாக்டர் வேலையிலமர்ந்தேன். கொழும்பிலிருக்கும் சர்க்காரின் பொது வைத்தியசாலையில் முதலாவது டாக்டர் வேலை பார்த்தேன். இந்தியாவில் அக்காலத்தில் இந்திய டாக்டர்கள் ஆங்கில டாக்டர்கள் கீழ் அடிமைகள் போலடங்கி வேலைபார்ப்பதுபோல் இலங்கையிலில்லை. சற்று சுயாதீனமிருந்தது. இலங்கையில் மத்தியப்பாகங்கள் தென்பாகங்களிலிருப்பவர்கள் சிங்களவர். வடக்கே யாழ்ப்பாணத்தில் தமிழர். சிங்களவர்களுக்கு இயற்கையாக, தங்கள் தேசத்தில் இந்தியர் வந்து உயர் பதவிகளை எடுத்துக் கொள்வது அக்காலத்திலும்கூட பிரியமில்லை. இக்காலத்தில் இந்தியர் விஷயத்தில் வெகு பயங்கரமான எதிர்ப்புண்டாயிருப்பது நமக்குத் தெரியும் இந்த எதிர்ப்பு பொதுவாக பொருளாதார சம்பந்தமானதே.

இந்திய மக்களும் சிங்களவரும் பூர்வீக இரத்த சம்பந்தமுள்ள ஒரு இனத்தினரே என்பதற்கு பல சரித்திர ஆதாரமுண்டு. மேலும் இலங்கையின் தற்கால பொருளாதார, விவசாய முன்னேற்றத்திற்கு இந்தியாவிலிருந்து போன இந்திய மக்களே பேருதவியாக இருந்திருக்கிறார்கள். இந்திய தொழிலாளிகள் அங்கு போகாதிருந்தால் இலங்கையைச் செழிப்பாக்கித் தழைக்கச் செய்யும் ஏராளமான தேயிலைத் தோட்டங்கள் எங்கிருந்திருக்கும்?. பண்டைக் காலத்தில் இலங்கை பூகோளசாஸ்திரத்தின்படி இந்தியாவின் ஓர் பாகமாகவே இருந்திருக்கவேண்டும். சரித்திர சம்பந்தமாகவும் பல நெருங்கிய பூர்வீக சம்பந்தம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் தொன்றுதொட்டுண்டு. இனி வருங்காலத்தை நோக்கி ஆழ்ந்து யோசித்தாலும் இலங்கைக்குப் பாதுகாப்பு இந்தியாவோடு சிநேகமாயிருப்பதிலேயே இருக்கிறது. இதனால் இலங்கையும் இந்தியாவும் நெருங்கிய சிநேகமாயிருப்பதே நன்றாகும். சிங்களவர் தங்கள் சொந்தத்தாருக்காக அக்கறைகாட்டி, அவர்கள் பிழைப்பதற்கு நன்மை செய்ய முயல்வது இயற்கைதான். ஆனால் இலங்கையையே தங்கள் சொந்த நாடுபோல் பாவித்து, அங்கு தங்கிவரும் இந்தியர்களை வேலையை விட்டுத் தள்ளிக் கஷ்டப்படுத்தி விரட்டுவது தர்மமாகாது. இதினால் இந்தியருக்கு சிங்களவர்மேல் வெறுப்புண்டாகச்செய்து விடுமே இங்கிருந்து போயிருக்கும் இந்தியரும் இலங்கையைத் தங்கள் சொந்த நாடுபோல் பாவித்து அதன் நன்மைக்கென்று அக்கறை காட்டவேண்டும். இவ்வுலகத்தில் நடைபெறும் பயங்கர யுத்தங்களையும், தேசத்திற்கு விரோதமாய் தேசங்கள் பகைமூண்டு நிற்பதையும் பார்க்கும் பல ஞானிகள், இந்த உலகத்தின் இராஜ்யங்கள் எல்லாம் ஒரு சமஷ்டியாக சேர்ந்து ஒத்துழைக்கும் கூட்டுறவு இராஜ்யங்களாகவேண்டுமென்று போதிக்கிற காலமிது. காரியமிப்படியிருக்க, ஒன்றிற்கொன்று வெகு சமீபமான இந்தியாவும் இலங்கையும் ஒரு சமஷ்டி இராஜ்யமாக அன்புடன் ஐக்கியமாகவேண்டுமல்லவா? ஒருவரையொருவர் நஷ்டப்படுத்திக் கொள்ளையிடுவதற்கல்ல; ஒருவரையொருவர் தாங்கி உதவி நன்மை செய்வதற்கே இந்த ஐக்கியமுண்டாகவேண்டும்.

நான் கொழும்பு சர்க்கார் பெரிய வைத்தியசாலையில் வேலைசெய்த போது இரணசிகிச்சையில் சிறந்து பெயரெடுத்த டாக்டர் எஸ். ஸி. பவுல் அவர்களுடன் வேலை செய்ய நல்ல தருணம் கிடைத்தது. அந்த வைத்தியசாலையில் ஏழை நோயாளிகளைக் கவனித்துத் தாதித் தொண்டு செய்தவர்கள் பிரான்ஸிஸ்கன் சந்நியாச ஒழுங்கைச்சேர்ந்த கன்னியாஸ்திரீகள். இவர்கள் மிகுந்த அன்பு அக்கறையுடன் வியாதியஸ்தரைக் கவனித்துவந்தார்கள். இவர்களோடு தொண்டு செய்ததும் எனக்குச் சந்தோஷமாகவேயிருந்தது. ஆனால் உயர்சம்பளம் பெற்று பணக்காரரான வியாதியஸ்தர்களைக் கவனித்து வந்த ஐரோப்பிய தாதிகளோடு வேலை செய்வதிலிருந்த கஷ்டமதிகமே.

1912ம் வருஷம் பின்பாகத்தில் கொழும்பிலிருந்து என்னை கண்டிக்கு மாற்றிவிட்டார்கள். கண்டி நகரம் என் மத்தியஸ்தான மட்டும். இந்த மத்திய மாகாணத்தின் பல இடங்களிலிருந்து விடு முறைக்காகப் போய்விடும் டாக்டர்களுக்குப் பதில் பார்ப்பது என் வேலை. இதினல் இந்த மாகாணத்தின் பல பாகங்களையும் சர்க்கார் செலவில் சுகமாகச் சுற்றிவரும் சிலாக்கியம் எனக்குக் கிடைத்தது. மலைப்பிரதேசம், எங்கும் தேயிலைத்தோட்டங்கள் செழிப்பாய் நிரம் பிய நாடு. மலைகளுக்கு மேலேயிருக்கும் தேயிலைத் தோட்டங்களில் ஏராளமான தமிழ்த் தொழிலாளிகளிருந்தார்கள். இவர்களை மேல் பார்ப்பவர்கள் ஐரோப்பியர். அவர்கள் கீழ் வேலை செய்பவர்கள் கண்காணிகள், குமாஸ்தாக்கள், இவர்கள் தமிழர்தான் தென்னித்தியா விலிருந்து ஏழை ஜனங்களை கூலியாட்களாகத் திரட்டிக் கூட்டி வருப வர்கள் இந்த தமிழ் கண்காணிகளே. கூலியாட்கள் சேர்க்க தலைக்கு இவ்வளவென்ற கமிஷன் பணம் தோட்டத்துத் தலைவர்களான ஐரோப்பியரிடம் இவர்கள் வாங்கிக்கொள்வார்கள். கூலியாட்களுக்கு முன்பணமாக இவர்கள் கொடுப்பதை அவர்கள் மேல் விழுந்த கடனக எழுதிக்கொள்வார்கள். தேயிலைத் தோட்டங்களிலும் இந்த தமிழ் கூலி யாட்கள் ஸ்திதி பரிதாபமாயிருந்தது. கூலி சொற்பம், முறைக் காய்ச்சல், கொக்கிப்புழு, வயிற்றளைச்சல் முதலிய தொத்துவியாதி கள் பரவியிருந்தன. இவர்களிருப்பிடம் "கூலிவரிகள்" என்று சொல்லப்பட்ட ஓலைக்குடிசைகள். சுகாதார ஒழுங்குகள் கிடையாது. எங்கும் துர்நாற்றம். இவர்கள் கடன் வாங்குகிறதெல்லாம் அவர் களுக்கு இந்தியாவில் முன் கொடுக்கப்பட்டதுடன் இவர்கள்பேரில் எழுதப்பட்டிருக்கும். இதனல் இவர்களுக்கு நித்திய கடன்தான். தகப்பன் கடனை மகன் எடுத்துக்கொள்வதினல் கடன் தலைமுறை தத்துவமாய் வளர்ந்துகொண்டிருக்கும். கஷ்டம் பொறுக்காது ஓடி விட்டால் போலிசார் பிடித்து, ஓடிப்போன கூலியென்று பிராது செய்து, சிறையில் அடைத்துவிடுவார்கள்.

தேயிலைத் தோட்டங்கள் நிறைந்த மலைகள் மத்தியில் நடு பள்ளத் தாக்குகளில் சர்க்கார் வைத்தியசாலைகளிருக்கும். மதியம் வரை எனக்கு வைத்தியவேலையிருக்கும். பிற்பகல் பக்கத்திலுள்ள பல மலை கள் மேலிருக்கும் தோட்டங்களிலிருக்கும் வியாதியஸ்தர்களில் வைத் திய சாலைக்கு வர முடியாதவர்களைப் பார்க்க நான் போவேன். குதிரை மேல் அல்லது கால்நடையாகப் போவேன். சுந்தரமான இயற்கை காட்சிகள் மத்தியில் அடிக்கடி போக நேரிடும். தனியே போகும்போது நல்ல தியானத்திற்கும் பாடிக்கொண்டு போவதற்கும் சுற்றியிருக்கிற கண்ணைரும் காட்சிகள் மனதைத் தூண்டிவிடும். சில வேளைகளில் பகல் அதிக வேலை செய்தபின் நடு இரவில் பிரசவக் கஷ்டத்திலிருக்கும் பெண்களுக்கு சிகிச்சை செய்யப் புறப்பட்டு மலை கள் மேல் போகவேண்டியதிருக்கும். புழுதி நிரம்பிய இவர்கள் குடிசைத் தரையில் பிரசவ ஸ்திரீ கிடப்பாள். பெண்ணின் உடம்பு

முழுவதும் வேப்பெண்ணை மழமழவென்று தடவியிருக்கும். கெர்ப்பப் பையிலிருந்து வெளிவராத குழந்தையையெடுக்க ஆயுத பரிகாரம் செய்யவேண்டியதிருக்கும். போதை கொடுக்க உதவியில்லாமல் (நான் போதை கொடுத்து ஆள் மயங்கிய பின்) ஒரு கூலிப்பெண்ணை யே போதை கொடுக்கச்சொல்லிவிட்டு நான் ஆயுத பரிகாரம் செய் வேன். ஒரே அறைக்குள் புருஷன் மனைவி பிள்ளைகள் எல்லாம் வசிப் பார்கள். பிரசவமும் இந்த அறையில்தான். சமயலும் அங்குதான். ஊர் பெண்கள் கூட்டமும் இங்குதான். நான் செய்யும் முதல் வேலை இவர்களை வெளியே விரட்டுவது!

சில வேலைகளில் வெகு அற்பக் காரியத்திற்கு சரியாய் விசாரியா மல் ஒரு தேயிலைத் தோட்ட ஐரோப்பிய முதலாளி டாக்டரை வெகு தூரம் வரக் கூப்பிட்டு விடுவார். ஆனால் கூப்பிட்டால் டாக்டர் போய் தான் தீரவேண்டும். இந்த ஐரோப்பியத் தலைவர்களில் சிலர் ஜீவியம் வெகு துன்மார்க்கமாயிருக்கும். தமிழ் கூலிப் பெண்களை வைப்பாட்டி களாக வைத்துக்கொள்பவர் சிலர். அல்லது வேசித்தனத்தினால் துர் வியாதிகளை சம்பாதித்துக்கொள்பவர் பலர். இவர்களில் சின்னத் துரை என்று கூலியாட்கள் சொல்லும் பல ஐரோப்பிய வாலிபர் இருந்தார்கள். பெரிய துரை எனப்பட்டவர்தான் தலைவர் கூலி யாட்கள் பிள்ளைகளுக்குப் படிக்க ஏது ஒழுங்குகளும் தோட்ட அதிகாரி கள் செய்வதில்லை. படித்துவிட்டால் அதிக கூலி கேட்க ஆரம்பித்து விடுவார்களே என்று ஒரு ஐரோப்பிய தோட்ட அதிகாரி நான் இதைக் குறித்துப் பேசினபோது என்னிடம் சொன்னார். இவர்கள் நன்மைக் காக கிறிஸ்தவ மிஷன்கள்தாம் கொஞ்சம் பிரயாசம் எடுத்து வந்தன. இவர்கள் நிலமையைக் குறித்து நான் பரிதபித்தாலும் இவர்கள் முன்னேற்றத்திற்காக சர்க்கார் உத்தியோகத்திலிருந்த என்னால் ஒன்றும் செய்ய வகையில்லை.

ஒருதடவை தம்பூலா என்று சற்று வடபாகத்திலிருந்த இடத்திற்கு என்னை மாற்றியிருந்தார்கள், குன்றுகளும், மரங்கள் நெருங்கிய வனங்களுக்குள்ளிருந்த கிராமங்களும் நெருங்கிய அடர்ந்த பிரதேசம். காட்டு யானைகள் திரிந்து முரட்டுத்தனங்கள் செய்யும் பாகம். முறைக் காய்ச்சலும், பரங்கி என்ற நோயும் பரவியிருந்தன. இதற்கு அருகே பூர்வீக சரித்திர சம்பந்தமான ஸ்தலங்கள் சில இருந்தன. ஒரு பெரும் பாறையை ஒட்டி ஒரு புத்த சந்நியாச மடமிருந்தது. பாறைக் குகை யில் வெகு சாமர்த்தியமாய் சித்திரசக்தியோடு கல்லில் வெட்டப்பட்ட பிரமாண்டமான புத்த சிலையிருந்தது. புத்தர் வலது கையைத் தலை யணையாக வைத்துப் படுத்திருக்கும் 45 அடிகள் நீளமுள்ள ஒரு பெரிய உருவமிது. குகையின் கூரை அழகிய சித்திரவெட்டு வேலையமைந்து பலவருணமுள்ள காட்சிகள் வெட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தது. குகையின் அருகில் சீயாம் தேசத்திலிருந்து வந்து அங்கு தனியே தபசு செய்துகொண்டிருக்கும் வயோதிப ஸ்திரீயைப் பார்த்தேன். என் மனதை இது உருக்கியது.

மறுநாள் சேகிரி மலையிலுள்ள பூர்வீக சரித்திர சம்பந்தமான காட்சிகளைப் பார்க்கப்போனேன். ஒரு ஏரிக்கரை மட்டும் நடந்து பின்பு சற்று வடக்கே திரும்பினேன், சமீபத்திலுள்ள பிரயாணிகள் தங்கும் ஓர் பங்களாவில், எனக்கு வழி காட்டியாக உதவும் புத்தகமொன்று வாங்கியிருந்தேன். மலையேற கீழிருந்து மேல் மட்டும் படிகள் போல் வெட்டப்பட்டிருந்தது. இப்படிகள்மேல்ஏறி பல தார்சுகள்போல் இருந்த பாறைப் பாகங்களைக் கடந்தேன். இடதுபக்கத்தில் தண்ணீர் இருந்த கல் தொட்டி, அதின் கீழ்பாகத்தில் இராஜசமஸ்தான தரிசன சாலையும், பிரசங்க சாலையுமிருந்தன. இக்காலத்தில் இவற்றைக் குறிப்பிடுபவை பல பெரிய கற்கள். இவற்றின் மேல்பாகங்கள் நன்றாக சிற்பவேலை செய்யப்பட்டவைகள். இவற்றின் ஒரு பக்கமுடிவிலே நல்ல மெத்தை ஆசனம்போல் அதே பாறையில் வெட்டப்பட்ட ஆசனமிருந்தது. ஓரிடத்தில் இப்படிகளின் பக்கத்தில் உயர்ந்த மதிலிருந்தது. இம்மதில், படிகள் ஓரத்தில் ஆதரவாகநின்றது. மிகவும் மெதுவாக இம்மதிலின் உட்புரம் பூசப்பட்டுத் தேய்க்கப்பட்டிருந்தது. படிகளில் நான் ஏறிக்கொண்டிருக்கையில் வழியில் படுத்திருந்த ஒரு நல்லபாம்பு என்னைக் கண்டதும் படிகளின் வழியாய்க் கீழே தீவிரமாய் ஓடிவிட்டது. சற்றுமேலே ஏறினபின் அடியிலே அழகான சித்திரங்கள் வரையப்பட்ட ஓர் பெரும்பாறை தள்ளிக்கொண்டிருந்தது. இப்பாறை அடியில் அழகான பெண் உருவங்கள் வெட்டப்பட்டிருந்தன. இந்தப் பாறைமேல் ஏறினேன். இருபுறமும் கருக்கான சிங்க நகங்கள் வெட்டப்பட்டிருந்தன. இதற்குமேலேறுவது மிகக்கஷ்டமானது. பாறையில் தோண்டப்பட்டிருந்த சிறியகுழிகளில் பாகத்தை ஊன்றி மேலேறவேண்டும். பிரயாசத்தொடேறினேன். அங்கிருந்து கீழேபார்த்தால் மிக சுந்தர இயற்கைகாட்சி. அடர்ந்த வனங்கள், தொடர்ச்சியான குன்றுகள் வரிசையாக கண்முன் எழும்பின. மலை உச்சிசேர்ந்ததும் அழிந்த பலகட்டிடங்களைப் பார்த்தேன். சுவர்களும், தரைகளும்தான் இப்போமீந்திருக்கின்றன. மலை உச்சியின் கிழக்குப்பக்கத்தில் பாறையில் வெட்டப்பட்ட அழகிய வேலையுள்ள, சிங்காசனமிருக்கிறது. இன்னொரு மூலையில் தண்ணீர்தொட்டி. இப்பெரும் பாறையான மலையைத் தன் பிரதம இராஜஸ்தானமாகத் தெரிந்து இக்கட்டிடங்கள் சிற்ப வேலைகளெல்லாம் செய்வித்து கொஞ்சம்குறைய 1500 வருஷங்களுக்குமுன்னிருந்து அரசு புரிந்தவன் காசியப்பன் என்ற மன்னன் இவன் தன் தகப்பனைக் கொன்றுவிட்டபின் தன் பாதுகாப்பிற்காக இங்கு தன் இராஜஸ்தானத்தை ஏற்படுத்தினனும் அசைக்க முடியாத இப் பாறையும் அதின் கோட்டை அரண்களும் எவ்விதமாய் தான் கடைசியில் வீழ்ந்து அழிந்ததோ? ஆச்சரியகரமான இந்த வேலைகளையெல்லாம் பார்த்த நான் நமது கீழ்நாட்டு மக்களின் நாகரீகம் எத்துணை பூர்வீகமானது என்று நினைக்க உள்ளம் பரவசப்படலானேன். இவ்வளவு பூர்வீக நாகரீகம் நிறைந்த நமது கீழ்நாடு இக்காலம் இப்படி க்ஷீணித்து மங்கி வாடுவதற்குக் காரணமென்ன? முன்னேறிக்கொண்டிருந்த நமது தாய்நாடு எங்கேயோ நின்று படுத்துறங்கிவிட்டாள். ஆனாலும் என் தாயே! தூங்குகிற நீ விழிக்கக் காலம்

சமீபமாகிவிட்டது. எழு, எழு, உன் நித்திரை மயக்கத்தை அகற்று, உன் சுதந்தரம் கிட்டுகிறது, என் தாய் நாடே! உன் ஆண்டவன் உன்னைக் கூப்பிடுகிறார். அவர் மகிமையை நீ பூலோகத்திற்கு வெளிப படுத்தும் நாள் சமீபமாயிற்று!

நான் இலங்கையிலிருக்கையில் என் நெருங்கிய பந்துக்கள் விவாகம் செய்துகொள்ளும்படி என்னை வெகுவாய் வற்புறுத்திக் கேட்டார்கள். அழகு, கல்வி, குணம் முதலிய நற்குணாதிசயங்கள் சிறந்த பல தகுந்த பெண்களையும் குறிப்பிட்டு, நான் அவர்களில் ஒரு பெண்ணைத் தெரிந்து மணம்செய்து கொள்ளும்படி ஆலோசனை சொன்னார்கள் பல நியாயங்களையும் மிக சாமர்த்தியமாய் எடுத்துரைத்தார்கள். வேதத்திலிருந்த பல போதகங்களையும் குறிப்பிட்டு எழுதினார்கள்! என் இரண்டாவது அண்ணன் மனைவியராகிய என் சின்ன மதனி, "நான் ஞாயிறு ஜெபாராதனைக்குப் போயிருக்கையில் ஒரு பெண்ணின் ஒரே கன்னத்தைப் பார்த்தவுடனே, "ஆ, இதுதான் தம்பிக்கு (எனக்கு வீட்டில் பெயர்) ஏற்ற பெண்ணென்று உடனே என் மனதில் பட்டது", என்று இந்த என்மேல் அன்பு கொண்ட மதனியார் எழுதினார்கள்! இவர்கள் எல்லாரும் சொன்ன நியாயங்களிலும் எனக்கு சற்று பெருமையுண்டாகவும், என்னை அசைக்கக்கூடிய சக்தியுமுள்ளதாயிருந்தது. கொழும்பிலிருந்த என் தங்கை பூவாயி அம்மாளின் அன்பின் ஆர்வம் நிறைந்த வசனங்களே. "அண்ணன், உன் மனைவிக்கு நீ பரிபூரண புருஷனும் பிள்ளைகளுக்கு உத்தம தகப்பனுமாயிருக்கக் கூடியவன். உன்னைப் போலொத்தவர்கள் விவாகம் செய்ய மறுத்தால் பூலோகத்திற்கே மிக நஷ்டமாகுமே", என்று புலம்பினாள்! "நீ விவாகஞ் செய்துகொள்ளுவதில்லை என்று ஒரே தீர்மானமாய்ச் சொல்லிவிடு, அப்போது நாங்கள் உன்னைத் தொந்தரவு செய்கிறதில்லை", என்றார் என் அத்தான். எனக்கே நான் உத்தரவு சொல்லக்கூடிய நிலையில் நானில்லாதிருக்கையில் உங்களுக்கு எப்படி உத்தரவு கொடுக்கக்கூடும்?" என்றேன் நான். "அப்பா, உன் பெயர் சொல்ல ஆளில்லாது வம்சம் ஒழிந்துபோகுமே!" என்று தன் உயிரிலும் அதிகமாய் என்னை நேசித்த என் அருமைச் சகாய் வருந்தினார்கள். ஆனால் எனக்கு இச்சமயத்தில் என் ஜீவியத்தின் அடுத்தபடி மாத்திரம்தான் தெரிந்தது. என் ஜீவிய வேலை இலங்கையிலல்ல. இந்தியாவிலேயே இருக்கிறது. இந்த அழைப்பு நிறைவேற நான் இன்னும் அதிகமாய் என் வைத்தியக் கல்வியில் தேறும்படி திரும்பவும் இங்கிலாந்து செல்லவேண்டும் என்று மாத்திரம் எனக்குத் தெரிந்தது ஆனால் இவ்விதமாக எனக்குள் வேலைசெய்துவந்த தரிசனம் இன்னும் தெளிவாகவும் பூரணமாகவும் காணப்படவில்லை. இப்பேர்பட்ட சிந்தையும் தரிசனத்தையுமுடைய ஒரு நண்பனின் ஒத்துழைப்பில்லாமல் இதை சித்தியோடு செய்ய முடியாதென்றும் உணர்ந்தேன். யார் இவ்விஷயத்தில் எனக்கு கொடுக்கப்பட்ட உடன் வேலையாள் என்பதும் தெரியாதிருந்தது. ஆனால் "ஒருஅடி" மட்டும் அச்சமயத்தில்

காண்பிக்கப்பட்டது. அது தெளிவாயிருந்தது. அதுதான் இங்கிலாந்துக்குப் போய் எப். ஆர். சி. எஸ். பரீக்ஷைக்கு நன்ருய்ப் படித்து உழைத்துத் தேறவேண்டுமென்பதே. அச்சமயத்தில் என் மனநிலை எவ்வாறிருந்த தென்பதை என் மூத்த அண்ணன் பவுல் அவர்களுக்கும் அண்ணன் மகனுக்கும் நான் எழுதிய கடிதத்திலிருந்து கொஞ்சம் ஊகிக்கலாம். அது பின்வருமாறு:—

மஹாராா,
ராகம்மா.
இலங்கை,
2—5—1913

என் அன்புள்ள அண்ணனுக்கு,

உங்களுடைய கடிதம் கிடைத்தது. நமது ஜனங்களுக்குள் குடிகொண்டிருக்கும் பண்டைய கருநாடக மூட எண்ணங்களினுல் கஷ்டங்கள் நேரிடும் ஒருவன் விஷயத்தில் நீங்கள் காட்டும் அக்கரையை நான் நன்கறிந்துணர்கிறேன். ஆனுலும் அன்புள்ள அண்ணனே, உண்மையில்லாத எந்த பேச்சும் நான் வெளியிடக்கூடாதென்று நான் சொல்லும்போது அதற்கு நீங்களும் ஒத்துகொள்ளுவீர்கள் என்பது நிச்சயம். மணம்செய்துகொள்ளவேண்டுமா என்ற கேள்விக்கு என் சொந்த ஆத்துமாவுக்கே தெளிவான உத்தரவு அளிக்க என்னுல் இன்னும் இயலவில்லை இப்படியிருக்க இன்னெருவருக்கு நான் எப்படித்திடமான உத்தரவு கூறமுடியும்? இன்னெரு கடிதத்தில் இதைக்குறித்து உங்களுக்குத் தெளிவாக எழுதியிருக்கிறேன். அதற்கு அதிகமாக எதையும் கூட்டிச்சொல்ல இப்போது எனக்கு முடியாது. இம்மட்டாக எனக்குத் தெரிந்தமட்டும் கடவுள் எனக்கு அன்றன்று வேண்டிய வெளிச்சத்தைக் கொடுத்து நடத்துகிருரேயன்றி அடுத்த நாளில் நான் செல்லவேண்டிய பாதையை எனக்கு அவர் காட்டுவதில்லை.

"திருவுள்ளம் இரங்கி என்றன் சீரடி நீகா, சேய்மை
அரியது காணவேண்டேன்; அமையும் ஓர் அடிகண்டேலே."

என் ஆத்துமாவினுள் அனுதினமும் ஒரு பெரிய போராட்டம் இருக்கிறது. அது என்னவென்ருல்:—என் ஜீவியத்தின் நோக்கம் நிறைவேருமல் போய்விடுமோ என்ற பயம். அது மாத்திரமல்ல நான் அறியாமலே தந்திரமாக லௌகீக சிந்தை என்னை மேற்கொள்ள என் ஆத்துமாவையே நான் இழந்துவிடுவேனே என்ற பயம். இதனுல் நான் சில வேளைகளில் நடுக்கமுறுகிறேன். கடவுள் எனக்கருளிய கிருபாகடாக்ஷம் ஏராளம். என்னுள்ளத்தில் உன்னத ஆசைகளை நாட்டியிருக்கிருர் ஆனுல் இவைகளைத் திருப்தி செய்யாவிட்டால் அவைகள் அழிந்து இல்லாமற்போய்விடுமோ? கடந்த காலத்தில்

என்னில் கண்ட தவறுதல்கள் பாவங்களையும் நான் நினைக்கும்போது நான் இப்பொழுது இருக்கிற இடத்திலேயே நெடுங்காலமிருந்து விட்டால் என் ஜீவனை இழந்துவிடுவேனே என்று ஐயமுறுகிறேன். தற்சமயம் என் வாழ்க்கை மிகவும் தனிப்பட்டது. சிலர் நினைக்கிறபடி தனிப்பட்ட வாழ்க்கையை நான் சுயமாகவே தெரிந்துகொண்டதாகவே இருக்கலாம். அப்படியே நீங்களும் நினைக்கலாம. நான் இப்பொழுது வாஞ்சித்து நாடுகிறது கிறிஸ்து பக்தர்களின் தோழமையே. பழைய நாட்களை நினைக்கிறேன். அருமை கிறிஸ்தவ பக்தர்கள், கூட்டாளிகள் நடுவில் அமர்ந்து அவர்களுடைய கூட்டுறவு இன்பத்தை அனுபவித்திருக்கிறேன். அப்படிப்பட்ட சமயங்கள் ஆனந்தமாகவும் ஆசீர்வாதமாகவும் எனக்கிருந்திருக்கின்றன. இலங்கைக்கு வந்த பின் இப்பேர்ப்பட்ட கிறிஸ்தவ பக்தர் தோழமை எனக்குக் கிடைக்கவில்லை. இது என் குற்றமாயிருக்கலாம். என் மனதிற்கேற்ற நல்ல வாலிபர் இலங்கையிலும் இருப்பார்களென்று நிச்சயம். ஆனால் இன்னும் அவர்களைச் சந்திக்கவில்லை.

சம்மனசுபோன்ற என் மனதிற்கினிய தம்பி எபனேசரை அடிக்கடி நினைக்கிறேன். அவன் இவ்வுலகில் நம்முடன் செய்த சவகாசம் மிகச் சுருக்கமானதே அவன் கடைசி வார்த்தைகள் என் ஞாபகத்திற்கு வருகின்றன. (அம்மா நான் சிறுவனாயிருக்கும்போதே ஆண்டவரிடத்திற்குப் போய்விடுவது நல்லதா? அல்லது நான் பெரியவனாகிக் கெட்டுப் போவதா? எது நல்லது?)

எஸ். எல். பவுல்பிள்ளை அவர்கள்,
நெ. 11 பீட்டர்ஸ் ரோட்,
ராயப்பேட்டை, மதராஸ்.

உங்கள் அன்புள்ள,
தம்பி
ஏசுதாசன்.

பின்வரும் கடிதம் என்னுடைய அண்ணன் மகனுக்கு
எழுதியதின் ஒரு பாகம்.

துறவி நிலயம்,
மஹாரா,
ராகம்மா,
இலங்கை,
15—6—1913.

இந்த இடத்தில் தனிப்பட்ட உணர்ச்சி எனக்கு அதிகமாய் வருகிறது. சிறிது காலத்திற்கு நீ இங்கு வந்து என்கூடத் தங்கக்கூடுமானால் எனக்கு மிகுந்த சந்தோஷமாயிருக்கும். அருமை எபனேசரை அடிக்கடி நினைக்கிறேன். இந்த பூமியில் இப்போது அவன் என் தோழனாக என்கூட இருக்கவில்லையே, என்று வருந்துகிறேன். இப்படி நான் விரும்புவது சரியாகுமோ? அவனை நாம் இழக்கவேயில்லை.

அவனை நாம் ஆதாயப்படுத்திக் கொண்டோம் என்று சொல்ல வேண்டும். அவன் இப்போது இயேசுவின் கரங்களின் பாது காப்பில் நித்தியகாலமாக பத்திரமாய் இருக்கிறானல்லா? , அவன் ஞாபகார்த்தம் ஆசீர்வதிக்கப்பட்டது. அடிக்கடி சோதனைகளாலும், பாவத்தாலும் நான் தியங்கும் வேளைகளில் மெல்லிய குரலோடும் அன்போடும் என்னைக் கண்டிக்கும் அவன் கடைசிவசனங்கள் என் உள்ளத்தில் தொனித்து ஆழ்ந்து பதிகின்றன. "அம்மா நான் சிறுவனா யிருந்து ஆண்டவரிடத்தில் போவது நான் பெரியவனாகிக் கெட்டுப் போவதைப்பார்க்கிலும் அதிக நல்லதல்லவா?" சில சமயங்களில் மனந்திரும்பி துயரப்படும் என் மனம் சொல்வதாவது; "தவறுதல் களிலும், பாவத்திலும் ஈடுபட்ட நீண்ட வாழ்க்கையைப் பார்க்கிலும் உடனே இயேசுவின் சமுகத்திற்கு அருகே மாற்றப்பட்டுச் சென்று விடுவதே மிகவும் நலம்" என்றேன். ஆனால் ஐயோ அப்படி அங்க லாய்ப்பது சரியாகுமோ? இயேசுவின் தரிசனத்தைத் தெளிவாகக் காணாமல் இருப்பதுவும் விசுவாசக்குறைவும்தான் இந்த என் அங்க லாய்ப்புக்குக் காரணம். நமது இரட்சிப்பின் அதிபதியை நாம் மறந்து விடுவதினால்தான் நமது வாழ்க்கையின் போராட்டங்களை எதிர்த்து நிற்க அஞ்சுகிறோம். (ரோமர். 8: 37.) ஆயினும் இவைகளெல்லாவற்றி லேயும், நாம் நம்மில் அன்பு கூறுகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளு கிறவர்களாகவேயிருக்கிறோம்.

" ஜீவிக்க எனக்குப் போதித்தருள்வாய். மரிப்பது இலகு, களைத்த கண்களை மூடி பூமியின் நீண்ட இரவிலே அயர்ந்து, மெல்லிய காற்றுப் போல் மறைந்து, மகிமையாக விடியும்போது திரும்பி உயிரோடெழுந்து விடுவது இலகுவான காரியமே. ஆனால் பூமியில் ஜீவிப்பதே, வாழ்க்கை யின் இருண்ட பாதைகளில் உம்மைச் சேவிப்பதே மிகுந்த கடினமான காரியம். இந்த வாழ்க்கையில் நான் இருந்து ஜீவிக்க எனக்குக் கற்றுக் கொடுத்துதவு, தெய்வமே! இப்பொழுதே போருக்கு எனக்கு ஆயுதம் தரித்திடு, புனிதமான பலம் தா. போரில் என்னை முற்றிலும் ஜெயங் கொள்ள செய்தருள்வாய்."

இக்காலம் நான் காத்திருக்குங் காலம். இப்பொழுது நான் உண்மையாய் இருப்பேனாக. இந்தியாவுக்குத் திரும்பி கடவுள் அங்கு நான் செய்யவேண்டுமென்று சித்தம் கொண்டிருக்கும் வேலையைச் செய்ய வாஞ்சித்துத் தவிக்கிறேன். ஆனால் அடிக்கடி நாம் மிதமிஞ்சி அவசரப்படுகிறோம் இல்லையா? காத்திருக்க நமக்குப் பிரியமில்லை. அவருக்குக் காத்திருக்கும் இக்காலத்தில் ஆண்டவன் உன்னையும், என்னையும் அளவற்ற தம் அன்பினால் கடாக்ஷித்து, பாதுகாத்தருள்வா

ராக. என் அருமைப்பிள்ளேயே, அனுதினமும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சிறிய வேலையை நாம் செய்து, வரும் சோதனைகளையும் மேற்கொள்வோமாக.

உன் அன்புள்ள,
சின்னையா,
ஏசுதாசன்.

1911 வருஷத்துக்கும் 1912 வருஷத்துக்கும் இடையில் நான் பல ஐரோப்பிய நண்பர்களுக்குப் பின்வருமாறு கடிதங்கள் எழுதினேன். இவ்வுலகத்திலே பாஷை, ஜாதி, வர்ணம் முதலியவற்றால் மனிதரை தாழ்ந்தோராகவும் சிலரை உயர்ந்தோராகவும் பிரிக்கும் குறுகிய எண்ணங்கள் போய், நாம் யாவரும் ஒரே இனத்தில் சேர்ந்தவர்களென்றும், அந்த இனத்தார் நமது ஆண்டவர் தம்மைப்பற்றி குறிப்பிட்டு அழைத்த "மனுஷகுமாரன்" என்ற பெயருக்கிசைய ஒரு சகோதர ஐக்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களென்றும் எண்ணம் உண்டாக ஒரு உலக சகோதர ஐக்கிய கூட்டம் ஸ்தாபனமாக வேண்டுமென்று என் எண்ணத்தைத் தெரிவித்தேன். பெல்ஜியம் தேசத்திலே அப்போது வசித்திருந்த என் போர்த்துக்கீஸ் நண்பன் அலோய்ஸ் குட்டேரீஸ் என்பவருக்கு நான் ஆங்கிலத்தில் கடிதம் எழுதி, அதை கொளும்பில் இருந்த ஒரு சிநேகிதரான கத்தோலிக் பாதிரி மூலமாய் லத்தீன் பாஷையில் திருப்பி அனுப்பினேன். அலோய்ஸ் லத்தீன் கடிதங்களை இப் பாதிரியார் எனக்கு ஆங்கிலத்திலும் மாற்றி எழுதித் தருவார். அலோய்ஸ் தானும் தன் உடன் கத்தோலிக் வேத சாஸ்திர பாடசாலை நண்பர்களும் இவ்வித என் எண்ணத்தை அதிக சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு என் ஜீவியத்தின் எண்ணங்களில் நான் உண்மையான கத்தோலிக்காக இருப்பதாக எண்ணுவதாகவும் எழுதினர். ஆனல் கத்தோலிக் சபையைச்சேராத என்னுடன் அவர்கள் மனமும் அன்பும் இவ்வாறு நெருங்கி ஐக்கியப்பட்டிருக்கையில், திருச்சபை விசுவாசக்காரியங்களில் அவர்களோடு நான் ஒன்றுபட்டிராதிருப்பதைக் குறித்து அவர்கள் விசனிப்பதாக எழுதினர். நான் எடின்பரோவில் படித்தபோது அதிக சிநேகமாயிருந்த என் ஜெர்மன் நண்பர்கள் ஹாய்பெல்டருக்கும், அடால்ப் ஒய்ஸ்ஸிக்கும் எழுதினேன். அச்சமயத்தில் அடால்பு முயூனிச் நகரில் பாஷா சாஸ்திரம் படித்துக்கொண்டும், ஹாய்பெல்டர் வைத்திய சாஸ்திரம் படித்துக்கொண்டுமிருந்தார்கள். ஹாய்பெல்டர் வீடு ஆக்ஸ்பர்க்கில் இருந்தது. கொழும்பு ஜெனரல் ஆஸ்பத்திரியில் என்னுடன் வேலை செய்துவந்த ஒரு பார்ஸீ நண்பர் டாக்டர் சூர்த்தியினிடமும் என் எண்ணங்களைக் கலந்துகொண்டேன் இத்துடன் ஸ்காட்டிலாண்டு சிநேகிதர் வில்லியம் வெஸ்ட்வாட்டர் மக்கிரேவிக்கும் எழுதினேன். அவர்களில் சிலர் அனுப்பிய பதில்களின் சாராம்சத்தைப் பின்னல் எழுதுகிறேன்.

(i) ஆக்ஸ்பர்க்கில் வைத்தியக் கலாசாலேயில் மாணவராயிருந்த ஜெர்மன் நண்பன் ஹான்ஸ் ஹாய்பெல்டர் எழுதிய பதிலில் (மார்ச்சு 22, 1912) அச்சமயத்தில் ஜெர்மனியில், பெலனும், சுகமுமுள்ள தன் தேசத்தின் ஒவ்வொரு வாலிபனும் தாய் நாட்டிற்காக கட்டாயமாய் பட்டாளத்தில் அல்லது கடல் படையில் சேர்ந்து பயிற்சி பெறவேண்டு மென்ற சட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டு, பின்வருமாறு எழுதினர். காரியம் இம்மாதிரியாயிருப்பதால் யுத்தம் ஆரம்பமாகிவிட்டால், என் சிநேகிதர்களுக்கு விரோதமாகவே சண்டைபோட நேரிடும். அதைத் தடுப்பது முடியாது.

இந்த அகில உலக ஐக்கிய சகோதர கூட்டத்தைப்பற்றிய என் எண்ணத்தை மதிக்கமாட்டார்கள். இது மிக விசனமான காரியம். ஆனல் தற்கால நிலைமையை மாற்றி உலக சரித்திரம் இன்னெரு திசை யில் போகச்செய்வது அசாத்தியம். நீ என் அபிப்பிராயத்தை முற்றி லும் விளங்கிக்கொள்வாயென்று நம்புகிறேன். அகில உலக சகோதர ஐக்கியம் உண்டாகவேண்டுமென்ற உன் எண்ணம் மிகச் சிறந்ததே. நானும் அதில் மகிழ்ச்சி கொள்ளுகிறேன். இவ்வெண்ணம் புதிதல்ல. பலமுறை இதைக் கைகூடிவரச் செய்ய பிரயத்தினங்கள் செய்யப் பட்டன. நம கிறிஸ்தவ மார்க்கமே இதைத் தழுவி இருப்பினும், அன்புதான் கடைசியில் பிரதானம் என்று எல்லாரும் நடித்தாலும், பல வித்தியாசமான கொள்கைகளினல் வகுக்கப்பட்டிருக்கும் நம் மதத் தினரிடத்தில் எவ்வளவு அன்பில்லாமையை நாம் காண்கிறேம்! ஆகை யால் எவ்வளவோ பேர்களை இவ்விசமான ஸ்தாபனத்திற்குள் அங்கங் களாக நீங்கள் கொண்டுவந்தாலும் அவர்களுக்குள்ளே மனஸ்தாபங் களை போக்கமுடியாததாகையால் இவ்வித ஐக்கியத்தில் பிரயோஜன மில்லை. காலம் இன்னும் நிறைவேறி வரவில்லை இது பூரணப்பட இன்னும் பல வருஷங்கள் சென்று ஒருவேளை நமக்குப் பின்னலும் வரக்கூடுமென்று காத்திருக்கவேண்டும். ஆனல் நம்மால் இயன்ற மட்டும் நமக்குள் பொதுவாக அன்பும் பாந்தமும் உண்டாக பிரயத் தினஞ் செய்வதை விடக்கூடாது. நான் எழுதினது தெளிவாயிருக்கு மென்று நம்புகிறேன். இதைத் தெளிவாக்க போதுமான ஆங்கிலம் எனக்குத் தெரியவில்லை, பல மாதங்களாக படியாமல் விட்டுவிட நேரிட்டது, என்று எழுதினர்.

(ii) ஸ்காட்லண்டு தேசத்து நண்பர் வில்லியம் வெஸ்ட் வாட்டர் மாக்ரே எனக்கு 31—1—1912ம் தேதியில் எடின்பரோவிலிருந்து எழுதிய பதில் கடிதத்தின் சாராம்சமாவது :—

நீங்கள் எனக்கு எழுதிய அபிப்பிராயங்கள் கிறிஸ்துவின் சீஷனு கிய ஒவ்வொருவனுக்கும் இவை பிரமாணமாக இருக்கவேண்டும். நாம் எல்லாரும் அவரில் ஒன்ருக இருப்பதால் நாம் கிறிஸ்துவோடு ஐக்கியப் படாத மற்றவர்களுக்கு அவர் அன்பைத் தெரிவிக்க வேண்டும். கிறிஸ்துவினுடையவர்கள் தினந்தோறும் அவர் போதனையை உட்

கொள்ளுவதால் ஆண்டவர் அவர்களிடம் எதை விரும்புகிருரென்று அறியாதிருக்கமாட்டார்கள். கிறிஸ்துவையும் சத்தியத்தையும் சரியாய் அறிந்த ஒவ்வொருவனும், மற்ற ஒருவனை, எத்தேசத்தானுயினும் அவனை தன் சகோதரன் என்று பாராட்டாமலிருக்கமுடியாது." என்று எழுதினர்.

(iii) நான் எழுதிய கடிதத்திற்கு டாக்டர் சூர்த்தி 1914ம் வருஷம் அனுப்பிய பதிலில் அக்காலத்தில் ஐரோப்பாவில் நடந்து கொண்டிருந்த யுத்தத்தையும் குறிப்பிட்டு எழுதியது:—

"உலக கிறிஸ்தவ ஐக்கியகூட்டம் உண்டாகவேண்டுமென்று உங்கள் மனதில் புலப்பட்ட வேதாந்தம் இதற்குள் தூள் தூளாகப் போயிருக்குமென்றும், அதன் பயனில்லாமையையும் இதற்குள் உணர்ந்திருப்பீர்களென்றும் நம்புகிறேன். மனித சுபாவம் மனித சுபாவமே. பேராசையும், இச்சையும், வீண்பெருமையும், நிறைந்த மனிதனுக்குள்ளே தெய்வீக ஆவியை எதிர்பார்ப்பது சாத்தியமல்ல. அழிவுள்ள இவ்வுலகத்தகத்தில் இவைகள் வந்துதான் தீரும். மேற் சொல்லிய மூன்று துர்க்குணங்களையுந் துறந்தவன் இவ்வுலகத்திற்குப் பின் பொருந்தியவனல்ல," என்று எழுதினர்.

டாக்டர் சூர்த்திக்கு நான் எழுதிய பதிலின் சாராம்சமாவது :— "அவரும் அவருடைய இராஜ்யமும் இத்துடன் ஒழிந்துபோயிற்று" என்று கிறிஸ்துவை கொலை செய்த புத்தியில்லாத யூதர்கள் எண்ணினர்கள். அவர் நாமத்தையும் அவர் "இராஜ்யத்தையும் இவ்வுலகத்தில் நாசமாக்கிவிடுவோம்" என்று அவர்கள் வீம்பு செய்தார்கள். ஆனல் அவரில் மரித்து இளைப்பாறுகிறவர்களின் ஆவிகளும், இப்பூலோகக் தில் இப்போது இருப்பவர்களில் இன்னும் இலட்சக்கணக்கான பக்தர் களும் கிறிஸ்துவின் அன்பால் இணைக்கப்பட்டு எவரும் பிரிக்கமுடியாத கட்டுகளால் அவரோடு கட்டப்பட்டிருக்கிருர்கள் இழிவான பேராசைகளும், இரத்தம் வாங்கும் பழிகளுடன் போராடும் சண்டையும் அவைகளைத் தொடமுடியாது. பூமியில் ஸ்தாபிக்கப்பட்டு இன்று விளங்கும் கிறிஸ்துவின் இராச்சியம் பலருக்குள்ளும் கிரியை செய்யும். அதை அசைக்கமுடியாது. உலகத்தை அடக்க முயன்ற பிரஞ்சு தேசச் சக்கிரவர்த்தி நெப்போலியன் போனபார்ட்டு, ஸெண்ட் ஹெலினை என்ற தீவில் தனிமையாய் அடைபட்டிருக்கும் அவ்வமைதியான காலத்தில் அவன் ஆழ்ந்து யோசித்து — "கிறிஸ்துதான் பேசுகிருர், உடனே அநேக ஜாதி ஜனங்கள் உலக இரத்த சம்பந்தத்தைப் பார்க் கிலும் கிறிஸ்துவின் அன்பின் மூலமாய் அதிகபலமாக நெருங்கிக் கட்டப்படுகிருர்கள். சுய அன்பு போய் எல்லாவற்றையும் அந்த அன்பு வெல்லும். பிறர்பால் உள்ள அன்பின் சுவாலை அவர்களில் கொழுந்து விட்டு எரியும். கிறிஸ்துவின் பெரிய அற்புதம் இவ்வன்புதான்'

என்னுடைய பரிதாபமான நிலைமைக்கும், கிறிஸ்துவின் அழிவில்லாத ஆளுகைக்கும் எவ்வளவு பெரிய பிளப்பு? உலக முழுவதிலும் விரும்பப்பட்டும், உயர்வாகக் கருதப்பட்டும்வரும் இராஜ்யம் இதுதான். இது மரணமா? இது நித்திய ஜீவனுக்கென்று வாழுதல் அல்லவா?'' என்று நெப்போலியன் கூறினன். அன்பார்ந்த சூர்த்தி, கிறிஸ்துவை உங்களுக்கு முன் உயர்த்தி எல்லா மனித ஜாதிகளையும் தம் அன்பால் இணைக்கிறவர் அவரே என்று சொல்ல எனக்கு வெட்கமில்லை. இல்லை, நான் வெட்கப்படமாட்டேன். ஏனெனில் அவரே வருவார். நீங்களும், அவரைக் காண்பீர்கள். உங்களை அவரிடம் இழுக்கவும் அவர் அன்பை நீங்கள் ருசிக்கவும் எவ்வளவாய் வாஞ்சிக்கிறேன்! எக்காலத்திலும் உங்களில் அன்புகூறும்.........." என்று பதில் எழுதினேன்.

சூர்த்தியிடமிருந்து இந்த பதில் வந்த தினத்தன்று அந்த நாள் காலையில் நான் வாசிக்கவேண்டிய வேதாகமம் பரி பவுல், பிலிப்பியருக்கு எழுதின நிருபம் முதல் அதிகாரம். என் சாதாரண வழக்கம் போல் நான் எனக்கு விசேஷித்த போதகவசனமாக தெரிந்துகொண்ட வசனம், 'நான் ஒன்றிலும் வெட்கப்படமாட்டேன்' என்பதாகவும் இருந்தது. இம்மட்டும், சகோதர சங்கமேற்படுத்தும் இவ்வித என் நோக்கத்தைக் குறித்து, எனக்கு தைரியவார்த்தை சொல்லுவார் ஒருவருமே இல்லாதது போலதான் தோன்றிற்று இப்படி இருக்கும் போது அக்காலையில் ஆண்டவர் எனக்குக் காண்பித்த வசனம் ஆச்சரியவிதமான உற்சாகத்தைக் கொடுத்தது. கிறிஸ்துவின் மார்க்கமும் யுத்தமும் ஒன்றுக்கொன்று எதிரிடையான காரியங்களானபடியால் எந்த சந்தர்ப்பத்திலும் ஒரு கிறிஸ்தவன் மற்றவனைக் கொல்ல ஆயுதம் தரிப்பது ஆகாத காரியம் என்பது எனக்குத் தெளிவாயிற்று. அதே சமயத்தில் நான் சும்மாவாகவே உட்கார்ந்து கொண்டு கனவுகளையும் வெறும் தரிசனங்களையும் மாத்திரம் கண்டுகொண்டிருப்பதில் பிரயோஜனமில்லையென்றும் உணர்ந்தேன். எழுந்து வேலைசெய்கிறவனைகவும் எனக்குப் புலப்பட்ட தரிசனங்களை சாதனைக்குக் கொண்டு வருகிறவனைகவும் இருக்கவேண்டும். உள்ளே தூண்டுதல் பலமாக இருந்தாலும் சரியான வழி இதுதான் என்று தெளிவாகத் தெரியாதிருந்ததால் சரேலென்று பாயவும் பயமாயிருந்தது. இப்பேர்ப்பட்ட உன்னத காரியங்களில் உண்மையாகவே கடவுள் சித்தத்திற்காகக் காத்திருந்து, அவர் கட்டளையின்படி கீழ்ப்படிய வாஞ்சையாக இருக்கிற என்னை, ஆண்டவர் தவறுமல் வழிநடத்துவாரென்பது திண்ணம்.

1914 ஆகஸ்ற்று மாதம் 4ம் தேதி செவ்வாய்க்கிழமை ஆங்கிலேய நாடு ஜெர்மனிய தேசத்தின்மீது யுத்தம் ஆரம்பித்தது. அதற்கு முந்தின ஞாயிறு கொளும்பிலே பட்டாள ஆங்கில பாதிரி ஒருவர் யுத்தத்தைப்பற்றி பிரசங்கம் செய்தார். அடுத்தநாள் புத்தமதத்தைச் சேர்ந்த ஒரு சிநேகிதர் என்னைக் கண்டபோது " டாக்டர் அவர்களே,

நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? ஞாயிற்றுக்கிழமை போதகர் பிரசங்கம் செய்தது கிறிஸ்தவ மதமல்ல, இஸ்லாம் மதமே!'' என்று சொன்னார். போதகர் ஏ. எல். கீத் செய்த பிரசங்கத்தை ஆகஸ்டு மாதம் 3ம் தேதி இலங்கை பத்திரிகைகளில் பின் வருமாறு கண்டோம், அவர் பிரசங்கத்தின் சாராம்ஸமாவது: "பட்டாளத்தில் உத்தியோகஞ் செய்வதைக் குறித்து நமது ஆண்டவர் முற்றிலும் பரிசுத்தமானதாகக் கருதினார் என்று நமக்குத் தெளிவாயிருக்கின்றது. ஒரு நூற்றுக்கதிபதியின் பெரிய விசுவாசம்தான் மனுஷகுமாரனைப் பிரமிக்கச்செய்தது. இப்பேர்ப்பட்ட விசுவாசத்தை நான் கண்டதில்லை, இல்லை, இஸ்ரவேலிலும் கண்டதில்லை என்று சொல்ல அவரைத் தூண்டியது. தற்காலத்திலே ஜனங்கள் ஒரு பூரண கிறிஸ்தவனுடைய நற்குணங்களையும் பட்டாளத்தின் தன்மையோடுதான் ஒப்பிட்டு வர்ணிக்கிறார்கள். உலக விஷயத்திலும் தேசிய விஷயத்திலும் ஒரு போர்ச் சேவகன் எப்படியிருக்கிறானோ, அவ்விதமாகவே ஒரு பக்தன் ஆத்மீகக் காரியங்களிலும் மேலோகக் காரியங்களிலும் விளங்கவேண்டும். ஆகையால் யுத்தமும் அதன் காரியங்களும் நம் இயற்கை சுயாதீனத்தை தழுவியிருக்கின்றன. மனுஷ ஜீவியம் என்பதிருக்கும்போது யுத்தமில்லாதிருக்கமுடியாது. அது எப்போதோ சமயாசமயங்களில் பல காரணங்களால் உண்டாகும். அவசிய சம்பவம் மாத்திரமென்று எண்ணாமல் யுத்தம் ஒரு பெரிய சிலாக்கியமென்றும் கருதவேண்டும்.

தேசந்தான் பெரிது தனிப்பட்டவன் ஒன்றுமில்லை. —தேச விஷயமாக யுத்தம் செய்யும் ஒவ்வொருவனும் தன்னை அறியாமலேயே விடுதலைபெற்று, பரிசுத்த தியாக ஜீவியத்தின் மேன்மைகளையும் அடைகிறான்—லார்டு உவெஸ்லி என்பவர் தனது கீழ் பட்டாளத்தில் வேலை செய்த ஒரு தலைவனோடு ஒருநாள் பேசிக்கொண்டிருக்கையில், கடவுள் சிருஷ்டித்த பூமியின் மேலுள்ள எந்தப் பாகத்தைக் காட்டிலும், யுத்தக்களத்தில்தான் பிரத்தியக்ஷமாக பரிசுத்த தெய்வ பக்தி விளங்குகிறதென்றும், அங்கு வீரமாக மரித்த ஒவ்வொரு சேவகனுடைய ஆத்துமாவும் வீரச்செயலினால் பாவத்திலிருந்து, மீட்படைந்து, உத்தரிக்க ஸ்தலம் செல்லாமல், பரிசுத்தவான்களும் இரத்த சாட்சிகளும் இளைப்பாறும் மோட்ச லோகத்தை நேரே சேர்ந்துவிடுமென்றும், தன்னிடம் சொன்னதாக அப்பட்டாளத்து தலைவர் கூறுகிறார். யுத்தம் உண்டானாலும், உண்டாகாமல் போனாலும் நம் கண்களைத் திறந்து தியாகஞ் செய்யவும், உலகயுத்தம் மட்டுமல்ல, நம் ஆத்மீக யுத்தத்தையும் செய்ய தூண்டும் இந்த யுந்தப் பேச்சுகளே போதுமானது. நல்ல மரணமே நல்ல ஜீவன். உன் தேசத்திற்காக உன் பிராணனை தந்தஞ் செய்ய நேரிடுவது சிலுவையின் அடியில் உன் ஜீவனைப் படைக்க கடவுளின் அழைப்பாகும். அவர் மகிமையோடு உயிர்த்தெழுந்தது, தன் ஜீவனை சிலுவையில் முதலில் இழந்ததால்தான்" :—என்பதே.

இப்போதகர் கிறிஸ்துநாதரின் மலைப்பிரசங்கத்தை அடியோடு மறந்துவிட்டுவிட்டாற்போல் தோன்றுகிறது. "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், மறுபடியும் சொல்லுகிறேன். தீமையை எதிர்த்து நிற்கவேண்டாம். ஒரு கன்னத்தில் உன்னை அறைகிறவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு" என்று நம்முடைய ஆண்டவர் சொன்னார். தனிப்பட்டு ஒவ்வொருவனும் அநுசரிக்கச் சொல்லப்பட்ட இப்போதகம் பொதுவாக பெரிய தொகையினர் கூட்டுறவாகவும் அநுசரிக்கச் சொல்லப்பட்டதென்பதை மறந்துவிட்டார். ஒரு காரியம் தனியே ஒருவன் செய்தால் பாவமாகுமென்றால், மற்றவர்களோடு கூட்டுறவாக அவன் அதைச் செய்தாலும் பாவமாகவேயிருக்காதோ? தன்னைப் பாதுகாக்கத் தீய கிரியை செய்யக்கூடாதென்றால், தன் ஜனத்தைப் பாதுகாக்கத் தீமை செய்வது சரியாகிவிடுமோ? தனிப்பட்ட கிறிஸ்தவனுக்கு தீமைக்குத் தீமை செய்வது தப்பென்று தெரியும்போது, ஒரு பெரிய கும்பலோடு அதே குற்றத்தை செய்வது சரியாகிவிடுமோ? ஒருவன் தனிப்பட்டுச் செய்யும் தீமை எப்படி பாவமோ, அப்படியே ஒரு தேசம் முழுவதும் சேர்ந்து செய்யும் தீமையும் பாவமாகும். கிறிஸ்துவின் ஆதிச்சீஷர்கள் தாங்கள் தனித்தனியே சத்துருக்களால் தாக்கப்பட்ட சமயங்களில் மாத்திரமல்ல, தங்கள் உடன் சீஷரைக் கூட்டமாக சத்துருக்கள் தாக்கிக் கொன்ற விரோதிகள் மத்தியிலும் ஆண்டவரின் அஹிம்சா கொள்கையை கைக்கொண்டார்கள். கிறிஸ்து இவ்வுலகத்திலே தம் இராஜ்யத்தை ஸ்தாபிக்கவந்தார். ஒரு சிறு ஐக்கிய கூட்டத்திற்குள்ளே ஒருவரோடொருவர் சம்பந்தங்களில் மாத்திரமல்ல, பெரிய கூட்டத்தினரோடும் அன்பும் ஒற்றுமையுமுண்டாக அதை ஸ்தாபித்தார். அந்த நூற்றுக்கதிபதியின் விசுவாசத்தை மெச்சிப்பேசியதால், பட்டாள உத்தியோகம் சரியென்று நம் ஆண்டவர் சொன்னாரென்று தர்க்கிப்பது மிகத் தவறாகும். இதைப்போலவே (சொல்லுவதற்கும் மிகவும் கூசுகிறதினால் நடுக்கத்தோடு சொல்லவேண்டும்) "இவள் மிகவும் அன்பு கூர்ந்தாளே" என்று கிறிஸ்து தன் பாதங்களை முத்தஞ்செய்த ஒரு விபசாரப் பெண்ணைப் பற்றிப் புகழ்ந்து பேசினதினால் விபசாரம் சரியென்று அவர் கூறினார் என்று சொல்வதுபோலாகும்.

கிறிஸ்துவைக் காப்பாற்றும்படி பேதுரு ஒருவனைப் பட்டயத்தால் தாக்க "உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையில் போடு; பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்துபோவார்கள்" என்று பேதுருவை இயேசுநாதர் எச்சரித்ததை இந்த போதகர் மறந்துவிட்டார்போலும். சத்துருக்களுக்காக ஜெபித்து அன்பினால் உயிர்விட்ட ஆண்டவனின் சிலுவை மரணத்தை இன்னொருவனைக் கொல்ல முயல்கையில் சாகும் சிப்பாயின் மரணத்திற்கு ஒப்பிடுவது தெய்வ தூஷணமாக எனக்குத் தோன்றுகிறது.

நான் ராகம்மா என்ற ஊரில் தனித்த பங்களாவில் வசிக்கும் நாட்களில், சமீபத்தில் ஒரு இடத்தில் யுத்தத்தினிமித்தம் கைது செய்யப்பட்ட ஜெர்மன் ஆட்களை வைத்திருந்தார்கள். இவர்களுக்காக ஒரு டாக்டர் வைத்திருந்தார்கள். இவர் என்னுடன் சென்னையிலும் பின்பு எடின்பரோவிலும் படித்த என் நண்பர். இலங்கையிலே வீட்டிற்கு வரும் விருந்தாளிகளுக்கு "உஸ்கி" என்ற ஆங்கில மதுவுடன் சோடா கலந்து கொடுத்து உபசரிப்பது வழக்கம். நமது நாட்டில் தாம்பூலம் வழங்குவதுபோல் இது இலங்கை சிங்கள ஜனங்களுக்குள் சர்வசாதாரணம். என் நண்பர்களாகிய சிங்களவர்கள் வீட்டிற்குப் போகும்போது அவர்கள் எனக்கு உபசாரமாக இந்த மது கலந்த சோடா சாப்பிடச்சொல்லுவார்கள். நான் ஒரே பிடியாய் வேண்டாமென்று மறுத்துவிடுவேன். பின்பு சுருட்டு பிடிக்க மிக உபசாரம் செய்வார்கள். இதுவும் வேண்டாமென்று விடுவேன். அவர்கள் ஆச்சரியப்பட்டு "இது என்ன, டாக்டர், உஸ்கி சாப்பிடாமலும், சுருட்டு கூடப் பிடியாமலும் இருக்கும் நீர் ஓர் விநோதமான டாக்டர்தான்!" என்று பரியாசம் செய்வார்கள். மேற்கூறிய என் நண்பர் வழக்கமாய் மதுவஸ்து பருகுகிறவரல்ல. ஆனால் சிங்கள சிநேகிதர் "உஸ்கி சோடா" கொடுக்கும்போது மாட்டேனென்று மறுக்க 'அவருக்குத் தைரியம் கிடையாது. நான் அவருடன் இதைக் குறித்துப் பேசி, அவர் உறுதியும் தைரியமும் காட்டி மதுவஸ்துக்களைத் தொடாதபடி விலகிக்கொள்ளவேண்டுமென்று புத்தி சொல்லுவேன். ஒருநாள் சாயந்திரம் அவர் என்னைப் பார்க்கவந்தபோது அவரிடத்தில் உஸ்கி வீச்சம் அடித்தது. விசாரித்தபோது ஒரு நண்பர் வீட்டில் கொடுத்ததை கொஞ்சம் சாப்பிட்டதாக ஒத்துக்கொண்டார். எனக்கு மிக விசனமாயிருந்ததால், ஆயாச மனதுடன் ஒரு நாற்காலியிலே அப்படியே சாய்ந்து வருத்தத்துடன் கண்ணை மூடிவிட்டேன். அவருக்கு மனம் மிகவும் இளகி, என்னைப்பார்த்து "இந்த உலகத்தில் என்னை உண்மையாய் சிநேகிக்கிற ஒருவர் இருக்கிறார் என்பது எனக்கு உற்சாகம் கொடுக்கிறது, இனி ஒருக்காலும் மதுவஸ்துவைத் தொடவேமாட்டேன் என்று உமக்கு வாக்களிக்கிறேன்" என்றார். அன்பு எவ்விதமாக ஆட்களை வசப்படுத்தி மேற்கொள்ளுகிறதென்பதைப் குறித்து முன்னமே உதாரணம் கூறியிருக்கிறேன். இதுவும் அதற்கு அத்தாட்சியே.

இந்த டாக்டர் அங்கு கவனிக்கவேண்டியதாயிருந்த ஜெர்மன் வெள்ளை மனிதர் சிறைவாசிகளாயிருக்கும் இந்தச்சமயத்தில்கூட, இவர் கறுப்பு நிறத்தை இகழ்ந்து, பல தொந்தரவு கொடுத்தார்கள். சிங்களவ வேலையாட்கள் அவர்கள் அறைகளைப் பெருக்கப்போனபோது, அவர்களையும் வைது இகழ்வார்களாம். மேல் பூச்சான தோல் மட்டுமுள்ள இந்த நிறத்தைப்பற்றிய பைத்தியம் உலகத்தை எவ்வளவாய்க் கெடுக்கிறது' உள்ளேயிருக்கிற ஆளைக் கவனிக்காமல் மேல் பூச்சைப் பாராட்டுபவர்கள் மனம் எத்துணை அற்ப இழிவான

நிலையிலிருக்கிறது' கடவுளின் சமுகத்தில் நித்திய ஜீவனுள்ளதும், மேன்மையானதும், அழியாததுமான மனிதனின் உள்ளான ஆள் தத்துவத்தையே பிரதானமாக மதிக்கும் அறிவுடையும்படி ஆண்டவர் மூடர்களாகிய மக்களின் கண்களைத் திறப்பாராக.

' இங்கிலாந்து சென்று உயர் பரீக்ஷைக்குப் படிக்க, இலங்கை சர்க்கார் முதல் எனக்கு ரஜா கொடுத்திருந்தார்கள். ஆனால் யுத்தம் ஆரம்பித்தவுடன் சர்க்கார் உத்தியோகஸ்தர் ஒருவருக்கும் ரஜா கிடையாதென்று விளம்பரம் செய்துவிட்டார்கள். லண்டனில் ஒரு வேலை காலியாயிருந்தது. கடிதமெழுதி இதற்கு விண்ணப்பம் செய்தேன், கிடைத்தது. எல்லாக்காரியங்களும் நான் இங்கிலாந்துக்குப் போகக் கைகூடி வந்தது. ஆண்டவர் நடத்துதல் பலவிதம். ஆனால் காலம் வந்தவுடன் வெகு தெளிவாக தமது வெளிச்சம் வீசுகிறார். ஜெபத்துடன் யோசித்தேன். இலங்கையில் நான் பார்த்துவந்த சர்க்கார் வேலையை உடனே இராசிநாமா செய்து விடவேண்டுமென்று தெளிவாகத் தோன்றியது. முழங்காலிலிருந்து ஜெபித்துவிட்டு நேரே தபாலாபீஸ் சென்று வைத்திய இலாகா மேல் அதிகாரிக்கு என் இராசிநாமாவை உடனே எழுதி அனுப்பிவிட்டேன். என் தங்கை பூவாயி அம்மாளுக்கு அதன்பின் தான் என் தீர்மானத்தை அறிவித்தேன். அவளுக்கு மிக விசனம். கண்ணீர் வந்துவிட்டது: ஒருவனுடைய ஜீவியத்தில் ஒரு வேளை வரும், அப்போது அவன் கடவுளோடு தனித்திருந்து தன் ஜீவியதீர்மானம் செய்யவேண்டியதிருக்கும். மிகவும் நெருங்கிய அன்பர்கள்கூட அவனுடன் அப்போதிருக்க முடியாது.

என் ஜீவியத்தில் ஆண்டவனின் பிரசன்னத்தில் மனங்கொண்டு தனித்து அமர்ந்து காத்திருந்த வேளைகளில்தான் பெரிய தீர்மானங்களும் செய்ய முடிந்திருக்கின்றன. அமைதியும் தனிப்பட்ட உணர்ச்சியும் நேர்ந்த இவ்வேளைகளுக்காக நான் ஆண்டவனைப் போற்றுவேன், இச்சமயங்களில் என் மனதில் ஏற்பட்ட தீர்மானங்கள் திடசித்தமுள்ளவைகளும் சற்றெனிலும் சந்தேகமில்லாத தெளிவுள்ளவைகளாகவும் இருந்திருக்கின்றன. கடவுளின் அடியாரின் அனுபவங்களும் இவ்வாறே என்று அறிவேன். சிறிது நாட்களுக்கு முன் பம்பாயில் மகாத்மா காந்திஜீ இவ்வாறே சாட்சி பகர்ந்தார். பல நாட்களாக மிகுந்த மனவேதனையிலும் அந்தகாரத்திலும் அவர் இருந்ததாகவும், ஆனால் அதன்பின் ஒருநாள் மூடுபனி விலகி வெளிச்சம் வந்ததாகவும், தமது அனுபவத்தை வெளியிட்டிருக்கிறார், அவர் சொல்வதாவது.— "இப்பொழுது உங்களுக்கு முன் நான் வெளியிடும் தீர்மானம் என் மூளையிலிருந்து வரவில்லை, என் இருதயத்தின் அந்தகரணத்தில் வசிக்கும் மூலாதிகாரணரின் இடத்திலிருந்தே இது வெளியானது. அவரே எனக்கு இதை அருளினார், அளவற்ற துயரத்தின் இறுதியில் இந்த தீர்மானம் பிறந்தது." சங்கீத மகாத்மா சொல்லுகிறபடி நீதிமானுக்காக வெளிச்சமும் இருதயத்தில் உத்தமனுக்காக சந்தோஷமும் விதைக்கப்படும்.

அத்தியாயம் 8

ஐரோப்பாவிற்கு இரண்டாவது பிரயாணம். லண்டன் சுவிசேஷ வைத்திய சங்கம்.

இலங்கை சர்க்காருக்கு நான் கொடுத்திருந்த ஒரு மாதத் தவணை முடிந்தது. நவம்பர் மீ 1914ல் ஓரியண்டு கம்பெனி ஆஸ்டர்வி என்ற பெயருள்ள கப்பலில் நான் கொழும்பிலிருந்து புறப்பட்டேன். நான் புறப்படுகிறதற்கு முன்னே ஜெர்மன் யுத்தக்கப்பல் "எம்டன்" இந்து மகாசமுத்திரத்தில் பல அமளிகள் செய்துகொண்டிருந்தது. ஆனால் கப்பல் பிரயாணிகளுக்குச் சேதமொன்றும் செய்யாமல், அவர்களை எம்டனின் மாலுமி தன் கப்பலில் ஏற்றி சாமர்த்தியமாகக் கரைக்கு அனுப்பிவிட்டு, ஆங்கிலக் கப்பல்களை மாத்திரம் சமுத்திரத்தில் ஆழ்ந்துபோகச் செய்தார். அக்கப்பல் தொழிலாளிகள் ஒருநாள் வேஷ மாறிக்கொண்டு கொழும்பு கரைக்கு வந்து சாமான்கள் வேண்டியவை களை வாங்கிப்போனதாக வதந்தியுமுண்டு. சென்னை பட்டணத்தையும் (மதராஸ்) இக்கப்பல் குண்டு வீசித் தாக்கியதுண்டு. நான் கப்பல் ஏறுவதற்கு சில நாட்களுக்கு முன் இந்தக்கப்பல் ஆங்கில யுத்தக் கப்பலால் தாக்கப்பட்டு பிடிக்கப்பட்டது.

நான் பிரயாணம்செய்த ஆஸ்டர்வி என்ற கப்பலில் அநேகமாய் ஆஸ்திரேலியர்களான வெள்ளை மனிதர்தான் ஏராளமாயிருந்தார்கள். அவர்கள் பொதுவாக என்னுடன் அதிக சகவாசம் வைத்துக் கொள்ளவில்லை. ஆனால் அவர்களுள் இங்கிலாந்திலிருந்து ஆஸ்திரேலியாபோய்த்திரும்பும் ஒரு ஆங்கில வாலிபனிருந்தான். இவன் உயர்ந்த வளர்ச்சியும் நல்ல தோற்றமும் உள்ள வாலிபன். பிளிமத்பிரதர் என்ற கிறிஸ்தவ சங்கத்தாரின் வகுப்பினரைச் சேர்ந்தவன். நல்ல பக்தன், அன்புள், சிநேகசுபாவ முள்ளவன். என்னுடன் பழகி அளவளாவிய நட்புகாட்டி வந்தான் ஆனால் மார்க்கவிஷயத்தில் மிகவும் ஒடுக்கமான கொள்கையைக் கையாடுவான். கப்பலில் ஞாயிறு காலை மாலை இங்கிலாந்து சபை முறைப்படி தெய்வாராதனை நடைபெறும். ஞாயிறு காலை நான் இந்த ஆராதனைக்குப் போகையில் அவனையும்கூட வர அழைத்தேன். தான் அந்த ஆராதனைக்கு வந்தால் உலகத்தோடு தானும் ஒத்து வாழ்வதாகக் காட்டுவது போலாகும் என்று சொல்லி என்னுடன் வர மறுத்துவிட்டான். ஆராதனை முடிந்து நான் கப்பலின் மேல் தட்டிற்கு வந்தபோது அவன் சீட்டு விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டேன். இப்படி ஞாயிறு காலை சீட்டு விளையாடுவதோ அல்லது ஒரு இங்கிலாந்து சபை முறைப்படி நடக்கும் தெய்வாராதனைக்குப் போவதோ எது ஆண்டவருக்கு அதிகப்பிரியமாயிருக்கும் என்று நான் அவனிடம் கேட்டேன். அவன் முகம் திகைத்தது. பிற்பகல் அவன் என்னைப் பார்த்து, "இந்தக் கப்பலில் கடவுளை நினைத்து கனம்பண்ணுகிற ஒரே காரியம் இந்த ஆராதனைதான், அதினால் மாலை

ஆராதனைக்கு நான் உன்கூட வருகிறேன்" என்று சொல்லி அப்படியே என்னுடன் வந்தான். சரீரப் பிரகாரமாக பலமும் பார தோற்றமான வடிவு பொருந்தியவனுயிருந்தும், தன்னைப்போன்ற மற்ற ஆங்கில வாலிபர் முன் தனக்கு கிறிஸ்துவின் மேலிருந்த பக்தியைக் காட்டி சாட்சி பகர சற்று அஞ்சும் கோழைத்தனம் அவனுக்கு இருந்தது. இதனுல் நாங்களிருவரும் அமைதியாக வேதம் வாசித்து கலந்து பேசி ஜெபிக்க கப்பல் மேல்தட்டில் தனித்து உட்கார்ந்திருக்கும் சமயத்தில் யாராவது அவன் வாலிப நண்பர் அப்பக்கம் வந்துவிட்டால், வேத புத்தகத்தை சற்று மறைக்க முயல்வான். இதைக்குறித்து அவனே துக்கித்து தன் கோழைத்தனத்திற்காக வருந்தி என்னிடம் பேசுவான். போர்டுசயித் துறைமுகத்தில் கப்பல் தங்கியிருக்கும் ஒரு இரவில் வெகு பிந்திய நேரத்தில் இன்னெரு வாலிபனோடு கரைக்குப்போனதை நான் பார்த்தேன். அந்தத் துறைமுகம் அந்தக்காலத்தில் மிகத் துன் மார்க்கமான இடம். துர்ஸ்திரீகள் நிறைந்த இந்த ஊருக்குள் போகிற வர்களை வழிமறித்துச் சோதித்து, நயமான வார்த்தைகள் சொல்லி, மோகக்கிளர்ச்சியுண்டுபண்ணும் காட்சிகளைக் காட்டி இழுக்கும் ஆட்கள் பாதைகளில் நின்றுகொண்டிருப்பார்கள். என் நண்பன் சந்தேகத் திற்கு இடமுள்ள தோழனோடு கரைக்குப்போவதைப் பார்த்த பின் எனக்கு அன்று இரவு வெகுநேரம் தூக்கம் வரவில்லை. கப்பலின் மேல் தட்டில் ஒரு சாய்மான நாற்காலியில் சாய்ந்து, விழிப்புடன் அவனுக்காக ஜெபித்து அங்கலாய்த்து, அவன் திரும்புமட்டும் காத் திருந்தேன். நடு இரவுக்குப் பின் அவன் திரும்பினுன். நான் மேல் தட்டிலிருப்பதை அவன் கவனிக்கவில்லை, சிறிது பின் அவன் தான் தூங்குவதற்குரிய உடை தரித்து சற்று வெப்பமாயிருந்ததால் மேல் தட்டு வந்து நான் நாற்காலியிலிருப்பதை கண்டுவிட்டான். உடனே மிக அன்போடு என்னை அரவணைத்து, "ஐயோ, என் அருமை சிநேகிதா, நீ ஏன் இன்னும் படுத்துறங்காமல் இங்கு இருக்கிறுய்?" என்று சொல்லி என் கையைப் பிடித்து என் அறைக்கு (காபின்)க் கூட்டிக் கொண்டு போய் படுக்கவைத்தான். நான் அப்போது அவனிடம் ஒன்றும் சொல்லவில்லை. மறுநாள் காலை அவன் சாப்பாட்டிற்கு வராத தைப் பார்த்து நான் அவன் அறைக்குப் போனேன், அவன் படுத் திருந்தான். அவன் பக்கத்தில் உட்கார்ந்து, அவன் கையைப்பிடித்து "பக்தரான உன் அருமைத் தகப்பனுர் நேற்று இரவு இங்கே உன்னுட னிருந்தால் அந்த சந்தேகத்திற்கிடமான தோழனோடு, இந்த துன் மார்க்க சோதனைகளுள்ள ஊருக்குள், அப்படிப் பிந்திய இரவு நேரத் தில் நீ போயிருப்பாயா?'' என்று கேட்டேன். அவன் என் கையை இறுகப் பிடித்துக்கொண்டு, "என் தகப்பனுர் இங்கு நேற்றிரவு இருந் திருந்தாரானுல் அவர் உடனே என் பின்னே புறப்பட்டு தொடர்ந்து வந்திருப்பார். ஆனுலும் நான் நேற்று இரவு ஒரு பாவத்திற்கும் இடம் கொடுக்கவில்லை என்று கடவுளை முன்னிட்டுச் சொல்லுகிறேன்" என்றுன்.

நான் லண்டன் சேர்ந்தபின் இந்த என் சிநேகிதனின் குடும்பத்தாரையும் பார்த்தேன். அவர்கள் ஆராதனைக்கும் போயிருந்தேன். அவர்கள் சங்கக் கொள்கையுள்ளவர்கள் மாத்திரம் நற்கருணைப் பொருட்கள் வைத்திருந்த மேசையைச் சுற்றி உட்கார்ந்துதொண்டார்கள். நான் அவர்கள் சங்கத்தானல்லாததால் சற்று பின்னே தனியே உட்கார்ந்திருந்தேன், "நீர் வெயில்தேச ஆளாதலால் நெருப்பண்டை சுகமாய் வீற்றிரும்" என்று என்னிடம் மரியாதையாய்ச் சொல்லி உபசரித்து என் நண்பன் என்னை சற்று பின்னே தனியே உட்காரச் செய்தான்!. "என் நண்பனை நினைக்கும்போதெல்லாம் ஒரு காரியம் பலமாய் என் ஞாபகத்திற்கு வருகிறது. எத்தனையோ தடவை மனிதர் தங்கள் இயற்கை சுபாவத்தில், தங்கள் ஒடுக்கமான மார்க்க அபிப்பிராயங்களைப் பார்க்கிலும் மிகவும் சிறந்தவர்களும் நல்லவர்களுமாயிருக்கிறார்கள். கடவுளின் அன்பும் அவரை அறிகிற மெய்யறிவும் மனிதரைப் பிரிக்கிறதாயல்ல, அவர்களை அன்பின் கட்டுகளினால் இணைத்து ஐக்கியப்படுத்துகிறதாயிருக்கவேண்டுமே!

மூன்று வாரம் கப்பல் பிரயாணம் செய்து கடல்மார்க்கமாக ஜிபிரால்டர் ஜலசந்திவழியாய் டில்பரி என்ற துறை முகம் சேர்தேன். வழியில் யுத்தத்தினால்வரும் யாதொரு விபத்தில்லாமல் டில்பரி சேர்ந்து அங்கிருந்து புகைவண்டியின் மூலமாய் லண்டன்சேர்ந்தது பெரியகாரியமே. லண்டன் மெடிக்கல்மிஷன் எண்டல் தெருவிலிருந்தது அந்த சங்கத்தின் தலைவர்களைச் சந்தித்து, வேலையை ஒப்புக்கொண்டு, இங்கு தங்கித் தொண்டுசெய்து வந்தேன். இத்தெரு லண்டன் மாநகரின் மத்திப இடத்தில் இருந்தாலும் ஏழைகள் பலர் இங்கு வசித்து வந்தார்கள். கட்டிடங்கள் பல மாடிகளுள்ளவை. பற்பலமேல்தளங்களுள்ள கட்டிடங்களில் சிறு சிறு அறைகளில் இந்த ஏழைத்தொழிலாளிகள், மற்றும் வயோதிபர் வசித்துவருவார்கள். பல படிகள் மூலமாய் இந்த அறைகளில் வசித்த ஏழை மக்களில் வியாதியஸ்தராயிருப்பவர்களை நான் போய்ப் பார்த்துத் திரும்பியபின் தினமும் அவர்களுக்கு அந்த மிஷன் மருந்துசாலையிலிருந்து மருந்துகள் அனுப்பப்படும். ஒரு அறையில் ஒரு குடும்ப முழுவதும் வசிக்கும். சில அறைகளில் சுத்தமில்லாததால் தெள்ளுப்பூச்சிகள் வருகிறவர்களை வரவேற்று உடலின்மேல் ஏறிவிடும்! நான் அவர்களோடு நன்று பழகிவிட்டேன். அவர்கள் எனக்கு மிகுந்த அன்புபாராட்டி வந்தார்கள். காய்கறி, பழச்சந்தையில் வேலை செய்த ஒரு மனுஷன் வாரந்தோறும் நல்ல காய்கறிகள் பழங்கள் பூக்கள் முதலியவற்றை எங்கள் மிஷன் வீட்டிற்கு அனுப்புவான். ஒரு வயோதிபன் தன் மரணத்திற்கு முன் முத்து கற்கள் பதிந்த தன் தங்கமோதிரத்தை எனக்கு இனமாகக் கொடுத்துவிடச் சொல்லி மரித்தான். நான் அவர்கள் வீடுகிட்டியவுடன், அங்குள்ள சிறுவர்கள், "அம்மா, கறுப்பு டாக்டர்" வந்துவிட்டார்," என்று குசாலாய் ஓடி தங்கள் தாய்களிடம் சொல்லுவார்கள். இந்த ''கறுப்பு டாக்டர்'' என்கிற பெயரால் அப்பிராந்திய

முழுவதும் என் பெயர் நன்கு விளங்கிற்று. கறுப்பு டாக்டர் என்று சொல்லி விட்டால் என்னைத் தேடிவரும் எவரும் என் வீடு கண்டு பிடித்து விடலாம். நடந்துவந்து மருந்து வாங்கக்கூடியவர்களுக்காக வாரத்தில் சில நாட்கள் நான் எங்கள் மிஷன் கட்டிடத்தில் வைத்தியதொண்டு செய்வேன். அப்போது வரும் சிறுவர்கள் பேசுவது வேடிக்கையாயிருக்கும். "டாக்டர், என் முழங்கை நோகிறதென்று அம்மை சொல்லுகிருள். நீர் அதைக் கவனித்து பார்க்கவேண்டுமென்பாள்" ஓர் சிறுமி. "என் கண்ணே, உன் அம்மைக்கு எப்படி உன் முழங்கை நோவுதெரியும்?" என்று நான் தமாசாய்க்கேட்பேன். "ஆ, என் அம்மைக்கு நான் அதை முந்திச் சொன்னேன்" என்பாள் சிறுமி!

பின்காலத்தில் நான் மைல்டுமே என்ற இன்ெறாரு லண்டன் வைத்தியசாலையில் வேலைசெய்கையில் ஒருநாள் நான் வெளியே வந்தவுடன் ஓர் சிறுமி என்னிடம் ஓடிவந்து கையைப்பிடித்துக்கொண்டு "டாக்டர், நீ ஏன் கறுப்பாயிருக்கிறீர்?" என்றாள். உடனே அவளை வாயடைக்க நான் அவளிடம் நீ ஏன் வெள்ளையாயிருக்கிறாய்?" என்று மறு கேள்வி போட்டேன். "ஆ, நான் தினமும் என் முகத்தைக் கழுவுகிறேன்" என்று கெம்பீரமாய் உத்தரவளித்து என் வாயை அடைத்துவிட்டாள்! இங்கிலாந்தில் நிலக்கரிக்கேணியில் வேலைசெய் செய்பவர்கள் வெளியேவரும்போது அவர்கள் முகம் நிலக்கரி தூசியினால் மூடப்பட்டு முகம் கழுவுமட்டும் கறுப்பாய்த்தோன்றும். நானும் அப்படி என் முகத்தில் தூசியைக் கழுவாததினால் கறுப்பாயிருக்கிறதுபோல நானும் இருக்கிறேனென்று நினைத்தாள் அந்த சிறு பெண்!

வைத்தியத்திற்கு வரும் ஜனங்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட இலக்கங்களின் வரிசைப்படி வெகு ஒழுங்காய் ஒருவர்பின் ஒருவர் வருவார்கள். மருந்துகொடுக்குமிடங்கள், கடைத்தெருக்கள், பயணச் சீட்டு வாங்கும் புகைவண்டிக் காரியாலயங்கள், நாடகப்புரைகள் முதலிய ஸ்தாபனங்களிலெல்லாம் இப்படி ஜனங்கள் வந்த வரிசையின்படி வெகு ஒழுங்காய்நின்று வரிசைப்படி போவார்கள். இந்த ஒழுங்கில்லாது, ஒருவரையொருவர் தள்ளிஇடித்து முன்னேச்செல்லப் பிரயாசப்பட்டுத் தன்னயக்காரராய் நடந்துகொள்வதினால், நமது நாட்டில் எத்தனை கஷ்டம், நெருக்கடி, சச்சரவு ஏற்படுகிறது! நமது தேசத்திற்கு இப்போது அவசியமானது சுயசிக்ஷையே. எங்கும் ஒழுங்காயும் கிரமப்படியும் நடந்துகொள்வோம். நமக்குமுன் வந்தவர்களுடைய உரிமையை உணர்ந்து, தன்னயக்காரராயில்லாமல் மற்றவர்கள் நன்மையும் நாடுவோம். இப்படி நடந்துகொள்வதனால் நமது காரியங்களும், வேலைகளும் பரபரப்பில்லாது இலகுவாயும், சீக்கிரமாயும் முடிந்து சித்திபெறும்.

இந்த ஜனங்கள் என்னை ஒரு நண்பனாகப் பாவித்து தங்கள் தனி குடும்பக் கவலைகள், மனக்கலக்கங்களை என்னிடத்தில் வந்து சொல்லி ஆலோசனை கேட்பார்கள். ஒரு நாள் ஒரு வாலிபப் பெண், "டாக்டர், என் புருஷன் யுத்தம் செய்யப் பட்டாளத்தைச் சேர விரும்பி என்னிடம் ஆலோசனை கேட்டபோது நான் அவரை உற்சாகப்படுத்தி சேரச் சொன்னேன். நான் செய்தது சரியா, தவறா?" என்று கேட்டாள். அதற்கு நான், "உன் ஸ்தானத்தில் நானிருந்தால், முதலாவது தனியே ஒரு அறைக்குள் போய்க் கதவை அடைத்துக்கொண்டு, அமைதியாக தனியே ஜெபித்து, யோசித்து, அதன்பின் ஆண்டவர் சமுகத்தில் ஏது எனக்குச் சரிஎன்று தோன்றுகிறதோ, அந்த ஆலோசனையையே நான் புருஷனுக்குக் கொடுத்திருப்பேன்," என மறுமொழி சொன்னேன். "டாக்டர், இந்த எண்ணம் என் மனதில் வரவில்லையே" என்று விசனத்துடன் அவள் கூறிப் போய்விட்டாள். மறுநாள் எங்கள் சங்கத்தின் காரியதரிசி, நாங்கள் மதிய ஆகாரம் சாப்பிடும் வேளையில் என்னிடம், "ஆ, டாக்டர், இதுதானா உங்கள் ராஜபக்தி, அந்த வாலிபபெண்ணிடம் அவள் புருஷன் யுத்தத்திற்காக பட்டாளம் சேர அவள் ஒத்துக்கொண்டது தவறு என்று சொன்னீராமே," என்றார்கள். "நான் அவளிடம் சரி, தவறு என்பதைக் குறித்துப்பேசாமல், ஜெபத்தில் அமைதியாக கடவுளின் ஆலோசனையையே தேடச்சொன்னேன்" என்று உத்தரவு கொடுத்தேன். என்னை விட்டுப்போனபின் அந்தப்பெண் அமைதியாக யோசித்தபோது, கிறிஸ்து சீஷன் மனிதனைக்கொல்லும் யுத்தத்தில் ஈடுபடுவது தவறு என்று அவளுக்கே தோன்றியதால், நான் சொன்னதாக தனக்கே மனதில்பட்டதைச் சொன்னாள் போலும்.

ஒரு நாள் இரவு சில வியாதியஸ்தர்களுக்கு மருந்து ஆயத்தம் செய்து கொடுத்துக்கொண்டிருந்தேன். வீடு பார்க்கிற அம்மாள் என்னிடம்வந்து "டாக்டர், ஒரு சிப்பாய் வாலிபன் குடிவெறியினால் மயங்கி மிஷன் வீட்டிற்கு வெளியே கிடக்கிறான், வந்து பாருங்கள்," என்றார்கள், உடனே நான் வெளியேபோய் அந்த வாலிபனை கைதாங்கிப் பிடித்து வீட்டிற்குள் கூட்டிவந்து, ஒரு ஆசனத்தில் உட்கார வைத்தேன். அந்த அம்மாள் அவனுக்காக கொஞ்சம் காப்பி ஆயத்தம் செய்யப்போனார்கள். சற்று நேரத்திற்குப்பின் அவன் பரபரப்புடையவனாய் தன் வீட்டிற்குப் போகவேண்டுமென்று எழுந்திருக்க ஆரம்பித்தான். நான் வியாதியஸ்தருக்கு மருந்துகொடுத்து முடித்தபின் சிறிது நேரத்தில் நானே அவனை அவன் வீட்டிற்குக் கூட்டிக் கொண்டுபோய் விடுகிறேனென்றும், அவனுக்காக கொஞ்சம் காப்பி ஆயத்தமாகிறதென்றும் சொல்லி அவனைச் சாந்திசெய்து உட்கார்ந்திருக்கச்செய்யப் பிரயாசப்பட்டேன். ஆனால் அவன் எழும்பப்பிரயாசப்பட்டுத் தள்ளாடி நடந்துவெளியேபோக முயன்றான். அப்போது நான் அன்புடன் அவன் கையைப்பிடித்துக்கொண்டு, "உன்னை நான் சிநேகிக்கிறேன். உன் கூட்டுறவு இன்னும் சிறிது நேரம் எனக்கு

வேண்டுமென்றவுடன் அவன் மிகுந்த சந்தோஷமாக "டாக்டர், இப்போது என்னைப் பிடித்துக்கொண்டீர்கள், இப்போது என்னைப்பிடித்துக்கொண்டீர்கள்" என்று பாட்டாகச்சொல்ல ஆரம்பித்து விட்டான்! அவன் சொன்னபடியே அதன்பின் நான் என் வேலையெல்லாம் முடித்துத்தீருமட்டும் அமைதியாக உட்கார்ந்திருந்தான். குடிவெறியில் ஆழ்ந்திருந்தவனுக்குக்கூட அன்புகாட்டினால் எவ்வளவாக அந்த அன்பு அவனை அன்பனுக்கு அடிமையாக்கிவிடுகிறது என்கிற சத்தியத்தை உணர்ந்தேன். என் வேலை முடிந்தபின் அவனை அவன் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போனேன். அவன் மனைவியைக் கண்டதும் அவன் 'மேரி, மேரி, டாக்டர் என்னை பக்தி வழிக்குத் திருப்பி விட்டார்' என்று கூச்சலிட்டுச் சொன்னான்.

ஒருநாள் இரவு படுக்கப்போகிற நேரத்தில் வெடி குண்டுகளின் சத்தம் கேட்டது. நான் தங்கியிருந்த அறை, மிஷன் கட்டிடத்தின் மூன்றாவது மேல்மாடியிலிருந்தது. உடனே கீழேவந்து, உயரப் பார்த்தால் ஜெர்மன் ஆகாயக்கப்பல் (ஜெப்பலின்) லண்டன் நகர் மேல் பறந்து போவதைக் கீழிருந்து மேலே வீசி அடித்து பிரகாசிப்பித்துத்தேடும் வெளிச்சத்தின்மூலமாய் நன்றாகப் பார்த்தேன். கீழிருந்து விமானத்தின் திசையாக எய்து சுடப்படும் ஆங்கில வெடிகுண்டுகளும் டபார் டபார் என்று பலத்த முழக்கமாக வெடித்துக்கொண்டிருந்தன. இதற்குப் பின்தான், லண்டன் அதிகாரிகள் முன் எச்சரிப்புக் கொடுக்க ஆரம்பித்தார்கள். ஆரம்பத்தில் ஜனங்கள் தங்களைப் பாதுகாத்துகொள்ளவேண்டிய முயற்சி செய்யவில்லை. இதற்குப்பின் எதிரிவிமானங்கள் வருமுன்னே எச்சரிப்பு எக்காளம் ஊதும். உடனே ஜனங்கள் ஒருமிக்க ஓடி பூமிக்குக் கீழ்ஓடும் குகைப்போன்ற மின்சாரவண்டி ஸ்தானங்களுக்கோ அல்லது பல மாடிகளுள்ள கட்டிடங்களின் தரைமட்டத்திற்கு கீழிருக்கும் அறைகளுக்கோ (பேஸ் மெண்டுகள்) ஓடி ஒளித்துகொள்வார்கள். எங்கள் மிஷன் கட்டிடத்தின் கீழ்வீட்டிற்கும் அச்சமயங்களில் ஜனங்கள் வருவார்கள். அப்படிக் கூடிவருபவர்களை தைரியப்படுத்த நான் கின்னரம் வாசித்து அவர்களை நல்ல பக்திக்குரிய பாட்டுகள் பாடச் செய்வேன். நான் இந்த ஏழைமக்களுக்குத் தொண்டு செய்வதில் சந்தோஷமாயிருந்தும், என் உள்ளான ஜீவியத்தில் என்னோடு பங்கு பெற்று அன்பினால் இணைக்கப்படும் உத்தம நண்பர்க்காக தவித்து வாஞ்சித்தேன். இப்படி ஆருயிர் நண்பரை நாடுவது என் ஜீவிய இயற்கை, உத்தம அன்பரின் கூட்டுறவும், அன்பும் எனக்கு திவ்விய இன்பமான ஆகாரம்போன்றது. அது கிடையாவிட்டால் தியங்குவேன் மயங்குவேன், தவிப்பேன். இச்சமயத்தில் மிஷனில் தலைவராக வேலை செய்தவரும் எனக்கு வயதில் மூத்தவருமான டாக்டர் மக்கல்லோ என்பவர் பட்டாளத்து டாக்டராக வேலை ஒப்புக் கொண்டு போய் விட்டார்.

நான் இப்படி நல்ல தோழருக்காகத் தவித்து கொண்டிருப்பதையறிந்த எங்கள் சங்கக் காரியதரிசியாகிய ஸ்டாடன்ஸ் பெல்டு அம்மாள் லண்டனில் கிறிஸ்தவ மாணவர் சங்கத்தின் ஒரு காரியதரிசியாகிய மக் ஈவன்லாசன் என்பவருக்கு எழுத ஆலோசனை சொன்னார்கள். அப்படி நான் எழுதவும், அவர் என்னைத் தேயிலைப்பான விருந்திற்கு தம் இல்லத்திற்கு அன்பாய் அழைத்து, லண்டனில் அந்நிய தேச மாணவரும் ஆங்கில மாணவரும் ஐக்கியமாயிருந்து அன்புண்டாக ஏற்படுத்தியிருக்கும் மாணவசங்க விடுதிக்கு நான் ஒருநாள் போய் இரவு விருந்து சாப்பிட ஒழுங்கு செய்தார். ஹாம்ஸ்டெட் என்ற இடத்தில் இது இருந்தது. அங்கு அப்படியே நான் போய் விருந்துண்ண மேசைப் பக்கம் உட்காரவும், மலர்ந்த முகமுள்ள ஒரு பிரிட்டிஷ் வைத்தியசாஸ்திர மாணவன் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார். சாப்பிட்டு முடிந்தவுடன் எல்லோரும் விருந்தாளிகளை வரவேற்றுக்கொள்ளும் ஒரு பெரிய அறைக்குப்போய் காப்பிபான மருந்தினோரும், பல மாணவர்களிருந்தார்கள். இவர்களில் சீனதேசத்தினர், பிரெஞ்சு தேசத்தினர், இந்தியர், பிரிட்டிஷ் நாட்டினர் முதலிய பல பாஷை மாணவர்களிருந்தார்கள். சிறிது நேரத்திற்குப் பின் எல்லா மாணவரும் தங்கள் தங்கள் அறைகளுக்குப் போய்விட்டார்கள். ஆனால் என் பக்கத்தில் சாப்பாட்டு நேரத்திலிருந்த பிரிட்டிஷ்மாணவரும் அவர் அறையில் இவர்கூடத்தங்கியிருந்த இந்தியமாணவரும் மாத்திரம் பின்னே தங்கி என்னை தங்கள் அறைக்கு வரும்படி அழைத்தார்கள். அவர்களுடன் தனியேபேசி பின்பு என் இல்லத்திற்குத் திரும்பினேன். இது நடந்தது 1915ம் வருஷம் ஜனவரி மாதம் ஆரம்பத்தில் சிலநாட்களுக்குப் பின் ஒரு இரவு தனியே மிஷன் கட்டிட சாப்பாட்டு அறையில் இரவு போஜனம் செய்துகொண்டிருந்தேன். மேல் நாடுகளின் வழக்கம்போல் அறையின் கதவு மூடியிருந்தது. கதவை மெதுவாகத் தட்டும் சத்தம் கேட்டது. உள்ளே வரும்படி அழைத்தேன். கதவு திறக்க மாணவர் விடுதியில் என்னைத் தனியே தன் அறைக்கு அன்பு காட்டின பிரிட்டிஷ் வாலிப மாணவன் உள்ளே வந்தார். அது முதல் எங்களிருவருக்கும் நட்பு வளர்ந்துகொண்டே வந்தது. வெள்ளிக்கிழமைகள் தோறும் சாயந்திரங்களில் வெகுதூரம் உலாவப்போவோம். ஞாயிற்றுக்கிழமைகளை ஒன்றாகச் செலவிடுவோம். முற்பகல் தெய்வாராதனை முடிந்தபின் இந்த நண்பர் என்னோடேயே நாள் முழுவதும் அதிகமாய்த் தங்கியிருப்பார். இப்படிப்பட்ட சமயங்களில் எங்கள் ஆத்மீக வாஞ்சைகள், உள்ளான தரிசனங்கள் ஜீவிய உன்னத நோக்கங்கள் முதலியனவற்றைக்குறித்துக் கலந்து வெகுநேரம் பேசி ஜெபிப்போம்.

நான் முன்னே சொன்னபடி சங்கத்தின் மூத்த டாக்டர் மக்கல்லா என்பார் ராணுவ டாக்டராகப் போய்விட்டதால் வேலை எனக்கு அதிகமிருந்தது. சங்கக்காரியதரிசி ஸ்டாடன்ஸ் பெல்டு அம்மாள் என்னோடு இவ்வளவு நட்பாயிருந்த வைத்திய சாஸ்திர மாணவனாகிய



டாக்டர் பேட்டன் தகப்பனர்
(திரு. அலெக்சாந்தர் பாரஸ்தர் பேட்டன் அவர்கள்)

என் நண்பர் தம்மிருப்பிடத்தை விட்டுவந்து என்னுடன் மிஷன் கட்டிடத்தில் நான் தங்கியிருக்கும் அறையில் வந்து வசித்து எனக்கு உதவியாயிருக்கச் சம்மதிப்பாராவென்று விசாரித்தார்கள். அவர் அப்போது வைத்தியப்படிப்பின் கடைசி ஐந்தாம் வருஷ வகுப்பிலிருந் தார். நான் இதைக்குறித்து மிகவும் யோசித்து அவருடன் கலந்து பேசினேன். இருவரும் அமைதியாக ஜெபித்து யோசித்தபின் அவர் அப்படியே வந்து என்னுடன் தங்கத் தீர்மானித்துவிட்டார். இவர்தான் இந்த 25 வருஷங்களாக என் ஆருயிர் நண்பராக என்னுடன் சேர்ந்து கொண்டு தொண்டுசெய்பவரும் இந்தக் கிறுஸ்துகுல ஆசிரமத்தை என்னுடன் சேர்ந்து ஸ்தாபித்தவருமான டாக்டர் எர்ணஸ்டு பாரஸ்தர் பேட்டன். நாங்கள் இருவருமாக யாதொரு பேதமுமில்லாமல் எல்லாவற்றையும், சகோதர பான்மையாகக் கலந்து அன்பு ஐக்கியத் துடன் ஜீவித்து லண்டனிலுள்ள இந்த ஏழைகளுக்குத் தொண்டு செய்தும் அவர்கள் ஆத்மீக காரியங்களில் அவர்களுக்கு உதவி செய்தும், சந்தோஷமாக ஒத்துழைத்தோம். எங்கள் ஜீவியமெல்லாம் இப்படி ஏழைகளோடு எங்களை ஒன்ருக்கி அவர்களுக்கென்று கிறிஸ்துவின் அன்போடு உழைக்க வேண்டுமென்ற அவா எங்களைப் பிடித்தது. என் நண்பருக்கு இந்தியாவில் கிராம மக்களோடு தன்னை ஒன்ருக்கி வாழ வேண்டுமென்ற ஆசை வந்தது. மேலும் இந்தியாவில் ஐரோப்பிய கிறிஸ்தவ மிஷன்களில் கூட வெள்ளை மனிதர் மேலதிகாரம் செலுத்தவும், கறுப்பு மனிதரான இந்திய கிறிஸ்தவ மிஷன் ஊழியர் எவ்வளவு அதிக அநுபவமுள்ளவர்களாயிருந்தாலும் கூட அவர்களுக்குக் கீழ் வேலை செய்வதுமான காரியம் மிகவுந்தவறு என்று நாங்களிருவரும் உணர்ந்தோம் இந்தியாவிற்கு வருகிற ஆங்கிலர் இந்தியரில் தங்களை விட மூத்தவர்களானவர்களும், அதிக அனுபவமுள்ளவர்களானவர்களுமான இந்தியக் கிறிஸ்தவப் பெரியாருக்குக் கீழ் தாழ்மையுடன் வேலை செய்து அவர்கள் ஆலோசனையைத்தேடி நடக்கவேண்டுமென்று எங்களுக்குத் தெளிவாயிற்று. பிரிட்டிஷார் இந்தியர்கள் மேல் அதிகாரம் செலுத்திவரும் நாட்கள் போய்விட்டதென்று எங்களுக்குத் தோன்றிற்று. மேலும் இக்காலத்தில் நடந்துகொண்டிருந்த ஐரோப்பிய யுத்தமும் கிறிஸ்துவின் போதனைக்கும் அவர் சிலுவையின் அர்த்தத்திற்கும் முற்றும் முரணனதேயென்று என் நண்பர் பேட்டனும் என்னைப்போல உணர்ந்தார். இக்காலத்தில் ஆங்கில நாட்டில் எல்லா வாலிபரும் பட்டாளங்களைச்சேர வேண்டுமென்ற கட்டாயச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர ஆரம்பித்தார்கள். என் நண்பரோ தன்னை இப்படிக் கட்டாயப்படுத்தினுல் யுத்தம் தவறு என்று வற்புறுத்தி சாக்ஷி பகர்ந்து, அவசரமானுல் இதற்காக சிறை புகவும் ஆயத்தமாயிருந்தார்.

இக்காலத்தில், லண்டனில், யுத்தம் கிறிஸ்துமார்க்கத்திற்கு முரண்பாடானது, என்று சர்க்காருக்குப் பயப்படாமல் தைரியமாய் பிரசங்கம் செய்த ஒரு கிறிஸ்தவ குரு விருந்தார். இவர் பெயர்

ஆர்ச்சர்டு பாதிரியார். இவர் கோயிலுக்கு நாங்கள் இருவரும்போய் மிக ஆத்மீக உதவி பெற்றோம். அந்த வருஷம் (1915) கோடைகால விடுமுறை சமயத்தில் சகோதரன் பேட்டனும் நானும் ஸ்வரனிக் என்ற ஊரில் நடந்த மாணவர் மகாநாட்டுக்குப் போயிருந்தோம். இதன் பின் நாங்களிருவரும் ஸ்காத்துலாந்து தேசத்திலுள்ள ஆலோவா என்ற ஊரிலிருந்த சகோதரன் பேட்டன் தாயாரைப் பார்க்கப் போயிருந்தோம். இவர் தகப்பனார் அந்த வருஷம் ஆரம்பத்தில் பெப்ருவரி மாதம் 17ம் தேதி திடீரென்று மரணமாகி விட்டார்கள். இவர்கள் நல்ல கிறிஸ்தவ பக்தர். பரோபகாரி. பலவிதமான தர்ம விஷயமான வேலைக்கும் வெகு தாராளமாக பண உதவி செய்து வந்தவர்கள். ஆனால் தாம் கொடுக்கும் நன்கொடைகளை இரகசியமாய்ச் செய்வார்கள். மனிதர் புகழைக் கிஞ்சித்தும் நாடாதவர். இதன்பின் சகோதரன் பேட்டன் தாயார் என்னையும் தனது மகன்போல் அன்பு பாராட்டி ஏற்றுக்கொண்டார்கள். என் தாய்க்குப் பதிலாக இவர்கள் எனக்குத் தாயின் அன்பைக்காட்டினார்கள். எங்கள் ஜீவியத்தொண்டைக் குறித்து எங்களிருவருக்கும் அன்புடன் பல நல்லாலோசனைகள் சொல்லி உற்சாகப்படுத்துவார்கள். ஏதும் பேதாபேதமில்லாமல் எங்களிருவரையும் சமமாக தன் சொந்தப் பிள்ளைகளாகப் பாவித்து நடத்துவார்கள். பின்காலத்தில் நாங்கள் இந்தியாவில் வேலை செய்யும்போது இருவருக்கும் சேர்த்துப் பொதுவாய். "எனக்கு மிகவும் அருமைப் பையன்களே", என்று மிக அன்புடன் அழைத்துக் கடிதங்கள் எழுதுவார்கள். ஏதாவது இனாம் அனுப்பும்போது இருவருக்கும் ஏதும் வித்தியாசமில்லாமல் செய்வார்கள். எவர், எந்தக் கஷ்ட நிலையில் இவர்களிடம் அண்டிவந்தாலும் தயாள மனதுடன் உதவி செய்வார்கள். ஆட்களுக்கு என்ன அவசியம் என்பதை வெகு சாமர்த்தியமாக அவர்கள் பேச்சில் ஏதோ ஒரு வார்த்தையில் கண்டுபிடித்து; அவர்களுக்கு ஆச்சரியமுண்டாக அவர்கள் தேவைகளை சவரக்ஷணை செய்துவிடுவார்கள். தன் பலவீனத்தையும் பாராமல் மற்றவர்களுக்கு உதவிசெய்யத் தவிப்பார்கள், இந்த ஆசிரமம் ஸ்தாபிக்க நாங்கள் யோசித்துக்கொண்டிருக்கையில் அவர்கள் பலவித ஆலோசனை சொல்லி எங்களுக்குதவி செய்தார்கள். 1921ம் வருஷம் ஏப்பிரல் மாதம் தன் சகோதரி வீட்டுக்குப் போயிருக்கையில் படுக்கையில் அமர்ந்த சிறிது நேரத்திற்குள் ஒரு இரவு திடீரென்று ஆண்டவர் இளைப்பாறுதலில் பிரவேசித்துவிட்டார்கள். மக்கள் தெய்வ பக்தராகவும் தன்னயமற்ற அன்புள்ள தியாகிகளாக ஜீவிக்கவும் தங்களை ஒப்புக்கொடுப்பதற்கு இப்படிப்பட்ட பக்தரான பெற்றோர் எத்துணை மூலகாரணமாயிருக்கிறார்கள்.

பெற்றோரே பிள்ளைகளைப் பெற்றுவிட்டால் போதுமோ?
சற்றும் பகுத்தறிவு முற்றுமில்லாத ஜென்மம்
பெற்றுவிடுமே பல குட்டிகுலகோத்திரம்
உற்று நோக்குவீர் உங்கள் மேன்மையுமிதுதானே?

சேயர் மெய்ஜீவன் பெற்று செம்மையாய் சீர்பொருந்தி
தேவமக்களின் பாக்கியம் தியாகநாதனின் மார்க்கம்
யாவுமடைய வேண்டியிராவும் பகலுமேங்கும்
ஆவியுடன் அழுது அங்கலாய்த்து ஜெபிப்பீர்.

(ஆசிரமப் பாமாலை)

இவர்கள் வீடு பெரிய வீடு. சுற்றி அழகிய பூந்தோட்டங்கள், பரந்த விருக்ஷங்கள், பசுமையான புல்லாந்தரைகள், எதிரே நல்ல மலைக்காட்சிகள் அமைந்த இடம். இங்கு இந்திய மாணவர்கள் முதலிய அன்னியர்களை வரவேற்று உபசரிப்பார்கள். லண்டனில் சகோதரன் பேட்டன் விடுதியிலிருந்தபோது அவர் அறையில்கூட இருந்த சாக்கோ நண்பரும் எங்கள்கூட வந்திருந்தார். இவர்தான் தற்காலத்தில் மதராஸ் இன்சினீரிங் காலேஜ் என்ற இயந்திர சாஸ்திர கல்லூரித் தலைமை ஆசிரியராயிருப்பவர். சில நாட்களுக்குப்பின் இவரும் சகோ. பேட்டனும் நானும் ஸ்காத்துலாந்து தேசத்தின் இயற்கை அமைப்பி லழகிய பாகங்களாகிய வடமேற்குத் திசைப் பிராந்தியங்களிலுள்ள மலைநாடுகளில் உல்லாச நடைப்பிரயாணம் செய்யப் புறப்பட்டோம். பகல் முழுவதும் மலைகள் நடுவில் நடந்து, மாலை நேரம்போல் சேரும் ஊரில் தங்கி, மறுபடி மறுநாள் காலை திரும்ப புறப்பட்டு, இயற்கை அழகமைந்த பாகங்களில் சுற்றுப்பிரயாணம் செய்தோம். அந்த பாகங்களிலுள்ள நாட்டுப்புற ஜனங்கள் முதலில் எங்களுக்கு இடம் கொடுக்க யோசிப்பார்கள். நாங்கள் நயமாய்ப் பேசி அவர்கள் இடம் கொடுக்கச் சம்மதிக்கச் செய்தபின்பு நல்ல உபசாரத்துடன் எங்கள் ஆகாராதிகள் படுக்கைக்கு அவசரமானவைகளைக் கொடுத்து, நியாயப் படி நாங்கள் கொடுக்கவேண்டிய காசை சந்தோஷமாய் வாங்கி வழி விட்டனுப்புவார்கள். மலைகளில் உறைந்த மழை அம்மலைச் சிகரங் களுக்கிட்ட வெள்ளைப்பூ மாலைகள்போல் அணி அணியாய் தோன்றும். இடைக்கிடையே அமர்ந்த தண்ணீர்களடங்கிய ஏரிகள், மலைகள் நடு வில் கண்ணைக்கவரும் காட்சியாகும் இப்படி சந்தோஷமாக சில நாட்கள் கழித்துத் திரும்பவும் லண்டன் திரும்பினோம். இங்கிலாந்திற்கு நான் வந்த முக்கிய நோக்கம் எப். ஆர். ஸி. எஸ். என்ற க்ஷத்திர வைத்திய நிபுணப் பரீக்ஷை தேறவே. ஆனால் லண்டனில் ஏழை மக் களுக்குள் வேலை செய்துகொண்டிருக்கையில் இப்பரீக்ஷைக்குப் படிக்க நேரசாவகாசம் கிடையாது மேலும் இப்பரீக்ஷை தேறுவதிலும் மேலான ஒரு பாக்கியத்தைப் பெற்றுக்கொண்டேன். அது சகோ தரன் பேட்டன் உயிர்த் தோழனாக ஆண்டவரின் இராஜ்ய வேலை செய்ய எனக்குக் கிடைத்ததே. இக்காலத்தில் இந்தியாவில் சுவிசேஷ வைத்தியத் தொண்டிற்கென்று ஸ்தாபிக்கப்பட்ட மிஷன் வைத்திய சாலைகளில் வேலைசெய்த பல பிரிட்டிஷ் டாக்டர்கள் தங்கள் வேலையை விட்டுவிட்டு ராணுவ டாக்டர்களாகப் போய் விட்டதாகக் கேள்விப் பட்டோம். யுத்தத்தைவிட இந்த சுவிசேஷ வைத்திய ஊழியமே மிக முக்கியமானது என்று உணர்ந்த நாங்கள் இந்தியாவிற்கு வந்து,

இப்படிப்பட்ட காலியாயிருக்கும் ஒரு மிஷன் வைத்தியசாலையில் சில காலம் தொண்டுசெய்யத் தீர்மானித்தோம். எவ்வளவு தூரம் இப்படிப்பட்ட மிஷன் ஸ்தாபனங்களில் இந்தியரும், ஐரோப்பியரும் சமநிலையாக பேதமில்லாமல் சகோதரர்போல் ஒத்துழைக்கக்கூடும் என்று அநுபவத்திலறியவும் இது நல்லசமயம். பிரிட்டனிலுள்ள பல சபை மிஷன் சங்கத்தாரிடத்திலும் விசாரித்தோம். எங்களை ஏற்றுக்கொள்ள சம்மதிக்கும் எந்த மிஷன் சங்கத்தாருடனும் சேர்ந்து தொண்டு செய்ய ஆயத்தமாயிருந்தோம். எடின்பரோவிலிருந்த ஸ்காத்லாந்து சுயாதீன ஐக்கிய சபை சங்கத்தார் சந்தோஷமாய் எங்களிருவரையும் ஏற்றுக்கொண்டு பூனாவில் அவர்கள் ஸ்தாபித்திருந்த வாதியா வைத்தியசாலையில் நாங்கள் இருவரும் ஒன்றாகத் தொண்டு செய்ய ஒழுங்கு செய்தார்கள். நாங்கள் புறப்படுமுன் இச்சங்கத்தாரின் தலைமை நிர்வாகக் கமிட்டியார் எடின்பரோவில் கூடியிருக்கையில் எங்கள் இருவரையும் அக்கூட்டத்திற்கு அழைத்து அன்பாக வரவேற்றார்கள். அதற்கு அக்கிராசனாதிபதியாயிருந்த அந்திரேயாபிரேஸர் என்னும் பெரியார் முன் வங்காளத்தில் கவர்னராயிருந்தவர். இவர் எங்களிருவருக்கும் ஆசீர்வாத வார்த்தைகள் கூறி ஒரு பிரிட்டிஷரும் இந்தியனும் தங்கள் ஜீவியத்தை ஒன்றுபடுத்தி ஒரு புனிதமுறையாக இந்தியாவில் தொண்டு செய்யப்போவதை மிகவும் பாராட்டிப்பேசினார், இதன்பின் ஒரு ஸ்காத்துலாந்து சபை குருவாகிய டிரம்மந்து என்னும் பாதிரியார் அருமையாக ஜெபித்து எங்கள் ஐக்கியத்தை ஆண்டவர் ஆசீர்வதித்து பலப்படுத்தி தமது திருநாம மகிமைக்கென்று உபயோகிக்க ஊக்கமாய் மன்றாடி எங்களை ஆண்டவர் கரத்திற்கு ஒப்புவித்தார். சந்தோஷமாக இந்தப் பெரியார்களை வழிவிட்டனுப்பி அவர்கள் ஆசீர்வாதத்துடன் நாங்கள் கூட்டத்திலிருந்து திரும்பினோம், சகோதரன் பேட்டனின் அருமைத் தாயாருக்குத் தன் கடைசிப் புதல்வனை முதல்முறை இப்படி தூரதேசத்திற்கனுப்பி அவரை விட்டுப் பிரிவது இலகுவாயிருக்கவில்லை. வெகுநேரம் அவர்களோடு அமைதியாகச் செலவிட்டு ஜெபித்து அவர்களை உற்சாகப்படுத்தினோம். அவர்களும் சந்தோஷமாக எங்களை விட்டனுப்பினார்கள்.

அத்தியாயம் 9

பூனு ... ஸ்காத்துலாந்து தேச ஐக்கிய சுயாதீன சபை மிஷன் வாதியா வைத்தியசாலை.

பிரெஞ்சு தேசம் சென்று மார்செய்ல்ஸ் துறைமுகத்தில் 1915ம் வருஷம் டிசம்பர் மாதம் கப்பலேறி 26ம் தெய்தி பம்பாய் சேர்ந்தோம். ஒரு மிஷனரி நண்பர் துறைமுகத்தில் எங்களைச் சந்தித்து அங்கிருந்த தலைமை மிஷனரி பாதிரியார் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டுபோய் விட்டார்; மதிய ஆகாரம் புசித்தவுடன் இந்தப்பெரியார் சகோதரன் பேட்டனை தன் அறைக்குத் தனியே அழைந்துக்கொண்டு போனார். தனியே அவருடன் பேசி பூனுவில் நாங்கள் செய்யும் வேலையில் சகோதரன் பேட்டனே தலைமை வகிக்கவேண்டும். பணமும் அவர் கையில் தானிருக்கவேண்டும். நான் அவருடன் கூட்டுறவாகமட்டும் தொண்டு செய்யவேண்டுமென்று அவருக்கு ஆலோசனை சொன்னார். சகோதரன் பேட்டன் அறையிலிருந்து வெளியே வந்தவுடன் இதை அவர் முன்பாகவே எனக்குச் சொன்னார். சகோதரன் பேட்டனுக்கு அப்போது வயது 24 மாத்திரம். காலேஜ் கல்வியை அப்போதுதான் படித்து முடித்திருக்கிறார். இந்தியாவிற்கும் புதிதானவர். எனக்கு 33 வயது. நான் டாக்டராகவும் கொஞ்சம் குறைய நாலரை வருஷ அனுபவமுள்ளவன். இந்திய அனுபவமுள்ளவன். இவற்றை நான் அந்தப் பெரியாரிடம் எடுத்துக்காட்டி நாங்களிருவரும் பிரிட்டிஷராயிருந்தால் அவர்கள் இந்தவிதமான ஆலோசனை சொல்லியிருப்பார்களாவென்று கேட்டேன். இதற்கு சரியான பதில் கொடுக்கவில்லை. நாங்களிருவரும் அவர் சொன்ன ஆலோசனைப்படி பின்பு பூனுவில் நடந்துகொள்ளவில்லை. நாங்கள் பூனுவில் சம்பளமில்லாமல் சொந்த செலவில் வந்து எங்கள் சொந்த செலவிலேயேதான் வேலைசெய்தோம். வைத்தியசாலை பணவிஷயங்களை நான் தான் மேல்பார்த்து வந்தேன். இந்தியாவிலே ஐரோப்பியர் இந்தியர்களை பணவிஷயத்தில் நம்பாததற்கு முக்கிய காரணமொன்றுண்டு. அடிக்கடி ஐரோப்பியர் இந்தியர்களில் தங்களுக்கு முகஸ்துதிபேசி நயமாய் நடந்து கொள்ளுபவர்கள்மேல் பிரியப்படுகிறார்கள். இவர்களின் ஸ்தோத்திரப் பிரியம்தான் தகாதவர்களும், மாய்மாலமாக மிக சாமர்த்தியமாக நல்வார்த்தைகளைப் பிரியமாய் பேசுகிறவர்களும் இவர்களைச் சூழ்ந்துகொள்ளச்செய்கிறது. இதனால் பண விஷயத்தில் மோசம் போய் வஞ்சிக்கப்பட்டு எல்லா இந்தியரும் மேற்கூறிய மனுஷரைப்போன்றவர்கள் தானென்று நினைக்கிறார்கள். மேலும் சாதாரணமாக இந்தியாவிற்கு வருகிற பல ஐரோப்பியருக்கு அதிகாரப் பிரியமுண்டு. சமயோசிதமாக இவர்களுக்கேற்றபடி ஆட்டம் ஆட ஆயத்தமாயிருக்கும் இந்தியர்களும் பலரிருக்கிறார்கள். நேர்மையாய் பேசி நடக்கும் இந்தியர்களை இவ்வித ஐரோப்பியர் பெருமையுள்ள வீம்புக்காரன் என்று தூர விலக்கி

வைத்துக்கொள்ளுகிறார்கள். இதினாலும் இதுபோன்ற காரணங்களினாலும் ஐரோப்பியருக்கும் இந்தியருக்குமுள்ள சம்பந்தம் ஒரு துர்வட்டம் போல் சுழன்றுசுழன்று தீமை செய்கிறது. ஐரோப்பிய மிஷனில் இந்தியரும் ஐரோப்பியரும் சமநிலையாக தொண்டு செய்வதற்கு தடைகள் இப்படி ஆரம்பத்திலேயே தலை தூக்கிவிட்டன.

புது வருஷவிழாவிற்கு நாங்களிருவரும் பொள்ளாச்சியில் அச்சமயத்தில் தங்கியிருந்த என் மூத்த சகோதரி மரியாவியாகுலம் தாவீது அம்மாள் வீட்டிற்குப் போயிருந்தோம். அச்சமயத்தில் கோயம்புத்தூரில் பிளேக் என்ற தொத்துவியாதி பரவியிருந்ததால் பொள்ளாச்சிக்கு அவர்கள் போயிருந்தார்கள். சகோதரன் பேட்டன் தமிழ்நாட்டிற்கு முதல் தடவை வந்து தமிழ் மொழி பேசுவதையும் முதலாவதாகக் கேட்டார். கோயில் பிரசங்கத்தில் சந்தோஷம் என்ற பதத்தைத்தான் முதல் கற்றுக்கொண்டார். இந்தியாவிற்கு புதிதாக வரும் ஒரு ஐரோப்பிய மிஷனரி, தான் வந்தவுடன் ஒரு இந்தியக் குடும்பத்தோடு அக்காலத்தில் தங்குவது மிக அபூர்வமானதால் அங்குள்ளவர்களுக்கு. விசேஷமாக சிறுவர்களுக்கு அவரைப் பார்ப்பது விநோத காட்சியாக இருந்தது.

இதன்பின் பம்பாய் ராஜதானியிலிருக்கும் மிரஜ் என்கிற இடத்தில் ரண வைத்தியத்தில் பெயர்பெற்ற டாக்டர் வான்லெஸ் என்னும் பெரியார் ஸ்தாபித்த அமெரிக்கன் மிஷன் வைத்தியசாலையைப் பார்க்கப் போயிருந்தோம். அங்கு சில நாட்கள் தங்கி வைத்திய சாலையில் அவர் செய்யும் பல பெரிய ஆயுத வேலைகள் முதலியன பார்த்து வந்தோம். சிறிய காரியங்கள் முதல் பெரியவை மட்டும் இவர் மேல் பார்வையிலேயே நடந்துவந்தன. ஆனால் ஒரு காரியம் எங்களுக்குப் பிடித்தமாயில்லை. பண விஷயங்களில் இவர்கள் காட்டிய அக்கரை இந்த ஸ்தாபனம் வியாபார ஸ்தலம்போல் தோன்றச்செய்துவிடுவதாகத் தோன்றிற்று. வெளிவியாதியஸ்தர்களில் டாக்டர் வான்லெஸ் பரீக்ஷை செய்யவேண்டுமென்று விரும்புவோர்கள் ஐந்துரூபாயை மேசையில் வைத்தபின்தான் டாக்டர் வான்லெஸ் அவர்களைப் பரிக்ஷிப்பார் இல்லையானால் அவர் கீழே உதவிக்காரராயிருந்த சின்ன டாக்டர்கள் முதலில்பார்த்து அந்த வியாதியஸ்தர்களில் ஏதாவது விசேஷித்த வியாதியஸ்தர்களை டாக்டர் வான்லெஸ் பார்க்கவேண்டுமென்று சிபார்சு செய்தால்மட்டும் அவர்களைப் பார்ப்பார். மிஷன் வைத்தியசாலையில் செலவிற்காகப் பணம் வேண்டியது அவசியம் தான். ஆனால் பணம் சேர்க்கிற வழி வகைகளில் இங்கு பணத்தை முக்கியப்படுத்துவதால் பெரிய டாக்டர்களுக்குக் கீழ் வேலைசெய்யும் மற்றும் சிப்பந்திகளும் தாங்களும் வியாதியஸ்தர்களிடத்தில் தங்கள் அந்தஸ்துக்குத்தக்கபடி பணம் வாங்கிக்கொள்ள ஆரம்பித்துவிடுகிறார்கள். இது எங்களுக்குத் தெரியவந்தது. கிறிஸ்துவின் அன்பிற்கு சாக்ஷிபகர வேண்டிய ஸ்தாபனங்கள் இப்படியிருந்தால் அதனால் என்ன பிரயோஜனம்? மேல் அதிகாரிகள் மாத்திரம்

உத்தமர்களாயிருந்தால் போதுமோ? பக்தர்கள் ஸ்தாபிக்கும் ஸ்தாபனங்களில் எல்லாத் தொண்டரும் தோட்டிமுதல் தொண்டமான் மட்டும் உத்தம பக்தர்களாக இருப்பது மிக இன்றியமையாத அவசியமன்றோ?

ஜனவரிமாதம் 1915ம் வருஷம் பூனாவில் மிஷன் ஆஸ்பத்திரியில் வேலை தொடங்கினோம். வைத்தியசாலை ஊருக்குள் இருந்தது. ஆனால் மிஷனரி பங்களாக்கள் பூனாவில் ஐரோப்பியர் பிரதானமாக வசித்த கன்ரோண்மெண்ட் என்னும் ராணுவபாளையத்திற்கருகே இருந்தன. வைத்தியசாலைக்கருகே கட்டப்பட்டிருந்த ஒரு நல்ல வசதியான பங்களாவுமிருந்தது. இது வழக்கமாக வைத்தியசாலை இந்தியத் தாதிப் பெண்களை மேல்பார்க்கும் ஐரோப்பியத் தாதிப்பெண் வசிக்கும் இடம். நாங்கள் வந்தசமயத்தில் ஒரு ஐரோப்பிய தாதியுமில்லாததால் இந்த பங்களா காலியாகவேயிருந்தது. இதில் நாங்கள் வசிப்பது வைத்தியசாலை வேலைக்கு அதிகப் பிரயோஜனமாயிருக்க உதவியாயிருக்கும், நாங்கள் எந்த ஜனங்களுக்காகத் தொண்டுசெய்கிறோமோ அவர்கள் மத்தியிலே வசிப்பதே சரியென்று எங்களிருவருக்கும் தெளிவாகக் காணப்பட்டது. சாதாரண இந்தியர்கள் வசிக்கும் வீடுகளுக்கு வெகுதூரமாக கன்ரோண்மெண்டில் ஐரோப்பியர் மத்தியில் வசிப்பது சரியாகத் தோன்றவில்லை. மிஷன்சங்கம் சேர்ந்தமிஷனரிகளுக்குரிய காரியாதிகளெல்லாம் அந்நியநாடு மிஷனரிகள் அடங்கிய ஒரு ஆலோசனைக்கூட்டத்தில்தான் ஒழுங்கு செய்யப்படும். இந்தக் கூட்டத்தார், நாங்களிருவரும் அந்த வைத்தியசாலைக்கு அருகான பங்களாவிலிருக்கக் கூடாதென்பதற்கு, ஒருவரோடு ஒருவர் ஒவ்வாத விதமாய் பல காரணங்கள் சொல்லி ஆக்ஷேபித்தார்கள். முதல் மூன்று மாதங்கள் நாங்கள் அவர்கள் சொல்வதற்கிணங்கி கன்ரோண்மெண்டு பங்களா ஒன்றிலிருந்தபின் திரும்பவும் ஊருக்குள் வசிக்க உத்தரவு கொடுக்கக் கேட்டோம். இந்த மிஷனரிகளுக்குள் டாக்டர் மக்னிக்கால் என்ற பெரியார் மிக நல்ல மனிதர், பக்தர், இந்தியர் காரியங்களில் அநுதாபங்காட்டுபவர், இவருடன் நாங்கள் சிநேகமாகி இவருக்கு எங்கள் ஆவலை வெளிப்படுத்தினோம். இவர் மிகுந்த அநுதாபம் காட்டி எங்கள் சார்பாக மிஷன் கவுண்சலில் பேசி நாங்கள் விரும்பியபடி ஊருக்குள் இருந்த பங்களாவிற்குப்போக உத்தரவு கிடைக்கும்படி செய்தார் நாங்கள் பூனாவில் வேலைசெய்த காலமெல்லாம் இவர் எங்களுக்கு மிக நட்புக் காட்டி நல்லாலோசனை சொல்லி உதவி புரிந்தார்.

மகாராஷ்டிர நாட்டில் எங்கள் வேலையிருந்ததால் மராத்தி பாஷை படிக்கத் தீர்மானித்தோம். ஒரு பிராமண பண்டிதர் தினமும் எங்களுக்கு ஒருமணி நேரம் மராத்தி பாஷை கற்றுக்கொடுப்பார். மராத்தி பாஷையின் அக்ஷரங்கள் சமஸ்கிருத அக்ஷரங்களே. பேச அழகான பாஷைதான். ஆனால் அதன் ஆண் பெண்பால்கள் மிக விநோத

மானவை. காது ஆண்பால், ஆனால் நாக்கு பெண்பால். நாக்கை படர்க்கையில் பேசும்போது அவள் என்று அழைக்கவேண்டும். அதிகப் பேச்சு பெண்களுக்குரியதென்பதின் உண்மையை உணர்த்தி காட்ட வோ மராத்தி பாஷையின் இந்த சம்பிரதாயம்? சில பதங்களின் இறுதியில் மூக்கினால் பேசும் தொனிபோலுள்ள "அநுஸ்வார்" என்னும் சப்தமுண்டு. ஆரம்பத்தில், வியாதியஸ்தர் சொல்வதை அறிந்து கொள்ள, சாதாரண சம்பாஷணை மராத்தியே கற்க ஆரம்பித்தாலும், சிறிது காலத்திற்குப்பின் மராத்தியில் அவர்களுக்குப் பிரசங்கம் செய்யக்கூடத் துணிந்துவிட்டேன்! ஆனால் இப்போது அநேகமாய் மராத்தியை மறந்துவிட்டேன். பூனாவில் நாங்கள் வேலை செய்த வைத்திய சாலை மச்சுள்ள பெரிய வைத்தியசாலை. கல்லினால் கட்டப்பட்டது. மின்சார வெளிச்சம், கிரண (எக்ஸ்ரே) பரிகார உபகரணங்கள் முதலிய உள்ளன சில காலத்திற்குப் பின் சாஸ்வாது, வாலே என்ற கிராமங்களுக்கும் வாரந்தோறும் சென்று அங்கு நாங்கள் ஏற்படுத்திய மருந்து சாலைகளில் வெளிவியாதியஸ்தரைப் பார்த்துத் தொண்டு செய்து வந்தோம். சாஸ்வாது 20 மைல் தூரமுள்ளது. இடையே மலை போன்ற ஓர் மேடும் கடக்கவேண்டும். எனினும் துவி சக்கரவண்டியில் (பைசிக்கிளில்) அதிகாலை புறப்பட்டுப் போய் மாலை திரும்பி இருட்டிய பின் வீடு சேர்வோம். மிகக் களைப்பாயிருக்கும், ஆனாலும் இக்கிராமத் தொண்டு எங்களைச் சந்தோஷப்படுத்தியது. மகாராஷ்டிராவிலுள்ள கிராமத்தாரும், தமிழ் நாட்டு கிராம மக்கள் போலவே, பல காரியங்களில், மனப்போங்குகளில் ஒரே மாதிரி இருப்பார்கள். தரித்திரமும் பேதமையும், துன்பங்களும் இவர்களுக்கெப்படியுண்டோ அவர்களுக்கும் அப்படித்தான். பலவித மொழிகளில் பேசினாலும் இந்தியாவின் கிராமவாசிகளுக்கு அவர்கள் எப்பாகத்தினரென்றாலும் இவ்விஷயங்களில் மிக ஒற்றுமையுண்டு. இவர்கள் பரிதாப நிலை கல்லான இருதயத்தையும் உருகச்செய்யும்.

நாங்கள் இங்கு தொண்டுசெய்யும்போது, பூனாவிலும் ஸ்காத்துலாந்து மிஷன் வேலைசெய்த ஜல்னா என்ற ஊரிலும், பிளேக் என்ற அரையாப்புத் தொத்துநோய் பரவி அநேக ஜனங்கள் மிகக் கஷ்டப்பட்டார்கள். நாங்கள் பூனாவில் இந்த தொத்துநோய் பிடித்த வியாதியஸ்தர்களை வீடுகளில் போய் பார்த்தும், எங்கள் வைத்தியசாலையில் சற்று விலக்கமாய் தூரத்திலிருந்த சில அறைகளில் இவர்களை வைத்துப் பரிகாரம் செய்தும் உதவி செய்துவந்தோம். தொத்துநோய் நின்றபின் பலவிதமாய் எங்களை உபசரித்து ஜனங்கள் இதற்கு மிக நன்றி பாராட்டினார்கள். நாங்களும் அவர்களோடு சிநேகிதர்களாகி நெருங்கிப் பழக நல்ல சமயம் கிடைத்தது. நாங்கள் இருவரும் முறையே நிசாம் அரசாட்சிக்குட்பட்ட ஜல்னா ஊருக்கும்போய் பிளேக் வியாதியஸ்தருக்காக மிஷன் ஏற்படுத்திய பல கொட்டைகளுள்ள ஒரு விசாலமான வெளியிடத்தில் தொண்டு செய்து அநேகருக்கு உதவி செய்தோம். இந்தத் தொத்துநோய் வராதபடி தடுக்க ஏராளமான

ஜனங்களுக்கு ஊசிமருந்தும் ஏற்றினோம். இங்கு வியாதியஸ்தர்களுக்காக பல குடிசைகள் போட்டிருந்தது. சில ஐரோப்பிய மிஷனரி அம்மாமார்கள் இரவும் பகலும் கருத்தாய் தாதிகள்போல் வேலை செய்து எனக்கு உதவியாயிருந்தார்கள் ஆனால் இங்கிருந்த மராத்தி உதவி டாக்டரும், வேலையாட்களும் மிகப்பயந்து வியாதியஸ்தரைத் தீண்டப்பின் வாங்கினார்கள். ஒரு ஆள் மரித்துவிட்டபோது நான் தனியே அந்த ஆள் பிரேதத்தைத் துணியில் சுற்றித் தூக்கிப் பாடையில் வைத்தபின்தான் கூலியாட்கள் அந்தப் பாடையை தூக்கி புதைக்குமிடத்திற்குச் சென்றார்கள். நன்றாக மராத்தி பாஷை இன்னும் எனக்குத் தெரியாவிட்டாலும் நான்தான் ஜெபம் செய்து அடக்கம் செய்வேன். ஆனால் நான் அவர்களுக்குப் புத்திசொல்லித் தைரியப்படுத்தி ஒருநாள் ஜெபாராதனை நடத்தியபின் உதவி டாக்டரும் மற்றவர்களும் தைரியமாக எனக்கு உதவிசெய்ய ஆரம்பித்தார்கள்.

இங்கு நடந்த இன்னொரு சம்பவத்தையும் மறக்கமுடியாது. ஒரு நாள் ஒரு வாலிப ஸ்திரி பிளேக் வியாதி பிடித்து அதிக கஷ்டநிலையிலிருந்த தன் புருஷனைக் கொண்டுவந்தாள். அவனை ஒரு குடிசையில் படுக்கையில் போட்டோம். ஆனால் அவன் சீக்கிரம் இறந்துவிட்டான். அந்தவேளை பொழுதும் இருட்டிவிட்டது "ஐயோ வீட்டிற்குக் கொண்டு போக ஆள்கூட்டி வரவும், ஒரு விளக்குக் கொண்டுவரவும், உதவிக்கொரு ஆளுமில்லையே" என்று கதறி அவளழுதாள். பக்கத்தில் நின்ற ஒரு மனிதனும் அவளுடன் கண்ணீர் விட்டு உரத்தசத்தமாய் அழுதான். அவன் இவ்வளவு அநுதாபத்துடன் அந்த ஸ்திரியுடன் அழுவதைப் பார்த்த நான் அவனிடம் "தயவு செய்து நீ உடனே அவள் வீட்டிற்குப்போய் இவள் சொந்தத்தினருக்கு இந்த மனிதனின் மரணத்தைச் சொல்லிவிட்டுவா" என்றேன். அவன் "எனக்கு இவள் இனஜனமில்லை, என்னால் போக முடியாது" என்று சொல்லி உதவி செய்ய மறுத்தான். அப்போது நான். "நீ ஏன் இவ்வளவு சத்தமிட்டுக் கண்ணீர்விட்டு உரக்க அழுதாய்" என்று கேட்டேன். "ஓ இந்தப் பெண் அழுகிறதைப் பார்த்த என் மனம் உருகிவிட்டதால் அவளோடு அநுதாபமுற்று அழுதேன்" என்றான். "உன் அநுதாபம் யாதொரு பிரயோஜனமற்றது. நீ இவளுக்கு காட்டிய அநுதாபம் மெய்யென்றால் அவள் வீட்டிற்குப் போய் அவள் சொந்தக்காரருக்குத் தெரிவிப்பதே அதை உபகாரப் படுத்தும்." என்றேன் அவன் அசையவில்லை. நமதநுதாபமும் எத்தனை முறை இப்படிப்பட்ட வெறும் மனோசலனத்தைத் தழுவியதேயன்றி கிரியை செய்யாததும், பிரயோஜனமற்றதாயுமிருக்கிறது!

நாங்கள் பூனாவிலிருந்த காலத்தில் மகாராஷ்டிரத்தில் மிகவும் பெயர் பெற்றுத் துலங்கிய கிறிஸ்தவக் கவிராயர் நாராயணவாமன் திலகர் என்னும் பெரியாருடன் நன்கு பழக நல்ல சமயம் கிடைத்தது. இக்காலத்தில் இவர் மிஷனில் சம்பளம் பெற்று வேலை செய்வதை

விட்டுவிட்டு கடவுளையே சார்ந்து தனது சவர்க்ஷணைகளுக்கு நம்பி ஒரு சாதுபோல வாழ்க்கை செய்துவந்தார். வெள்ளை அங்கியுடை தரித்துக் கொள்வார். இவர் மராத்தியில் பிரசங்கம் செய்வது உயர் நடையானதால் எனக்கு அதிகம் விளங்காது. இவர் இயற்றிய பாட்டுகள் மிக இனிமையானதும், ஆழ்ந்த கருத்துள்ளவைகளுமானவை. "கிறிஸ்து தாய் போன்றவர்" என்ற ஒரு பாட்டு மிக பரவசமாகக்கூடியது. மிகவும் தேசபக்தியுள்ளவர். மெய்யான சுயராஜ்யத்திற்கு கிறிஸ்து பக்தியே மிக அநுசரணையானது என்னும் நம்பிக்கை இவர் கிறிஸ்தவனானதற்கு ஒரு காரணம். "உந்தன் மீதுறும் ஆசையால் ஓடெடுத்துக் கந்தையுடுத்துவேன்" என்று தமிழில் திருப்பியிருக்கும் இவரியற்றிய கீதத்தினால் இவர் தேசபக்தி எத்துணை அதிகமென்றறியலாம். "கிறிஸ்திய தர்பார்" என்னும் ஒரு சங்கம் ஏற்படுத்தினார். கிறிஸ்து பக்தியுள்ளவர்கள் எவரும் இச்சங்க அங்கங்களாகலாம். ஆனால் ஞானஸ்நானம் பெற்றிருக்க அவசியமில்லை. ஒவ்வொருவரும் தங்கள் பிழைப்பிற்காக செய்கிற தொழிலேயல்லாமல் வேறு மற்றவர்கள் நன்மைக்காக ஏதாவது ஒரு சிறு தொண்டாவது அநுதினமும் செய்ய வேண்டுமென்பது இந்த சங்க அங்கத்தினர் செய்துகொள்ளவேண்டிய ஒரு விரதம். ஒரு ஏழை மனிதன் தான் என்ன செய்யக்கூடும் என்று கேட்டபோது இவர், பழைய வர்த்தமான பத்திரிகைகளைக் சேர்த்து பத்திரிகைகள் விலைக்கு வாங்க நிர்வாகமில்லாதவர்களுக்குக் கொண்டு போய்க் கொடுக்க, அவனுக்கு ஆலோசனை சொன்னார். எங்களுடன் சில நாட்கள் எங்கள் வீட்டில் தங்கி வைத்தியசாலையில் வியாதியஸ்தருக்குப் பாடிப் புத்திகள் சொல்லி உதவினார்.

நாங்களிருந்த வீட்டுக்குச் சமீபத்தில் ஒரு அழகிய குன்றுண்டு. அதின்மேல் ஒரு இந்து கோயில் இருந்தது பக்கத்துக் காட்சியருமையாயிருக்கும். நாங்கள் இந்த மலைக்கு மாலை தியானம், அமைதி, ஜெபத்திற்குப் போவதுண்டு.

இக்காலத்தில் இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ்காரரெல்லாம் ராணுவத்தைச் சேரவேண்டுமென்று ஆங்கில சர்க்கார் சட்டம் ஏற்படுத்தினார்கள். இதனால், சகோதரன் பேட்டன், இந்தச் சட்டத்தின்படி இராணுவத்தைச் சேர மறுப்போர்களை விசாரணை செய்யும்படி சர்க்கார் ஏற்படுத்திய ஓர் பஞ்சாயத்தின் முன்பாக போகவேண்டியது நேரிட்டது. அவர்கள் விசாரணை செய்தபோது, இவர் கிறிஸ்துவின் கட்டளையின்படி சத்துருக்களைச் சிநேகித்து அவர்களை அன்பினால் வசப்படுத்துவதையே சரியென்று எண்ணுவதினால் இராணுவத்தில் யாதொரு பங்குமெடுத்துக்கொள்ள, தான் சம்மதிக்க மாட்டேனென்று சாக்ஷி பகர்ந்தார். அந்த ஆங்கில பஞ்சாயத்தார் இவர் சொன்னதைக் குறித்துப் பகடியாய் பேசி இவர் இராணுவ விஷயமாக அவர்கள் கட்டளையின்படியே நடக்கவேண்டுமென்றே தீர்ப்புச் செய்துவிட்டார்கள். இராணுவ அதிகாரியிடமிருந்து, மறுநாள் காலை பட்டாளத்தில்

சேர்ந்து அப்பியாசம் செய்ய வரும்படி, ஒரு உத்தரவும் ஒரு நாள் தபாலில் வந்தது. அன்று மாலை நாங்களிருவரும் பூனா நகரத்தின் வெளியே ஒரு அமைதியான இடத்துக்குப்போய் ஜெபித்துக் கலந்து பேசிக்கொண்டிருந்தோம். சகோதரன் பேட்டன் அதிகாரிகளால் கைது செய்யப்படவும் சிறை புகவும் ஆயத்தமாயிருந்தார். ஆனால் ஆங்கில ராஜப்பிரதிநிதி இவரைக் குறித்து சில விசாரணைகள் செய்தார் சகோதரன் பேட்டனும் தன் மனச்சாக்ஷியின்படி கொண்டிருந்த கொள்கைகளைக் குறித்து விவரமாய் அவருக்கு எழுதியிருந்த கடிதத்தின் பயனாக இவரை சிறையில் போடாமல் விட்டுவிட்டார்கள்.

நான் பூனாவிலிருக்கையில் என் மூத்த தமையனார் (பவுலண்ணன்) மிக வியாதியாக மிரஜ் மிஷன் வைத்திய சாலைக்கு ஆயுதவேலை செய்யப்படக் கொண்டுவரப்பட்டார்கள் குணமாகாமல் பாளையங்கோட்டை திரும்பியபின் மரணமானார்கள் ஜீவிய காலத்திலிருந்த பலவித துயரங்கள் கஷ்டங்களோடு இவர்களுக்கு முடிவில் வந்த நோயும் மிக சரீரவேதனை குறைந்ததாயிருந்தது. 47ம் வயதில் மரணமாகிவிட்டார்கள். நாங்கள் பூனாவில் ஒரு மிஷன் ஆஸ்பத்திரியில் வேலைசெய்ததின் பலனாக சில காரியங்கள் எங்களுக்குத் தெளிவாயிற்று இந்தியர் ஒரு மிஷன் ஸ்தாபனத்துத் தலைவராக வேலைசெய்ய மேல்நாட்டு மிஷன் சங்கங்களில் இருக்கிற தடைகளைக் குறித்து இந்த அத்தியாய ஆரம்பத்திலேயே சொல்லிவிட்டேன். ஐரோப்பியர்கள் இந்தியர் தலைமையின் கீழ் தொண்டுசெய்ய அவர்களால் வரும் தடையை மாத்திரம் சொன்னேன். இது சம்பந்தமாக பலவருஷ அநுபவமாக நானறியும் இன்னொரு மிக துயரமான இடையூறுமுண்டு. இந்திய சிப்பந்திகள் ஒரு ஐரோப்பியனுக்குக் கொடுக்கும் மரியாதை மதிப்பு இந்தியத் தலைவனுக்குக் கொடுக்க மறுப்பதே. ஒரு ஐரோப்பியன் காலாலிட்டதைத் தலையால் செய்ய ஆயத்தமாயிருக்கும் இந்தியர்கள் அதே கட்டளையை ஒரு இந்தியத் தலைவனிடும்போது முறுக்குப்பண்ணி கீழ்படியாமல் நடந்துகொள்வதுண்டு. "துரை. துரை" என்று ஒரு ஐரோப்பியன் பின்னாலே ஓடுவார்கள். சில வருஷங்களுக்கு முன் நடந்த ஒரு வேடிக்கையான சம்பவத்தை இங்கு எடுத்துரைக்கிறேன். எங்கள் ஆசிரம வைத்தியசாலையில் உதவி செய்த ஒரு மலையாளி டாக்டர் இருந்தார். அவர் வாலிபன், சாதாரண எல். எம். பி. தேறிய வைத்தியன்தான். ஆனால் மிக வெள்ளை நிற முடையவர் நான் அவரைவிட வயதுள்ளவனும், அதிக வைத்தியப் பட்டங்கள் பெற்று அநுபவமுள்ளவனுமாயினும் நான் சில வியாதியஸ்தரைப் பார்த்துப் பரீக்ஷித்த பின், அவர்கள் இந்த வெள்ளை நிறமான மலையாளி டாக்டரிடம் போய் அவர் அவர்களைப் பரீக்ஷித்துப் பார்க்கும்படிக்குக் கெஞ்சுவார்கள்! இது நிற்க.

மிஷன் ஆஸ்பத்திரிகளில் மேல் வேலையாள் கீழ் தொழிலாளிகள், காம்பவுண்டர். நர்ஸ்கள், தோட்டிகள் கூட கிறிஸ்துவின் அன்பினால்

ஏவப்பட்டு சகோதர ஐக்கியமாக ஏகோபித்து ஒரே மனதுடன் தொண்டுசெய்யாவிட்டால் அந்தத்தொண்டில் பிரயோஜனமில்லை என்றும் கண்டோம். பெரிய டாக்டர் எத்துணை அன்போடும் ஆர்வம் அக்கறையுடன் தொண்டுசெய்தாலும், கீழ் வேலை என்று சொல்லப்பட்ட வேலை செய்பவர்கள். அவர் நல் வேலையையெல்லாம் தங்கள் தவறான போக்குகளினால் குலைத்துவிடக்கூடும். சில வேளைகளில் நாம் கேவலமான வேலையென்று நினைப்பதுதான் கிறிஸ்துவின் அன்பையும் தாழ்மையும் காட்டும் மேலான தொண்டாயிருக்கலாம். அவர் தமது சீஷரின் கால்களைக் கழுவினாரே. பலவித உயர்ந்த தாழ்ந்த சம்பளங்களினாலும் இந்த ஸ்தாபனங்களில் மனிதரை உயர்ந்த தாழ்ந்த அந்தஸ்து .உள்ளவர்களென்று பிரித்துவிடுகிறார்கள். இதனால் சகோதர சமநிலைக்குத் தடைகள் ஏற்பட்டுவிடுகின்றன. இப்படி பல காரியங்களைக் கவனித்தால் பக்தர்கள் வேலைசெய்யும் ஸ்தாபனங்களில் சகோதர ஐக்கியக் கூட்ட பாவனையாக தொண்டுசெய்வதே சரியாகும் என்று எங்களிருவருக்கும் தோன்றியது.

என். எம். எஸ். என்ற இந்திய மிஷனரி சங்கக் காரியதரிசியாயிருந்த கே. தி. பால் என்னும் பெரியாருக்குக் கடிதமெழுதி நாங்களிருவரும் சகோதரப் பான்மையாக அவர்கள் சங்கம் வேலைசெய்யும் ஒரு இடத்தில் வேலை செய்யும் ஒரு இடத்தில் வேலைசெய்ய எங்களிருவரையும் ஏற்றுக்கொள்வார்களா என்று எழுதி விசாரித்தோம். அந்த சங்கத்தார் சந்தோஷமாக எங்களிருவரையும் ஏற்றுக்கொள்ள ஒரு தடையுமிராதென்பதாக பதில் தெரிவித்தார்கள்

1916ம் வருஷக் கடைசியில் ஆக்ரா நகரில் நடந்த அகில இந்திய கிறிஸ்தவ மகாநாட்டிற்கும் போயிருந்தோம். இங்கு பல இந்திய கிறிஸ்தவத் தலைவர்களையும் கண்டுபழக சமயம் கிடைத்தது. அங்கிருந்த தாஜ்மஹால் என்ற சலவை மண்டப சமாதியின் அரும் காட்சியையும் பார்த்து மகிழ்ந்தோம். ஷாஜகான் என்ற ஓர் இந்திய சக்கிரவர்த்தி தன் ஆருயிர் மனைவியாகிய மும்தாஜ்மஹாலின் பேரிலிருந்த அன்பை விளக்க இந்த சிற்பமாண்புடைய அழகிய கல்லறை மண்டபம் இயற்றியிருப்பது உலகத்தின் பல தேசத்தினரும் பார்த்துப் பாராட்டும் பெரும் காட்சி. நிலாவெளிச்சம் பிரகாசிக்கும் இரவுகளில் முத்துக்கள் பதிக்கப்பட்ட இதன் பக்கங்களிலிருந்து ஜொலிக்கும் பிரதிபிம்பம் கண்ணைக் கவரும். இதினுள் நின்று பாடினால், கிண்ண வடிவமான இதன் முகடு, இனிய குரலோடு அந்த இராகத்தின் எதிரொலி திரும்ப நம்து காதுகள் கேட்கச்செய்யும்.

இங்கிருந்து டில்லி போய் அங்கிருந்த கல்லூரித் தலைவரும் தீனபந்து ஆண்டிரூஸின் ஆப்த நண்பருமான சூசில் குமாரன் ருத்திரா என்ற கிறிஸ்தவ பக்தரையும் பார்த்தோம். பஞ்சாபில் என். எம். எஸ். சங்கத்தார் வேலை செய்த ஒக்காரா என்ற இடமும் போயிருந்தோம்.

அத்தியாயம் 10

ஐரோப்பாவிற்கு மூன்ருவது பிரயாணம்.

நாங்களிருவரும் பூனுவிற்கு வந்தது இரண்டு வருஷம் அல்லது யுத்தம் முடியுமட்டு மாத்திரமே. ஆனுல் ஐரோப்பிய யுத்தம் நீடித்துக்கொண்டேயிருந்தது. அது இரண்டு வருஷத்திற்குள் முடிவதாக ஒரு அறிகுறியும் தென்படவில்லை; எங்களுக்கு ஆண்டவர் குறித்த ஜீவிய வேலையையும் நாங்கள் கடத்திக்கொண்டுபோவது சரியாய்த் தோன்றவில்லை. சகோதரன் பேட்டனுடன் இந்தியாவிற்கு நான் எதிர்பார்த்த காலத்திற்கு முன்னேயே திரும்பிவிடவேண்டியதிருந்ததால், பிரித்தானியாவிற்கு எப். ஆர். ஸி. எஸ். என்ற க்ஷத்திரப்பிரயோக நிபுணப் பரீக்ஷை தேற நான் போயிருந்த நோக்கம் நிறைவேற்றவும் முடியாமல் பூனுவிற்கு வர நேரிட்டது. சகோதரன் பேட்டனை பூனுவில் விட்டுவிட்டுத் திரும்பவும் பிரித்தானியா போக எனக்குப் பிரியமேயில்லை. எனினும் நாங்களிருவரும் ஆழ்ந்து யோசித்தபின் 1917ம் வருஷம் இறுதியில் நான் திரும்ப பிரித்தானியா சென்று எப். ஆர். ஸி. எஸ். பரீக்ஷைக்குப் படிப்பதே சரியென்று தோன்றிற்று. நான் கப்பலேறக் குறிப்பிட்ட நாளில் அப்படிச் செய்ய முடியாதபடி இரண்டு தடவை தடைகள் ஏற்பட்டன. முதல் தடவை சகோதரன் பேட்டன் சுகவீனத்தால், இரண்டாம் முறை என் சுகவீனத்தால். கடைசியாக 1917 டிசம்பர் 12ம் தெய்தி பம்பாயில் கப்பலேறினேன். பூனுவிலிருந்த என் நண்பர்கள், இப்படிப்பட்ட பயங்கர யுத்தகாலத்தில் கடலின் மோசம், எதிரிகளால் வரும் உயிராபத்துக்களையும் கவனிக்காமல் நான் புறப்படுவதைக் குறித்துப் பயந்து எச்சரித்தார்கள். நான் சென்ற கப்பல் பேர் "சார்தினியா. பி. அண்டு. ஒ. கம்பனி." என் கூடப் பிரயாணம் செய்தவர்கள் அநேகமாய் ஆங்கில சர்க்கார் உத்தியோகஸ்தர். இவர்கள் கப்பலின் மேல் தட்டுகளுக்கு வரும் சமயங்களில் என்னுடன் தாராளமாய்ப் பேசுவார்கள். ஆனுல் சாப்பாட்டு வேளையில் இந்தத் துரைமார் ஒருவரும் என் பக்கம் உட்காரமாட்டார்கள்! இதினுல் எனக்குத் தனியே பிரத்தியேகமான ஒருமேசையும் பரிமாற ஆளும் கிடைத்தது! துரைகளில் சிலர் சம்பாஷணையும் அடிக்கடி அவலக்ஷணமாயிருக்கும். இப்படிப்பட்டவர்களுக்கு விலகியிருப்பதினுல் வரும் சாந்தியும் எனக்கு ஒரு பாக்கியமாயிருந்தது. ஆனுலும் நட்பையும் நல்லோர் சகவாசத்தையும் அதிகமாக விரும்பித்தேடும் எனக்கு தனியே விடப்பட்ட உணர்ச்சி மேல் கொள்ளும் சமயங்களில் மிக மனக்கஷ்டமாயிருந்தது. ஒருநாள் இப்படிப்பட்ட சமயத்தில் என் தினவர்த்தமானக் குறிப்பு புத்தகத்தில் பின்வருமாறு எழுதியிருக்கிறேன். ...."16—1—1918...எனக்கு அருமையானவரும் என்னேடு எப்போதுமிருக்கிறவருமான என் நண்பராகிய இயேசுவின் பிரசன்னத்தை உணர்ந்து அநுபவிக்க போதுமான நம்பிக்கை எனக்குக் கிடைப்பதாக. தேச, நிற வேற்றுமையினுல் சுரக்கும் ஜாதி பைத்தியம் எவ்வளவாய் மனம் நொந்துபோகச் செய்கிறது! இந்த அற்ப சிந்தையுள்ள மக்களுக்காக நான் துக்கப்படுகிறேன். இவர்கள் பெருமை எத்துணை மூடத் தன்மையானது! இவர்கள் கண்மூடித் தனத்தை என்னென்பேன்?"

இந்த தனியே விடப்பட்ட உணர்ச்சியினால் சுவிசேஷத்தை அதிகமாக வாசித்து ஆராய்ச்சி செய்து இயேசு என்னுடனிருக்கிறார் என்ற உணர்ச்சியை எனக்குள் வளர்க்க முயற்சித்தேன். இந்த வீண் பெருமை வாய்ந்த மக்களுக்குள் ஒரு ஸ்காத்துலாந்து தேசப்பிரயாணி இருந்தார். இவர் முன்னே ஒரு கப்பல் மாலுமியாயிருந்தவர். இவர் பெயர் மக்டானல்ட்டு. இவரும் நானும் கிறிஸ்துவின் மலைப்பிரசங்கமென்று சொல்லப்படும் அருள் வசனங்களைக் குறித்து நீண்ட சம்பாஷணை செய்வோம். கிறிஸ்தவ சபைகளைப்பற்றி இவருக்கு கொஞ்சமென்கிலும் நல்லபிப்பிராயம் கிடையாது. துன்பம், துயரம் நிறைந்த இவ்வுலகுக்கு திருச்சபையால் ஒரு நன்மையும் கிடையாது, ஒரு நல்ல போதகமும் அது கொடுப்பதில்லை என்று முறையிடுவார். கப்பலின் சில தொழிலாளிகளும் என்னுடன் நட்பு காட்டிப் பேசுவார்கள்.

எகிப்தினுள் போர்டுசயித் துறைமுகம் சேருமட்டும் யாதொரு தொல்லையில்லாமல் நற்பிரயாணம் செய்தோம். ஜனுவரி மாதம் 13ம் தெய்தி இங்கு சேர்ந்தோம். ஆனால் இரண்டுவாரம் இங்கே எங்கள் கப்பல் தங்கியிருந்தது. வழக்கமாக 12 மணி நேரம் இங்கு கப்பல்கள் தங்குவது மிக அபூர்வம். ஒரு நாள் திடீரென்று கப்பல் பின் திருப்பி மறுபடியும் சிவந்தசமுத்திரத்திற்குள் வந்து “கசப்பேரி” என்றழைக்கப்படும் சிவந்தசமுத்திரத்தின் ஒரு பாகத்தில் மூன்று நாட்கள் நங்கூரமிட்டுத் தங்கியிருந்தது. “கசப்பேரி” என்ற பெயர் இந்த இடத்திற்கு மிகப் பொருத்தமாகத்தான் எனக்குத் தோன்றியது! இப்படி இந்த அவாந்தரமான இடத்தில் மூன்று நாட்கள் கப்பலிலேயே தரை கிட்டாமல் இருப்பது கடுஞ் சிறைவாசமாக எனக்கிருந்தது! என் மனம் புண்ணுய்த் தவித்தது. திரும்பவும் போர்டுசயித் போனபின் தான் மத்தியதரைக் கடலில் கடல் படைகளுக்குள் போர் நிகழ்ந்ததாகவும் போர்டுசயித் துறைமுகமட்டும் போர் பரவக் கூடுமென்ற பயத்தினால் எங்கள் கப்பலைத் தூர அனுப்பிவிட்டதாக அறிந்தோம். பல கப்பல்கள் சேர்ந்தபின் எங்களுக்குக் காவலாக சில யுத்தக்கப்பல்கள் எங்கள் கப்பல்களைச் சூழ்ந்து பிரயாணம் செய்ய நாங்கள் மத்தியதரைக் கடல் சென்றோம். ஒரு பெரும் கப்பல் படைகள்போல் எங்கள் பரிவாரங்கள் தோன்றின. யுத்தக்கப்பல்களுட்பட 32 கப்பல்கள் ஒன்றாகப் பிரயாணம் செய்தன. கப்பல்கள் எல்லாம் நேரே செல்லாமல் வளைந்து வளைந்து கோணல் மாணலான விதமாக ஓடிக்கொண்டிருந்தன. எதிரியின் முழுகு கப்பல்கள் பீரங்குண்டுகள் அனுப்பும் போது அவற்றிற்குத் தப்பிக்கொள்ளும்படி இந்தத் தந்திரம்! இரவில் விளக்கு வெளிச்சம் மிக மங்கலாகத்தான் தெரியும். விளக்கு கூண்டுகளெல்லாம் வெளியில் கறுப்புமை பூசப்பட்டிருந்தன.

கப்பலுக்கு ஆபத்து வந்தால் தப்பிக்கொள்ளும்படி பல தோணிகள் ஆயத்தமாக மேல் தட்டில் வைக்கப்பட்டிருந்தன. இத் தோணிகளில் அவசியமான சில ஆகாராதிகளும், குடிக்கத் தண்ணீரும் வைக்

கப் பட்டிருந்தன. நாங்களும் அவசரம் ஏற்பட்டால் எப்படி யாதொரு குழப்பமுமில்லாமல் ஒழுங்காய் அவரவர் ஒழுங்கின்படி தோணிகளுக்கருகில் சென்று அவற்றில் ஏறித் தப்பிக்கொள்ள வேண்டுமென்று எங்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படும். கடலில் விழுந்துவிட்டால் மிதந்துகொள்ள உதவியாயிருக்கும்படி கார்க்கினால் (இலகுவான தட்டை வஸ்து) செய்யப்பட்ட மிதக்கச்சையை அணிந்துகொள்ளவும் பயின்றோம். மேல் தட்டுக்குப் போனாலும் சாப்பாட்டு அறைக்குச் சென்றாலும் எப்போதும் எங்கள் கூடவே இம் மிதக்கச்சையை எடுத்துக்கொண்டு போவோம். யாரறிவார் எவ்வேளை இதின் அவசியம் ஏற்படுமென்று? பிரயாணிகள் கப்பலேயாயினும் எங்கள் கப்பலில் பீரங்கியிருந்தது. இச்சமயத்தில் என் மனதில் ஒரு பெரிய போராட்டம் ஏற்பட்டது. கிறிஸ்துவின் மலைப் பிரசங்கப்படி அஹிம்சா முறையைக் கையாடுபவன் மற்றவர்களைக் கொல்லும் யுத்த விஷயங்களில் யாதொரு பங்குமெடுத்துக்கொள்வது தவறு என்று சொல்லும் நான், யுத்தக் கப்பல்களினால்- இப்போது பாதுகாக்கப்பட்டு, பிரயாணம் செய்வது சரியா? இந்த யுத்தக்கப்பல்களின் பாதுகாப்பு எனக்கிராவிட்டால் நான் இந்தியாவிலிருந்து ஐரோப்பாவிற்கு இச்சமயத்தில் புறப்பட்டிருப்பேனா? போர்ட் சயித்திலிருந்து புறப்பட்டபின் தான் இந்த யுத்தக் கப்பல்கள் பாதுகாப்பு ஆரம்பித்தது. இதினால் போர்டு சயித்திலிருந்து நான் இந்தியாவிற்குத் திரும்பிவிட்டிருக்கவேண்டுமா? இப்படி பலவிதமாக என் மனம் யோசித்து யோசித்துக் கலங்கித் தவித்தேன். நான் தினம் வாசிக்கும் வேதாகமம் இச்சமயத்தில் எனக்கு வெளிச்சம் கொண்டுவந்தது. பவுலப்போஸ்தலன் கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபம் 5ம் அதிகாரம் 9 முதல் 13 வசனங்கள் எனக்கு சற்று உதவியாகயிருந்தன. பவுல் இங்கே என் மனநிலைக்கு முற்றும் வேறான இன்னொரு விஷயத்தில்தான் இந்த தம்முடைய ஆலோசனையைச் சொன்னாலும் ஒருவிதமாக இது என் கலக்கங்களைப் போக்க உதவியாயிருந்தது. நான் இந்த உலகத்தில் உலக வழக்கம், பழக்கம், அதின் தீமைகள், முறைகள், போங்குகளைத் தழுவி ஏற்பட்டிருக்கும் அரசியல்கள், சமுதாயங்கள், கட்டுப்பாடுகள் முதலியன நடுவில் பிறந்திருக்கிறேன், வசிக்கிறேன், என் வாழ்க்கையை நடத்தவேண்டியவனாயிருக்கின்றேன். இந்த சமுதாயம் அதின் கட்டுபாடுகள் போங்குகளை நான் உண்டாக்கவில்லை. இவைகளோடு மானிடரின் வாழ்க்கை அடிக்கடி அவர்கள் அறியாமலே புணர்ந்து நெருங்கிமாட்டி இசைக்கப்பட்டிருக்கிறது. நானும் என்னை அறியாமலே சில வேளைகளில் என் இஷ்டத்திற்கு விரோதமாகவே இந்த சமுதாயச்சிக்கில் மாட்டிக்கொண்டிருக்கிறேன். இதிலிருந்து முற்றிலும் என்னைப் பிரித்துக்கொள்ள முயன்றால், பலாத்காரமாக சமுதாயத்திலிருந்து என்னைக்கிழித்திழுத்தாற்போல் என்னை தனிப்படுத்தி பிரித்து, காடோமலையோ சென்று, வனவாசியாக மனித சஞ்சாரத்திற்கும் அதின் கோட்பாடுகளுக்கும் தூரவிலகி ஓடிவிட வேண்டும். திருடின வஸ்துவை நானறியாமலே நானநுபவித்துக்

கொண்டிருக்கலாமே, அநியாய சம்பாத்தியத்தில் எனக்கு பங்கிருக்கலாமே கிறிஸ்துவின் போதகம் அடிமைத்தனத்திற்கு முற்றிலும் மாறானதென்றாலும் அவரும் அவருடைய சீஷரும் அடிமைகள் செய்த பணிவிடையை ஏற்றிருந்திருப்பார்கள். ஆனால் நான் ஒரு காரியத்தில் மிகக் கவனமாய் எச்சரிப்போடு நடந்துகொள்ளவேண்டும். சமுதாயத்தில் விளங்கும் தீமைகளுக்கு நான் காரணமாயிருக்கலாகாது. என் ஜீவிய நடபடிக்கைகள் மற்றவர்களுக்குத் தீமையாயிருக்கும் எதற்கும் விலகியிருக்கவேண்டும். யுத்தங்கள் நடப்பதற்கு நான் எவ்விஷயத்திலும் காரணமாயிருக்கக்கூடாது. யுத்தங்களுக்கு முக்கிய மூட்டுக் காரணமாகிய தன்னயம், பொறாமை, சுகபோக இன்பங்களை முக்கியப்படுத்தல், இப்படிப்பட்ட தீமைகளை அறவே என் ஜீவியத்திலிருந்து அகற்றிவிட நான் முயற்சி செய்ய வேண்டும். தன்னயம் நிறைந்து மற்றவர்கள் குறை பலவீனங்களை என் லாபத்திற்கேற்ற அல்லது என் சுய நாட்டார் முன்னேறுவதற்கேற்ற நற்சமயமாக பாவித்து, ஏமாந்த இதர நாடுகளை என் தேச மகிமை நன்மைக்கென்று உபயோகப்படுத்தப் பார்க்கும் தன்னயமான தீய தேசாபிமானத்தை விலக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக அன்பே என் ஜீவியத்தின் அந்தரங்க எண்ணங்கள், விருப்பங்கள், செய்கைகளையெல்லாம் வசப்படுத்தி ஆளும் மூலகாரணமாகயிருக்க வேண்டும். மற்றவர்களால் நான் லாபமடைய அல்ல, என்னை மற்றவர்கள் நன்மைக்கென்று தியாகிப்பதே எனக்கு இன்பமாகயிருக்கவேண்டும்.

அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கிவிட்டுவிட்டால்;

இன்ப நிலைவந்து எய்தும் பராபரமே.

இப்படி என் ஜீவியத்தில் எனக்கிருந்திருக்கும் போராட்டங்களை இந்த சுய சரிதையின் பல இடங்களில் கூறியிருக்கிறேன். உதாரணமாக மணப்பாட்டில் 16-5-1902 மாலையில் என் மனக் குழப்பத்தில் கிடைத்த கிறிஸ்துவின் தரிசனம், இப்படிப்பட்ட சமயங்களில் எனக்குப் பேருதவியாயிருந்தது. கடவுளின் திவ்விய வசனமே, மவுனமாக, பதைப்பில்லாது அமர்ந்து கடவுளுக்குக் காத்திருந்து அவர் வசனமாகிய திருமறையை ஆராய்வதினால் வரும் திவ்விய வெளிச்சத்திற்கும் வழிநடத்துதலுக்கும் நான் அனுபவத்திலிருந்து என் வாலிப நண்பர்களுக்கு சாக்ஷி பகருவேன். தெய்வ சித்தமறிய இதுவே ஓர் பேருதவி.

ஆண்டவர் என்னை சொந்தமாக்கிக்கொண்டபின் என் இளம் பிராயத்தில் என் மனதில் ஒரு தடவை மிகுந்த கலக்கமுண்டாயிற்று. வாலிபருக்கு வரும் சோதனைகள் மேற்கொண்டு ஜீவியகால முடிவு பரியந்தமும் அவருடைய அடியானாக நிலைத்திருக்க என்னால் முடியுமோ? இவை என்னை ஆழ்த்திவிடுமோ? இப்படிப்பட்ட பயமும் சந்தேகமும் மேற்கொண்டு மிகவும் தியங்கினேன். ஒரு நாள் சாயந்திரம் இவ்விதமான மனக்குழப்பத்தோடு வெளியே உலாவப் போயிருந்தேன். பாளையங்கோட்டைக்கு மேற்கே தாம்பரவர்ணி நதியின் ஓரத்திலுள்ள கொக்கரை

குளம் என்ற ஊர் கடந்து மேலப்பாளையம் என்ற கிராமத்திற்கு போகும் வழியில் நடந்துகொண்டிருந்தேன். என் மனம் பொங்கி பின் வரும் சரணத்தை அதன் மூல பாஷையாகிய ஆங்கிலத்தில் பாடிக் கொண்டே போனேன்.

1\. ஆத்தும அடைக்கலம் அன்புள்ள இயேசுவே
அய்யா, புகலிடம் தாரும்;
காற்றுப் பெருவெள்ளம்போல் சீற்றம் கொள்ளுது துன்பம்;
கைகொடுத் தென்னை ஆற்ற வாரும்.

2\. எந்தப் பாவமும் மூடும் விந்தைக் கிருபை உண்டும்மில்,
என்பாவம் தீர்த்தருளும், கோவே;
நொந்த என்னை நீர் ஆற்றிச் சிந்தையைப் புதுப்பித்து
நோக்கும் அதைத் தூயதாய், தேவே.

3\. நீரே என் நம்பிக்கை, நீரே என் தஞ்சம்
நீசன் எனக்கு வேறார் ஐயா
சாரும் நிராயுதன் யான் போரில் விழாப்படி
தாங்கும் உன் மறைவினில் ஐயா

4\. ஜீவ ஊற்றே, உம்மில் யான் தெளிந்து குடிப்பேனாக;
தீராத தாகங்கள் தீரும்;
ஓவா நித்தியமட்டமாகப் பாவி என் நெஞ்சில் ஊறும்
உன்னத அன்பன் இயேசு, வாரும்.

அதே நேரத்தில் யோவான் 10:28. "என் ஆடுகள் ஒருக்காலும் அழிந்துபோவதேயில்லை. ஒருவனும் என் கையிலிருந்து பறித்துக் கொள்வதில்லை" என்ற கிறிஸ்துவின் வார்த்தைகள் என் காதில் தொனித்தன. உடனே என் போராட்டம் நின்றது. என் மனக் குழப்பம் பறந்தது. தைரியமும் கிறிஸ்து என்னை முடிவு பரியந்தம் நிலைநிற்கச்செய்வாரென்று உறுதியான நம்பிக்கையும் வந்துவிட்டது.

இப்படி என் ஜீவியத்தில் எனக்கு வந்த போராட்டங்கள், மனக் குழப்பங்கள் சமயங்களில் எல்லாம் ஆண்டவருடைய சமூகத்தில் நான் அமர்ந்திருந்ததினால் அவருடைய திருவசனத்தின் மூலமாய் எனக்கு வெளிச்சமும் கிடைத்திருக்கிறது. சந்தேகங்கள் மனக்குழப்பங்களால் வருந்தும் வாலிபருக்கு உதவியாக நான் பகரும் சாக்ஷி இதுவே.

31-12-1917 பம்பாயிலிருந்து புறப்பட்டோம். இப்போது பெப்ருவரி மாதம் 1918ம் வருஷமாகிவிட்டது. இன்னும் சமுத்திரத்தின் அலைமோத அசைவாடிக்கொண்டுதான் சுழன்று சுழன்று கோணலான மார்க்கமாகச் சென்றுகொண்டிருந்தோம். வழக்கமாக பம்பாயிலிருந்து

லண்டனுக்கு 16 நாட்களில் போய்விடலாம். இப்போதோ 35 நாட்களாகியும் மத்தியதரைக் கடலில்தான் எங்கள் கடலாட்டம்! பெப்ருவரி மாதம் 5ம் தெய்தி பிற்பகல் எதிரிகளின் ஒரு மூழ்கப்பல் தென்பட்டது உடனே எல்லாக் கப்பல்களும் பின்பக்கமாகிய அமரத்திலிருந்து புகை உண்டுபண்ணும் சில வஸ்துக்களை எரித்து பின்புறங்களிலிருந்து மிகவும் இருண்ட புகை உண்டாகச் செய்தார்கள். இப்புகை எழும்பி எங்கள் கப்பல்களைப் பின்தொடரும் எதிரி மூழ் கப்பல்களுக்கு எங்களை மறைத்தது.

இப்படி பிற்பகல் சென்றது. சூரியன் அஸ்தமித்தது, இரவின் இருள் மேற்கொண்டது. இரவு ஆகாரமருந்த நாங்கள் போஜனசாலையிலிருந்தோம். போஜனை முடிக்கும் வேளையில் இரவு 8 மணி போல் நான் வழக்கம்போல் என் தனி மேசை பக்கம் உட்கார்ந்து கிறிஸ்து அநுசாரம் என்ற புத்தகம் வாசித்துக்கொண்டிருந்தேன். இடிமுழக்கம் போல் பெரும் சத்தம் எழும்பியது. கப்பலின் வட்ட ஜன்னல்களை மூடும் கண்ணுடி மூடிகள் துண்டு துண்டுகளாக உடைந்து பக்கங்களில் விழுந்தன. மேசையிலிருந்த கரண்டிகள், கத்திகள், முள்கள் முதலியன கீழே சிதறி விழுந்தன. உயிர் பாதுகாக்கும் சிறு தோணிகளுக்கு உடனே செல்லுங்கள் என்ற சத்தம் கேட்டது. கப்பலும் ஓயாது ஊதிக்கொண்டிருந்தது. எனக்குக் குறிக்கப்பட்ட எங்கள் உயிர் தோணி, கப்பல் பக்கமாய் இறக்கப்படும் சமயத்திலே அது இறங்குமிடத்திற்கு நேரே கப்பலிலிருந்து வரும் கால்வாய் தண்ணீர் பலமாய் ஓடிக்கொண்டிருந்தது. அந்த நீரோட்டம் எங்கள் தோணிக்குள் வந்தால் அப்படியே நாங்கள் ஆழ்ந்து கடலுக்குள் மூழ்கிப்போக வேண்டியதுதான். ஆனல் நாங்கள் தோணியின் வலிப்புத்தண்டுகளை கப்பலின் மேல் ஊன்ற பலமாய்ப் பிடித்து எங்கள் தோணியை கப்பலுக்கு சற்று தூரமாய்த் தள்ளிக்கொண்டு இந்த பலத்த நீரோட்டத்திற்குத் தப்பினோம். எனினும் தோணியின் அடியில் கால் பங்கு பாகம் தண்ணீரால் நிரம்பிவிட்டது. எங்கள் கைகளில் தொப்பி, தகரங்கள் கிடைத்தவைகளைக் கொண்டு தோணியிலிருந்த தண்ணீரை மொண்டு மொண்டு வெளியே ஊற்றிக்கொண்டே கடலில் சென்றுகொண்டிருந்தோம். இரவு எவ்வளவு நேரம் இப்படிச்சென்றதோ திட்டமாகத் தெரியவில்லை. பெண்கள் குழந்தைகள் கப்பல் தொழிலாளிகள் சிலர் உட்பட நாங்கள் 40 பேர் எங்கள் தோணியில் மாத்திரமிருந்தோம். கப்பல் தொழிலாளிகளைச் சேராமல் பிரயாணிகள் மாத்திரம் நாங்கள் மொத்தம் 250க்கு மேல் தொகையினரிருந்ததாக என் ஞாபகம். கப்பல் வேலை செய்பவரெல்லாம் சேர்த்தால் இதற்கும் அதிக தொகையினராகும்.

எங்கள் கப்பல் தபால் கொண்டுபோகும் கப்பலாதலால் ஒரு முக்கிய கப்பல். அதினல் மிகப்பாதுகப்பான இடம் என்று எண்ணத் தக்கதான கப்பல்கள் எல்லாவற்றிக்கும் நடுவிடத்திலே எங்கள் கப்பல்

சென்றுகொண்டிருந்தது. ஆனால் இதுதான் மோசமான இடம் என்று தெரிந்தது. ஏனென்றால் கப்பல்களைசுற்றி ஓரங்களிலேதான் யுத்தக் கப்பல்கள் சென்றுகொண்டிருந்தன. எதிரிமூழ்கப்பல்களுக்கு இது தான் ஆபத்தான இடம். அதினால் இம்மூழ் கப்பல்கள் சமுத்திரத் தில் முங்கி யுத்தகப்பல்களுக்குத் தூரமாகிய கப்பல்களின் நடுவிடத் திலே எழும்பிவந்து மித குண்டுகளை நடுவில்செல்லும் கப்பல்கள்மேல் எய்துவிடுமாம்.

எங்கள் கப்பல் மிதகுண்டுமோதி வெடித்த சமயம் என் மனநிலை எவ்வாறு இருந்ததென்று நான் சற்று எழுதுவது நலமாயிருக்கலாம். மரணம் மிகவும் கிட்டிவிட்டதாக உணர்ச்சி வந்தது. ஐயோ இந்த மிக "ஜில்" என்று குளிர்ந்த தண்ணீருக்குள் ஆழ்ந்துபோகவேண்டுமே, வேறுவிதமாக மரிக்கக்கூடாதா என்ற எண்ணந்தான் முதல் எனக்கு வந்ததாக ஞாபகம். என் மனம் மற்றப்படி மிக வெறுமையாகவிருந் தது. இப்படித் திடீரென்று மரணம் கிட்டுவது போல தோன்றிய சமயத்தில் ஒன்றும் யோசனை ஓடவில்லை. கடவுளைப்பற்றியாவது தெய்வபக்தியால் வரும் ஆற்றல் தேற்றலைப் பற்றியாவது, யாதொரு சிந்தையும், இப்படித் திடீரென்று வரப்போகிறதாய் தோன்றிய மரண சம்பவத்தினிமித்தம், மனதில் ஏற்படவில்லை. மரணத்திற்கு நான் மெய்யாக ஆயத்தமாயிருந்தேனா?

பூனாவிலிருந்து நான் புறப்படுமுன் ஒரு வாலிப நண்பனை வழிவிட் டனுப்புகையில் (டாக்டர் டி. வி. தானியேல் என்னுமிவர் இப்போது பர்மா புகை வண்டி இலாக்காவில் வேலை செய்கிறார்) உங்களை இனி இவ்வுலகில் திரும்பப் பார்ப்பேனாவென்று சந்தேகத்துடன் சொன் னேன். உடனே அவர் திட்டமாக நாம் ஒருவரையொருவர் திரும்பவும் சந்திப்போம். ஏனென்றால் நீங்கள் உலகத்தில் செய்யவேண்டிய வேலை இன்னும் முடிந்து தீரவில்லை என்று உடனே பதில் சொன்னார். இது நிற்க.

கடவுளின் மகாதயவினால் அந்த இரவு மத்தியதரைக்கடல் மிக அமைதியாகயிருந்தது. அலைகளின் அகோரங்கள் ஒன்றுமில்லை. இல்லாவிடில் கூட்டமாயிருந்த எங்கள் தோணி கவிழ்ந்து நாங்கள் சமுத்திரத்தில் ஆழ்ந்து போயிருக்கக்கூடும். இப்படி நாங்கள் சென்று கொண்டிருக்கையில் தூரத்திலே ஏதோ இருட்டில் காணப் பட்டது. எங்களுடனிருந்த ஒரு கப்பல் உத்தியோகஸ்தர், "எங்களை ஏற்றிக்கொள்வீர்களா?" என்று கூப்பிட்டுக் கேட்டார். இங்கே வாருங்கள் என்று உத்தரவு வந்தது உடனே அந்தக் கப்பலும் எங்களை கிட்ட நாங்கள் அதின் ஓரஞ்சென்று அதில் ஏறினோம். எங்களுடன் இத்தனை நாட்களாக வந்ததும், நாங்கள் சாமான் கப்பல் என்று எண்ணினதுமான இந்தக் கப்பல் ஒரு யுத்தக்கப்பல் என்று இப்போது தான் கண்டோம். இந்த யுத்தக்கப்பல் எதிரிகளை ஏமாற்ற சாமான்

கப்பல்போல் வடிவமுள்ளதாகவும் வருணமுள்ளதாகவும் இயற்றப் பட்டிருந்தது. அதினல் இதற்கு "இரகசிய கப்பல்" என்று பெயர். இதினுள் நிரம்ப யுத்தாயுதங்களிருந்தன. கப்பல் சிப்பாய்கள் சாதாரண கப்பல் தொழிலாளிகள் போல் ஆடை தரித்திருந்தனர். யுத்தம் நேரிடும்போது கப்பலின் பக்கங்களையெல்லாம் திறந்துவிட்டு பீரங்கி முதலியவைகளை இலகுவாக எதிரிகளின்மேல் உபயோகிக்கலாம். இக் கப்பலின் தொழிலாளிகள் கடலின் அலங்கோலப்பாடுகள் பட்டு வந்த எங்களை மிக பட்சமாய் ஏற்று உபசரித்தார்கள். ஒரு வாலிபன் நனைந்து போயிருந்த என் மேல்சோடுகளைக் கொண்டுபோய் நெருப் பருகில் காய வைத்துக்கொடுத்தான். பசிக்கு பிஸ்கோத்து காப்பி முதலியனவும் கொண்டுவந்து கொடுத்தான்.

நாங்கள் இந்த யுத்தக்கப்பல் ஏறினபின் எதிரி மூழ்கப்பல்கள் திரும்பவும் வந்தன, எங்கள் பிரயாணக்கப்பல் "சார்தினியா" வை எதிரியின் மிதகுண்டு முன்பக்கம் மாத்திரம் தாக்கி உடைத்துச் சேதப் படுத்தியிருந்ததால் அந்தக் கப்பல் மூழ்கிப்போகவில்லை. ஒரு பக்க-மாகச் சாய்ந்து மாத்திரம் மிதந்துகொண்டிருந்தது. இதைக்கண்டு எதிரி மூழ்கப்பல்கள் அதைத் தண்ணீரில் முழுவதும் ஆழ்ந்துபோகச் செய்ய திரும்பவும் அதன்மேல் மிதகுண்டு செலுத்த எழும்பிவந்தது. உடனே நாங்கள் ஏறியிருந்த யுத்த கப்பல் மூழ்கப்பல்மேல் ஆழத்தில் வெடிக்கும் குண்டுகள்போட ஆரம்பித்தது. மிதகுண்டு என்ருல் தண்ணீரில் மிதந்து ஓடிவந்து கப்பலின் பக்கத்தில் மோதியவுடன் வெடித்து அந்தக்கப்பலில் துவாரம் செய்து அதை ஆழ்த்துவது. இது மூழ்கப்பல்களால் உபயோகிக்கப்படும். ஆழக்குண்டுகள் என்ருல் யுத்தக்கப்பல்கள் மூழ்கப்பல்கள்மேல் வீசும் குண்டுகள். இவை கடலின் ஆழத்தில் வெடித்து அக்கம்பக்கங்களில் இருக்கும் எவற்றையும் தூளாக்கிவிடும். மூழ்கப்பல்கள் தங்கள் மிதகுண்டுகளை வீசியவுடன் தாங்கள் தப்பிக்கொள்ளும்படி சமுத்திரத்தில் ஆழ்ந்து முங்கி ஓடிவிடும். ஆனல் இந்த ஆழக்குண்டுகள் அவற்றின் பக்கங்களில் சற்று தூரமாகக்கூட வெடித்தாலோ அம்மூழ்கப்பல்களை சின்னபின்னமாக தூளாக்கிவிடும்.

இப்படி நாங்கள் ஏறியிருந்த யுத்த கப்பலுக்கும் மூழ்கப்பல்களுக்கும் பலத்த யுத்தம் நடக்கையில் நாங்கள் ஏறியிருந்த யுத்தக்கப்பல் குண்டுகள் வீசிக்கொண்டே மிக தீவிரமாய் ஓடிக்கொண்டிருந்தது. தான் போட்ட ஆழக் குண்டுகளினல் தனக்கே தீங்கு நேரிடாதபடி அதுவே இப்படி தப்பி விரைவாய் ஓடிவிட அவசியமிருந்தது. இன்னொரு சிறு ஆங்கில யுத்தக்கப்பல், "அழிப்போன்" என்ற பெயருடையது, "சார்தினியா" கப்பல் சமுத்திரத்தில் சாய்ந்து மிதந்து கொண்டிருப்பதைப் பாதுகாக்க வெகு தீவிரமாய் அதைச் சுற்றிச்சுற்றி ஓடி, பலத்த பிரகாசமான "தேடும் வெளிச்சம்" வீசிக்கொண்டிருந்தது. இந்த ஆர்ப்பாட்டங்கள் மத்தியில் என் மனம் எவ்வாறு

தியங்கிக்கொண்டிருந்ததென்று நான் வருணிக்கவேண்டுமோ. "ஐயோ! ஐரோப்பிய நாகரீகம் இதுதானா? ஐரோப்பா தன் பெரும் பேச்சு, விஞ்ஞான சாஸ்திர அறிவு, கலை ஞானம் இவற்றிற்குப் பின்னால் எந்த நிலை வந்து சேர்ந்திருக்கிறது? இந்த ஐரோப்பாவை விட நமது தேச மூலை முக்கிலிருக்கும் சிறு கிராமம் மேன்மையானதல்லவோ?" என்று இப்படி பலவாறு என் மனம் யோசிக்க ஆரம்பித்துவிட்டது.

இரவெல்லாம் மிக தீவிரமாய் எங்கள் கப்பலோடி பின்பு காலையு மாகிவிட்டது. குளிரில் பிரயாணிகளாகிய நாங்கள் யாவரும் கப்பலின் மேல் தட்டில் காலையில் நின்று கொண்டிருந்தோம். என் நண்பர் மக்டானல்டு என்னைக் கண்டார். உரத்த சத்தமாய் அக்கூட்டத்தின் நடுவில் அவர் என்னைக் கூப்பிட்டு, "டாக்டர், டாக்டர் நான் ஒரு கேள்வி உம்மிடத்தில் கேட்கவேண்டும். சத்துருக்களைச் சிநேகிக்க வேண்டுமா! ஜெர்மன்காரரை இப்போது சிநேகிக்கலாமா?" என்று வினவினர். தர்க்கத்திற்கு இது தகுந்த சமயமில்லை என்று எனக்குப் பட்டபடியால் யாதொரு உத்தரவும் சொல்லாமல் நான் மெள்ள சற்று தூரத்திற்கு விலகிவிட முயன்றேன். "மெள்ள நழுவி விடாதேயும், டாக்டர்! கேட்டதற்கு உத்தரவு சொல்லும், கோழைத்தனமேன்?" என்று அவர் சத்தமிட்டார். ஜனங்களும் என்னை நோக்கிப் பார்க்க ஆரம்பித்தார்கள். எல்லாமிழந்து துன்புறு நிலையிலிருந்த அவர்கள் எல்லாரும் அச்சமயத்தில் ஜெர்மன்காரர்மேல் என்னவித அகங்கார ஆவேசம் கோபங்கொண்டிருப்பார்களென்று நான் விவரிக்கவேண்டுமோ? ஆனாலும் சத்தியத்தைக் குறித்து சாக்ஷிபகரவேண்டுவது அவசியமென்று எனக்கு பட்டென்று தோன்றிற்று கிறிஸ்துவின் போதகம் எச்சமயமும் மாறுவதில்லை, சத்துருக்களைச் சிநேகிக்கத்தான் வேண்டும்", என்றேன். மக்டானல்டு கோபத்திற்கு அளவில்லை. "ஆ! நீ படித்தவன்தான் என்று சொல்லிக்கொள்ளவும் கூடுமா? யுத்தம் தவறு என்ற கொள்கையுள்ள சாந்த கட்சிக்காரன் நீ. ஜெர்மன்காரர் மேல் அனுதாபமுள்ளவன், வா, பார்க்கிறேன்! ஜிபிரால்டர் துறைமுகம் கிட்டியவுடன் கவர்னரிடம் சொல்லி உன்னைக் கைதுசெய்துவிடச் செய்கிறேன்," என்று இப்படிக் குமுறினர். நான் அமைதியாக நின்றேன். அங்கு கூட்டமாக நின்ற ஆங்கில பிரயாணிகளுக்கு என்மேல் என்ன வித கோபமிருந்தாலும், அமைதியாக நின்றுகொண்டிருக்கும் என்மேல் இவர் தமது கோப ஆவேசத்தை ஊற்றி, பலவிதமாக வைது இரைவதைப் பார்த்து எனக்கு ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டார்கள். என் மேல் அவர்களுக்கு அநுதாபம்கூட வந்திருக்கலாம். ஆண்டவர்தான் எனக்குத் துணை நின்றார். ஸ்பானியா தேசம் சேர்ந்து ஜிபிரால்டர் கிட்டி அதன்பின் அதற்கு சமீபமாயிருந்த அல்ஜிசீரா என்ற ஊர் சேர்ந்தோம். இங்கு ஒரு பெரிய விடுதியில் நாங்கள் தங்க ஒழுங்கு செய்தார்கள். நல்ல சுகமாய் இங்கிருந்தோம். எல்லாவித சவுகரியங்களுமிருந்தன. முதல்தரமான இடவசதிகள், ஆகாரங்கள், சேவை எல்லாமிருந்தன எங்களுக்கு அவசரமானவைகளை வாங்கிக்கொள்ள ஆளுக்கு

ஐந்து பவுன் கொடுத்தார்கள். பிரயாணிகள் சார்தினியா கப்பலில் சாப்பாட்டு அறையிலிருந்தபடியே உடுத்தின உடையோடுதானே தப்பிவந்தவாகள். ஒரு வாரம் இங்கு சுகமாகவே தங்கியிருந்தோம். ஸ்பானியர்களையும் சற்று அறிய சமயம் கிடைத்தது. ஆங்கிலம் தெரிந்த ஒருவரோடு சென்று ஒரு ஸ்பானிய தேசக் குடும்பத்தாரோடு பழகவும் சமயம் வாய்த்தது. பாஷை தெரியாவிட்டாலும் எங்கு போனாலும்கூட இலகுவாய் சிநேகம் செய்துகொள்வது என் பலமும் பெலவீனமும் என்கலாம்! "சார்தினியா" கப்பல் சமுத்திரத்தில் மூழ்கிப் போக வில்லை. அதை வேறு கப்பல்களால் இழுத்து ஒரான் என்ற ஒரு ஆப்பிரிக்காத் துறைமுகத்திற்குக் கொண்டுபோய்விட்டார்களாம். அதினால் அந்தக் கப்பலில் நாங்கள் விட்டுவந்த சாமான்களில் கொஞ்சம் குறைய எல்லாம் ஜிபிரால்டர் துறைமுகம் வந்து சேர்ந்து, எங்களுக்குக் கிடைத்துவிட்டன. ஒரு வாரத்திற்குப் பின் ஸ்பானியா தேசம் நடுவே பிரயாணம் செய்து பிரஞ்சு தேசத்திற்குப் போக ஒழுங்கு செய்தார்கள். முதல் நாளிரவு புகைவண்டிப் பிரயாணம் செய்கையில் மிகுந்த குளிர். புகைவண்டித்தொடரில் ஒரு பக்கத்தில் வில் ஒடிந்துவிட்டது! பின்பு ஸ்பானியா தேசம் பிரதான நகரமாகிய மதிரிது (மாட்ரிட்) சேர்ந்து அங்கு ஒருநாள் தங்கியிருந்தோம். இங்குள்ள பெரிய வைத்தியசாலை பார்க்க ஆசையாயிருந்ததால் ஒரு சீட்டில் வைத்தியசாலையின் பெயரை எழுதிக்கொண்டு அங்கு சென்று அத்தேச பாஷை ஒன்றும் தெரியாத வனாயிருந்தாலும் சாமர்த்தியமாய் அந்த வைத்தியசாலையைச் சுற்றிப் பார்க்க அநுமதி பெற்றேன். வைத்திய படிப்பை முடிக்கும் வகுப்பைச் சேர்ந்த ஓர் ஸ்பானிய வாலிபன் எல்லாம் சுற்றிக்காட்டி மிக அன்புடன் உபசரித்தான். லத்தீன் வார்த்தைகளில் அவன் சொன்ன பல காரியங்கள் எனக்கு நன்றாக விளங்கிவிட்டது! அந்தநாள் முழுவதும் அவன் என் பின்னாலேயே வந்து, என்மேல் மிகவும் அன்புகாட்டி, நான் இங்கிலாந்து சேர்ந்தபின் எனக்கு மிக அருமையாக கடிதமும் எழுதி, தன் பாஷையில் ஒன்றும் அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு ஒன்றும் தபாலில் அனுப்பினான். இப்படி திடீரென்று ஏதோ ஒரு தற்செயலாய் நான் சந்தித்தவர்கள் எனக்கு ஆழ்ந்த நண்பர்களாகி சிற்சில வேளை ஆருயிர் அன்பராக விளங்கியிருக்கிறார்கள். இது சிலவேளை என்னை பிரமிக்கச் செய்வது உண்டு. காந்த இழுப்புப் போன்ற இக் கவர்ச்சி எங்ஙனம் சுரக்கிறது? மனிதரைக் கவரும் இப்படிப்பட்ட சக்தியில் நன்மையும் தீமையுமிருக்கக் கூடுமல்லவோ? இக்கவர்ச்சி பரிசுத்தமும் மெய்யான தெய்வன்பும் கலந்ததாயிருந்தால் எத்துணை மகிமையும் நன்மையாயுமிருக்கும். "நான் வயது முதிர்ந்தவனாயிருந்தாலும் வாலி பருக்கு என்மேல் எப்போதும் ஒரு கவர்ச்சியிருக்கிறது," என்று காலம்சென்ற ஸி. எப். ஆண்டிரூஸ் பெரியார் என்னிடம் சொல்லுவார் மாத்ரிது நகரில் அன்று இரவு புகைவண்டி ஸ்தானத்திற்கு கோவேறு கழுதைகள் பூட்டிய வண்டிகளில் போனோம். கழுதைகள் ஆடின நடன ஆர்ப்பாட்டத்தால் வண்டிகள் கோணல் மாணலாக சென்றன. கடைசியாக எதிரே வந்த வண்டிச்சக்கரத்தோடு எங்கள் வண்டிச்சக்கரமாட்ட

நாங்கள் இறங்கி, நேரமாகிவிட்டதால் புகைவண்டி ஸ்தானத்திற்கு காலால் ஓட்டம் பிடித்தோம்! "கடல் கோணல் போதாதா, கரைக் கோளாறும் கூடத்தொடருதே!" என்று என் உடன் பிரயாணிகள் ஓலமிட்டார்கள்.

பிரெஞ்சு தேசத்திற்கும் ஸ்பானியா தேசத்திற்கும் எல்லைப்பாகத் திலுள்ள ஹண்டாய் என்ற ஊர் சேர்ந்து அங்கு ஒரு இரவு தங்கியபின் பிரெஞ்சுதேச பிரதம நகராகிய பாரிஸ் சேர்ந்தோம். இங்கு மூன்று நாட்கள் ஒரு பெரிய விடுதியில் தங்கியிருந்தோம். இரவு பாரீஸ் நகரத் தை ஜெர்மன் விமானங்கள் தாக்கின. பின்பு கப்பலேறி இங்கிலாந்து தேசத்திற்குக் கடந்து சென்று லண்டன் சேர்ந்தோம். நான் போய்ச் சேர்ந்தபின் சில நாட்கள் தொடர்ச்சியாக லண்டன்மேல் ஜெர்மன் விமானங்கள் குண்டு வீச வந்துகொண்டிருந்ததால் என் நரம்புகளுக்கு என்னவிதமான கிள்ளுதல் (அதிர்ச்சிகள்) களிருந்திருக்கும் என்று நான் விவரிக்க அவசரமில்லை! இச்சமயத்தில் இங்கிலாந்தில் டாக்டர் கள் அநேகர் யுத்தத்திற்கு ராணுவ டாக்டர்களாகப் போய்விட்டதால் அங்குள்ள வைத்தியசாலைகளுக்கு டாக்டர்கள் அதிக தேவையாயிருந் தது. சாதாரண காலங்களில் இந்தியர்களுக்கு இந்த ஆங்கில வைத்திய சாலைகளில் வேலை கிடைப்பது சாத்தியமல்ல இக்காலத்திலோ இங்கிலாந்தில் அச்சமயமிருந்த இந்திய டாக்டர்களுக்கு நல்ல அனுபவம் கிடைக்கும் வேலையோடு, ஆகாராதிகள் சம்பள முதலியன உள்பட ஆங்கில வைத்தியசாலைகளில் கிடைக்கும். நான் எப். ஆர். ஸி எஸ். என்ற க்ஷத்திர நிபுணப் பரீக்ஷை தேறுவதற்கு இப்படிப்பட்ட ஸ்தாப னங்களில் வேலை செய்வது மிக உதவி. மேலும் யாதொரு செலவில்லா மல் ஜீவனம் செய்வதுடன், வைத்திய அநுபவத்திலும் தேறலாம். முதலில் நான் லண்டனிலிருந்த மைல்டுமே மிஷன் ஆஸ்பத்திரியில் அங்கேயே தங்கி வேலை செய்யும் டாக்டராக வேலைபார்த்தேன். இது கிறிஸ்தவ பக்தி சம்பந்தமாக ஏழைகளுக்காக ஏற்படுத்தப்பட்ட ஸ்தா பனமானதால் அப்பிராந்தியங்களிலுள்ள ஏழைகளுக்கு நல்ல தொண்டு செய்ய சமயம் கிடைத்தது. என்னுடன் அவர்களில் சிலர் நெருங்கிப் பழகிவிட்டார்கள்

ஞாயிறுதோறும் இப்பாகங்களில் வசித்த ஜனங்களுக்கு வைத்திய சாலையில் மாலை வேளைகளில் பிரசங்க ஆராதனை நடத்துவேன். இதற்கு வரும் வாலிபர்களில் ஒருவன் இதன் பயனாக மனமாறி சீர்ப் பட்டு கிறிஸ்துவின் அடியானாக மாறிவிட்டான். என்மேல் மிகுந்த அன்பு பாராட்டுவான். பின் காலத்தில் இவனுக்கு இரக்ஷணிய சேனையைச் சேர்ந்த பக்தியுள்ள ஒரு பெண்ணோடு சிநேகம் ஏற்பட்டு அவளை மணம்புரிந்துகொண்டான். இந்தப் பெண்ணின் கதை சற்று பரிதாபமானது. இவளுடைய இளம் பிராயத்தில் ஒரு துன்மார்க்க மான வாலிபன் இவளைத் தந்திரமாய் வசப்படுத்தித் தன் மோகத்திற் கிசைய தவறிவிடச் செய்துவிட்டான், அவள் கர்ப்பிணியானதைக்

கண்டவுடன் கானடா தேசத்திற்கு இவளைக் கைவிட்டு ஓடிவிட்டான். இந்தப் பரிதாப நிலையிலிருக்கையில் இரக்ஷணிய சேனை மூலமாய் இவள் சீரடைந்து பக்திவழிக்குத் திரும்பினாள். மேற் கூறிய அந்த ஆங்கில பக்தனான வாலிபன் இவள் முன் தவறிய நிலையை அறிந்திருந்தும் இவள் பரிதாப நிலையை நோக்கி மனதுருகி அன்புவைத்து இவளை விவாகம்செய்கொண்டான். நான் சில வருஷங்களுக்குமுன்னே லண்டன் சென்றபோது என்னை அன்புடன் உபசரித்துத் தன் வீட்டிற்கு அழைத்துச்சென்று தன் மனைவி பிள்ளைகளைக் காட்டினான், தன் மனைவிக்கு ஓடிப்போன துன்மார்க்கன் செய்த தவறுதலினால் பிறந்த பெண்ணையும் தன் மூத்த மகள்போல் பாவித்து வளர்த்து வந்தான். அந்தப்பிள்ளைக்கும் தன் பிறப்பின் கதையொன்றும் தெரியாதபடி அவளும் தன்னையே தகப்பனென்று எண்ணும்படி, அவளை தன் பிள்ளைபோல் வளர்த்து வந்திருப்பதாக என்னிடம் சொன்னான். இப்படிப்பட்ட உத்தமபக்தர் உலகத்தில் எவ்வளவு அபூர்வம்! என் நண்பன் ஏழைத் தொழிலாளியாயினும் மெய்யாகவே பக்த மகா புருஷன்.

யுத்தத்தினிமித்தம் ஆண் டாக்டர்கள் பஞ்சமானதால் இங்கு பிரதம டாக்டர்களாய் வேலைசெய்தவர்கள் அநுபவசாலிகளான பெண் டாக்டர்கள் தான். இதுதான் முதல்முறை பெண்களுக்கு உதவி டாக்டராக வேலைசெய்த என் அநுபவம்! இந்தப் பெண்மணிகள் தைரியசாலிகளும் வேலையில் மிக அக்கரை கருத்துள்ளவர்களுமாகத் தோன்றினார்கள். "பெண்களுக்கு வைத்தியம் செய்வதில் ஆண்கள் பிரதம டாக்டர்களாயிருக்கும் காலம்போயிற்று. பெண்கள் தங்கள் சுதந்திரத்திற்கு வந்துவிட்டார்கள்! இந்த வைத்தியசாலையில் யுத்த காலத்துக்குமுன் ஆண் வியாதியஸ்தர்களுக்கும் வைத்தியம் நடந்திவந்தாலும் இப்போது பெண் டாக்டர்களே பிரதமர்களாயிருந்தபடியால் பெண்களுக்கு மாத்திரம்தான் வைத்தியம் செய்யப்பட்டது அதினால் ஆயுதவேலை (க்ஷத்திரப் பிரயோகங்கள்) பெண் நோய்களுக்குரியதே அதிகம் நான் என் எப். ஆர். ஸி எஸ். பரிக்ஷைக்கு பெண்கள் ரோகசாஸ்திரத்தை இஷ்டப்பாடமாக பின் நாட்களில் தெரிந்து கொள்ள நேரிட்டதால் இது எனக்கு உதவியே. நான் ஒரு அந்நிய நாட்டு மனுஷனும் நிறத்தில் வித்தியாசமுள்ள டாக்டராயிந்தாலும் யாதொரு பேதமில்லாமல் இந்த ஆங்கில பெண் வியாதியஸ்தர் மத்தியில் சந்தோஷமாக வேலை செய்தேன். அவர்கள் எந்தவித ஆக்ஷேபனையுமில்லாது சந்தோஷமாய் தங்கள் நோய் கஷ்டங்களைத் தாராளமாக விவரித்துச் சொல்வார்கள். இந்தியாவிலுள்ள ஐரோப்பியர்கள் இவ்விஷயத்தில் கூறும் ஆக்ஷேபனைகள் அபத்தமே, தாதி (நர்ஸ்) களும் என்னுடன் நன்றாக ஒத்துழைத்தார்கள். ஆனால் இங்கு கூட தலைமை வகித்த சில மேலதிகாரிகளுக்குள் ஐக்கியமின்மையும் கோபம் பிரிவினைகளையும் கண்டேன். இந்தக் குறைவு ஒரு பக்திக்கிடமான ஸ்தாபனத்தில் காணப்படுவது எத்துணை துயரமான காரியம்! இங்கு வேலை செய்யும்போது நேர சகவாசம் கிடைக்கும் பிற

பகல்களில் பர்தெலொமேயு ஆஸ்பத்திரி என்ற ஒரு பெரிய வைத்திய சாலை சென்று அங்கு நடக்கும் பெரிய க்ஷத்திரப் பிரயோகங்களைப் பார்க்கவும் இரண வைத்திய சம்பந்தமான உபந்நியாசங்கள் கேட்கவும் போய்வருவேன்.

சில காலத்திற்குப் பின் ஸ்காத்லாந்து போய்த் திரும்பினேன். 1918, 1919, 1920 இந்த மூன்று வருஷங்களாக இங்கிலாந்தில் நான் தங்கியிருந்த காலத்தில் பல ஆங்கில ஆஸ்பத்திரிகளில் இரண வைத்திய சம்பந்தமாக டாக்டர் வேலை செய்து ஆயுதபரிகாரம் செய்வதில் மிக அநுபவமடைந்தேன். நான் இங்கிலாந்தின் தென் பாகத்தில் டிவான்ஷையர் ஜில்லாவிலிருக்கும் டிவண்போர்ட்டு என்ற இடத்தில் ராயல் ஆல்பர்ட்டு ஆஸ்பத்திரியில் டாக்டராயிருந்த போதும், பின்பு வடக்கே யார்க்குஷையர் ஜில்லாவில் ஷெப்பீல்டு என்ற இடத்திலுள்ள சிறுவர் ஆஸ்பத்திரியில் வேலை பார்த்தபோதும் மிக சந்தோஷமாயிருந்தேன். டிவான்ஷையர் பிராந்தியம் அழகிய இயற்கை அமைப்புப் பொருந்தியது. ஒரு பக்கம் கடல் காட்சி. மறு பக்கம் மலைகள். சமீபமாயிருந்த பிளிமவுத் நகரத்தில் கடல் ஸ்நானம் செய்ய நல்ல வசதி. போய் நீந்திக்குளிப்பேன். சற்று தூரத்தில் டார்ட்மூர் சிறைச்சாலை இருந்தது. யுத்தம் கிறிஸ்துவின் போதகத்திற்கு முரண்பட்டதால் மனச்சாக்ஷியினிமித்தம் இராணுவம் சேர மறுத்தவர்களை அச்சமயத்தில் இங்கு சிறை செய்து வைத்திருந்தார்கள். நான் இவர்களைப் பார்க்கப்போய் இவர்களுடன் சிநேகமாகிவிட்டேன். இவர்களுக்கிருந்த சில கஷ்டங்களினிமித்தம் இவர்களுக்கு உதவியாக குளிர் நீங்க உள் கமுசு, ஆகாராதிகள் முதலியன கொண்டு போவேன். இவர்கள் வயல்களில் பயிர் வேலை செய்ய ஒப்புக்கொண்டதால் இவர்களுக்கு சில விஷயங்களில் சற்று சவுகரியங்கள் கொடுத்திருந்தார்கள். அதினால் தான் இப்படிப்பட்ட உதவி நான் அவர்களுக்குச் செய்யவும், அவர்களைப் பார்க்கவும் எனக்கு வசதியிருந்தது. ஒரு நாள் ஞாயிறு சிறையினுள் இவர்கள் நடத்தும் ஆராதனையில் நான் பேச உத்தரவு வாங்கிக் கொடுத்ததால் இவர்கள் சிறையினுள் சென்று எல்லாம் பார்க்கவுமுடிந்தது. இப்படி மனச் சாட்சியினிமித்தம் யுத்தம் செய்ய மறுத்த வேறு சிலரோ, சர்க்கார் ஆலோசனை, ஒழுங்குகள் எல்லாம் யுத்தத்திற்காகவே தேசத்தை முற்றிலும் ஆயத்தப்படுத்த செய்திருப்பதினால், சர்க்கார் சொன்ன எந்த வேலையும் செய்வது சரியல்ல என்று ஒரேபிடியாயிருந்தபடியால், அவர்களை வடக்கே உவேக்பீல்டு என்ற சிறையில் கடும் சிறைவாசத்தில் வைத்திருந்தார்கள். இவர்களுக்கு டார்ட்மூர் சிறையிலிருந்தவர்களுக்குக் கிடைத்த சவுகரியங்கள் கிடையாது.

நான் இச்சமயத்தில் வேலைசெய்துகொண்டிருந்த ஸ்தாபனத்தின் அதிகாரிகள் சிறைவாசம் செய்த அஹிம்சா விரதம் கொண்டவர்களுக்கு நான் நண்பன் என்று கண்டுபிடித்திருந்தால் என்னை ஆஸ்பத்திரியில்

வேலைக்கு வைத்திருப்பார்களோவென்று சந்தேகிக்கக்கூடும்! தளராது பலமாய் யுத்தம் செய்து ஜெர்மானியரை வெல்லவேண்டுமென்றே வைராக்கிய தீவிரமுள்ளவர்களாகவே ஆங்கில தேசத்தாரிருந்தார்கள். நான் அடிக்கடி மாலைகளில் டார்ட்டுமூர் சென்று அஹிம்சா விரதம் கொண்ட சிறைவாசிகளைப் பார்த்து இரவுகளில் திரும்பிவிடுவேன் நான் எங்கு போகிறேனென்பதை அறியாத சில தாதிகளான (நர்ஸ்கள்) பெண்மணிகள் நான் வாலிபனானதால் ஏதோ பெண்மேல் காதல் கொண்டு இரவு வெளியே போய்த் திரும்புகிறேனென்று என்னைப் பகடி பண்ணுவதுண்டு. எனினும் நான் ஒன்றும் பதில் சொல்லாமலிருப்பேன். இது அவர்கள் சந்தேகத்தை இன்னும் அதிகரித்தது. சில மாதங்கள் பின்பு இப்படி சிறைவாசம் செய்து வெளி வந்த எனது நண்பர் ஒருவர் டிவண்போர்ட்டுக்கு என்னைப் பார்க்க வந்தார். அவரை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக்கொண்டு வந்து எல்லாம் சுற்றிக்காட்டி அங்குள்ள ஒரு தாதி (நர்ஸ்) பெண்மணிக்கும் பழக்கி விட்டேன் அவர் போய்விட்டபின் அந்த அம்மாள் என்னிடம், "ஆ, டாக்டர் நீர் கூட்டிக்கொண்டு வந்த அந்த வாலிபர் எத்தனை அருமையான குணமுள்ளவர்!" என்று சொன்னாள். அப்போது நான் அந்த அம்மாளிடம் "சகோதரியே, அந்த வாலிபர் அஹிம்சா விரதம் பூண்டு சிறைவாசம் செய்தவர் என்று உங்களுக்குத் தெரியுமா?" என்றேன். உடனே அந்த அம்மாள் "ஐயோ ஏன் நீர் இதை எனக்கு முந்தியே தெரிவிக்கவில்லை? தெரிந்திருந்தால் நான் ஒரு நாளும் அவரை அருமைக் குணமுள்ளவர் என்று சொல்லியேயிருக்கமாட்டேனே" என்று விசனத்துடன் சொன்னாள்! நமது மனதின் கோணல்களை என்னென்பேன்! நம் மனக்கறைகளினால் நமது தீர்ப்புகளும் நெறிதவறிப் போகின்றன. ஆனாலும் இந்தச் சகோதரியின் மனநிலையை அறிந்தால் அவளையும் கடூரமாய் கண்டிக்க வழியில்லை. இவள் ஒரே சகோதரரான வாலிபன் ஆகாயக் கப்பலிலிருந்து விழுந்து மரித்திருந்தான். இப்படி எத்தனையோ பேர் யுத்தகாலத்தில் தங்களுக்கு மிக அருமையான கண்மணிகளை இழக்கக் கொடுத்தவர்கள் யுத்த காலத்தில் அதிக பாடனுபவிப்பவர்கள் ஏழைகளும், சாதாரண ஜனங்களுமானவர்களே ஆனால் யுத்தத்தை மூட்டிவிட்டு ஆட்டம் பார்க்கிறவர்களும், யுத்தத்தின் பயனை உலக சம்பந்துக்களையும் மேன்மைகளையும் தங்களுக்குத் திரட்டிக்கொள்பவர்கள் ஐசுவரியவான்களும், உயர் பதவியிலமைந்த ராஜதந்திரிகளுமே மூளை சாமர்த்தியமுள்ள விஞ்ஞான சாஸ்திரி அறிவைப் பெருக்கி மிக அழிச்சாட்டங்களைத் தீவிரமாய்ச்செய்யும் யுத்தக் கருவிகளை உண்டு பண்ணுகிறான். தன்னயமுற்ற ராஜதந்தரி சாதுரியப் பேச்சு எழுத்துக்களால் பொது ஜனங்களை வசப்படுத்தி அவர்கள் மனதில் சந்தேகங்கள் பயங்களை உண்டுபண்ணி யுத்தத்திற்கு அவர்களைக் கிழப்பி விடுகிறான். அழிச்சாட்டக் கருவிகளை இவர்கள் கையில் கொடுக்கிறான். இதினால் பொருளிழந்து நஷ்டமடைபவர்கள் விசேஷமாக ஏழை மக்களே. உலகவிதமான லாபம் மேன்மையெல்லாம் ஐசுவரியவான்களுக்கும் ராஜதந்தரிகளுக்குமே கிட்டும்.

இக்காலத்தில் இங்கிலாந்தில் பயங்கர விஷக்காய்ச்சல் பரவி அநேகர் மாண்டார்கள். கயக்காய்ச்சல் மேல்கொண்டு நல்ல பிராய முள்ளவர்களே அதிகமாய் மரித்தார்கள். தெருவில் சவப்பெட்டிகள் போய்க் கொண்டேயிருக்கும் எங்கள் ஆஸ்பத்திரியில் இந்த வியாதியஸ்தருக்கென்று பிரத்தியேகமாக ஒரு அறை தயாரித்திருந்தோம். இடம் போதாமல் அங்கிருந்த ஜெபாலயத்தில்கூட வியாதியஸ்தரை வைத்து சிகிச்சைசெய்தோம். எவ்வளவு பாடுபட்டு சிகிச்சைசெய்தும் அநேகர் மரிப்பதைப்பார்க்கும் காட்சி பரிதாபமாயிருந்தது. சில வீடுகளில் டாக்டர் பார்க்கவரும்போது கதவைத் திறக்கக்கூட ஆளில்லாமல் குடும்ப முழுவதும் நோய். எனக்கும் இந்த காய்ச்சல் வந்துவிட்டது. ஆனால் தெய்வகிருபையால் குணமாகி சில நாட்கள் இளைப்பாற லண்டன் செல்லும்படி அதிகாரிகள் விடுமுறையும் கொடுத்தார்கள் நான் டிவன்போர்டிலிருக்கையில் ஒருநாள் கடலில் எதிரி மூழ்கப்பல் மிதகுண்டால் சேதப்பட்டு உடைந்து ஆழ்ந்த கப்பலின் பிரயாணிகள் சிறுவர்கள் பெரியார் சேதபட்டவர்களையும் பிரேதங்களையும் கடலிருந்து பொறுக்கி எங்கள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்தார்கள். மிகப் பரிதாப காட்சி.

1918ம் வருஷம் நவம்பர்மாதம் 11ம் தேய்தி பிற்பகல் காது வெடிக்கும்படி திடீரென்று பிகுந்த இரைச்சலுண்டாயிற்று. எங்கள் ஊர் துறைமுகமாயிருந்ததால் சமீபத்திலிருந்த கப்பல்களெல்லாம் ஏக முழக்கமாய் ஊதிக்கொண்டேயிருந்தன. பல கோயில்மணிகள் பலமாய் ஓயாது அடித்துக்கொண்டிருந்தன. ஜனத்திரள் இங்குமெங்கும் ஆரவாரத்துடன் பெருங் கூட்டமாய் தெருக்களில் கூச்சலிட்டு ஓடிக் கொண்டிருந்தார்கள். அர்த்தம் உடனே எங்களுக்குத் தெரிந்தது. யுத்தமுடிந்து விட்டது. வெடிகுண்டுகளின் சத்தம் ஒய்ந்தது. மனுஷ கொலை நின்றது. நாலேகால் வருஷம் யுத்த பயத்தின் நெருக்கத்தால் நரம்புதளர்ச்சியும் மனவேதனையும் அடைந்த மக்களுக்கு இப்பொழுது வந்த நரம்பு கிளர்ச்சியும் மனஆர்ப்பரிப்பும் மேற்கொண்டுவிட்டது. கின்னர நரம்புகள் முறுக்கியிழுத்த நிலையிலிருக்கும்போது வில் அதின் மேலுரசினால் அதின் இராகமும் சுருதியும் எத்துணை உயரமாக தூக்கியமைந்திக்கும்! மக்களின் மனநிலையும் இக்காலத்தில் பிரித்தனில் இவ்விதமாகத்தானிருந்துக்கொண்டிந்தது.

இதன்பின் நான் ஷெப்பில்டில் சிறுவர்கள் வைத்திய சாலையில் வேலைசெய்தேன். 14 வயதுக்குள்ளிருப்பவர்கள் இங்கு வைத்தியம் பெற்றார்கள். மிக அருமையான சிறுவர்கள். இங்கு தொண்டுசெய்த தாதிகளும் (நர்ஸ்களும்) சிறுவர்களை நடத்துவதில் மிக அநுபவசாலிகள் சில குழந்தைகள் ஆஸ்பத்திரி வந்தபின் முதல்நாளில் தாய்மடியில்லாததால் அழுதுக்கொண்டேயிருக்கும். "தாயாரால் தாராட்டுச் செல்லம்பெற்றுக் கெட்ட சிசுக்கள்" என்று தாதிகள் இவர்களை அழைப்பார்கள். ஆனால் இரண்டாம் நாளுக்குள் இந்தச் சிசுக்களை அவர்கள்

சீர்படுத்தி அமைதியாக தங்கள் படுக்கையில் தங்கி இருக்கவும், தக்க ஆகாரமருந்துகளை ஒழுங்காய்ச் சாப்பிடவும் செய்துவிடுவார்கள். அழுது தொந்தரவு செய்யும் பிள்ளைகளை இளக்காரமாய் கையில் தூக்கி எடுத்து வழக்கப்படுத்தவே மாட்டார்கள், இது கெட்ட வழக்கம். நல்ல குடும்பத்திலுள்ள ஐரோப்பிய தாய்மாரும் பால் கொடுத்தபின் குழந்தைகளை கையிலேந்திக்கொண்டிராமல் சிசுவண்டிகளில்போட்டு அப்படியே வெகுநேரம் வெளியே படுத்திருக்கவிட்டுவிடுவார்கள்.

ஷெப்பீல்டு, பெரும் இரும்பு வேலைகள் மும்முரமாய் நடக்கும் தொழிற்சாலைகள் நிரம்பிய நகரம். ஒரு பெரிய இரும்புத்தொழிற் சாலையைப் பார்க்கப்போயிருந்தேன். கேணிகளிலிருந்து வரும் இரும்பு லோக வஸ்துக்களை உருக்கி சுத்தமாக்கும் அக்கினியின் உஷ்ணமும். அதிக தகதகவென்றதும் கண்ணைக்கூசச்செய்வதுமான காய்ச்சின இரும்புத்தழலும், நெய் போல் உருகிய இரும்பை கட்டி கட்டியான சதுரவடிவத்துண்டுகளாக்கி, பின்பு உருவி அமுக்கி வடிவுக்குக் கொண்டுவரும் பலத்த இயந்திரங்களால் அவற்றை பலவித அவச ரங்களுக்கு வேண்டிய தகடுகள் கம்பிகள் முதலியனவாக வெகு தீவிரமாக மாற்றும் இந்தவிதமான பல காட்சிகளைப் பார்த்தது என் மனதையும் நரம்புகளையும் அதிரச்செய்தது ஆனாலும் இதைவிட எனக்கு அதிக சந்தோஷத்தையும் இன்பத்தையும் கொடுத்தது இப்பாகத்தைச் சுற்றியிருந்த அழகிய இயற்கைக் காட்சியே.

ஒரு நாள் எனக்கு விடுமுறையிருந்தபோது தனியே நடந்து அப்பிராந்தியங்களின் அழகிய இயற்கை காட்சியின் நடுவில் திரிந் தலைந்தேன். "காயிட்" நதியைக் கடந்து வேலி பிரிட்ஜ் என்ற ஊரில் அச்சமயத்திலிருந்த ஒரு வாலிப நண்பனையும் பார்க்கப் போயிருந் தேன். இவருக்கு ஏழைகள் தொழிலாளிகள் மேல் அதிக அபி மானம் உண்டு. ரோட்டில் ஒரு ஏழை பெரும் சுமையைத்தூக்கிக் கொண்டு போகக்கண்டால் உடனே நின்று அந்த ஏழையின் தலை மேலுள்ள சுமையைத் தானே சுமந்து போவார் இவர் ஆக்ஸ்போர்டு சர்வ கலாசாலை பட்டதாரி. தாய் மிக ஐசுவரியமுள்ளவள்; ஆனால் இவர் பொது உடமைக்கொள்கையினிமித்தம் தாய்க்கும் இவருக்கும் ஒற்றுமையில்லாது பிரிந்திருக்கவேண்டியதிருந்தது. சாது சுந்தர்சிங் கைப் பார்க்க நான் மான்செஸ்டர் போயிருந்த சமயம் இவரை முதல் சந்தித்தேன். அவரைப்பார்த்தது இவருக்கு மிகபிரமையும் அவர் மேல் பிரியமும் உண்டாகச் செய்தது. இதன் பின்னே என்னுடன் இந்தியாவிற்கு வந்து சகோதரன் பேட்டனும் நானும் இந்தியாவில் ஏற்படுத்த யோசித்துக்கொண்டிருந்த ஆசிரமத்தில் எங்களுடன் உழைக்கும்படி கொஞ்சம் குறையத் தீர்மானம் செய்து விட்டார். இச்சமயத்தில் இவரைவிட வயதில் முதிர்ந்த ஒரு அம்மாள் தானும் பொது உடமைக்கட்சி அபிப்பிராயங்களை உடையவராக இவருடன் பேசிப்பழகி சிநேகம் செய்து இவர் மனதைக் கவர்ந்துகொண்டார்.

இதனாலிவர் மனமிழுக்கப்பட்டு இவர் அந்த அம்மையின் வயதில் அவருக்கு மிக இளையவராயிருந்தும் விவாகம் செய்துகொண்டார்.

நான் பின்காலத்தில் இவரைப் பார்க்கப்போனபோது இவர் குதிரைகளை ஆயத்தப்படுத்திக் கொடுக்கவும் இந்த அம்மையார் தன் வீட்டிற்கு விருந்திட வந்திருந்த பட்டாள உத்தியோகஸ்தருடன் குதிரை ஏறி உல்லாசமாய் வெளியே செல்வதையும் பார்த்தேன். இவர் தான் தம்முடைய ஒரே சிறு மகனையும் குடும்ப சம்சாரங்களையும் கவனித்துப் பாடுபார்ப்பதுபோல் எனக்குத் தோன்றியது. இது எனக்கு மனவருத்தமான காட்சியாகவே தோன்றிற்று. நமது உன்னத கொள்கைகள் கிளர்ச்சியுண்டாக்கும் மனோ சலனமாக மாத்திரமிருந்துவிடக் கூடாது. ஆழ்ந்த தீர்மானம், மனிதனைச் சரிவர அறிந்து அவர்களோடு நமக்கிருக்கவேண்டிய சம்பந்தங்களில் நாம் எத்துணை களங்கமற்றவர்களாயிருந்துங்கூட நாம் அவர்கள் விஷயத்தில் ஞானமாய் நடந்துகொள்ளவேண்டியபகுத்தறிவு, விவேகம் இவற்றோடு பொருந்தியிருக்க வேண்டும். இல்லாவிடில் காற்றினலசைந்து நிலைதவறி ஆடும் நாணல் போலாகிவிடுவோம். சாமர்த்தியமுள்ள மனிதர் வலையில் அகப்பட்டுக் கொள்ளுவோம்.

இக்காலத்தில்தான் சாதுசுந்தர்சிங் என்னும் தெய்வபக்தனாகிய பெரியாரை முதல் முதல் மான்செஸ்டர் நகரில் எனக்கு அறிமுகமாயிருந்த மாக்கின்டாஷ் ஐயர் வீட்டில் பார்த்தேன். அப்போது இரவு வேளை. வெளியே போயிருந்த சாது சுந்தர்சிங் மகாத்துமா அறைக்குள் வந்தவுடன், பக்தியின் அழகமைந்த அவர் முகப்பிரகாசமும் தேஜசும், அணிந்திருந்த காவியின் வருணமும் அங்கு பிரகாசித்த மின்சார வெளிச்சத்தில் ஜொலித்தது. பின்பு நான் ஷெப்பீல்டு நகரத்திலிருந்தபோது அவர் அங்கு வந்து டால்பட் என்னும் ஒரு தனவான் வீட்டில் தங்கியிருந்தார்.

காலையும் மாலையும் ஆலயங்களில் பிரசங்கித்தார். மிகத்திரள் கூட்டமாய் ஜனங்கள் வந்தார்கள். நான் மாலை ஆராதனைக்கு ஒரு மணி நேர முன்னரே போயினும் கோயிலில் இடம் கிடைப்பது கஷ்டமாயிருந்தது. காலை ஆராதனைக்குப்பின் டால்பட் தனவான் தனது வீட்டில் சாது சுந்தர்சிங்குடன் சாப்பிடும்படி என்னையும் பின்னும் சில இந்திய நண்பர்களையும் அழைத்திருந்தார் ஆங்கில தேசத்தினருக்கு இவரைப்பற்றி மிக மதிப்புண்டாயிற்று. போகிற வழியில் டால்பட்'' என்பவர் என்னிடம், டாக்டர் உங்கள் தேசத்தாராகிய இவர் எங்களை மிகச் சிறியராகத் தோன்றச் செய்துவிட்டார் என்றார், பின்பு வீடு சேர்ந்தபின் சாது சுந்தர்சிங் தனியே என்னிடம் பேசிக்கொண்டிருந்தார். "தங்கள் விஞ்ஞான அறிவு சாமர்த்தியத்தால் இந்த மேனாட்டு ஜனங்கள் சீக்கிரம் செவ்வாய் (மார்ஸ்) கிரகத்திற்கூட பறந்து சென்றுவிடுவார்கள், ஆனால் இவர்களுக்கு கடவுளை வழிபடும்

மார்க்க பக்தி விஷயத்தில் மாத்திரம் மூளை கிடையாது, அது இவர்கள் மூளையில் பிரவேசிக்கிறதில்லை'' என்று மிக மனதுயரத்தோடு என்னிடம் சொன்னார்.

இக்காலத்தில் என் மனதில் மிகப் போராட்டம் இருந்து கொண்டிருந்தது. நான் என்னைக் கடவுளினடியானாக ஒப்புவித்து விட்டபின் ஆண்டவரிட்ட கட்டளையின்படி சகல சம்பத்தையும் துறந்து அவர் இராஜ்ய சேவைக்காகவே முற்றிலும் உழைக்க வேண்டுமென்ற அவா இருந்தது. இப்போது இந்தியா திரும்பி என் ஜீவிய வேலைசெய்ய ஆரம்பிக்கும் வேளையில் முன் ஆசித்ததற்கு முரண்பாடாகத்தோன்றிய இன்னொரு காரியம் என் கண்முன் வந்தது. சகோதரன் பேட்டனுக்கு தகப்பனரால் கொடுக்கப்பட்ட சம்பத்திருந்தது இதில் நானும் மாட்டிக்கொண்டால் என் ஜீவநோக்கம் நிறைவேருது தவற இடமாகி விடுமோ என்ற சந்தேகமும் திகிலும் என்னைப் பிடித்தது. 18-3-1920 தினத்திலே என் தினவர்த்தமான புத்தகத்தில் எழுதியிருப்பதின் சாராம்சத்தை இங்கு எடுத்துச் சொல்கின்றேன். "ஆண்டவராகிய இயேசு ஐசுரியவனான ஒரு வாலிபனிடம் நீ உன் ஆஸ்தியை எல்லாம் விற்று தரித்திரருக்குக் கொடுத்துவிட்டு என்னைப் பின்பற்றிவா என்ருரே. கிறிஸ்து மார்க்கம் ஏன் தற்காலத்தில் தனது பூர்வ மகிமையையும் பலத்த சக்தி சாரத்தையுமிழந்த உப்பற்ற பண்டமாய்ப் போயிற்று? கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பலவித லௌகீகசவுகரியங்கள், போங்குகள், ஆசைகளோடு கலந்து மாற்றி பல காரியங்களில், விட்டுகொடுத்து, இப்படி அதைக் கலப்புள்ள உலகஞானமாய்த் திருப்பிவிட்டார்கள். ஆண்டவா, நானறியாமலே இந்த விதமாய் என்னை மோசம்செய்யும் சுயவஞ்சனைக்கு என்னைத் தப்பி இரக்ஷியும். அப்படி நானிழுக்கப்படும்போது உமது திவ்விய சக்தி நிறைந்த திருப்பார்வையால் என்னைத் தடுத்தாண்டுகொள்ளும்'' என்பதே. எல்லா சம்பத்தையும் அறவே துறந்துவிடுவதே சரியென்றதாக என் மனதில் முதல்பட்டது.

ஆனால் சகோதரன் பேட்டனுடைய தாயார் ஒரு நல்லாலோசனை சொன்னார்கள். கடவுள் கொடுத்த சம்பத்தை வீணாக சிதறடித்து விடாமல் அதைக் கடவுள் நம்மிடத்தில் தமது ஏழை மக்கள் நன்மைகென்றொப்புவித்த தர்மசொத்தாகவும், நாம் அதற்கு தர்மகர்த்தாக்கள் மாத்திரந்தானென்றும் பாவித்து உண்மையுள்ள உக்கிராணக்காரராக நடந்துகொள்வதே சரியாகுமென்று ஆலோசனை சொன்னார்கள். நாங்கள் இருவரும் டாக்டர்களானதால் ஒரு வைத்திய சாலை ஏற்படுத்தி ஏழைகளுக்கும் பலவித தொண்டு செய்ய இந்த சம்பத்தை உபயோகப்படுத்தலாமென்றும் சொன்னார்கள். அதிகமாய் ஜெபித்து யோசித்து சம்பத்தின் பாகமொன்றை பலவித கிறிஸ்தவ மிஷன்கள் மற்றும் பரோபகார ஸ்தாபனங்கள், இயக்கங்களுக்குக் கொடுத்துவிட்டு மீந்ததை நாங்கள் இந்தியாவில் செய்யப்போகிற

தொண்டிற்கு உபயோகிக்கத் தீர்மானித்தோம். அப்படியே உடனே செய்தோம்.

1919ம் வருஷம் செப்டம்பர்மீ நடந்த சில காரியங்களை முன்கூற மறந்து விட்டதை இங்கு சொல்லுகிறேன். எங்களுடைய சகோதர ஐக்கியத்தைச் சேர்ந்து எங்களுடனுழைப்பார் என்று நாங்கள் எதிர் பார்த்த பஞ்சாபி நண்பர் பிராங்கு மாயதாஸ் என்பவரும், பூனவில் பின்காலத்தில் ஒரு ஆசிரமம் ஸ்தாபித்த உவின்ஸ்லோ ஐயரும், சகோதரன் பேட்டனும் நானும் ஸ்காத்துலாந்து தேசத்தின் வட மேற்கிலுள்ள போர்ட்டு உல்லியம் என்ற ஊரில் ஒரு தியானக் கூட்டம் வைத்து, நாங்கள் இந்தியாவில் ஸ்தாபனம் செய்யும் ஆசிரம விஷயங்களைக் குறித்து ஜெபித்துக் கலந்து யோசித்தோம். பின்பு நாங்களிருவரும், நண்பர்கள் மாயதாஸ் இப்போது இஞ்சினீரிங் காலேஜ் தலைவராயிருக்கிற நண்பர் சாக்கோ இவ்விருவருடன் ஸ்காலாந்தின் வடமேற்கு பாகங்களில் உல்லாச நடை பிரயாணம் செய்தோம். ஓர் நாள் 22 மைல் நடந்தோம். எனக்கு மிகக் களைப்பாயிருந்தது. வழியில் தாகத்தால் பல நீரோடைகளில் தண்ணீர்குடிக்க நின்றுவிடுவேன் ஆனல் என் நண்பர்கள் நீண்ட நடைபிரயாணம் செய்ய இப்படி அடிக்கடி தாகசாந்தி செய்வது இடையூறாயிருக்கும் என்று என்னைத்தடுப்பார்கள் எங்கள் மூட்டையெல்லாம் எங்கள் முதுகில் நாங்கள் போட்டுக்கொள்ளும் கித்தான் பைக்குளடங்க வேண்டியதே. எங்களுடன் இப்பிராந்தியங்களின் பூகோள அமைப்புப்படமிருந்தது. பாதை கண்டுபிடிக்க இதுவே எங்கள் வழிகாட்டி. இங்கு சிலபாகங்களில் ஜனங்கள்பேசும் தாய் பாஷை ஆங்கிலமல்ல, கெல்டிக் பாஷை. இதுதான் ஸ்காத்திலாந்தின் மிக பூர்வீக பாஷை. மலைமேடான நாடானபடியால் இப்பாகங்களுக்கு உயர்பூமி என்று பெயர். இதன் பின் எடின்பரோ திரும்பி சில மாதங்கள் வைத்திய சாஸ்திர படிப்பில் செலவிட்டோம்.

என் ஜீவிய நோக்கம் நிறைவேற எனக்கு மிக உதவியுமாயிருந்த என் அருமை சகோதரி பூவாயி அம்மாள் கொழும்பில் 1919ம் வருஷம் ஆகஸ்டுமீ இறந்துபோனதாக என் மூத்த அக்காளிடமிருந்து கடிதம் வந்தது அவள் மரணமாவதற்கு சிறிது நேரமுன் இரவில் தனியே,

என் ஆத்ம சூரியனே, என் அருமை இரக்ஷகா
என்னருகில் நீ யிருந்தால் இரவும் பறந்தோடுமே,
மண்ணுலகமேகம் உன்னை கண்ணுக்குமறையாது
அண்ணலே அடியேனுக்கருள் செய்திடுவாயே.

என்ற ஆங்கிலபாட்டின் நாலு அடிகளைப்பாடி தான் சிநேகித்த அந்த ஆத்மாதன் மார்பில் தூங்கிவிட்டாள்.

நாலாவது அடியை இருமுறை பாடினாளாம்.

இவ்விரவில் உன்னை விட்டுத் தூரமே திரிந்தலையும்
எவ்வித மகவும் கூட உன்வார்த்தை தள்ளிடினும்.
அவ்வித மகவும் கூட உன்வார்த்தை தள்ளிடினும்.
திவ்விய தயைபுரிந்தவனை தெய்வமே இரட்சித்திடு

இந்த சகோதரியின் விசுவாசமும் பக்தியும் தான் பணக்கஷ்ட நெருக்கடியில் நான் சென்னைபட்டிணத்தில் வைத்திய மாணவனாயிருந்தபோது என்னை உற்சாகப்படுத்தி முன்செல்லச் செய்தது. நான் கொழும்பில் பின்காலத்தில் டாக்டர் வேலை செய்த காலத்திலும் இவள் எனக்குப் பாராட்டிய அன்பு பெரிது.

அத்தியாயம் 11

ஜெர்மனிதேசம் சென்றது

1920 அக்டோபர்மாதம் என் எப். ஆர். ஸி. எஸ். பரீக்ஷை முடிந்தவுடன் ஜெர்மனிக்குப் புறப்பட்டேன். டாக்டர் ஹான்ஸ் ஹாய்பெல்டர், ரீபன்டிராஸ்ற் என்னும் இரு அருமையான ஜெர்மன் நண்பர்களுக்கும் எனக்கும் யுத்தகாலத்தில் கடிதப் போக்குவரத்தில்லாமையால் ஒருவர் காரியம் ஒருவருக்குத் தெரியாதிருந்தோம. அவர்களைப் பார்க்கவும் புது நண்பர்களோடு பழகி ஜெர்மன் தேசஸ்திதியை அறியவும் ஆவலாயிருந்தேன். பல தேசத்தினர் பகையில்லாமல் ஒருவரையொருவர் சிநேகிக்கச்செய்யும் தொண்டுசெய்வதும் என் ஜீவ ஆசை. லண்டன்சென்று, கடல்தாண்டி பெல்ஜியம் தேசவழியாய், ஜெர்மனி போய் அதின் பிரதம் நகர் பெர்லின் சேர்ந்தேன். நண்பன் டாக்டர் ஹான்ஸ் ஹாய்பெல்டர் புகைவண்டி ஸ்தானத்தில் என்னைச் சந்தித்தார். நான் எப். ஆர். ஸி. எஸ். பரீக்ஷையில் தேறிவிட்டதாக இதற்குள் சகோதரன் பேட்டன் அனுப்பிய தந்தியும் அங்குவந்து சேர்ந்தது.

நான் புகைவண்டிவிட்டு இறங்கியதும் என் ஜெர்மன் நண்பர் என்னிடம் "என்னவிதமான காலை ஆகாரம் உனக்குப் பிரியம்?" என்று வினவினர். சாதாரணமாக ஆங்கிலதேசத்தில் நான் காலையில் சாப்பிடும் ஆகாரத்தைச் சொன்னபோது அவர்முகம் வேறுபட்டு "இப்படி சாப்பிடுவது ஒரு பிரபுவிற்குத்தான் இங்கு முடியும்" என்றார். எனக்கு அப்போது அவர் இப்படிச் சொன்னது விளங்காவிட்டாலும் ஜெர்மனியின் ஸ்திதியை நான் சற்று பின்னறிந்து கொண்டவுடன் நன்றாய் விளங்கிவிட்டது டாக்டராயிருந்த என் நண்பர் பயிற்றங் கூழ் தண்ணீர்போல் இளக்கமாய் சமைத்த நீர் ஆகாரத்தை வயிறு நிரம்பக் குடித்து பசியாற்றிக்கொண்டிருந்தார். ஜனங்கள் பொதுவாக தினம் மூன்றுவேளையும் முள்ளங்கிக் கிழங்குபோன்ற டர்னிப்ஸ் என்பதை பலவிதமாக சமைத்துப் பசியாற்றுவார்கள். சிறுபிள்ளைகளுக்கு பசும்பால்கிடைப்பது அபூர்வம். சரியான ஆகாரம் இல்லாதுவளர்ந்த இந்தச் சிசுக்கள் நரம்புத் தளர்ச்சியும் சரீர பலவீனமுள்ளவர்களாயும் பாலியப்பிராயம் சேர்ந்தார்கள். பால சிசுக்களுக்கு மிக அவசியமான ஆகாரமல்லவோ? யுத்த காலத்தில் ஜெர்மனிக்கு ஆகாராதிகள் சேராகபடி எதிரிகள் கப்பல்களைத் தடுத்துவிட்டபடியால் பஞ்சமும் பட்டினியும் அவர்கள் கதியாயிற்று. இதனிலும் அதிகக் கொடியதாயிருந்தது யுத்தம் முடிந்தபின் வெர்சேயில்ஸ் என்ற பிரஞ்சு தேச நகரில் செய்யப்பட்ட உடன்படிக்கையே. இது ஜெர்மனியை வெட்கத்திற்கும், தரித்திரம் பலவித இடுக்கண் கஷ்டத்திற்கும் கீழாக்கிற்று. ஜெர்மன் நாணய மதிப்பும் மிகவும் குறைந்து இறங்கிப் போயிற்று. யுத்த காலத்திற்கு முன் ஒரு ஜெர்மன் மார்க்கு என்றது கொஞ்சங்குறைய 12 அணாவிற்கு சமமாகும். இப்போதோ 12 அணாவிற்கு 100 அல்லது 120 மார்க்குகள் மேல் கிடைக்கும். ஓர் ஜெர்மன் தேசத்தவனுக்கு ஒரு கிண்ணம் காப்பி

முக்கால் ரூபாய் விலையாகும். ஆனால் அயல் நாட்டிலிருந்துபோன என் காசிற்கு மதிப்பு அதிகமானதால் எனக்கு அது ஒரு அணாபோல் தானாகலாம். ஒரு அணாவைத்தான் நான் 10 அல்லது 12 மார்க்குகளாக மாற்றிக்கொள்ளலாமே.

பெர்லின் நகரிலுள்ள என் நண்பர் வேலை செய்த ஆஸ்பத்திரியை அவருடன் சுற்றிப்பார்த்தேன். தமதுகூட வேலை செய்யும் மற்ற வைத்தியர்களுக்கும் அவர் என்னைப் பழக்கிவைத்தார். அந்நகரிலுள்ள இன்னொரு பெரிய வைத்தியசாலையையும் போய்ப் பார்த்தேன். இதன் மேல்பார்வையாளராகயிருந்தவர் அகஸ்துஸ்பியர் என்னும் பெரியார். இரண வைத்தியத்தில் மிகக் கீர்த்திபெற்றவர். சில நவீன இரணவைத்திய முறைகள் கண்டுபிடித்தவர். நான் எடின்பரோ நகரில் மாணவனாய் படித்தபோது இவருக்கு அங்குள்ள சர்வகலாசாலை இரண வைத்திய நிபுணருக்குரிய தங்கள் உயர் பட்டம் சூட்டிய கலைச் சங்கக் கூட்டத்திற்கு 1910ம் வருஷத்தில் நான் போயிருந்தேன். நான் வைத்தியசாலை சேர்ந்தவுடன் இவர் என்னை அன்பாய் மலர்ந்த முகத்துடன் வரவேற்றுக்கொண்டு தமக்கு அந்த சமயத்தில் அதிக வேலையிருந்ததால் இன்னொருவர் என்னை வைத்தியசாலையின் பல பாகங்களையும் நடக்கும் வேலையையும் காட்டும்படி ஒழுங்குசெய்தார் ஆயுத வேலை செய்யுமிடத்தில் இரணவைத்தியர்கள் சாதாரணமாக ரப்பர் கையுறைகள் போட்டுக்கொள்வார்கள். வயிற்றுப் புண்ணிற்கு, இரைப் பையையும் சிறுகுடலையும் இணைத்துத் தைக்கும் ஆயுத வேலை செய்வதில் அவற்றைப் பிடிக்கும் குறடுகளுக்கு ரப்பர் குழாய் உறைகள் போட்டிருக்கும். ஆனால் இங்கேயோ அப்படி ரப்பர் உறைகள் ஒன்றும் போடாமல் ஆயுத வேலை செய்தார்கள். இதைக்குறித்து நான் வினவினபோது ஒரு இரண வைத்தியர் என்னிடம், "நாங்கள் இப்போது தரித்திரர், ஐயா, ரப்பருக்கு ஐவேசு கிடையாது" என்றார்.

ஒருநாள் டாக்டர் ஹாய்பெல்டருடன் உன்டர் டின் லிண்டன் என்னும் பிரதம தெருவழியாய் நடந்து சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தேன். ஜெர்மன் சட்டசபையாகிய ராய்ச் ஸ்டாக் என்னும் பெரும் கட்டிடம் கிட்டினோம். அதின் எதிரே ஜெர்மன் தேசத்தில் பெயர் பெற்ற ராஜதந்திரியாகிய பிஸ்மார்க்கு என்னும் பெரியாரின் சிலையிருந்தது. அதைப் பார்த்தவுடன் டாக்டர் ஹாய்பெல்டர் என்னிடம் "இவர் மாத்திரம் இக்காலத்தில் உயிரோடிருந்திருந்தால் சென்ற யுத்தத்தில் நாங்கள் தோல்வியடைந்திருக்கவேமாட்டோம்" என்றார், அதற்கு நான் "ஜீவனின் மெய்சித்தியோ வெற்றியோ யுத்தகளத்தில் அல்ல, வேறுவிதமாய்த்தான் கிடைக்கும்" என்றேன். ஆனால் என் நண்பனுக்கு தன் தேசம் தரித்திரம் அவமானமடைந்து நிலைகுலைந்த ஸ்திதியிலிருக்கையில் நான் சொன்ன வார்த்தைகள் ஏதோ நம்பக் கூடாத தத்துவ ஞானம்போல் மாத்திரம் தோன்றியிருக்கலாம்.

இப்பூலோகத்தின் ஏகாதிபத்தியங்களின் சரித்திரத்தை ஒருவன் கவனித்து ஆழ்ந்து யோசித்தால் அதின் பைத்தியம் எத்துணை அகோர மானது! தங்கள் சுயநலத்தையே முக்கியப்படுத்தும் ஆவேசம் பிடித்த இந்த ஏகாதிபத்தியங்கள், தங்கள் கைக்கு கீழானவர்களை அடக்கி ஒடுக்கிச் சுதந்தரமடையாது செய்துவிடுகின்றன. அடக்கு முறைகள் செய்யும் கடூர செயல்களினால் மக்களுக்கு வரும் கஷ்ட நஷ்டங்களைப் பாராது இவர்கள் காட்டும் கண்மூடித்தனம் இவர்களைக் குருடாக்கி விடுகிறது. தாங்கள் மற்றவர்களுக்கு வெட்டிய குழியில் தாங்களே பின்காலத்தில் விழ நேரிடும் என்ற சத்தியத்தை அவர்கள் மறக்கச் செய்து விடுகிறது. ஐரோப்பாவின் தற்சமய ஏகாதிபத்திய ஆர்ப் பாட்டத்தின் பலன் இதுவே. சரித்திரம் திரும்பத் திரும்பச் சுழன்று வரும். பூலோகத்தார் பலவிதமாக மாறுகிறார்கள். அரசியல் இஷ்ட ராக இப்போதிருப்பவர்கள் பின் சத்துருவாகிறார்கள். சத்துருக்கள் சமயோசிதம்போல் இஷ்டதுணைவராகிறார்கள். மற்றவர்களை அடக்கி ஒடுக்குகிறவர்கள் ஒடுக்கப்படுவார்கள். ஆளுகிறவர்கள் அடிமையா வார்கள், அடிமைகள் அவர்கள்மேல் ஆளுவார்கள். பூர்வீக ஏகாதி பத்தியங்களாகிய ஆப்பிரிக்காவிலிருந்த கார்த்தேஜ், எகிப்தின் மகிமை, பாபிலோனின் சத்துவம், கிரேக்க ஏகாதிபத்திய பிரஸ்தாபம் ரோமை இராஜ்ஜியத்தின் நிகரில்லா உலக ஆளுகை, மகம்மதிய இராணுவ பெயர் பிரஸ்தாபங்கள், நமது தமிழ்நாட்டில் பர்மா மட்டும் எட்டிய சோழ ஏகாதிபத்திய மாண்பு கடல்படைகள், இவையெல்லாம் எங்கே? இக்காலத்தில் அசைக்கக்கூடாதது போல் தோன்றும் ஏகாதி பத்தியங்களின் முடிவும் இதுவே. இப்போது தாழ்த்தப்பட்டிருப்பவர் களும் சுதந்தரமடைந்து தலை தூக்கும் நாளும் வரும்.

நான் இதை எழுதும் சமயத்தில் (ஆகஸ்டு மாதம், 1940) திரும்பவும் போனவருஷம் ஆரம்பித்த ஐரோப்பிய யுத்த ஆர்ப்பாட்டம் அழிச் சாட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. 22 வருஷங்களுக்கு முன் தோல்வியடைந்த ஜெர்மனி இப்போது வெற்றிமேல் வெற்றியடைந்து ஐரோப்பாவின் பல தேசங்களை தன் வசமாக்கி தலைதூக்கிவிட்டது. பிரித்தானியா இக்கட்டான நிலையிலிருக்கிறது. இதெப்படி முடியுமோ? யாரறிவார்? பிரிட்டனோடு பல வருஷங்களாக தனது சுதந்தரத்திற் காகப் போராடும் இந்தியாவின் கதியும் எப்படியாகுமோ?

இதன்பின் என் நண்பர் ரீபன்டிராஸ்டு இருந்த சோளிங்கன் ஊர் போனேன். இது ரயின் நதி அருகிலிருந்ததால் ரயின்பூமி என்று பெயர். இவரை நான் முதலாவது சந்தித்தது 1911ம் வருஷம் செப் டம்பர் மாதம் இந்தியாவிற்கு ஐரோப்பாவிலிருந்து திரும்பி கப்பல் பிரயாணம் செய்யும்போது இவர் கொழும்பில் வியாபார விஷயமாய் ஓர் ஜெர்மன் வியாபார கம்பெனியின் கீழ் வேலைசெய்ய இலங்கை இந்தியா முதலிய தேசங்களுக்கு அப்போது வந்தவர். சுக வீனமாய் அவர் கொழும்பிலிருந்தபோது அவருக்கு நான் வைத்தியம்

செய்தேன். சுகமானபின் அவர் என்னிடத்தில், "நாம் எத்துணை நண்ப ராயிருந்தாலும் வேலை விஷயத்தில் காரியமாய்த்தானிருந்து கொள்ள வேண்டும். அதனால் நீங்கள் எனக்குச் செய்த வைத்திய உதவிக்காக, நான் உங்களுக்கு என்ன கொடுக்கக் கடன்பட்டவன் என்று சொல்ல வேண்டும்" என்று வற்புறுத்தி எழுதிக் கேட்டார். அதற்கு நான் "எனக்கு உங்களையே கொடுத்துவிடவேண்டும்! பணமல்ல நீங்கள்தான் வேண்டுமென்றேன்". எங்களிருவருக்கும் மிக நட்புண்டாயிற்று. புவுலாள் என்ற பெயருடைய இவர் மூத்த மகளுக்கு என்னை ஞானத் தகப்பனுக்கிவிட்டார். ஞானத்தகப்பனுயிருக்க என்னைக் கேட்டபோது "உலகத்தில் நான் கண்டமட்டும் நீ யொருவனே மெய்க் கிறிஸ்தவன். அதினால் நீயே என் பிள்ளைக்கு ஞானத் தகப்பனுயிருக்கவேண்டும்", என்றெழுதினர். என்மேலுள்ள அன்பு அபிமானத்தால் அவர் சொன்னாலும் இது சரியல்ல. மிகையான சொல் என்றறிந்த என்னை என் முற்றும் அபாத்திர தன்மையை இது உணரச்செய்தது. இப்போது பல வருஷங்களுக்குப் பின் அவர் தேசம் சென்று அவரையும் அவர் இப்போது விவாகம் செய்திருந்த மனைவியையும் பார்க்க சமயம் வாய்த்தது. இந்தப் பக்கங்களில் ஆங்கிலம் பேசக்கூடியவர் இவர் ஒருவரே எனக்குத் தெரிந்தமட்டுமிருந்தார். ஆங்கில பாஷையறியாத இவர் மனைவி என்னுடன் சைகையினுலே பேசுவார்கள்! இங்கு பல ஜெர்மன் நண்பர்களோடு அறிமுகமானேன். பாஷை தெரியாவிட்டாலும் எனக்கு விருந்தளித்து மிக அன்பு உபசாரம் பாராட்டினர்கள். என் நண்பருடைய மைத்துனர் யாதொரு காசும் வாங்காமல் கெட்டுப் போயிருந்த என் ஜேப்பு கடியாரத்தை நன்ருக பழுதுபார்த்துக் கொடுத்தார். ஆனல் ஆகார விஷயங்களில் இவர்களுக்கிருந்த கஷ்டங்களைப் பார்க்கையில் இவர்கள் கொடுக்கும் ஆகாரத்தை நான் சாப்பிட்டு இவர்களுக்கில்லாமல் செய்துவிடுவதுபோலிருந்தது! என் நண்பர் வீட்டில் ஒரு வெள்ளாடிருந்ததால் இவர் மட்டிற்கு கொஞ்சம் பால் கிடைக்கும் வசதியிருந்தது. ஆனல் வெள்ளாட்டுப் பாலை எனக்கே உபயோகப்படுத்துவார். நான் இங்கிருக்கும்போது இவர் சற்று தூரத்திலிருந்த ஒரு ஊருக்கு தமது வேலையினிமித்தம் பகலெல்லாம் போய்விடவேண்டியதிருக்கும். அக்காலத்தில் ஜெர்மனி தேச இப்பிராந்தியங்களில் பிரிட்டீஷ்காரர் இராணுவங்கள் இருந்தன. ஒரு நாள் இவர் ஏதோ தன்னை மரியாதை காட்டாமல் பேசிவிட்டாரென்று சொல்லி ஒரு ஆங்கில இராணுவ சார்செண்டு சிப்பாய் இவரைக் கைது செய்துவிட்டான்! நான் மறுநாள் புறப்படவேண்டியதிருந்தது. இவர் மனைவி பரிதாபமாய் அழுதுகொண்டிருந்தார்கள். நான் இங்குமங்கும் ஓடி டெலிபோன் என்ற பேச்சு தந்திமூலமாய் அவரைக் கைது செய்த இராணுவ உத்தியோகஸ்தரிடம் இவருக்காக பேசி நான் பிரிட்டிஷ் பிரஜை என்பதையும் ஒருவாராக அழுத்தி வற்புறுத்தி அவரை விடுதலை செய்யும்படி பிரயாசப்பட்டேன்! இறுதியில் நடு இரவுபோல் அவர் வீடுவந்து சேர்ந்தார். எங்கள் சந்தோஷம் அதிகம் இப்படி ஜெர்மன் தேசத்தினர் கஷ்டநஷ்ட தரித்திரத்துடன் அவமானமும் அடக்கு முறைகளின் இம்சையையும் அநுபவிக்கவேண்டியதிருந்தது.

இப்படி ஒடுக்கப்பட்டதின் பயனைத்தான் ஜெர்மனி தேசத்தினர் தங்களைத் திரும்பவும் தலைதூக்கச் செய்யும் எந்தத் தலைவனையும் தெய்வம் போல் பாவித்து, ஏராளமாய் அவனுக்குப் பின்சென்று, ஒரே வைராக்கியத்துடன் தன்னயமற்று தங்களுக்கென்று இரவும் பகலும் பாடுபட்டுழைக்கும் சர்வாதிகாரியை முழு மன பல உற்சாகத்துடன் பின்பற்றுகிறார்கள். இந்த உணர்ச்சியின் பலனாக உண்டாகி வெளிவந்தவர்தான் இப்போது ஜெர்மன் சர்வாதிகாரியாக விளங்கும் ஹிட்லர் தலைவர். விஞ்ஞானசாஸ்திரிகள் சுயவிரிவு (வளர்ச்சி) என்று கூறுகிற தத்துவத்தின்படி முளைத்தவர் இவர். நான் 1934ம் வருஷம் மூன்றாம்முறை ஜெர்மனி போயிருந்தபோது இவரை ஜெர்மானியர் தெய்வலோகத்திலிருந்திறங்கினவர்போல் பூஜிதையாக எண்ணிப் பேசினார்கள்.

சோளிங்கன் ஊருக்குச் சமீபமாய் ஒரூரில் பைத்தியக்காரருக்காக ஏற்படுத்தியிருக்கும் ஒரு பெரிய வைத்தியசாலையும் இருக்கிறது. இங்கு கிறிஸ்து பக்தரான லூத்தரன் கன்னியாஸ்திரிகள் நல்ல தொண்டு செய்து வருகிறார்கள்.

சோளிங்கரைவிட்டுப் புறப்பட்டு கலோன் நகர் சேர்ந்தேன். ரயின் நதியைக் கடக்கும் பாலத்திலிருந்து நதிக்காட்சி அருமையாயிருந்தது. இங்கு நான் படம் பிடிக்கிற விலை அதிகமுள்ள நல்ல காமரா என்னும் படப்பெட்டியை இழந்துவிட்டேன். புகை வண்டியை விட்டு இறங்கியபின் உடனே திரும்பப்போய் வண்டியில் தேடியும் அதற்குள் யாரோ அதைத் திருடிவிட்டார்கள்! கலோனைச் சுற்றிப் பார்த்தேன். அதின் உயர்ந்ததும் சிறப்ப மாண்பு பொருந்தியதுமான ஆலய கோபுரம், அந்த ஆலயத்தின் உள் அமைப்பு முதலியன மனதைப் பரவசப்படுத்தக் கூடியது. பின்பு பாரீஸ் நகரஞ் சென்று அங்கு ஸ்காத்துலாந்திலிருந்து என்னைச் சந்திக்க வந்திருந்த சகோதரன் பேட்டனுடன் சேர்ந்துகொண்டேன். நாங்களிருவரும் மார்ஸேயில்ஸ் துறைமுகஞ் சென்று இந்தியாவிற்குக் கப்பல் ஏறினோம்.

அத்தியாயம் 12

இந்திய கிறிஸ்தவ தலைவர்களை சந்தித்தல்;

வட ஆற்காடு ஜில்லா.

நாங்கள் பிரயாணம் செய்தது "அமெஸான்" என்ற பெயருடைய பிரஞ்சு தேசக் கப்பல், எங்களுடன் பல ரோமன் கத்தோலிக்க சபை குருக்கள் பிரயாணம் செய்தார்கள். வருகிற வழியில் ஆப்பிரிக்கா தேசத்திலிருக்கும் பிரஞ்சு சோமாலி பூமியின் துறைமுகமாகிய டிசுபுட்டி என்ற ஊர் சேர்ந்தோம். இங்கு தங்கள் ஊர் சாமான்கள் விற்க சில ஏழை ஆப்பிரிக்க மனிதர் கப்பலுக்கு வந்தார்கள். இவர்கள் கொண்டுவந்த சில சாமான்களை வாங்கிய சில பிரஞ்சு கப்பல் தொழிலாளிகள் அதற்குரிய கிரயப் பணத்தைக் கொடுக்காமல் ஒரு ஏழை ஆப்பிரிக்க மனிதனை இம்சித்து அழச் செய்தார்கள். பாதிரிமார் சிலரும் இதை ஒரு வேடிக்கை போல் பார்த்து நின்றார்கள். இதைப் பார்த்த என் மனமுருகிற்று. அந்த ஏழை மனிதனுக்கு நான் கொஞ்சம் பணம் கொடுத்துச் சமாதானம் செய்து அவனைச் சாந்தி செய்து அனுப்பினேன். அந்நியரும் வேற்று நிறம் பாஷைக்காரருமானவர்கள் விஷயத்தில் மனிதனுடைய மனம் எத்துணை கடினமிரக்கமின்மையானதாகி விடுகிறது!

14—11—1920ல் கொழும்பு சேர்ந்தோம். என் அருமையான சகோதரி லூவாயி அம்மாள் அங்கில்லாதது கொழும்பை ஒரு வித்தியாசமானதும் வெறுமையானதுமான இடமாக்கிற்று. எனது மைத்துனர் டாக்டர் தாவீதுடனும் பிள்ளைகளுடனும் சில நாட்கள் தங்கிய பின் கப்பலேறி தூத்துக்குடி மார்க்கமாய் பாளையங்கோட்டை சேர்ந்தோம். அங்கு அப்பொழுது இருந்த என் மூத்த சகோதரி மரியவியாகுலம் அம்மாள் (பாரிஸ்டர் தாவீது அவர்கள் மனைவி) குடும்பத்துடன் தங்கியிருந்தோம். பாளையங்கோட்டையில் இச்சமயத்தில் மீந்திருந்த என் இரண்டு சகோதரிகளுமிருந்தார்கள். இவர்கள் குடும்பங்களுடன் சந்தோஷமாய் சில நாட்களிருந்தோம். நூற்றாண்டு மண்டபத்தில் பெரிய கூட்டமொன்று வைத்து எங்களிருவரையும் பேசச் சொன்னார்கள். பரிசுத்த யோவான் கல்லூரித் தலைவராகிய திருவாளர். எங், எனும் ஆஸ்திரேலிய தனவான் அக்கிராசனம் வகித்தார். இங்கிருக்கையில் டோனாவூருக்கும் சென்று அங்கு ஸ்ரீமதி கார்மிக்கேல் அம்மாள் ஆத்ம சரீர ஆபத்துக்கள் அகப்படக்கூடிய சிசுக்களை எடுத்தாதரித்து வளர்த்து பாதுகாக்கும் ஸ்தாபனத்தைப் பார்க்கப் போனோம். அந்த அம்மாள் எங்களிருவருக்கும் மிக அன்பு பாராட்டி உபசரித்து இங்கும் முப்பந்தலிலும் அவர்கள் செய்துவரும் வேலை முதலியனவற்றை எங்களுக்குச் சுற்றிக்காட்டினார்கள். இவர்களுடைய

ஜெபஜீவியமும், தெய்வ பராமரிப்பின்மேல் இவர்களுக்கிருந்த நம்பிக்கை, பக்தி விசுவாசமும் எங்களைப் பரவசப்படுத்தியது. இங்குள்ள ஐரோப்பியரும் இந்திய உடையே தரித்திருந்தார்கள். தமிழிலேயே அதிகமாய்ப் பேச முயன்றார்கள். ஸ்தாபனங்களின் பல பாகங்களுக்குத் தமிழிலேயே இனிய பெயர் சூட்டியிருந்தார்கள். சிசுக்கள் எங்கே பார்த்தாலும் மலர்ந்த முகத்துடன் ஓடிவந்து பெரியோர்களின் கையை அன்போடு பிடித்துக்கொண்டு உல்லாசமாயிருப்பார்கள். ஸ்தாபனத்தினுள் அழகிய பூந்தோட்டங்களிருந்தன.

நான் சிறுவனாயிருந்தபோது இந்த கார்மிக்கேல் அம்மாள் அப்போது பக்தியில் சிறந்து மனிதர் ஜீவியம் மாறத்தக்க வல்லமையுடன் மிக எழுப்புதலான பிரசங்கம் செய்யும் ஆங்கில மிஷனரி குரு உவாக்கர் ஐயர் என்ற பெரியாருடன் எங்கும் செல்லும் நக்ஷத்திரக் கூட்டத்தாருடன் இவர்களுமிருந்தார்கள். ஆத்ம அதிர்ச்சியுண்டாக இந்த உவாக்கர் ஐயர் பாளையங்கோட்டை முதலிய இடங்களில் செய்யும் பிரசங்கங்களை நான் கேட்டு பரவசமடைந்ததுண்டு. தமிழில் பாண்டித்தியமடைந்தவர், தமது ஆங்கில பாஷையிலோ நிபுணன். மிக சாதுரிய தத்துவமுள்ளவர். சமஸ்கிருதமும் இவருக்குத் தெரியும். பாளையங்கோட்டையில் பல கிறிஸ்தவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு இவரிடம் ஆலோசனைக் கேட்டுப் பெயரிடுவார்கள். இந்த வேத வாக்கியத்திலிருந்து இவர் என்ன அர்த்தத்தைதான் கொண்டுவரக்கூடும் என்று சந்தேகப்படக்கூடிய ஏதோ சாதாரணமான ஒரு பழைய ஏற்பாட்டு வசனத்தை பிரசங்க வாக்கியமாக தெரிந்தெடுத்து, அதிலிருந்து கேட்பவர் மனம் அதிர்ச்சியடைந்து நன்மை பெறத் தக்கதாகப் பேசுவார். அவர் முகத்தில் ஒரு பிரகாசம் ஜொலிக்கும். "ஆகாரே" நீ எங்கே யிருக்கிறாய்?" என்று ஆதியாகமத்தில் வரும் வசனத்தை எடுத்து எந்தவிதப் பாவிகளையும் உருக்கமான அன்புடன் ஆண்டவர் தமதிடம் அழைப்பதைக் குறித்து வியாக்கியானித்து, பாளையங்கோட்டைக் கோவிலில் அநேக வருஷங்களுக்கு முன் அவர் பேசிய பிரசங்கம் இன்னும் என் காதில் தொனித்துக் கொண்டிருக்கிறது. அவருக்கும் கார்மிக்கேல் அம்மாளுக்கும், "கிறிஸ்தவ கம்பர்" என்று கீர்த்தி பெற்றவரான தமிழ்வித்வான் கிருஷ்ணபிள்ளை என்னும் மகாத்துமாவின் பெயரில் மிக அன்பு அபிமானமுமுண்டு. இந்த வித்வான் மரண சமயத்தில் அவர்களருகில் இருந்தவர்களிலொருவர் இந்த பக்தினி கார்மிக்கேல் அம்மாள் இயேசு என்ற பதத்தை பெரும் எழுத்தாக வரைந்து கொடுத்திருந்ததை மரண சமயத்திற் கருகிலிருந்த வித்வானிடம் காட்டவும், அவர் உடனே தமது விரலொன்றை நீட்டி, அந்த எழுத்துக்கள் மேல் வைத்து, திரும்பத் திரும்ப அவற்றின் மேல் தமது விரலைச் சுழற்றி வரைந்தாராம்!

ஐய மேவிட மரணந்த க்ரம் வந்
தொய்யென மூடி நின் றுடற்றுமாயினுந்

துய்ய பங்கயமுக ஜோதி காட்டியாள்
அய்யனே நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம்.

(கிருஷ்ண பிள்ளை)

....

நாவினில் இயேசு வென்றணிய இயேசு
நாதரடியிணையை நான் கண்டு பணிய
நல்ல மரணந் தரவேண்டும்.

(ஆசிரம பாமாலை)

கார்மிக்கேல் அம்மாள் நாங்கள் ஸ்தாபிக்க யோசித்திருந்த ஆசிரமத்தை டோனாவூருக்குச் சமீபமான நாங்குனேரியில் ஸ்தாபிக்க ஆலோசனை சொன்னார்கள். பாளையங்கோட்டையிலிருந்து சென்னைப் பட்டணம் சென்றோம். பாரத சேவகசமாஜம் எனும் என். எம். எஸ். சங்கத்தார் இங்கு எங்களை வரவேற்றுக்கொள்ளும் ஓர் கூட்டம் வைத்தார்கள். இதன்பின் அச்சங்கக் காரியதரிசி திரு. பிலிப்பு அவர்களுடன் சங்கம் வேலைசெய்யும் தமிழ்நாட்டில் அக்காலத்தில் வேலை செய்த ஓமலூர் போய்ப்பார்த்தோம்.

ஓமலூரில் விசேஷம் அங்கு மனிதரை வருத்தும் நரம்புச் சிலந்தி நோய்தான்போல் தோன்றிற்று. இப்போதோ சமீபத்திலுள்ள மேட்டூர் அணையும் ஜலசக்தி மின்சார வேலைகளும் ஊருக்கு பெரும் பெயர் கொண்டுவந்துவிட்டது.

இங்கிருந்து நாங்கள் திரும்பும் வழியில், நடு இரவு போல் லோகூர் சேர்ந்தோம். நாங்கள் பிரயாணம் செய்த மேட்டுப்பாளையம் தபால் புகைவண்டியென்று அப்போதழைக்கப்பட்ட புகைவண்டி சாதாரணமாக லோகூர் போன்ற சிறிய இடங்களில் நிற்கிறதில்லை. எனினும் இப்போதோ அது கொஞ்சம் குறைய ஒருமணி நேரத்திற்கு மேல் இங்கு நின்றுகொண்டிருந்தது. காரணத்தை விசாரிக்கையில் பாதையில் எங்களுக்கு எதிரே வந்துகொண்டிருந்த புகைவண்டி இன்னொரு வண்டியோடு மோதி பாதை அடைபட்டிருப்பதாக அறிந்தோம். நாங்களிருவரும் டாக்டரென்று நண்பர் பிலிப்பு புகைவண்டி உத்தியோகஸ்தரிடம் சொன்னவுடனே அவர்கள் எங்கள் மூவரையும் உடனே எஞ்சினிலனுப்ப ஒழுங்கு செய்தார்கள். சமீபத்தில் கிடைக்கக்கூடிய மரத்துண்டுகளையும், எங்கள் கைக்குட்டை முதலியவைகளையும் விபத்தில் முதலுதவி செய்ய ஆயத்தம் செய்து கூடக்கொண்டு போனோம். பொம்மிடி புகைவண்டி ஸ்தானம் கிட்டியதும் அங்கிருந்து எழும்பிய நெருப்பின் வெளிச்சம் வெகுதூரம் தெரிந்தது. கிட்டப் போனவுடன் பார்த்த காட்சி மிக அதிர்ச்சியுண்டுபண்ணத்தக்கது. அங்கு பரவி பல இடங்களிலும் கிடந்த பிரேதங்களையும், குற்றுயிராக பிரக்ஞையிழந்து கிடந்தவர்களையும், பெருங்காயங்கள் பொறுக்க

மாட்டாமல் அழுது கூச்சலிட்டுத் தவிப்பவர்களையும், இரத்தம் சோனு மாறியாய் வெளியேறி தாகத்தினுல் வருந்தி தண்ணீருக்காகக் கெஞ்சிக் கூப்பிடுபவர்களையும் பார்க்க எங்கள் மனம் புண்ணுய் நொந்து வருந்தியது. கல்லான இருதயமும் இத்துயரக் காட்சி காண மெழுகுபோ லுருகிவிடும். நடு இரவு கடந்து இரண்டு மணி முதல் காலை விடியு மட்டும் நாங்கள் மூவரும் ஓயாது வேலை செய்து காயப்பட்டவர்கள் புண்களைக் கட்டியும், சின்னுபின்னமாக உடைந்து சிதைந்து வதைந்து தொங்கிக்கொண்டிருந்த கால்கள் முதலியவனவற்றை எங்கள் கையிலிருந்த கத்திரிக்கோலால் கத்தரித்து நீக்கி காயங்களைக் கட்டியும், முறிந்த கால் கைகளுக்கு தப்பைகள் கட்டியும், இப்படி பலருக்கு நாங்கள் உதவி புரிந்து அவர்களைத் தூக்கிக்கொண்டு போய் பின்னுலே உடையாதிருந்த வண்டிகளில் கொண்டுபோய் வைத்தோம். தாகத்தினுல் வருந்தியவர்களுக்குத் தண்ணீரும் கொடுத்து ஆற்றினேம். இப்படி பலருக்கு முதலுதவி செய்து அவர்களைத் தூக்கி வண்டிகளில் ஏற்றிக்கொண்டிருக்கையில் பொழுதும் விடிந்துவிட்டது. இதன்பின் தான் ரெயில்வே டாக்டர் சேலத்திலிருந்து வந்து சேர்ந்தார். அவருடன் நாங்கள் இதுவரை வண்டியில் ஏற்றிய காயம்பட்டவர்களை திருப்பத்தூருக்கு உடனே அனுப்பினேம். இப்போதுதான் திருப்பத்தூர் என்ற இந்த ஊர் ஒன்று இருக்கிறதென்று முதலாவதாக நாங்களறிந்தது இந்த விபத்திற்கு காரணமாயிருந்தது. சென்னையிலிருந்து மேட்டுப்பாளையம் தபால் புகைவண்டி ஓட்டுபவன் பொம்மிடி கிட்டும் அச்சமயத்தில் எஞ்சினில் இல்லையாம். தனது மனைவி அந்த வண்டியில் பிரயாணம் செய்பவளுடன் அவள் வண்டியிலேறியிருந்தானும். எஞ்சினுக்கு விறகுபோடும் உதவியாள்தான் எஞ்சினிலிருந்தானும். பொம்மிடியில் அச்சமயத்தில் ஒரு சாமான் வண்டி இரும்பு தண்டவாளப் பாதை மாற்றிக்கொண்டிருந்ததாம். எச்சரிப்பு கைகாட்டி மோசம் என்ற நிலையிலிருந்தும், உதவியாள் எஞ்சினை முழுவேகத்தோடு ஓட்டி வந்தானும். இந்த மிக வேக நிலையில் எஞ்சின் பாதை மாற்றிக்கொண்டிருந்த சாமான் வண்டியோடு பலமாய் மோதிவிட்டது. நாங்கள் பார்த்தபோது இரண்டு எஞ்சின்களும் ஒன்றிற்குள் ஒன்று மாட்டி உடைந்து அவற்றிற்கு பின்னிருந்த வண்டிகள் தூள்தூளாயுடைந்து சிதறிக் கிடந்ததுமல்லாமல் சாமான் வண்டியிலிருந்த மண் (கிரோசின்) எண்ணெய் பயங்கரமாய் எரிந்த பெருத்த நெருப்புச் சுவாலை மேலே விசாலமாய் எழுந்துகொண்டிருந்தது. சர்க்கார் விசாரணை செய்த பின் இதற்குத் தண்டனையாக, ஓட்டுகிறவன் சில வருஷம் சிறையில் வைக்கப்பட்டான். இப்போது வெளியே வந்துவிட்டான். திரும்ப ரெயில்வே வேலைபார்த்து பென்ஷனும் இவனுக்குக் கிடைக்கிறதாம். ஆனுல் இவ்விபத்தில் உயிரையிழந்த ஏராளமான மக்களுக்கும், அருமையான இனஜனத்தை இழந்தவர்களுக்கும் இச்சிறு தண்டனை இவர்களுக்கு கொடுத்துவிட்டதால் வந்த லாபமென்ன? இங்கிலாந்தில் இப்படி நடந்தால் நஷ்ட ஈடாக ரெயில் கம்பெனி அதிகப் பணம் உடல் நஷ்டமடைந்தவர்களுக்கு அல்லது நெருங்கிய இனத்தாருக்குக்

கொடுக்க நேரிடும். இப்படிப்பட்ட பயங்கர சம்பவங்கள் தென்னிந்தியா இருப்புப்பாதைகளில் அடிக்கடி நடக்கின்றன. தகுந்த பிரயாசங்கள் எடுத்து, பிரயாணிகளுக்கு அநுகூலமான நல் முறைகளையும் சவுகரியங்களையும் கவனித்து மோசங்கள் ஆபத்துக்களைத் தடுக்க புகைவண்டி அதிகாரிகள் மிக முயற்சி செய்யவேண்டும். ஆயிரக் கணக்கான ஜனங்கள் இவர்களை நம்பித்தானே பிரயாணம் செய்கிறார்கள்.

நண்பர் ஜி. வி. யோபு அவர்கள். பங்களூர் போகிற வழியிலிருக்கும் குப்பம், ஆசிரமம் ஸ்தாபிக்கத் தகுந்த ஸ்தலம் என்று ஆலோசனை சொல்லியிருந்தார். அதினால் குப்பத்திலிறங்கி சுற்றிப்பார்த்தோம். பின்பு பங்களூர் சேர்ந்து எங்களுக்கு மிகவும் அருமையான நண்பராயிருந்த பங்களூர் வேதசாஸ்திர கல்லூரி தலைவர் டாக்டர் எல். பி. லார்சன் ஐயர் அவர்களுடன் தங்கியிருந்தோம். இவர்கள் ஆசிரமம் விஷயமாய் சில நல்லாலோசனை சொன்னார்கள். "ஏதாவது பழைய கிறிஸ்தவ சபை சமீபமாயிருக்குமிடத்தில் உங்கள் ஆசிரமத்தை ஸ்தாபிக்கவேண்டாம், ஏனென்றால் அந்த சபை உங்கள் வேலைக்கு ஒரு முள்ளாயிருக்கும். அப்படிப்பட்ட சபைகள் கிட்ட இல்லாத ஒரு காலி இடத்தில் நீங்கள் உங்கள் ஆசிரமத்தை ஸ்தாபியுங்கள். ஆனாலும் கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்ளுகிறவர்களை மெய் கிறிஸ்தவர்களாக்கும் ஆத்மீக வேலை செய்வதுதான், இந்துக்களுக்குப் பிரசங்கிப்பதைப் பார்க்கிலும் உங்கள் மேல் விழுந்த முக்கிய பாரமாகும்." என்று எங்களிடம் ஆலோசனை சொன்னார். இங்கிருந்த லண்டன் மிஷன் பாதிரியார் ஜி. இ. பிலிப்ஸ் என்பவர் குப்பத்தை விட திருப்பத்தூரிலாவது அல்லது தர்மபுரியிலாவது எங்கள் ஆசிரமம் ஸ்தாபிப்பது நன்மையாயிருக்கும் என்றார். இவ்விடங்களில் லண்டன் மிஷன் சங்கத்தார் பணக்கஷ்டத்தினிமித்தம் தங்கள் வேலையை மூடிவிடப் போகிறதாகவும் சொன்னார்.

பங்களூரிலிருந்து புறப்பட்டு என். எம். எஸ். சங்கம் வேலைசெய்த கர்மலாவிற்குப் போனோம். நண்பர் பாவா ஐயர் அங்கு வந்து எங்களுக்கு எல்லாம் சுற்றிக்காட்டி அங்கேயே நாங்கள் ஆசிரமம் ஸ்தாபிக்க வேண்டுமென்று மிகவும் வற்புறுத்தினார். பின்பு கேட்காண் என்ற கிராமத்தில் கீர்த்தி பெற்ற கிறிஸ்தவ பக்தினியாகிய பண்டித ராமாபாய் அம்மாள் ஸ்தாபித்திருக்கும் விதவைகள் வீடு என்ற ஸ்தாபனம் போனோம்.

இந்த ஸ்தாபனத்திற்கு முக்தியென்று பெயரிட்டிருந்தார்கள். இந்துக்களில் விசேஷமாக பிராமணருக்குள் பாலியப் பிராயத்திலேயே விதவையானவர்கள்கூட திரும்பக் கலியாணம் செய்துகொள்ளக் கூடாதென்ற மாமூல் பல வருஷங்களுக்கு முன் மிக கண்டிப்பாய் அநுசரிக்கப்பட்டு வந்தது. இவ்விதவைகள் மிகவும் ஒடுக்கப்பட்ட ஸ்திதியி

விருந்தார்கள். இவர்கள் விடுதலை (முக்தி)யடைய பிராமண ஜாதியை சேர்ந்த இளம் விதவையாயிருந்த இந்த அம்மாள் இந்த ஸ்தாபனத்தை முதலில் ஏற்படுத்தினார்கள். ஏராளமான ஏழை விதவைகளுக்கு இது ஒரு பெரிய அடைக்கல ஸ்தலமாயிருந்தது. பலத்த விசுவாசி ஜெபத்தில் மிக ஊக்கமுள்ளவர்கள், தெய்வபராமரிப்பை அதிகமாய் நம்பி அவருடைய திவ்விய நடத்துதலின்படி அவர் மேலேயே சார்ந்து அவர் கிருபாகடாக்ஷத்தால் கிடைத்த காணிக்கை நன்கொடைகளால் இந்த ஸ்தாபனத்தை நடத்தினார்கள். மராட்டி மொழியில் வித்வான். சமஸ்கிருத பாஷையில் பாண்டித்தியமுள்ளவர், எபிரேயு கிரேக்க பாஷையும் படித்திருந்தார்கள், தானே சுயமாக தமது தாய்பாஷையாகிய மராட்டியில் கிறிஸ்தவ வேதாகமத்தை கிரேக்கு பாஷையிலிருந்து மொழி பெயர்த்திருந்தார்கள் வயது முதிர்ந்து காது செவிடாய்ப் போயினும் இவர்கள் உருவம், வடிவம், மேனியின் தோற்றமும் மனதைக் கவரும். நான் பூனாவில் வேலை செய்யும்போது இவர்களை அடிக்கடி பார்க்கப் போயிருக்கிறேன். இவர்கள் ஒரே மகள் மனோரமபாயும் சிறந்த நற்குணமும் சாமர்த்தியமும், கல்வியுமுள்ளவர்கள். பம்பாய் சர்வகலாசாலை பி. ஏ. பட்டதாரி. கர்மலாவிலிருந்து கேட்காண் போய்ச் சேர்ந்தவுடன் பண்டித ராமாபாய் அம்மாள் எங்களிடம் ஒரு காரியத்தைத் தெரிவித்தார்கள். நாங்கள் அங்கு சேருவதற்கு முந்தின இரவு ஒரு தரிசனம் கண்டதாகவும், அதில் சகோதரன் பேட்டனும் நானும் அவர்கள் ஸ்தாபன சமீபத்தில் எங்கள் ஆசிரமத்தை ஸ்தாபிக்க அவர்கள் எங்களைக் கேட்கும்படி அவர்களுக்குச் சொல்லப்பட்டதாகவும் எங்களிடம் சொன்னார்கள். இந்த ஆசிரமத்திற்காக எங்களுக்கு அவர்கள் ஸ்தாபன சமீபத்தில் 12 ஏக்கர் நிலம் நன்கொடையாக தான் சந்தோஷமாகக் கொடுப்பதாகவும் சொன்னார்கள். ஒரு அம்மாளை அனுப்பி அந்த 12 ஏக்கர் நிலத்தையும எங்களுக்குச் சுற்றிக் காட்டச் செய்தார்கள். அவர்களிடமிருக்கும் பெண்களையும் நாங்கள் ஸ்தாபிக்கும் வைத்தியசாலையில் தாதிகளாக (நர்ஸ்களாக) வேலை செய்ய பகல்வேளைகளில் அனுப்புவதாகவும் வாக்களித்தார்கள்.

தென் மூலையிலுள்ள டோனாவூரில் கார்மிக்கேல் அம்மாள், இங்கே வடமேற்கு இந்தியாவில் பண்டித ராமாபாய் அம்மாள். இப்படி இந்தியாவில் தங்கள் அரும் தொண்டுகளினால் சிறந்து விளங்கும் பக்தினிகளின் மாண்பை என்னென்பேன்! கடவுள் பூலோகத்தில் இப்படிப் பட்ட பெண்களால் தமது இராஜ்ய மகிமை விளங்க மகத்தான வேலை செய்துவருகிறார்.

பண்டித ராமாபாயம்மாள் கிறிஸ்துவின் விசுவாசியாகக் காரணமாயிருந்தவர் நீலகந்தகோரே சாஸ்திரி. இவரும் ஒரு பெரிய சமஸ்கிருத வித்வான். கிறிஸ்துவுக்காக துறவிபோல் ஜீவித்தவர். இவரின்

ஒரே மகள் இலக்ஷிமிகோரே அம்மாளும் பெரிய பக்தினி. இவர்கள் ஆங்கிலத்தில் இயற்றிய வெகு அருமையான பாட்டை நான் அடிக்கடி பாடி ஆத்தும பாக்கியம் அடைந்திருக்கிறேன்.

இந்தப் பெருமாட்டியை சில வருஷங்களுக்குமுன் வடஇந்தியா விலுள்ள லாகூர்நகரில் நான் பார்த்துப்பேசும் சிலாக்கியம் எனக்குக் கிடைத்தது. எனக்கு அதிக அருமையாகயிருந்த அவர்கள் இயற்றிய இந்த ஆங்கிலப் பாட்டைக் குறித்து நான் அவர்களிடம் பேசிய போது அவர்கள் என்னுடன் என் பாட்டிற்கு அநேகருக்குள் இத் துணை மதிப்பிருக்கவேண்டும் என்று எனக்கே தெரிகிறதில்லை என்று தாழ்மையாகச் சொன்னார்கள். அவர்களுக்கு அப்போது வயது முதிர்ந் திருந்தது. "நான் இளம்பிராயமாயிருந்தால் உங்கள் ஆசிரமத்தைச் சேர்ந்து தொண்டுசெய்ய வந்துவிடுவேன். இப்போதோ என் காலம் சென்றுவிட்டது. பரமவீடு செல்லக்காத்திருக்கிறேன்" என்றார்கள்.

இந்த பக்தினி ஆங்கிலத்தில் இயற்றிய பாட்டின் சாராம்சத்தை மிக சுருக்கமாய் இங்கு சொல்லுகிறேன்.

1 ஆண்டவன் பிரசன்ன இரகசியமறைவில்
என் ஆத்மா ஒதுங்க எத்துணை ஆவல்!
இன்பப் பாடங்கள் இங்கு நான் கற்பேன்,
துன்பம் கவலைகள் ஓடியே பறக்கும்,
என்னை வருத்தா சோதனை வேதனை,
இந்த மறைவில் நான் ஒதுங்கையில்
தீயோன் ஓடுவான் தீமையும் ஒளியும்

2 இயேசுவின் பக்கம் நான் அமர்கையில்
இங்குண்டு குளிர்ந்த நிழலும் ஊற்றும்
என் இரக்ஷா பெருமான் அருகிலிருக்க
இருவரும் ஐக்கிய இன்பம் நுகர்வோம்
இன்பம் இவ்வைக்கியம் நீ அறிவாயோ!
அவர் நிழல்தனிலே ஓடி ஒதுங்கு
அவர் முக ஜோதியை உன்னில் காட்டு

இதன்பின் பூனாநகர் சென்று இங்கு 1920ம்வருஷம் நடந்த அகில இந்திய கிறிஸ்தவ மாணவர் மகாநாட்டுக் கூட்டங்களுக்குப் போனோம். அதில் பேசவந்திருந்த தீனபந்து ஸி. எப். ஆண்டிரூஸ் மகாத்துமாவை யும் இங்கு சந்தித்து அவருடன் கலந்து பேச நல்ல சமயம் கிடைத்தது. நாங்கள் ஸ்தாபிக்க யோசித்துக்கொண்டிருந்த ஆசிரம விஷயமாக ஆலோசனை சொன்னார்கள் ஏழை கிராமவாசிகளோடு எங்களை ஐக்கியப்படுத்திக்கொள்வதையே முக்கியப்படுத்தி வற்புறுத்தினார்கள். தாம் எங்களுக்கு என்ன ஆலோசனை சொன்னாரோ அதின்படியே



''பெரியண்ணன்'' சவரிராயன் இயேசுதாசன்



நண்பருடன் பெரியண்ணனும்,
சின்னண்ணனும்.

உத்தமமாய் நடந்த மகான் இவர். இவர் நாட்களெல்லாம் ஒடுக்கப்பட்டவர்களும் தாழ்த்தப்பட்டவர்களுமான இந்தியருக்காக சகாயராய் அலைந்துதிரிந்து உதவிபுரிந்தவர். இதினால்தான் மகாத்துமா காந்தி இவருக்கு தீனபந்து என்று பெயர் கொடுத்தார். தம்மையும் ஒரு ஏழை இந்தியனாக்கினார். களங்கமற்ற சுத்த இருதயமுள்ளவராகிய இந்த உத்தமனின் முகத்தினின்று ஜொலித்த தேஜஸ் எங்கள் மனதைக் கவர்ந்தது. நாத்தான் வேலைக் குறித்து கிறிஸ்தேசு கூறியது இவருக்கும் பொருந்தும். "களங்கமற்ற உத்தம இஸ்ரவேலன் (தெய்வபிரபு)". ஒரு மிஷன் கல்லூரிக்கு தலைவராக திரு சுசில் குமாரன் ருத்திரா முதல் முதலாக நியமிக்கப்பட்டது டில்லி கல்லூரியில் அவருடன் வேலை செய்த தீனபந்துவின் அரும்பிரயாச சுய வெறுப்பினாலேயே. ஆனால் இப்பேர்ப்பட்ட கிறிஸ்துவின் உத்தம தாசனைக் குறித்து அக்காலத்தில் மிஷனரிமாரும் சில இந்திய கிறிஸ்தவர்களும் சந்தேகப்பட்டார்கள். இந்த மகாநாட்டிற்கு வந்திருந்த சில இந்திய கிறிஸ்தவ மாணவர்கள் கூட அவரிடம் போய், " நீங்கள் கிறிஸ்தவர்தானா?" என்று கேட்டதாக அவரே எங்களிடத்தில் சொன்னார். "என் முகத்தில் அவர்கள் கிறிஸ்துவைப் பார்க்காவிட்டால் நான் கிறிஸ்தவன் என்று இந்த வாலிபர்களுக்கு வாயால் கூறுவதினால் என்ன பிரயோஜனம்?" என்று துயர முகத்தோடு எங்களிடம் சொன்னார். சொந்தமானவர்களால் புறக்கணிக்கப்பட்டவராயிருந்தார். பலஸ்தீனாவில் கிறிஸ்துபெருமானின் அநுபவமும் இதுவல்லவோ? ஆனால் இந்தியாவிற்கு வந்த மிஷனரிமார்கள் எவரைப் பார்க்கிலும் கிறிஸ்துவின் முகப்பிரகாச மகிமையையும், அவர் திவ்விய அன்பின் சக்தியையும் இந்து மகம்மதியருக்கு விளங்க இவரே அதிகத் தெளிவாய் காட்டினாரென்பதற்கு சந்தேகமுமுண்டோ? இவர் இந்த வருஷம் (1940) ஏப்ரல் மாதம் கிறிஸ்துவின் இளைப்பாறுதலில் பிரவேசித்தபோது இவரைக்குறித்து இந்தியாவின் ஆங்கில சபை பிரதம அத்தியக்ஷர் வெஸ்டுகாட் மெட்டிராப்பாலிட்டன் அவர்கள் வெகுவாய் முக்கியப்படுத்திக் கூறிய சாட்சி இதுவல்லவோ?

கடந்த இரண்டு வருஷங்களில் வேனிற்காலங்களில் தீனபந்து ஆண்டிரூஸ் எங்கள் ஆசிரமம் வந்து தங்கி தினம் மாலை சந்தியா வேளைகளில் அரும்பெரும் உபதேசங்கள் செய்திருக்கிறார். இவை இப்போ அச்சிட்டு வெளியாகியிருக்கிறது. எங்களுக்கு ஆசிரம விஷயமாய் பல நல்லாலோசனைகள் சொல்லி தொண்டர்களுக்கு மிக அன்பு பாராட்டி எங்களை எவ்வளவோ உற்சாகப்படுத்தி வந்திருக்கிறார். தமிழ்நாட்டின்பேரிலும் அதனழகிய இயற்கை காட்சியின் பேரிலும் அவருக்கு மிகுந்த அபிமானமுண்டாயிற்று. நாங்களொருவரும் எதிர்பாராதவண்ணம் அவர் இவ்வுலகை விட்டு இந்த வருஷம் எடுத்துக்கொள்ளப்பட்டார். இல்லாவிட்டால் அவருக்கு மீந்துவரும் வருஷங்களை எங்கள் ஆசிரமத்திலேயே செலவிடத்தான் அவர் நோக்கமாயிருந்தார். இந்த என் சரிதையை நான் ஆங்கிலத்தில் முதல் எழுதி

யிருப்பதை தான் கவனமாக வாசித்து ஆலோசனை சொல்லி அதை அச்சிட்டு வெளியாக்கவேண்டுமென்று மிகவும் வற்புறுத்தினர். அவர் உயிரோடிருந்திருந்தால் நான் விரும்பியபடி அவரையே இதற்கு முன்னுரை எழுதக் கேட்டிருந்திருப்பேன். இவர் மரித்தபின் மகாத்மா காந்தி எனக்கு மிக அருமையாக ஆறுதல் கடிதம் எழுதியிருந்தார். இவருடைய முன்பெயர் சாள்ஸ் என்பதை. இவர் ஆப்த நண்பர்கள் சார்ளி என்றழைப்பார்கள். "தனக்காக அழுது புலம்பி மனம் நொந்துடைந்த அநேகரை சார்ளி பின் வைத்துவிட்டுப் போய்விட்டார். ஆற்றலுக்காக நீ எப்போதெப்போது என்னிடம் வர விரும்புகிறாயோ அப்போதெல்லாம் உன்னை சந்தோஷமாக வரவேற்றுக்கொள்ளுகிறேன்" என்று மகாத்மா காந்தி எழுதினர்.

இதன்பின் பம்பாய் டில்லி லாகூர், மூல்தான் முதலிய நகரங்கள் போய் பல இந்திய கிறிஸ்தவ தலைவர்களையும் சந்தித்துப் பேசி ஆசிரமம் விஷயமாக விசேஷமாக எங்கு ஸ்தாபிப்பது என்ற விஷயமாக ஆலோசனை கேட்டோம். சார்ளி ஆண்டிரூஸ் மகானை அதிகமாய் சிநேகித்த அவர் ஆப்த நண்பர் சூசில் குமாரன் ருத்திரா என்னும் பெரியார் தீனபந்து சொன்ன ஆலோசனையையே எங்களுக்கு வற்புறுத்தினர். இப்பிராந்தியங்களிலுள்ள இந்திய கிறிஸ்தவ தலைவர்களெல்லாம் சொன்னது என்னவென்றால், நீங்கள் ஆசிரமத் தொண்டு செய்ய விரும்புகிற விதமாக உங்களோடு ஒத்துழைக்கும் வாலிபத் தொண்டர் வட இந்தியாவில் கிடைப்பது கஷ்டம். சம்பளமில்லாமல் தெய்வபக்தரான தியாகிகளாக இங்குள்ள வாலிபர் தங்களை ஒப்புக் கொடுக்க இன்னும் அந்த நிலைக்கு வரவில்லை தென் இந்தியாவில் அதிக காலக் கிறிஸ்தவர்களாயிருப்பவர்கள் ஏராளமாயிருப்பதால் அங்கேயே கிறிஸ்துகுல ஆசிரமம் ஸ்தாபிப்பதுதான் சித்திபெறும்" என்றார்கள். ஆனால் தென்னிந்திய கிறிஸ்தவர்களாகிய நம்மைப்பற்றி அவர்களுக்கிருந்த உன்னத அபிப்பிராயம் எவ்வளவு தூரம் உண்மை என்பதை நாமே நிதானித்துக் கொள்ளவேண்டியது.

அத்தியாயம் 13

கிறிஸ்து குல ஆசிரமம் திருப்பத்தூர் வட ஆற்காடு

தென்னிந்தியா திரும்பியபின் திருப்பத்தூர் தர்மபுரி ஊர்களையும் போய்ப்பார்த்தோம், திரு. நரசிம்மம் ஐயர் உதவியாயிருந்தார்கள். இப்படி பல இடங்கள் சுற்றித்திரிந்தலைந்து பல பெரியோரின் ஆலோசனையையும் கேட்டறிந்த பின், சிறிதுநாட்கள் எங்கேயாவது தனித்த இடம் சென்று, அமர்ந்து ஜெப தியானத்தில் கடவுளின் சித்தமறிந்து, அவர் திவ்விய ஆலோசனை கேட்பதே உத்தமம் என்று எங்களிருவருக்கும் தெளிவாய்த் தோன்றிற்று. சேலம் ஜில்லா தர்மபுரிக்கடுத்த பாலக்கோடு என்ற கிராமம் சென்று அருகிலுள்ள பிரயாணிகள் பங்களாவில் தங்கியிருந்தோம். நண்பர்கள் பி. ஒ. பிலிப்பும், திரு. நரசிம்மம் ஐயரும் எங்களுடன் முதல்நாள் ஞாயிறுமட்டுமிருந்துவிட்டுப் போய்விட்டார்கள், காலையிலிருந்து மதியமட்டும் பக்கத்திலுள்ள குன்றுகள் பாறைகள் நடுவில் சகோதரன் பேட்டனும் நானும் தனியே அமர்ந்திருந்து ஜெபதியானத்தோடு ஆண்டவரின் ஆலோசனைக்குக் காத்திருப்போம். பிற்பகல் இருவரும் கூடிவந்து எங்களுக்கு வெளிப்படுத்தப் பட்டவைகளை கலந்துபேசி எழுதிக்கொள்ளுவோம். அவ்வூரிலிருந்த ஒரு கிறிஸ்தவ டாக்டரும் அவர் மனைவியும் எங்கள் ஆகாராதிகளைக் கவனித்து எங்களுக்கு நல் உபசாரம் செய்து வந்தார்கள். முடிவிலே திருப்பத்தூரில் ஆசிரமம் ஸ்தாபிக்கவும் தீர்மானம் செய்தோம். அந்த ஆசிரமத்தின் மூல பிரமாணங்கள் (கான்ஸ்டிடுயூஷன்) என்ன என்னவென்று விவரமாய் எழுதி வைத்தோம். அவற்றின் சாராம்சமானவைகள் சில. 1. ஜெப ஜீவியமும், தன்னயமற்ற தியாக சிந்தையுடன் பிறருக்குச் சேவைசெய்யும் ஜீவியமுமே வெறும் பிரசங்கத்திலும் அதிக முக்கியம். இதுவே கிறிஸ்துவின் அன்பின் மகத்துவத்தை வெளிப்படுத்தும் மெய்சாட்சியாகும்.

2. நிறவேற்றுமை ஜாதி வேற்றுமை அரசியல் கட்சிகள் இவை எல்லாவற்றையும் கிறிஸ்துவின் அன்பு மேற்கொள்ளச் செய்யும். இந்தியாவிற்கு வரும் வெள்ளை மனிதர் இந்தியருக்குக் கீழ்த்தாழ்மையுள்ள சிந்தையுடன் வேலை செய்ய ஆயத்தமாயிருக்கவேண்டும். இந்தியருக்கு எப்போதும் கற்றுக்கொடுக்கவேண்டுமென்ற எண்ணம் மேற்கொண்டவர்களாயிராமல் இந்தியர்களிடத்திலிருந்து தாங்களும் கற்றுக்கொள்ளும் ஆவியுடையவர்களாயிருக்கவேண்டும். இந்திய சகோதரர்களோடு சகலத்தையும் பகிர்ந்து சமநிலையாயிருக்கவும் மனதுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

3. அன்பே ஒரு கிறிஸ்துவின் சீஷனின் பிரதம குணாதிசயமாயிருக்கவேண்டுமாதலால் அவன் யுத்தங்களிலாவது பயமுண்டாக்கும் அல்லது பலாத்காரமுபயோகிக்கும் எந்த முறைகளிலாவது ஈடுபடக்

கூடாது. அஹிம்சா, பலாத்காரமில்லாத அன்பின் ஆத்ம சக்தியே ஆசிரம வாசிகளுக்கிருக்கவேண்டிய அடிப்படையான பிரமாணம். இந்த அஹிம்சையாகிய அஸ்திபாரம்தான் மனதை இடுக்கி ஒடுக்க மாக்கும் தவருன தேசாபிமானத்தால் சுரக்கும் சண்டை யுத்தங்கள் வராது தடுக்கும். இதின்மேல்தான் உன்னதமான தெய்வகுடும்பத்தை கட்டி வளர்க்கக்கூடும். சமாதானத்திற்கு மூல ஊற்று அஹிம்சையே.

4. இன்ஞெரு காரியமும் எங்களுக்குத் தெளிவாயிற்று. வைத்திய சாலை முதலிய ஸ்தாபனங்களை நாங்கள் ஏறபடுத்துகிறதாயிருந்தால் சம்பளம் என்று ஏற்பட்டவுடனே மேல் உத்தியோகஸ்தர் கீழ் உத்தி யோகஸ்தர் என்ற வகுப்பு பேதம் ஏற்படச் செய்துவிடும். இது ஐக்கி யத்திற்கும் அன்பு சகோதரத்துவத்திற்கும் இடையூறு கிவிடும். இதனுல் சம்பளமில்லாத தொண்டர்கள் மூலமாகவே எங்கள் தொண்டை செய்யவேண்டுமென்று தீர்மானித்தோம். இவர்களுக்கு ஆகாரம் சாதாரண உடை முதலிய அவசியமானவைகள் மாத்திரமே கொடுக்கப்படும். ஆசிரமத்தில் தனிச்சொத்தென்பது கிடையாது. எல்லாம் பொதுச்சொத்தாகவும், ஏழைகள் நலத்திற்கென்று அவற் றை உபயோகிக்க நாங்கள் தர்மகர்த்தாக்களாகமட்டும் எங்களைப் பாவித்தும் அவற்றைப் பொதுவாக வைத்திருக்கவேண்டுமென்றும் தீர்மானம் செய்தோம்.

5. இன்னென்றும் எங்களுக்குத் தெளிவாயிற்று. கடவுள் சிலரைப் பிரம்மாச்சாரிகளாக விவாகம் இல்லாது ஜீவிக்க அழைக் கிருர். இவர்கள் சுயசம்பத்தைத் துறந்துவிடுவார்கள். தங்களை முற்றிலும் கடவுளின் இராஜ்யத்தைப் பூமியில் ஸ்தாபிக்கும் தொண் டிற்கே எவ்வித பூலோக இழுப்புமில்லாமல் ஒப்புவித்துவிடுவார்கள் இப்படிப்பட்ட தெய்வ குடும்பமான ஒரு ஆத்மீக குடும்பத்தை இவர் கள் பூமியில் நாட்டுவதே இவர்கள் முழு நோக்கமும், அக் கரையும், ஆசையும். "அப்பொழுது ஒருவன் அவரிடம் இதோ உமது தாயாரும் உமது சகோதரரும் உம்மோடே பேசவேண்டுமென்று வெளியே நிற்கிருர்கள் என்முன். அவரோ தம்மிடம் இப்படிச் சொன்னவனுக்கு என் தாயார் யார்? என் சகோதரர் யார் என்று சொல்லித் தமது கையைத் தமது சீஷருக்கு நேரே நீட்டி: இதோ! என் தாயும் என் சகோதரரும் இவர்களே. பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தப்படி செய்கிறவன் எவனே அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாம் என்ருர்." மத்தேயு 12: 47-50. இக்குடும்பமே கிறிஸ்துவின் குடும்பம். இக்குடும்பத்தின் பாந்தம் பூலோக மானிட வெறும் இயற்கை சம்பந்தமானதல்ல. இது முற்றிலும் கிறிஸ்துவின் அன்பினுல் சுரக்கும் ஆத்மீக பாந்தமானதே. இதினுல் தான் பிரம்மாசாரியம் இந்த ஆசிரமத்தின் ஒரு பிரமாணமாக அநு சரிக்கப்படவேண்டும். விவாகம் செய்தவன் பிரதானமாக தன் குடும் பத்தின் மூலமாக கடவுளின் இராஜ்யத்திற்கு தொண்டு செய்து

வருகிறான். பிரம்மாச்சாரியின் பிரதான நோக்கமோ இதைவிட விரிந்ததும் பெரிதுமான கடவுளின் வம்சத்தை உற்பத்தி செய்துவரும் அவர் குடும்பத்தை ஸ்தாபிப்பதே. இதினால்தான் இந்த ஆசிரமம் கிறிஸ்துகுல (குடும்ப) ஆசிரமம் என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. சாசுவத அங்கங்கள் தங்கள் சுயசம்பத்தைத் துறந்து விடுவார்கள் அவர்கள் விவாகமில்லாதிருப்பார்கள். ஆசிரமத்திற்கு அவர்கள் கொடுக்கும் சம்பத்தோ பணமோ பொது சொத்தாக அதின் தர்ம கர்த்தாக்களான ஆசிரம சாசுவத அங்கங்கள், அல்லது அவர்கள் ஏற்படுத்தும் தர்மகர்த்தாக்கள் வசத்திலிருக்கும். லக்ஷக்கணக்கானபேர் அநுதின அவசியத்திற்கு வேண்டிய ஆகாராதிகள் கிடையாது தரித்திரத்தில் ஆழ்ந்திருக்கும் இந்த தேசத்தில் எவரும் தங்கள் சொந்த உபயோகத்திற்காக சொத்தை அல்லது பணத்தைத் திரட்டிக்கொள்ளுவது எத்துணை தவறாகும்!

நான் முன் கூறியபடி மேற்கூறிய இந்த மூல பிரமாணங்கள் ஆசிரமம் என்ற பதத்தையோ, அதன் பிரமாணங்களையோ, நாங்கள் அறியு முன்னேயே எங்கள் மனதிலிருந்தன. ஆசிரமம் என்ற பெயர் பின் தான் வந்தது. ஆசிரமம் என்ற இந்த பதத்தை நாங்கள் ஏன் தெரிந்து கொண்டோமென்றால், எங்கள் இருதயத்தின் வாஞ்சையையும், எங்கள் ஆத்மீக தரிசனங்களையும் வெளிப்படுத்த இது எங்களுக்குப் பேருதவியாயிருந்தது. எங்கள் மனோ தரிசனங்களையும் இது விசாலமாக்கி இன்னும் அதிக ஆழ்ந்ததும் உன்னதமுமான வழிசெல்ல உதவிற்று. சுற்றியிருக்கும் ஏழை கிராமவாசிகளோடு ஐக்கியமாக வாழ்க்கை நடத்துவது எந்த கிராமத் தொண்டனுக்கும் மிக அவசியமானதே. எங்கள் தொண்டும் இவர்கள் மத்தியிலேயே. தரித்திரரான இவர்களோடு எங்களை சமப்படுத்திக்கொள்ள வேண்டுமானால் எப்படி நாங்கள் சுயசொத்தை வைத்திருக்கமுடியும்? இரண்டும் ஒன்றோடொன்று பொருந்தாதே. இதினால்தான் சுயசொத்தைத் துறந்துவிட வேண்டுமென்ற ஆசிரமப் பிரமாணம். ஏதோ ஒரு பரலோக இன்பம் அல்லது பாக்கியம் கிடைக்கும், அல்லது புண்ணியமதிகரிக்க நாங்கள் துறவறம் பூண்டுகொள்வது என்பதல்ல எங்கள் நோக்கம். நடும் துறவிகளாக உலகத்தாரை விட்டுப் பிரிந்து வெறும் சந்நியாசத்தினால் வரும் முக்தியடைய நாடுவதல்ல எங்கள் ஆவல். துறவறத்திலேயே ஏதோ புண்ணியமிருக்கிறதென்று நாங்கள் எண்ணுவதுமில்லை. எங்கள் பிரதான நோக்கம் எங்கள் சொந்த ஆத்ம ஈடேற்றமல்ல. நாங்கள் வாஞ்சித்து விரும்புவது தன்னை மறந்து, ஏழைகளை சிநேகித்து, ஒடுக்கப்பட்டு தாழ்த்தப்பட்டவர்களுக்காக எங்கள் ஜீவனை ஊற்றிவிட வேண்டுமென்பதே இதுதானல்லவோ கிறிஸ்து இரக்ஷகர் பூமிக்கு வந்த நோக்கம். காணாமல் போனதைத் தேடி மீட்க வந்தேன் என்றாரே. கடைசி நியாயத்தீர்ப்பு நாளில் அவர் நல்லோர் பொல்லோரென்றும், நித்திய ஜீவ ஆசீர்வாதத்திற்கும், நித்திய மரணமாகிய நரக அழிவிற்கும் ஆட்களை எப்படிப் பிரிக்கிறார் என்பதை மத்தேயு 25:31 முதல்

46ம் வசனங்களில் தெளிவாய் பார்க்கிறோமே. இங்கு கவனித்து வாசித்தால். கிறிஸ்துநாதர், பசி, நிர்வாணம், சிறை, வியாதி, தாகம் முதலியவற்றால் வருந்தினவர்களோடு தம்மை எத்துணை சமமாக ஒன்று படுத்திப் பேசுகிறார்! இவர்களுக்குச் செய்ததின் பிரகாரம்தான் நித்திய ஜீவனும் நித்திய நரகமும் கடைசியில் நமது பங்காகும் என்கிறாரே. நமது மூளையினால் நம்புகிற மதக் கொள்கைகள், விசுவாசப் பிரமாணங்களல்ல, கடைசி நியாயத்தீர்ப்பில் நமக்குதவுவது. நமது ஜீவியத்தின் மெய்யன்பின் கிரியைகளே. கிறிஸ்துவின் சொரூபத்தை அவர் ஏழைகள் முகத்தில் பார்க்கிறோமா? இதை மனதில் நன்றாக அழுத்தி யோசித்தால் ஆசிரமத்தில் சம்பளமில்லாமலுழைப்பதையும், சாதாரண ஜீவியம் செய்து வியாதியஸ்தர்களுக்கு தொண்டுசெய்வதையும்; கிராம முன்னேற்றத்தையும், ஏன் முக்கியப்படுத்துகிறோம் என்று அறிந்து கொள்ளக்கூடும்.

ஆசிரம சம்பந்தமாக நாங்கள் ஏற்படுத்திய வைத்தியசாலையாகிய சுக நிலையமும், சிறுவருடைய கல்விக்காக ஏற்பட்ட கலா நிலையமும், நாங்கள் கிராமங்களில் சுற்றித்திரிந்து ஜனங்களுடன் நெருங்கிப் பழகி அவர்களுடைய சிநேகிதர்களாக அவர்கள் வீடுகளில் தங்குவதும், அவர்கள் கட்சிகளில் அவர்களை சமாதானப்படுத்த முயல்வதும், வியாதிகளைத் தடுக்கும் சுகாதார முறைகள், கல்வி, கூட்டுறவு முதலிய கிராம முன்னேற்ற காரியங்களில் ஈடுபட்டு இவை விஷயமாய் கிறிஸ்துவின் அன்பைத் தெரிவிப்பதாயுமுள்ள ஒளிசித்திரப் படங்களை அவர்களுக்குக் காட்டுவதும், தமிழை முக்கியப்படுத்தி அவர்கள் நன்மைக்காக தாய்பாஷையான தமிழில் புத்தகங்கள் எழுதுவதும், இப்படி தொண்டுகள் செய்வதும், இந்த நமது அன்பின் நாதனின் ஏவுதலினாலேதான். அவர், திரள் ஜனங்கள் தம்மைத்தேடி வந்தபோது அவர்கள் மேல் மனதுருகி அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகள் போல் சிதறுண்டலைவதைக் கண்டு அவர்களில் பிணியாயிருந்தவர்களைக் குணப்படுத்தி, பசியாயிருந்தவர்களை பசியாற்றினாரே. அவர்கள் மனக் கண்கள் திறக்க அவர்கள் இலகுவாய் அறிந்துகொள்ளும் பாஷையில் அவர் திருவாய் மலர்ந்தருளினாரே.

சோர்ந்து சிதறுண்டலையும் ஆட்டுமந்தை திரள்போல்
ஓர்ந்து நோக்கில் உத்தமநல் மேய்ப்பனுமில்லாமல்
காய்ந்துவாடும் மக்கள் துயர் கண்ணுற்று நோக்குகையில்
சாய்ந்து சுகிப்பேனோ கண்ணீர் சிந்தாதிருப்பேனோ
..............நினையே எந்தன் மனமே நிதம்
(ஆசிரமப் பாமாலை)

ஏழைகள் நூற்று நெசவு செய்த கதராடையை நாங்கள் உடுத்துவதும் இக்காரணத்தால்தான். இந்து ஆலய சிற்ப அமைப்பின்படி நாங்கள் ஆசிரமத்தில் கட்டியிருக்கும் ஜெப ஆலயமும் இதை அனுசரித்ததே. எத்தனை ஏழை கிராம வாசிகள் இங்கு வந்து தங்கள்

ஆசிரம ஜெபாலயம் (முன் பார்வை)

கவலை துயரங்களை ஆண்டவன் பிரசன்னத்தில் சொல்லி தங்கள் இருதயத்தின் ஆழ்ந்த ஆவல்களை அவருக்குத் தெரியப்படுத்தி வேண்டுதல் செய்து போகிறார்கள். இது நான் கண்ணால் கண்டு மகிழ்ந்து பரவசப்பட்டிருக்கும் காட்சி. இந்த ஆலயத்தைக் கண்டவுடன் இயற்கையாகவே அவர்களுக்கு இந்த மன நிலை வந்துவிடுகிறது போலும். ஞாயிறு காலை ஆராதனைகள் ஆசிரமத் தொண்டருக்கென்றே பிரதானமாக நாங்கள் நடத்தினாலும் வைத்தியசாலையருகிலுள்ள சத்திரத்திலுள்ள கிராம வாசிகளும் மற்றும் சிலரும் நாங்கள் அழைக்காவிட்டாலும் தாங்களே வலிய ஜெபாலயம் வந்து எங்களுடன் கடவுளை வழிபடக் கூடிவிடுவார்கள். ஆலயத்தினுள் ஒரு ஏழை விதவை தனியே நின்று மனம் பொங்கி உதடுகள் அசைய ஜெபிக்கும் காட்சியை ஒருநாள் நான் கண்டு மன அசைவுற்றேன்.

ஏன் திருப்பத்தூரில் ஆசிரமம் ஸ்தாபிக்கக் கடைசியாகத் தீர்மானித்து விட்டோமென்று நண்பர்கள் அடிக்கடி என்னிடம் விசாரித்திருக்கிறார்கள். இதுவும் நாங்கள் பாலக்கோட்டில் அமர்ந்து ஆண்டவர் நடத்துதலுக்குக் காத்திருந்தபோது செய்த தீர்மானமே. வட இந்தியாவில் நாங்கள் ஆலோசனை கேட்ட தலைவர்கள் தென்னிந்தியாவிலேயே நாங்கள் ஆசிரமம் ஸ்தாபிப்பதே தொண்டர்கள் கிடைப்பதற்கு உதவியாயிருக்கும் என்று சொன்னதைக் குறித்து முன்னமே சொல்லி விட்டேன். வட இந்தியாவில் எங்களிருவருக்கும் பாஷை புதியதாயிருக்கும். அதை நன்றாய்க் கற்குமட்டும் எங்கள் வேலையை மொழி பெயர்க்க ஆள் வைத்துத்தான் நடத்தவேண்டியதிருக்கும். பூனாவில் இந்த அநுபவமிருந்ததினால் அதினால் வரும் இடையூறுகளும் எங்களுக்குத் தெளிவாயிருந்தது.

இப்படி அந்நியநாட்டிலிருந்து இந்தியாவுக்கு வரும் மிஷனரிமார் போல் நாங்களும் நடந்துகொள்ளவேண்டியது சரி என்று எங்களுக்குத் தோன்றவில்லை. எங்கள் ஜீவிய நோக்கத்திற்கும் சாதாரணமாக ஐரோப்பாவிலிருந்து வரும் மிஷனரிமார் நோக்கங்களுக்கும் வித்தியாசமுண்டு கிராமத் தொண்டின் தேவை இந்தியாவில் எங்கும் சமமாகவே இருக்கிறது. தமிழ் எனக்குத் தாய்பாஷை. இதினால் என் பூரண தத்துவத்தையும் தாராளமாய் உபயோகித்து கிராமத்தாரோடு ஒன்றுபட்டுழைக்க இது ஒரு பெரிய உதவி. இதினால் தமிழ்நாட்டில் ஆசிரமம் ஸ்தாபிப்பதே ஞானமாயிருக்கும் என்பது தெளிவாயிற்று. ஆனால் இந்தியாவில் ஏதும் கிறிஸ்துவின் ஊழியம் செய்ய இந்திய கிறிஸ்தவர்கள் ஒரு விஷயத்தில் கவனமாயிருக்கவேண்டியதிருக்கிறது! பல ஐரோப்பிய புரோட்டஸ்டாண்டு மிஷன்கள் இந்தியாவைப் பங்கு போட்டு தங்கள் தங்கள் பாகமென்று பிரித்து ஒத்துழைக்கிறார்கள். எங்களுக்கும் என். எம். எஸ். இந்திய மிஷனரி சங்கத்திற்கும் ஒருவாறு சற்று சம்பந்தமிருந்ததால் நாங்கள் இன்னொரு மிஷன் வேலை செய்யுமிடத்தில் ஆசிரமத்தை ஸ்தாபித்தால் பல் சச்சரவுகள், தர்க்கங்

கள் விவகாரங்களுக்கு இடமாகலாம்! திருப்பத்தூரில் வேலைசெய்த லண்டன் மிஷன் பண நெருக்கடியால் அப்பிராந்தியங்களில் தங்கள் வேலையை நிறுத்திவிடுவதாகவும், நாங்கள் அங்கு ஆசிரமம் ஸ்தாபிக்க இதினால் அவர்கள் ஆக்ஷேபனை செய்யமாட்டார்களென்றும் பங்களூரில் நாங்களிருந்தபோது பிலிப்ஸ் ஐயர் எங்களிடம் சொன்னதை முன்னமே கூறியிருக்கிறேன், மேலும் நாங்கள் திருப்பத்தூர் தாலுகாவில் அக்காலத்திலிருந்த குப்பம் என்ற இடத்தைக் குறித்தும் யோசித்துக் கொண்டிருந்தோம். திருப்பத்தூர் தமிழ்நாட்டின் வட பாகத்திலிருந்தாலும் தென்னிந்தியாவிற்கு சற்று மத்தியமான இடம். கடல் மட்டத்திற்கு கொஞ்சம் குறைய 1300 அடி உயரம். கூடியமட்டும் சீதோஷ்ண ஸ்திதி சுகமானதே என்கலாம். பல இடங்களிலிருந்து தொண்டர்கள் வருவதாலும், பல தேசத்தினர் வர நாங்கள் விரும்பியதாலும், இதையும் கவனிக்கவேண்டிய அவசியமிருந்தது நீலகிரி மலைக்கு சென்னையிலிருந்து செல்லும் தென்னிந்திய இருப்புப் பாதையிலிருப்பதால் எவரும் இலகுவாய் இங்கு வரலாம்.

கடந்த காலத்தின் அநுபவத்தினால் இந்த இடத்தைத் தெரிந்து கொண்டது தெய்வ நடத்துதலே என்று நன்கறிகிறோம். நல்ல மேடானதும் மலைகள் முதலிய இயற்கைக் காட்சியின் அழகு பொருந்தியதுமான இடத்தில் ஆசிரமமிருக்கிறது. திருப்பத்தூருக்கு வெளியே ஒன்றரை மைல் தூரத்திலிருக்கிறது. சுற்றுப்புறங்களில் பல சிறு கிராமங்களிருக்கின்றன. கிராமவாசிகள் மிக அறிவீனம் தரித்திரத்தில் ஆழ்ந்தவர்கள்தான். கடந்த கொஞ்சம் குறைய 20 வருஷ வேலையின் பயனாக அநேகருடைய மனக் கண்கள் திறக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் எங்களுக்கு நெருங்கிய நண்பர்களாகிவிட்டார்கள். ஆரம்பத்தில் ஆசிரமத்தைப் பற்றி அவர்களுக்குள்ளிருந்த தவறான எண்ணங்களும் ஓடிப்போய்விட்டன. நாங்கள் முதல் வேலை செய்யத் தொடங்கியபோது விஷபேதி முதலிய தொத்து வியாதிகள் அடிக்கடி (சில வேளைகளில் வருஷத்திற்கு மும்முறைபோல்) வந்து கிராமங்கள் எல்லாம் பரவிவிடும். நாங்கள் அச்சமயங்களில் கிராமங்கள் சென்று விஷபேதியால் பீடிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை செய்து வியாதி பரவாதபடி தடுக்குமுறைகளையும் அவர்களுக்குப் போதித்து நோய் பரவாது தடுப்போம்.

சிலவேளைகளில் விஷபேதி பரவிய கிராமங்களிலே அவர்கள் மத்தியிலேயே தங்கி பயந்து நடுங்கும் அவர்களுக்குத் தைரியம் சொல்லியும், ஒளி சித்திரப்படங்கள் காட்டியும், பாடி ஜெபித்தும், இப்படியாக அவர்களை உற்சாகப்படுத்தி எங்கள் மாதிரி அவர்களும் சுகாதார விதிகளை அநுசரித்து கடவுளை நம்பியிருந்தால், அந்த விஷ வியாதி எப்படி எங்களை அணுகவில்லையோ அப்படியே அவர்களுக்கும் ஏது தீங்கும் செய்யாதென்று போதித்தும், அவர்களைச் சந்தோஷப்படுத்துவோம். இப்போது கடவுள் கிருபாகடாக்ஷத்தால் தொத்து

வியாதி ஆசிரமத்தைச் சுற்றியிருக்கும் கிராமங்களில் வருவதோ, அபூர்வமாய் வந்தாலுங்கூட பரவுவதோ, கிடையாது. நாங்கள் ஸ்தாபித்திருக்கும் கலா நிலையம் என்ற பள்ளிக்கூடமும் பக்கக் கிராமங்களில் நடத்தும் இரவு பள்ளிக்கூடங்களும் இதற்கு உதவியே.

ஆசிரமத்திலுள்ள எங்கள் சகோதர ஐக்கிய கூட்டத்தாரைப் பற்றியும் சில வார்த்தைகள் சொல்லவேண்டும். நல்ல அனுபவமுடைய உதவும் வைத்தியசாலை, சர்க்கார் அங்கீகாரம் பெற்ற கலா நிலைய முதலிய ஸ்தாபனங்களிருப்பதால் இங்கே அநுபவமடைந்து தங்கள் வாழ்க்கைக்கு பிரயோஜனமானவைகளில் தேறவிரும்பும் சில தொண்டர்களும் ஆசிரமத்திற்கு வந்து போவதுண்டு. உன்னத நோக்கத்தை பிரதானமாகக் கையாடாது அப்படி வந்தவர்களிலும்கூட சிலர் வந்தபின் ஆத்மீக நன்மையடைந்து மாறுதலடைந்ததுமுண்டு. ஆனாலும் ஆசிரமத்தின் பிரதம நோக்கம் கிறிஸ்துவின் அன்பின் கட்டால் இணைக்கப்பட்ட மெய்யான ஆத்மீகக் குடும்பத்தை நாட்டி வளர்ப்பதே. இந்த உன்னத நோக்கமுள்ளோர் மிக அவசியம். பொதுவாகச் சொன்னால் கடந்த பல வருஷங்களில் அதிகமாக ஆசிரமத்திலுழைத்துதவியிருக்கும் தொண்டர்கள் ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் சாதாரணக் கல்வியுள்ளவர்களுமே. ஆனால் உயர்கல்வி பெற்ற டாக்டர்கள் உபாத்தியார்களுமுண்டு. சகோதர ஐக்கியம் இதற்கு மிக அவசியம் இது வளர அன்பு அவசியம். அன்பு சகலத்தையும் பொறுக்கும்; சகலத்தையும் நம்பும். ஆசிரமத்தில் எங்கள் அநுதின ஜீவியத்திலும் ஊழியத்திலும் உடன் தொண்டர்களோடு மிகவும் நெருங்கி ஜீவித்து அளவளாவிப் பழகச் சமயமதிகமுண்டு. மேலும் எங்களுக்கு அவசியமான பொருட்கள், தேவைகளையும் உடன் தொண்டர்களோடு பகிர்ந்து சமநிலையாக வாழ்க்கை நடத்துவதுமுண்டு. இது இலகுவல்ல. சில வேளைகளில் ஒருவன் தேவை இன்னொருவனுக்கு அவசரமில்லாத மிகையானதாயிருக்கலாம். சிறு பிராயத்தில் முற்றிலும் வித்தியாசம் வித்தியாசமான குடும்பங்களில் வெவ்வேறு முறைகளாக வளர்க்கப்பட்டு வெவ்வேறு பழக்கவழக்கங்கள் மனப்போங்குள்ளவர்கள் ஆசிரமத்தில் ஒரு குடும்பமாக ஒன்றாய் ஜீவிக்கிறோம். ஒருவரையொருவர் நன்கு அறிந்தபின், ஒருவரின் நற்குணங்களை மாத்திரமல்ல அவர் குறைவுகள் தவறுதல்களையுங்கூட நன்கறிகிறோம். மெய்யன்புதான் இதை மேற்கொள்ள உதவும் அன்பை ருபிப்பது மற்றவர் நமக்கு விரோதமாய் செய்த குற்றங்களை மன்னிப்பதே. இதனால் ஆசிரமத்தில் ஓர் பிரமாணமுண்டு. எவர்மேலேயாவது ஒரு சகோதரனுக்கு மனவருத்தமிருந்தால், அல்லது எவருக்கு விரோதமாகவாவது ஒருவன் தவறாய் நடந்திருந்தால், சூரிய அஸ்தமன சந்தியாவேளை முன்னமே இருவரும் சந்தித்து பேசி ஜெபித்து, அன்புடன் ஒருவரையொருவர் மன்னித்து மனமொற்று வாழவேண்டும். அப்படியே ஒரு தொண்டனின் ஆத்மீக போராட்டங்களிலும் சோதனைகளிலும்

தன் மனதைத் திறந்து இருதயம் இருதயத்தோடு கலந்துகொள்ளத் தக்க ஒரு சகோதரனையாவது ஆசிரமத்தில் அவன் தேடி சுதாரித்துக் கொள்ளவேண்டும்.

ஆசிரமத்திற்கு புதிதாகத் தொண்டர்களைத் தெரிந்துகொள்வதும், மூத்த சகோதரர்களாயிருப்பவர்கள் கூடி ஜெபித்து ஆலோசித்து, கடவுள் நடத்துதலுக்குக் காத்திருந்த பின்னேதான்.

7—3—1921 திருப்பத்தூரில் ஆசிரமம் ஸ்தாபிக்கப்பட்டது. அக் காலத்தில் கலக்டர் பங்களாவென்று அழைக்கப்பட்டதும் இப்போது ரோமன் கத்தோலிக்க குருக்களை ஆயத்தம் செய்யும் வேதசாஸ்திர கல்லூரியாகயிருப்பதுமான கட்டிடத்தில் எங்கள் வைத்திய வேலையை நடத்தினோம். கிராம ஜனங்களுக்குள் எங்கள் வைத்திய திறமைகளைக் குறித்து அளவுகடந்த பிரஸ்தாபம் உண்டாகிவிட்டதால் பெருங்கூட்ட மாக ஜனங்கள் வர ஆரம்பித்துவிட்டார்கள். சாப்பிடவும் சமயமில்லா மல் மிகப் பிந்தும்படி பகல் முழுவதும் வேலை. உதவிக்கு வந்த சிறு தொகையான தொண்டரும் நாங்களிருவரும், டாக்டர்களாகவும், தாதி நர்ஸ்களாகவும், மருந்து கொடுப்பவர்களாகவும், சில சமயங்களில் சமையல்காரர் தோட்டிகளாகவும் இப்படி எல்லா வேலையும் செய்யும் பாக்கியம் கிடைத்தது. ஆனால் வேலை நெருக்கடியால் சமையலுக்கும், தோட்டி வேலைக்கும் சம்பளம் கொடுத்து ஆள் வைக்க நேரிட்டது. எனினும் தற்காலத்தில் தண்ணீர் அடித்து சுத்தம்செய்யும் கக்கூஸ்கள் இருப்பதாலும், கக்கூஸ்குழிகள் வெட்டிக்கொள்வதாலும், அடிக்கடி தொந்தரவு கொடுக்கும் தோட்டி மகான்கள் தயவை நாங்கள் நாடுவ தில்லை! இப்போது பிணியாளிகள் தங்க 70 கட்டில்களுள்ள நல்ல வைத் தியசாலை, ஆயுதசிகிச்சைசாலைகள், கிரண (எக்ஸ்ரே) சாலை முதலியன இருக்கிறது. வெளி வியாதியஸ்தர்களும் கிராமங்களிலிருந்து ஏராள மாய் வருகிறார்கள். குஷ்டரோகிகளுக்கும் வாரந்தோறும் ஊசியேற்றி பரிகாரம் செய்யப்படுகிறது.

வருஷந்தோறும் பொங்கல் சமயத்தில் வைத்தியசாலை, கலாநில யம் என்ற ஆசிரமப்பள்ளிக்கூடம் எல்லாம் முடிந்துவிட்டு கிராமங் கள்சென்று, ஊர்ஊராய்போய், எங்கள் கிராம நண்பர்கள் மத்தியில் அவர்கள் விருந்தாளிகளாகத்தங்கி அவர்களுடன் நெருங்கிப்பழகி, தெய்வபக்தி விஷயமாக கிறிஸ்துவின் ஜீவியசரித்திர ஒளிசித்திரப் படங்கள் காட்டியும், சுகாதார அறிவு பெருகப் படங்கள் காட்டியும் கிராமவேலை செய்கிறோம். இப்படி கடந்த இரண்டு வருஷங்களில் தைமாதம்முழுவதும் கிராமச் சுற்றுப்பிரயாணம் செய்த விவரங்களை நாங்கள் பிரசுரித்திருக்கும் அச்சிட்ட அறிவிப்பு மூலமாக அறிந்து கொள்ளலாம். வெயில்கால விடுமுறை காலத்தில் பல மாணவர்கள் ஆசிரமம்வந்து கிராமச் சீர்திருத்தப்பயிற்சி பெறுகிறார்கள். ஆசிர மத்தில் கிராமத்தொண்டில் சிறந்த பெரியார் அவர்களுக்குப் போதிப் பார்கள். இச்சமயங்களில் கிராமக்கல்வி, சுகாதாரம், பொருளாதார



நிலை, முதலிய விஷயங்களைக் குறித்து அவர்கள் கிராமங்களிலேயே கையில் மிக கவனமாக ஆராய்ச்சி செய்து படித்து குறிப்பிட்டு அறிவிப்புதை பிரச்சாரம் செய்கிறோம்.

ஆசிரமத்தில் கிராமச் சிறுவர்களுக்காக எட்டாவது வகுப்புமட்டுமுள்ள கலாநிலயம் இருக்கிறது. மாணவர்கள் நெசவு; தோட்டவேலை அச்சு வேலை முதலியனவும் கற்கிறார்கள். இந்தக் கலாநிலயம் பூர்வீக காலத்தில் நமது தேசத்திலிருந்த குருக்குலம் மாதிரியாக பிள்ளைகளும் உபாத்திமாரும் குருவும் அவர் ஆத்மீகக் குடும்பமாகவுமிருக்கவேண்டுமென்பதே எங்கள் பேர் அவா. இதற்கு தன்னை முழுவதுமாக ஆசிரம ஜீவியத்திற்கு ஒப்புவித்தவரும், உண்மையாக நமது தேச மக்களுக்கு அவசியமான மெய்க்கல்வி விஷயமாக நல்ல தரிசனம், அபிமானம், அறிவுள்ளவருமான இரண்டொரு நல்ல உபாத்திமார்களாவது முதலில் வேண்டும். வெறும் கலாசாலை பட்டங்களைப் பெற்று கல்வியை வியாபாரம் போலெண்ணிப் பணம் எவ்வளவு சம்பாதிக்கலாம் என்று திரிகிற தன்னயக்காரரானவர்களை உண்டுபண்ணும் தற்கால உயர் கல்வியினால் தேச மக்களுக்கு என்ன நன்மையுண்டு? ஆசிரமக் கலா நிலயத்திற்கு வரும் பிள்ளைகள் பக்கத்திலுள்ள கிராம ஏழைகளின் பிள்ளைகளே. இந்த ஆசிரமக் கலாநிலயமில்லாவிட்டால் இவர்களுக்குப் படிப்பே கிடைத்திருக்காது. 1925ம் வருஷம் 20 பிள்ளைகளோடு சிறு குடிசையில் ஆரம்பித்த இப்பள்ளிக்கூடம் இப்போது 140 மாணவர்களுள்ளதும், எட்டு வகுப்புகளுள்ளதும், சர்க்கார் அங்கீகாரம் பெற்றதுமாயிருக்கிறது. ஆதிதிராவிடப் பிள்ளைகளே முதலாவது வந்ததால் உயர் ஜாதிப் பிள்ளைகள் முதலில் வராது விலகிக் கொண்டிருந்தார்கள். இப்போதோ சகல ஜாதிப்பிள்ளைகளும் சந்தோஷமாக வந்து ஒன்றாய்க் கலந்து படிக்கிறார்கள். தங்கள் சொந்த ஜாதியார் பக்கத்திலிருப்பதால் அவர்களுக்குப் பயந்து ஆசிரமத்தில் மதியம் ஏழைப்பிள்ளைகளுக்குக் கொடுக்கும் சாப்பாட்டில் மேல்ஜாதிப்பிள்ளைகள் கலந்துகொள்ளுகிறதில்லை. ஆனால் நாங்கள் அவர்கள் எல்லாரையும் வனபோஜனத்திற்கோ, வெளியூருக்கோ கூட்டிக்கொண்டு போனால் வெகு சந்தோஷமாக எல்லாரும்கலந்து சிநேகம் பாராட்டி வித்தியாசமில்லாமல் சாப்பிட்டுக்கொள்வார்கள்.

நமது நாட்டைக் கெடுத்து நாம் முன்னுக்கு வராதபடி தடுத்து நமக்குள் பிரிவினைகளை யுண்டாக்கும் இந்த மூடத்தனமான ஜாதிபேதத்தை அடியோடே நாம் அகற்றவேண்டும். நான் உலகத்தில் பல தேசங்களுக்குள் பிரயாணம் செய்திருக்கிறேன். இந்த ஜாதி என்ற கேடு நம் நாட்டில்தான் இப்படித் தலைவிரித்தாடுகிறது. ஆதிதிராவிடர், கவுண்டர், வன்னியர், குறும்பர், முதலிய ஜாதிப்பிள்ளைகள்தான் முக்கியமாக இங்கு படிக்கிறார்கள். குறும்பர் ஆடுகள் மேய்க்கும் இடையர். ஆனால் இவர்கள் தங்கள் வீட்டில் பேசுவது கன்னடமும் தமிழும் கலப்பான ஒரு கொச்சை. ஆடுகள் போல்தான் அவர்கள்

சுபாவமும். இவர்களைப் படிக்கவைப்பது இலகுவான காரியமல்ல. என்னிலும் இவர்கள் ஒருவனுடைய மனதில் அன்புண்டாக்கும் ஒருவிதமான பேதமை சுபாவமுள்ளவர்கள். இந்த ஜாதியாரைக் குறிப்பிட்டு பின்வரும் பாட்டை கலாநிலையப்பாட்டாக இயற்றினேன்.

பல்லவி

கலா நிலையமே கற்பகக் கனியே—மலர்தூவினேம்

அனுபல்லவி

பூலகர் போற்றுவோம் பண்புடனேற்றுவோம்
பாடிக் கொண்டாடுவோமே —கலா நிலையமே

சரணங்கள்

காட்டினுள் சென்று கறவையை மேய்ப்போர்
நாட்டினுள் வேளாண்மை செய்வோர்
வீட்டு வாசல்முன் விளம்பரம் செய்வோர்
கூட்டுறவாய்க் கும்மியடிப்போம் —கலா நிலையமே

இங்கு படிப்போர் இறைவனின் அருளால்
எங்கும் நற்தொண்டராய் ஏகி
பொங்குமுள்ளன்பால் பாமர மக்கள்
ஓங்கிச் சீரடைந்திட உழைப்பார் —கலா நிலையமே

கலா நிலைய வேலை புதிதாகக் கட்டப்பட்ட நல்ல விசாலமான ஒரு கட்டிடத்தில் நடைபெறுகிறது. புது நெசவு சாலையொன்று பக்கத்தில் கட்டி முடிவாகிறது. சிறுவர் அச்சுவேலை கற்க ஒரு புது அச்சக்கூடமும் ஸ்தாபித்திருக்கிறோம்.

ஆசிரம ஜீவியம் செய்வோர் பிரமச்சாரியம், பொதுச்சொத்து அநுபோகம், ஏக ஜீவியம்செய்தல் முதலியவைகளை கையாடவேண்டியது, அவர்கள் அழைப்பின்படி செய்ய வேண்டிய ஆத்மீக தொண்டுகள் முதலியனவற்றிற்கு அவசியமே. இவர்கள் ஜீவியம் சாதாரண மக்கள் ஜீவியத்திற்கு வித்தியாசமாயிருப்பதால் இவர்கள் உன்னத கொள்கைகள் சிலருக்கே சாத்தியமானதன்றி சாதாரண இல்லற வாழ்க்கைக்குப் பிரயோஜனமாகாது என்று சொல்வாருமுண்டு! இது சரியல்ல. ஆசிரமத்தார் பெரிய ஆத்மீக ஆராய்ச்சி சாலையில் வசித்து சுய கண்டிப்போடு தங்கள் வாழ்க்கையை நடத்தி ஜீவிப்பது சாதாரண இல்லற வாழ்க்கையிலுள்ள மக்களின் இகபர நன்மைக்கென்றே என்ற சத்தியத்தை ஒருபோதும் மறக்கலாகாது. இந்த ஆசிரம வாசிகள் தங்கள் ஜீவிய ஆராய்ச்சியால் கண்டுபிடிக்கும் ஆத்மீக சத்தியங்கள்

எல்லா மக்களுக்குமுரியது. இதனால் ஆசிரமபக்திக்குரிய ஜீவியத்தில், பக்தி முறைகளில் விசேஷமான சில காரியங்களை இல்லற வாழ்க்கையிலுள்ளவர்களும் அநுசரித்து நன்மையடைய ஆசிரம மித்திரர் சங்கம் என்ற ஒரு இயக்கம் ஆரம்பித்திருக்கிறோம். ஆசிரம ஆரம்பத்திலிருந்தே ஆசிரம அபிமானமுள்ள நண்பர்களாகிய டாக்டர் லார்சன் ஐயர் அவர்கள், திருவாளர் பி. சென்னையா அவர்கள், மார்தோமா அத்தியக்ஷர் ஆபிரகாம் அவர்கள் எங்களுக்கு நல்லாலோசனை சொல்லி உதவியிருந்திருக்கிறார்கள் இன்னும் பல நண்பர்கள் கடந்த வருஷங்களில் ஆசிரமத்தோடு நெருங்கி அபிமானம்காட்டி அடிக்கடி எங்களுடன் தங்கவந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சிலர் இந்த ஆசிரமித்திரர் சங்கத்தைச் சேர்ந்து, அவசரமில்லாத செலவிடவும், அநுதின வேத வாசிப்பு ஜெபம் முதலிய பக்தி முறைகளைக் கையாடவும் இவர்கள் பிரதிக்கினை செய்துகொள்வார்கள். கடந்த நான்கு வருஷங்களாக ஆசிரமத்தில் இவர்களுடன் நாங்கள் கலந்து நடத்தும் வருஷாந்திர கூட்டமும் நடந்துவருகிறது. நாங்களும் அவர்களும் மிகுந்த ஆத்மீக நன்மை அடைந்திருக்கிறோம். இவர்களில் சிலர் புதிதாய் மற்ற இடங்களில் ஆசிரமம் ஸ்தாபித்தவர்கள்.

கிறிஸ்து குடும்ப ஆசிரமமித்திரருக்கு தற்சமயம் ஏற்படுத்தியிருக்கும் பிரதிக்கினைகள்.

பரிசுத்த ஜீவியத்தில் கடவுளை வணங்கவும், சாதாரண (எளிய நடை ஜீவியம்) சுயவெறுப்பு மூலமாய் மற்றவர்களை நேசிக்கவும் கிறிஸ்துகுல ஆசிரமத்தோடு அந்நியோந்நிய ஐக்கியமாயிருக்கவும் ஆசித்து அவ்வாசிரமத்தின் மித்திரராகிய நாங்கள் பிற்கண்ட விதிகளை எங்கள் ஜீவியத்தில் கையாடத் தீர்மானிக்கிறோம்.

(1) பக்திக்குரிய ஜீவியம்.

(1) ஒவ்வொரு நாளும் குறிக்கப்பட்ட ஒரு நேரத்தில் நாங்கள் தனி ஜெபம் செய்வதிலும், வேத வாசிப்பிலும், தியானத்திலும் கடவுளோடு அமைதியாய்த் தரித்திருப்பதிலும், தற்சோதனை செய்வதிலும், மற்றவர்களுக்காக மன்றாடுவதிலும் நன்றி செலுத்துவதிலும் செலவிடுவோம்.

(2) கடவுளுடைய பிரசன்னத்தை, எல்லாச் சமயங்களிலும், முக்கியமாய் சாபிடுமுன்னும், ஏதாவது ஒரு அலுவலைத் தொடங்கு முன்னும் ஞாபகப்படுத்திக் கொள்ளுவோம்.

(3) ஜெபத்துக்கும் வேத ஆகம ஆராய்ச்சிக்கும் நேரங்குறித்து வைப்போம்.

(4) கூடுமானபோதெல்லாம் எங்கள் வீடுகளில் தினந்தோறும் குடும்ப ஜெபம் நடக்க ஒழுங்கு செய்வோம்.

(2) சாதாரண ஜீவியம். (எளிய வாழ்க்கை)

கடவுள் எங்களுக்கு கொடுத்திருக்கும் ஈவுகளுக்கு நாங்கள் உக்கிராணக்காரரென்றும், எங்களுக்கு ஒன்றும் சொந்தமில்லையென்றும் எண்ணி, எங்களைச் சுற்றியிருக்கும் அநேகருடைய கொடுந் தரித்திரத்தை நினைத்து, சரீர சுகத்துக்கும் மனோ அபிவிர்த்திக்கும் எவ்வளவு தேவையோ அதுமட்டுக்குமே எங்கள் உடுப்பு, ஆகாரம், விளையாட்டு மிகவும் சாதாரணமாயிருக்கும்படி எங்கள் ஜீவியத்தை மட்டுப்படுத்துவோம். இவ்வித நோக்கத்துடன் நாங்கள் தெய்வ ஆவியின் நடத்துதலுக்காக ஜெபம் செய்து, எங்களுக்கும் எங்களைச் சார்ந்தவர்களுக்கும் அவசரம் தேவையில்லாததையெல்லாம் ஏழைகளுடைய ஆதரவுக்கும் கடவுளுடைய இராஜ்ஜியத்துக்கு வேண்டியவைகளுக்கும் கொடுத்துவிடுவோம்.

(3) சகோதரத்துவம்.

நாமெல்லோரும் ஒரே பிதாவும் சிருஷ்டிகருமான கடவுளுடைய மக்களாயிருப்பதையும், மனிதருக்குள்ளிருக்கிற விசனிக்கத்தக்க பிரிவுகளையும் நினைத்து, ஜாதி, மதம், அந்தஸ்து முதலிய வித்தியாசங்களினால் உண்டாகும் இகழ்தல், பெருமை, பகை, முதலிய துர்க்குணங்களை கிறிஸ்து இயேசுவின் கிருபையினால் எங்கள் இருதயங்களிலிருந்து வேரோடகற்ற நாங்கள் முயற்சி செய்வோம். வீட்டிலும், சபையிலும் வெளியிலும் வார்த்தையினாலும் கிரியையினாலும் சமாதானமும் சகோதரத்துவமும் விருத்தியடைய பிரயாசப்படுவோம். வகுப்புகளுக்கும் ஜாதிகளுக்கும் சமாதானமும் ஒப்புரவாகுதலுமுண்டாகும்படி ஏற்பட்டிருக்கிற சங்கங்களை ஆதரிப்போம்.

(4) தொண்டு.

கிறிஸ்துகுல ஆசிரம பிரதான சேவகர் குறிப்பிட்ட உன்னத நோக்கங்களை முன்னேறச் செய்யவும் கடவுளுக்கும் அவர் மக்களுக்கும் ஊழியஞ் செய்வதால் கிறிஸ்து குடும்பத்தின் ஆவியைக்காட்டவும் நாங்கள் வாக்குக் கொடுக்கிறோம்.

—O—

அத்தியாயம் 14

என் ஆசிரம வாழ்க்கை:— கடந்தகால அனுபவங்களும் எதிர் நோக்கும் நம்பிக்கையும்.

திருப்பத்தூரில் நான் ஆசிரமவாசியாக என் வாழ்க்கையாரம்பித்து கொஞ்சங்குறைய 20 வருஷங்கள் போலாகிவிட்டன. நான் விவேக இருதயமுள்ளவனாகும்படி என் நாட்களை எண்ணும் அறிவை எனக்குப் போதித்தருளும், என்ற சங்கீதமெழுதியவருடைய பிரார்த்தனை அடிக்கடி என் பிரார்த்தனையாகவும் இருந்திருக்கிறது. சங்கீதம் 90:12. வாழ்க்கையின் பிரயாணத்திலேயே பலதடவை சற்று அமரிக்கையுடன் நின்று இதுவரை செய்த பிரயாணம் எப்படியிருந்திருக்கிறதென்றும் இனி ஒருவன் முன்னிருக்கும் பிரயாணத்தின் திக்கு திசையும் எல்லை நோக்கங்களும் என்ன என்பதையும் ஆழ்ந்து யோசிப்பது நன்மையாயிருக்கும். வருகிற 1941ம் வருஷம் மார்ச்சுமாதம் 7ம்தேதி இந்த ஆசிரமம் ஸ்தாபிக்கப்பட்டு 20 வருஷங்கள் முடிந்துவிடும். சில கிராமத்தார் எங்களிடத்தில், "நீங்களிருவரும் காலஞ்சென்றபின் இந்த ஆசிரம பின்காலத்தின் ஸ்திதி என்னமாயிருக்கப் போகிறது?" என்று கேட்பதுண்டு இவர்களைவிட புத்திமான்களும், கற்றவர்களுங்கூட இப்படி எங்களிடத்தில் விசாரித்திருக்கிறார்கள். இப்படி கேட்பவர்களின் மனநிலையில் ஒரு தவறு இருக்கிறது. அவர்கள் இந்தக் கேள்விகள் கேட்கும்போது, நாங்கள் ஸ்தாபித்திருக்கும் வைத்தியசாலை, கலாநிலயம் முதலிய ஸ்தாபனங்களையே பிரதானமாக தங்கள் மனதில் நினைத்து இந்தக்கேள்வி போடுகிறார்கள். இந்த ஆசிரமத்தின் அடிப்படையான மூல நோக்கத்தை அவர்கள் சிந்திக்கிறதில்லை. இவைகள் அவர்கள் கண்களுக்குத் தென்படுகிறதுதில்லை. இது ஆச்சரியமல்ல. இந்த ஆசிரமவாசிகளாகிய எங்களுக்குள்கூட இந்த அடிப்படையான நோக்கத்தை மறந்து விடுகிறவர்களுண்டு. இந்த மூல நோக்கம் என்ன? ஆசிரமங்களால் தூண்டப்பட்டு அவை நிறைவேறவே இப்படிப்பட்ட ஸ்தாபனங்கள் ஏற்படுத்துகிறார்கள். ஆனால் அவர்களுக்குப் பின் வருபவர்களோ ஸ்தாபித்தவர்களின் முதல் தரிசனங்களையல்ல, அவர்கள் ஏற்படுத்திய வெறும் ஸ்தாபனங்களையே பார்த்து அவற்றைப் பிரதானமாக எண்ணுகிறார்கள். இவற்றை முதல் ஏற்படுத்திய கடவுளின் ஜீவ ஊற்று ஓடி, அது பலன்தர வெட்டிய வெறுங்கால்வாய்கள் மாத்திரமே இந்த ஸ்தாபனங்கள் என்னும் சத்தியத்தை அவர்கள் உணருகிறதில்லை. பிரதானமானதும் விசேஷித்ததும் கால்வாயில் ஓடும் தண்ணீரே, கால்வாயல்ல இந்த தரிசனம என்ன வென்பதை மேலே விவரமாய் கூறியாயிற்று. பூர்வீக இந்திய ஆசிரமங்களின் நோக்கம் ஒரு பக்தன் தன் உள்ளான ஜீவனின் ஜோதியை சுற்றிலும் பிரகாசிக்கச் செய்யும்

ஒரு பரிபூரண நிலையை அடைவதே. இதை சாதனை அல்லது சுய வெளிப்படுத்தல் என்று அழைத்தார்கள். ஆசிரமங்களில் வெறும் பேச்சு போதனைகள் பிரசங்கங்கள் இவற்றை முக்கியப்படுத்தாமல் அனுதினமும் ஒருவன் தன் நடக்கையில் சாதிக்கும் ஜீவனையே முக்கியப் படுத்தினார்கள். குருவிலிருந்து சீஷனுக்கு ஜீவனே சென்றது. ஜீவனிலிருந்து ஜீவன் பிறக்கும், வளரும், பரிபூரணமாகும் பலுகிப்பெருகும்.

வங்காள மாகாணத்திலிருந்து ஒருதடவை ஒரு விருந்தாளி ஆசிரமம் பார்க்க வந்திருந்தார். நல்ல மனுஷன். அவர் வழிவிட்டனுப்பிப் போகும் சமயத்தில் ஆசிரமத்திற்கு ஆண்டவன் மெய்த் தொண்டர்களை அனுப்பும்படி பிராத்தனை செய்யும்படி வீட்டிற்கு வெளியே சென்ற அவரிடம் சொன்னேன். சென்றுகொண்டிருந்தவர் உடனே தமது கையை உயர்த்தி என்னிடம், "பயப்படவேண்டாம். மெய் ஜீவனிலிருந்து மெய் ஜீவன் பிறக்கும். மகாத்துமாக்கள் எப்போதும் வேறு மகாத்துமக்களை ஜெனிப்பித்துக்கொண்டேயிருப்பார்கள்" என்று சொல்லிவிட்டு நடந்தார். பொதுவாக இது சத்தியமேயாயினும் அவர் அந்த சமயத்தில் இப்படி சொன்னதின் உள்கருத்து என்னைத் தாழ்த்தி ஆழ்ந்து யோசிக்கச் செய்தது.

கடந்த வருடங்களில் நாங்கள் மிக வாஞ்சையுடன் எதிர்நோக்கி ஆசிப்பது, சாமர்த்தியம் விளங்க சிறந்த வேலைகள் நடக்கும் வைத்தியசாலைகள், கலாநிலயங்கள் முதலிய ஸ்தாபனங்கள் அல்ல. இவைகளில் நன்மையுண்டு என்பது உண்மை. ஆனாலும் கடந்த வருஷங்களில் நாங்கள் தேடிநாடுவது கடவுளின் இராஜ்ஜியம் இவ்வுலகில் உண்டாகவே. தெய்வன்பினால் இணைக்கப்பட்டு பூமியில் கடவுளின் இராஜ்ஜியத்தை நாட்டி புதிய பூமியும், புதிய மோட்சமும் உண்டாக ஆசித்து உழைக்கும் ஒரு ஆத்மீகக் குடும்பம் உண்டாகச் செய்வதே எங்கள் நோக்கம். வேதாகமத்தில் இஸ்ரவேலர் மூதாதையான யாக்கோபு பெத்தேலில் கண்ட தரிசனத்தின் ஞான அர்த்தம் இது தான். நமது அருமை ஆண்டவர் நாத்தான்வேலிடத்தில் குறிப்பிட்டுச் சொன்ன ஏணியுமிதுதான். "வானம் திறந்திருக்கிறதையும் தெய்வதூதர் மனுஷகுமாரன் மீது ஏறுகிறதையும் நீங்கள் காண்பீர்கள்". யோவான். 1: 51. திருப்பத்தூருக்கும் பரலோகத்திற்கும் நடுவிலே இந்த ஏணி ஏற்படவேண்டும். கடந்த வருஷம் எங்கள் ஆசிரம கலாநிலய சம்மந்தமாக நடைபெற்ற வருஷாந்திரக் கலைச்சங்க விழாவில் பள்ளிக்கூடங்களைப் பரிசோதிக்கும் சர்க்கார் உத்தியோகஸ்தரான ஒரு இந்து நண்பர் உபந்நியாசம் செய்தார். அச்சமயத்திலவர் சொன்ன சில காரியங்கள் எங்களை நாங்கள் தாழ்த்தவும் கடவுளுக்கு முன்பாக எங்கள் அந்தரங்கத்தை ஆராய்ந்து அறியவும் ஏவிற்று. "இந்த ஆசிரமத்தையும் அதின் வாசிகளையும் நான் பார்க்கும்போது பரத்திலிருந்து ஏதோ ஸ்தாபனங்கள் நேரே இந்த நடுக்காடான இடத்திலிறங்கி வந்து வைத்தியசாலையாகவும், பள்ளிக்கூடமாகவும்

இந்த கிராமங்கள் மத்தியில் உதித்திருப்பதாக என் மனக்கண்முன் காண்கிறேன்," என்றார். மிகையாகத் தோன்றின இந்த வார்த்தைகள் அவரின் அன்பு அபிமானத்தை வெளிப்படுத்தினாலும் இது எங்களுக்கு அவர் கொடுத்த எச்சரிப்பாகவேயிருந்தது. "நீங்கள் பரம குடியிருப்பு" என்று கிரேக்க பாஷை நிபுணரான மாப்பாத் வேத சாஸ்திரி பிலிப்பியர் நிருபம் 3:20 ஐ மொழி பெயர்க்கிறார். இது பிலிப்பு நகரிலுள்ள கிறிஸ்துவின் சீஷரான சிறிய கூட்டத்திற்குப் பவுலப்போஸ்தலன் "பரம குடியிருப்பு" என்று கொடுத்த பெயர்.

ஆனால் ஐயோ, இக்காலத்திலோ லௌகீக சிந்தையிலாழ்ந்த மக்கள் தங்களின் விஞ்ஞான சாஸ்திர அறிவினால் உண்டான நாகரீகத்தையே கையாடி, உலகமே சதமென்று கைபிடித்து, நித்தியமும் என்றும் அழியாததுமான ஆத்மீக காரியங்களை அறவே மறந்துவிட்டார்கள் சரீர கண்முன் காண்பதுதான் இவர்கள் நம்புவது. சிலர் கிறிஸ்து மார்க்கத்தைக்கூட இதற்கு அனுசரணையாக திருப்பிக்கொள்ள முயலுகிறார்கள்.

தாங்கள் நாகரீகம் என்று எண்ணும் ரீதியின்படியில்லாதவர்களும் தங்கள் விஞ்ஞான சாஸ்திர அறிவின்படி கலைஞானமில்லாதவர்களுமான ஏழை தேசத்தினரை இவர்கள் அடக்கி ஆண்டு, தங்கள் வியாபாரம் பொருளாதார முதலிய சுயநலத்திற்காக இதர தேசங்களை வசப்படுத்திக் கொள்ளுகிறார்கள். நமது இந்தியா தேசமும் இப்படிப்பட்ட ஏகாதிபத்தியத்திற்குள் நசுக்கப்பட்டு வாடி சுதந்திரமிழந்துகிடக்கிறது. ஐயோ இதுமட்டோ? இவ்விதமாக தாங்கள் முற்றிலும் அடக்கி ஆளுவதற்கு ஆத்மீக காரணங்களும், அர்த்தங்களும் கொடுத்துவிடுகிறார்கள். அந்தோ இவர்கள் சம்பிரதாயம்! இன்பமானதும் நயமானதுமான வசனங்களினால் தங்கள் ஏகாதிபத்திய ஆட்சியை ஒரு பெரிய பரோபகார கிரியைப்போல் வருணிக்கிறார்கள். இந்தவித அநியாயங்கள் போக, மானிடர் கடவுளின் இராஜ்ஜிய பரிபூரண சுதந்திரமடையச் செய்ய வழிகள் என்ன? கிறிஸ்து பூமிக்கு வந்ததினால் இந்த அநியாயங்கள் போக ஏதாவது வழியுண்டா? அவருடைய நீதியின் இராஜ்ஜியம் வர அவருக்குப்பின் அவருடைய வேலையை பூமியில் செய்ய அவர் ஏற்படுத்திய மெய்யான அப்போஸ்தலர் தொடர்ச்சி என்ன?

மிகுந்த தாழ்மையோடும், வணக்கத்தோடும் நான் ஒரு காரியம் இங்கே சொல்லவேண்டும். திருப்பத்தூரில் ஏற்படுத்தியிருக்கும் ஆசிரமத்தின் உண்மையான நோக்கம் இதுவே. இந்த கேள்விகளுக்கு தங்கள் ஜீவியத்தினால் உத்தரவு சொல்லும் கிறிஸ்துவின் சீஷரான உத்தம தொண்டர்கள் உண்டாகவே. பெரும்பேச்சுபோல் தோன்றினாலும் இந்த மூல நோக்கத்தை எத்துணையும் மாற்றலாகாது.

ஆனாலும் இது இலகுவோ? சொர்ப்பனங்களும் தரிசனங்களும் காணுவது ஒரு வேளை இலகுவாய் இருக்கலாம். ஆனால் தரிசனத்தை கரிசனையோடு செயற்கைக்குக் கொண்டுவருவதோ, ஆ எ த் து னை பாரமான வேலை! இந்த ஆத்மீக குடும்பம் வளருவது எவ்வளவு மெள்ள நடக்கிறதாகக் காணப்படுகிறது! "கடவுளின் புத்திரர் வெளிப்பட சர்வ சிருஷ்டியும் பேராவலோடு காத்து பிரசவ வேதனைப்பட்டு தவிக்கிறது, நாமும் தவிக்கிறோம்", என்கிறார் பவுல் அப்போஸ்தலன். ஆசிரமம் ஸ்தாபிப்பவர்களுக்கும் இந்த ஆத்மீக பிரசவ வேதனையுண்டு.

கடந்த வருஷங்களில் இப்படி உடன் தொண்டர்கள் நிமித்தமோ, ஆசிரம குடும்பத்திற்குவேண்டிய கடவுளின் மக்கள் வராததுபோல் தோன்றிய சமயங்களிலோ நான் அங்கலாய்த்து மனவேதனை சரீர நோய் அடைந்து தவித்ததுண்டு. நடு இரவுகளில் மற்றவர்கள் படுத்துத் தூங்கியபின் எனக்குத் தூக்கம்வராது மனம் இப்படி அங்கலாய்க்கும் சமயங்களில், தூங்குகிறவர்களுக்கு இடையூறு இல்லாதபடி வீட்டின் மச்சிக் கூரையாகிய தார்சு செல்லுவேன். அங்கிருந்து என் ஆத்ம தியாகம் தீர அருமையான கீதங்களை அமைதியாய்ப்பாடி என்னைத் தேற்றிக்கொள்ளுவேன். இப்படிப்பட்ட சமயங்களில் என் மன ஆற்றாமைகளை வெளியிட நான் இயற்றிய பாட்டுகள் இப்போது ஆசிரமப் பாமாலைகளில் பிரசுரமாயிருக்கின்றன. 1937 ஆ பெப்ருவரி மீ ஆசிரமத்தில் வெகுகாலமிருப்பார்களென்று நாங்கள் எதிர்பார்த்தவர்களும் அதிகமாக சிநேகித்து நம்பியிருந்தவர்களுமான இரண்டு வைத்திய தொண்டர்கள் ஆசிரமத்தை விட்டுப் போய்விட நேரிட்டது. சகோதரன் பேட்டனும் சற்று இளைப்பாற தன் சுயதேசம் போக அவசியமாயிருந்தது. வேறு சில கஷ்டங்களுமிருந்தன. மிகவும் தியங்கி மயங்கும் நிலையில் என் மனம் இருந்தது, ஒன்றும் ஓடாததுபோலிருந்தது. என் விசுவாசக்குறைவும், கடவுளிடம் நான் வைக்கவேண்டிய பரிபூரண நம்பிக்கை போதாததுமேதான் என் சரீர மன வேதனைகளுக்கு அடிக்கடி காரணம் என்பதை நான் நன்கறிந்தேன். ஆனாலும் இச் சமயத்தில் என் ஆத்துமா மிகத்தயங்கியதால் நான் ஆசிரமத்தை விட்டு ஒரு ஊர் சென்று ஒருநாள் முழுவதும் கடற்கரையருகில் அமைதியாய் செலவிட்டேன். அன்று காலை ஒரு மரத்தடியில் என் வேதாகமத்தைத் திறந்தவுடன் சங்கீதம் 42 என் கண்முன் வந்தது. அதை வாசிக்க எனக்கு மிக ஆறுதல் வந்தது. சங்கீதம் பாடியவரின் ஆத்ம நிலையும், என் நிலையும் ஒருவாராக ஒத்திருந்தது.

ஓயாதோ என் கவலை, உள்ளே ஆனந்தவெள்ளம்
பாயாதோ ஐயா, பகராய் பராபரமே!

மூன்றாவது வசனம் எனக்கு மிக ஏற்றதாயிருந்தது. "உன் கடவுள் எங்கே?" என்ற வசனம் "உன் உன்னத தரிசனங்கள், நோக்கங்கள் எங்கே? அவையெல்லாம் எங்கே நிறைவேறப் போகின்றன?" என்பது போல் என் காதில் தொனித்தது அக்கேள்விக்குத் தகுந்த உத்தரவான கடைசி வசனம் "கடவுளுக்குக் காத்திரு" என்றது. என்னை அதிகமாய் உற்சாகப்படுத்தித் தேற்றிவிட்டது.

அன்று இரவு நான் ஆசிரமத்திற்குத் திரும்பி புகை வண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருக்கையில் என் மனதில் ஒரு கேள்வி பலமாய் வந்துகொண்டிருந்தது. "இதுவரை ஆண்டவர் உனக்கு ஆசிரமத் தொண்டராக கொடுத்திருப்பவர்களின் விஷயத்தில் நீ உண்மையும், உத்தமமுமாயிருந்திருக்கிறாயா? தங்கள் ஜீவிய நோக்கம் நிறைவேற அவர்களை உன்னதமான தரிசனங்களைக் காணும்வழியில் நடத்தி வந்திருக்கிறாயா? நெஞ்சத்தில் நீ உண்மையாயிரு, அப்போது ஆண்டவர் உன்னிடத்தில் இதினும் அதிகமாக அவர் காரியங்களை ஒப்புவிப்பார்" என்னும் கேள்வியும் எண்ணமுமே.

நவம்பர் 1938 ஹ ஆசிரம பின் காரியங்கள் எப்படியிருக்குமோவென்று தியங்கிக்கலங்கினதாலும் விசேஷமாக ஆசிரமத்திலிருந்த ஒரு அருமையான சகோதரனின் உறுதி தவறி அவன் அசைவதுபோல் கண்டதாலும் கவலைகொண்டு, மனம் தத்தளிக்கும் நிலையிலிருந்தேன், அச்சமயம் என் உடல் நிலையும் சுகமாயில்லை. ஜெபதியானங்களுக்காக கூடிவரும் மாலைச் சந்தியா வேளைகளில் இந்தக் கவலைகள் மேற்கொள்ளாதபடி என் மனத்துடிப்பையும் அங்கலாய்ப்பையும் ஆண்டவருக்கு முன் ஊற்றிவிடுவேன். அவருடைய ஆற்றல் தேற்றல் வர அமர்ந்து காத்திருப்பேன். இப்படிப்பட்ட ஓர் சமயத்தில்தான் நவம்பர் மாதம் (1938) பின்வரும் பாட்டை இயற்றினேன்.

இராகம் : சஹானா — தாளம் : சாப்பு

பல்லவி

அமர்ந்திரு ஆத்துமாவே—அருள்நாதனின் அடிதனில்
அணைப்பாருனைத்தம் கரத்தால்.

அனுபல்லவி

இந்த விதமாய்த் தினம் நொந்து நடுங்கி மனம்
வெந்து வெருவி நின்று உந்தனை வதைக்காதே —அமர்ந்திரு.

சரணங்கள்

1. நோயால் சரீரம் வாடி நொந்து நீ வதைத்தாலும்
ஓயாது செய்யும் ஜெபம் உன்னதம் சென்றிடுமே
ஆயாசம் வேண்டாம் அண்ணல் ஆலயமுன் சரீரம்
சாயாது சீர்படுத்த சர்வவல்லவரவர் —அமர்ந்திரு

2. சோதனைகளினாலே சோர்ந்து நீ வாடும்போது
நாதனின் பிரசன்னம் நாள்தோறும் நின்னைத் தேற்றும்.
காதலாய் கர்த்தர் திருக்கண்ணுடனுனைக் காப்பார்
போதுமவர் அழைப்பும் பொன்மொழி வாக்குரையும் —அமர்ந்திரு

3. ஆருயிர் அன்பனை நீ ஆண்டவர் சொந்தமாக்க
பேரும் பேரன்புடன் பின்தொடர்ந்து ஜெபித்து நிற்க
பேரானந்தம் விளைக்கும் பெருமானையவன் விட்டு
பாரின் சிற்றின்பக் கட்டால் மயங்கித் தவறும்போது —அமர்ந்திரு

4. இஷ்டரின் அன்பு குன்றி இடறல்கள் ஏற்பட்டாலும்
கஷ்டமோடுந்தனுள்ளம் கலங்கிக் குழம்பினாலும்
துஷ்டர்கள் தூஷித்தாலும் துயர் வந்து தவித்தாலும்
நஷ்டம் நேரிடுமென்று பயந்து நடுங்கினாலும் — அமர்ந்திரு

5. கடவுளின் ராஜ்யம் நாட்ட கருத்துடன் நாடும்போது
உடன் ஊழியர் உதவி உத்தமர் கூட்டுறவு
திடமாய் உனக்கில்லாமல் திகைத்து மனம் பதைத்தால்
விடவேண்டாம் விசுவாசம் விண்ணவர் சகவாசம் —அமர்ந்திரு

6. வருங்காலக் கவலையால் வருந்திக் கண்ணீர் சொரிய
நெருக்கடி நேரிடினும், நம்பு நாதனின் கரம்
கருத்தாயுனை நடத்தும் கண்மணி கலங்காதே
இறுதிவரை இருப்போர் இதுகாறும் காத்தவர்தான் –அமர்ந்திரு.

இப்படிப்பட்ட அநுபவங்கள் மூலமாய்த்தான் இப்படி பாட்டுகள் இயற்றி என்னை ஆற்றித் தேற்றி, என் மனோ வாஞ்சைகள் பிரார்த்தனைகளை வெளியிட்டிருக்கிறேன். சரீரம் மனதை வசப்படுத்தும், மனம் சரீரத்தை வசப்படுத்தும். இப்படி இவை இரண்டும் நெருங்கிய சம்மந்தமுள்ளதாக யிருக்கின்றன. ஆசிரம தொண்டர்கள் சம்மந்தமாக அல்லது இங்கு நடக்கும் வேலை விஷயங்களில், ஏதாவது மனக்கஷ்டம் வந்தால் இரவில் தூக்கம் பறந்துவிடும். சரீரம் துடிக்கும், கவலை அதிகமாயிருக்கும் வேளைகளில்தான் என் வயிற்றுநோவும் அதிகமாயிருக்கும். "என் வயிறு துடிக்குதே" என்று ஏழை மக்கள் மிகத் துயர நேரத்தில் சொல்லுவதில் மிக உண்மையுண்டு. இந்தவிதமான வேளைகளில் படிப்படியாக உடல் உடைந்து சிதைந்து போய்விடும் போல எனக்கே உணர்ச்சி உண்டாகும்.

பிரம்மாச்சாரியம் கவலையற்ற வாழ்க்கை என்று சொல்வது மிகத் தவறு. அப்படிப்பட்ட தன்னயமுள்ளதானது உண்மையான பிரம்மாச்சாரியமல்ல. கிரகஸ்தனுடைய சமுசாரக் கவலைகளுக்கு வித்தியாசமானவைகளே யாயினும் பிரம்மாச்சாரியத்தின் அங்கலாய்ப்பும் கவலைகளும் அநேகமுண்டு.

"இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது. நான் என்ன சொல்லுவேன்? பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் அப்படியல்ல, இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்." யோவான் 12:27.

"ஆகிலும் நான் பெறவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடிந்து தீருமளவும் எனக்கு எவ்வளவோ மன நெருக்கம்," லூக்கா, 12:50.

"என் ஆத்துமா மரணத்துக்கேதுவான பெருந்துக்கம் கொண்டு இருக்கிறது." மார்க்கு. 14:34.

பரிபூரண பிரம்மாச்சாரியாயிருந்த இயேசுகிறிஸ்துவின் திரு இருதயமும் பொங்கி. அவர் திருவாய் மலர்ந்தருளின அங்கலாய்ப்புகள் அல்லவோ, மனதை அசைக்கும் இந்த வசனங்கள்! அவர் தாம் அதிகமாக நம்பி, தமது வேலைக்கு பிரதம தொண்டனாக விளங்குவான் என்று எதிர்பார்த்த பேதுரு உறுதி நிலைகுலைந்து அசைவாடி விழுவான் என்று தெரிந்தபோது, அவர் மனம் ஏங்கி அவனுக்காக பரிந்து செய்த மன்றாட்டையும் கூறும் வசனங்களையும் நாம் ஆழ்ந்து கவனிக்கவேண்டும்.

லூக்கா 22:31, 32. "சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோல் சாத்தான் உங்களைப் புடைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக ஜெபித்தேன்; நீ குணப்பட்டபின் உன் சகோதரரை ஸ்திரப்படுத்து" என்றார்.

"என் சிறு பிள்ளைகளே" என்று ஆத்தும நாதன் தமது சீஷர்களை அழைத்து இரவும் பகலும் அவர்களுக்காக கவலைப்பட்டு, மனம் பொங்கி, அவர்களில் வைத்த அன்பின் மாண்பையும் அவர் ஜீவியத்தில் பலமுறை பார்க்கலாம். யோவான் 13ம், 17ம் அதிகாரங்களை கவனிக்கவும். யோவான் 18:8. "இயேசு நான்தான் என்று உங்களுக்குச் சொன்னேன்; நீங்கள் என்னைத் தேடுகிறதானால் இவர்களைப் போகவிடுங்கள்" என்றார். தமக்கு உயிராபத்துவரும் இந்த சமயம்கூட அவர் நினைவும் கவலையும் சீஷரைப்பற்றியே! யோவான். 21:5. "இயேசு அவர்களைப்பார்த்து பிள்ளைகளே, உங்களிடம் ஏதாகிலும் கறி பதார்த்தமுண்டா? என்றார். உயிர்த்தெழுந்த பரமநாதன் சீஷப் பிள்ளைகள் பசியாற்றவே முதல் கருதுகிறார். "என் சிறு பிள்ளைகளே, கிறிஸ்து உங்களில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்ப வேதனைப் படுகிறேன். உங்கள் விஷயத்தில் எனக்கு வழியொன்றும் தோன்றாதிருக்கிறபடியால் நான் இப்பொழுது உங்களிடம் வந்திருந்து வேறு வகையாய் பேசுவது நலமாயிருக்குமென்று எண்ணுகிறேன்." கலாத்தியர் 4-19, 20

"எல்லா சபைகளையும்பற்றிய கவலைகள் என்மேல் விழுந்து நெருக்குகின்றன" (II கொரி. 11:28) என்று பவுல் அப்போஸ்தலன்

சொல்லுகிறார். "இளைப்பாறுதல் ஒன்றும் இல்லாமல் எல்லா விஷயத்திலும் உபத்திரவப்பட்டோம், புறம்பே போராட்டம், உள்ளே பயம்." 2 கொரிந்தியர். 7:5. கொரிந்துவிலுள்ள புது சீஷர்கள் தவறிக் கெட்டுப் போகாதபடி அவர்களைப் பெற்ற தகப்பன்போல் அங்கலாய்த்து தவித்து மக்கதோனியாவில் மனந் தத்தளித்து தங்கி இருந்தார். கொரிந்து நகரிலுள்ள இந்த சீஷர்களின் ஸ்திதியை அறிந்துவர தீத்துவை அனுப்பியிருந்தார். தீத்து திரும்பிவர ஆவலோடு காத்திருந்த போது இந்த மனநிலையிலிருந்ததாக எழுதுகிறார். கடவுளுடைய இராஜ்ஜியத்தை பூமியில் நாட்ட பிரம்மாச்சாரியம் அவசியம் என்று மிகவும் வற்புறுத்தினவர் இவரல்லவோ.

கொரிந்தியர். 7:32. "நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்புகிறேன். விவாகமில்லாதவன் ஆண்டவருக்கு எப்படி பிரியமாயிருக்கலாமென்று ஆண்டவருக்குரியவைகளுக்காக கவலைப்படுகிறான்".

தம் குடும்பமாகிய சீஷரால் கிறிஸ்துவுக்கு எப்படி ஆனந்தம் வந்ததோ, அப்படியே பிரம்மாச்சாரிக்கும் தன் ஆத்மீக குடும்பத்தினால் ஆனந்தம் உண்டாகும்.

லூக்கா. 10:21. "அந்நேரமே இயேசு பரிசுத்த ஆவியில் அகமகிழ்ந்து, பிதாவே வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே, இவைகளை ஞானிக்கும் விவேகிகளுக்கும் மறைத்துப் பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். ஆம் பிதாவே, இதுவே உமது திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது".

பிலிப்பியர் 4:1. பவுல் அப்போஸ்தலனும் தமது ஆத்மீகப் பிள்ளைகளான பிலிப்பியரை நினைத்து அகமகிழ்கிறார். "ஆதலால், நான் வாஞ்சை கொள்ளுகிற என் பிரியமான சகோதரரே, எனக்குச் சந்தோஷமும் கிரீடமுமானவர்களே, பிரியமானவர்களே" என்றழைக்கிறார்.

கடவுளுடைய தாசர்களான சில பலத்த விசுவாசிகள் ஏற்படுத்திய பரோபகார நல்ல ஸ்தாபனங்களை நடத்த, நமது பரமபிதாவின் பராமரிப்பையே முற்றிலும் அவர்கள் நம்பி, ஆச்சரியமான விதமாக நாடோடிய தேவைகளைப் பெற்றுவந்திருக்கிறார்கள். இவ்விதமாக நம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட ஏழைகள், அநாதைகள், விதவைகள், சிசுக்கள் சவரக்ஷணைக்குத் தினமும் வேண்டிய பணம் அவசியமான பொருட்கள் கிடைக்கும்படி ஜெபிக்க, கடவுள்மேல் நமக்கிருக்கவேண்டிய நம்பிக்கை பெரிதேதான், எனினும் இதைவிட அதிக நம்பிக்கை காட்ட அவசியமான வேறொரு காரியமுண்டு. அவர் நமக்குக் கொடுத்திருக்கும் வேலையைச் சரிவரச்செய்து நடத்த அவசியமான உத்தம தொண்டர்களை அவர் அனுப்ப ஜெபிப்பதற்கு அவர்மேல் இன்னும்

அதிக நம்பிக்கையும் விசுவாசமும் வேண்டியதிருக்கிறது. பணத்தை விட பிரதிஷ்டை செய்த ஆட்களே அதிக அவசியம். இதுதான் என் அனுபவம்.

1921ம் வருஷம் மார்ச்சு மாதம் 7ந் தேதி இந்த ஆசிரமத்தை திருப்பத்தூரில் ஒரு வாடகை வீட்டில் ஆரம்பித்தோம். இப்போது ரோமான் கத்தோலிக்க குருக்களை ஆயத்தம்செய்யும் சலீசியன் சந்நியாச சங்கத்தின் வேதசாஸ்திர கல்லூரியாயிருக்கிற இடம். வைத்திய வேலைமட்டும் முதலில் செய்தோம். நாங்கள் இருவர் மாத்திரம்தான் அப்போ தொண்டர். பின்பு ஒரு வாலிபன் உதவியாக வந்தான். காலைமுதல் மாலைமட்டும் ஓயாத வேலையிருக்கும். ஆரம்பத்தில் சமையல், தோட்டிவேலை இவற்றைக்கூட நாங்களே செய்யவேண்டுமென்று எங்களுக்கு ஆசையாயிருந்தது. இரு தொண்டர் (பிராமணர் ஒருவர்) தோட்டிவேலைசெய்ய சமயமும் ஒருதடவை நேரிட்டது. ஆனால் வைத்தியவேலை சீக்கிரம் அதிகரித்துவிட்டபடியால் இதுமுடியவில்லை. தோட்டியும் சமையலாளும் சம்பளத்திற்கே வைக்கவேண்டியதாயிருந்தது. மற்ற எல்லாத் தொண்டுகளும் எங்களாலும் அல்லது மற்ற தொண்டர்கள் மூலமாகவுமே நடந்தேறின. இப்போது கலாநிலயம் என்று அழைக்கப்படுகிற கிராமப் பிள்ளைகளுக்கும் பள்ளிக்கூடம், பெரிய வைத்தியசாலை, விவசாயம் முதலிய பல வேலைகள் நடந்தேறி வருகின்றன. சராசரி 25 ஆசிரமத் தொண்டர்கள் இருக்கிறார்கள். இவர்கள் குறைந்தது ஒரு வருஷமிருக்கவேண்டும். சிலர் ஐந்து வருஷங்கள் போலிருந்திருக்கிறார்கள். முன்னமே பிரசுரித்திருக்கிற புத்தகங்களில் விவரமாய் எழுதியிருக்கிறபடியால் நான் திரும்பவும் அவைகளைக்குறித்து விவரிப்பது அநாவசியம் ஆனாலும் கொஞ்சங்குறைய 20 வருஷங்கள் சென்றுவிட்டதேயாயினும் எங்களுடன் சேர்ந்து ஆசிரமத்திற்கு சாசுவத அங்கங்களாக தங்களை ஒப்புக்கொடுத்து பொறுப்போடு தொண்டுசெய்ய இப்போது யோசித்துக்கொண்டிருக்கும் உடன் சகோதரர் நான்குபேர் மாத்திரமே இருக்கிறார்கள். இந்த 20 வருஷங்களுக்குள் இவர்களுக்குமுன் எத்தனையோபேர் வந்திருந்தாலும் தங்களை முற்றிலும் சாசுவத அங்கங்களாக ஒப்புகொடுத்துவிட்டவர்கள் இவர்களில் ஒருவர்கூட இல்லை.

"ஆசிரமங்கள் புதியனவும் பழையவைகளும்" என்று ஆங்கிலத்தில் நான் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறேன். இயேசு சபையென்ற ரோமான் கத்தோலிக்க சங்கத்தார் கல்கத்தாவில் பிரசுரம் செய்யும் ஒரு சஞ்சிகை பத்திராதிபர் இதைக் கேட்டு வாங்கி ஒரு மதிப்புரையும் தமது சஞ்சிகையின் மூலமாய் வெளியிட்டிருக்கிறார். அவர் என் புத்தகத்தைக் குறித்து பலவித நற்காரியங்களைக் கூறியபின் எங்கள் ஆசிரமம் சாசுவத அங்கங்களில் வளர்ச்சியடையாததற்கு

பல காரணங்கள் எடுத்துரைக்கிறார். அவற்றில் சிலவற்றை மாத்திரம் இங்கு எடுத்துரைக்கிறேன். அவர் சொல்வது திருப்பத்தூர் ஆசிரமத்தில் பிரதிதினமும் பரிசுத்த நற்கருணை பரிமாறும் திருப்பூசை நடக்கவில்லை. 2.புரோட்டஸ்டாண்டு சபையார் வேதத்தை ஒவ்வொருவனும் தனியேஅர்த்தம் பண்ணிக் கொள்ளலாம் என்கிற கொள்கைஆசிரம வளர்ச்சிக்கு இடறல் என்பதே. இது ரோமான்சபையாரின் குறைகூர். ஆனல் புரோட்டஸ் டாண்டு கிறிஸ்தவர்களோ ஆசிரமம் வளராததிற்கு காரணம் அதன் பிரம்மாச்சாரிய கொள்கையே என்கிறார்கள். இது சம்மந்தமாக ஒரு காரியத்தை நான் எடுத்துக்காட்டுவது அவசியம். பல நூற்றாண்டு களுக்கு முன்னே ஐரோப்பாவில் கிறிஸ்தவ சபைகள் சீர்திருத்த மடையக் காரணமாயிருந்த மார்ட்டின் லூதர் என்ற பெரியார் மிக அவசியமான ஒரு பெரும் வேலை நிறைவேற்றினார். மக்களுக்கு மறை பொருளாக இருந்த திவ்விய வேதவசனம் சாதாரண மக்கள் வாசித்தறியக் கிடைக்கவும், அவர்கள் மனக் கண்கள் திறக்கப்படவும் அவர் கொண்டு வந்த சீர்திருத்தம் மிக உதவியே. மேலும் சபை குருக்கள் தங்களை சர்வாதிகாரிகள்போல் பாவித்து சாதாரண ஜனங்களை ஆத்மீக அடிமைத்தனத்தில் ஆழ்ந்திருக்கும்படி செய்து விட்டார்கள், பிரம்மாச்சாரிகளென்று தங்களை அழைத்தும் கேடான அசுத்த ஜீவியம் செய்த குருக்கள் சிலரும் இவர்களுக்குள் இருந் தார்கள். மக்கள் ஆத்மீக விடுதலையடைய லூத்தர் சாஸ்திரியின் சீர் திருத்தம் பேருதவியே. பாவத்திலாழ்ந்து கிடந்த போலிக் குருக்களை அவர் கண்டிக்க அவசியமிருந்தது. மார்ட்டின் லூத்தர் பெரியாரை நாம் மிக மதிப்புடனே பேச வேண்டியதே.

எனினும் ஒரு காரியத்தை நான் தாழ்மையோடு இங்கெடுத் துரைக்க வேண்டும். ஒரு கன்னியாஸ்திரியை தன் விரதத்தை மீறச் செய்து அந்த அம்மாளை அவர் விவாகம் செய்துகொண்டது ஞான மான காரியமல்ல, இது இவருடைய ஆப்த நண்பனும் உடன் சீர் திருத்த ஊழியனுமாகிய மெலங்தான் என்னும் மஹானுக்குக்கூட மன வருத்தம் உண்டாக்கிற்று. திடீரென்று; இந்த ஆப்த நண்பனுக்குங் கூட தெரிவிக்காமல், லூத்தர் சாஸ்திரி இப்படி மணம்புரிந்துகொண் டார். இதோடுகூட ரோமான் சபையிலுள்ள குருக்கள் விவாகம் செய்துகொள்ளாமையைக்குறித்தும், பாப்புவானவருடைய ஜீவியத் தைக்குறித்தும், எனக்குத் தோன்றுகிறபடி மிக அவலக்ஷணமான வார்த்தைகளை உபயோகித்துத் தாக்கியிருக்கிறார். ஒரு சைவ இந்து கிறிஸ்தவனானபின் சைவ ஆகாரம் உட்கொள்வதினால் ஒரு பாவமு மில்லை என்று அவர் எண்ணினால், தமது மாறிய அபிப்பிராயத்தைக் குறித்து தைரியமாய் பேசுவதில் ஒரு தவறுமில்லை. ஆனல் மற்றவர் களுக்கு இடையூறுண்டாகாதபடியும். தமதுமார்க்க மாறுதலைக் குறித்து தவறாக மற்றவர்கள் எண்ணுவதற்கு இடமில்லாதபடிக்கும் தன்னைப்

பொருந்தியமட்டில், பண்டிதராமாபாய், வித்வான் கிருஷ்ணபிள்ளையைப் போன்ற மகாத்மாக்களைப்போல், தன் ஆயுள் காலமெல்லாம் மாமிசம் புசியாதிருப்பதே ஞானமாகும். லூத்தர் பெரியார் ஒரு காரியத்தை மறந்துவிட்டார்போலும். கிறிஸ்துநாதர் வெளிப்படுத்தியிருக்கிற போதனைகளையும், பவுல் அப்போஸ்தலன், ஆலோசனைகளையும், நமது ஆண்டவர் பவுல் அப்போஸ்தலன் பின்னும் எத்தனையோபக்தர், பரிசுத்த இரத்த சாக்ஷிகள் ஜீவியமாதிரியையும் பெரியாராகிய லூத்தர் சாஸ்திரி தமது சீர்திருத்த ஆத்திரத்தில் மறந்துவிட்டார்போலும்!

மத்தேயு. 19: 12, 29. "தாயின் வயிற்றிலிருந்து அண்ணகராய்ப் பிறந்தவர்களுமுண்டு; மனுஷரால் அண்ணகராக்கபட்டவர்களுமுண்டு. பரலோக இராஜ்ஜியத்திநிமித்தம் தங்களை அண்ணகராக்கிக் கொண்டவர்களுமுண்டு. இதை அங்கீகரிக்க வல்லவன் அங்கீகரிக்கக் கடவன் என்றார்''.

''என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது சகோதரரையாவது சகோதரிகளையாவது தகப்பனையாவது தாயையாவது பிள்ளையாவது நிலங்களையாவது விட்டவன் எவனோ அவன் பலமடங்குபெற்று நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்வான்." மத்தேயு 19:29.

''என்னிடம் வருகிற ஒருவன் தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும் தன் சொந்த ஜீவனையுங்கூட வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்க முடியாது". லூக்கா 14 : 26

இந்த விஷயத்தில் லூத்தர் சாஸ்திரியின் மாதிரியும், புரேட்டஸ்டாண்டு சபையின் பாரம் பரிய போதகம் மாமூல்களும், கடவுள் தமது தாசரை தமது இராஜ்ஜிய வேலைக்கு அழைக்கிறதில் பிரம்மாச்சாரியமும் ஒரு அழைப்பும்வழியுமாகும் என்னும் சத்தியத்தை புரோட்டாஸ்டாண்டு சபையார் சந்தேகிக்கவும் அடிக்கடி தள்ளி மறுக்கவும், அல்லது மறக்கவும் செய்துவிடுகின்றன. அரசியல், விஷயங்களில் மேல்நாட்டுப் பிரிவினைகள், போங்குகள், அபிப்பிராயங்கள் கட்சிகளை இந்தியராகிய நாம் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொண்டு பின்பற்றுவது மூடத்தனமாகும் அல்லவா? அப்படியானால் அதைவிட மிக முக்கியமான நித்திய சத்தியமாகிய கடவுளின் இராஜீயவிஷயங்களில், அல்லது அது சம்மந்தமான வழிபாடுகளில் ஆழ்ந்த எண்ணமில்லாமல், அவர்கள் அனுசரிக்கும் முறைகளையும் அபிப்பிராய பேதங்களையும், சபை கோட்பாடுகளையும் நம்முடைய சொந்தம்போல பாவித்து பின்பற்றி நடப்பது எத்துணை அதிகுருட்டுத்தனமாகும்! நமது தேசத்திலுள்ள நாம் உண்மையாக ஆத்மீக வளர்ச்சியடைந்து, முன்சென்று, கடவுளுக்கு மகிமையுண்டாகவும், சர்வலோகத்திலுமுள்ள பொதுவான கிறிஸ்துவின் உத்தம சீஷர்கள் கூட்டுறவான

மெய்த்திருச்சபை வளரவும், நம்முடைய சுதந்திரத்திலிருந்து நாம் கொடுக்கவேண்டிய ஆத்மீகக் காணிக்கை ஒன்றுண்டு. அகில பொதுவான இந்தத்திருச்சபை பரிபூரணமடைய இந்தியராகிய நாம் இந்தக் காணிக்கையைக் கொண்டுவந்து தீரவேண்டும். இது நமது இலாக்கியம், நமது காணிக்கையும் பங்கும் நிறைவாக வேண்டுமானால் இப்படி மேல்நாட்டு சபாகொள்கைகளை யோசனையில்லாமல் பின்பற்றுவதை விட்டுவிட வேண்டும். நமது பிதிர்த்துவத்தில் ஆண்டவர் கொடுத்திருக்கும் தத்துவங்களை உபயோகித்து அவர் திருவசனப் போதகமென்னவென்று நாமே நன்கு ஆராய்ந்து அறியவேண்டும். மேல்நாட்டு சபைகளின் கட்சிகளும், சபாபோதனைகளும், முறைகளும் நமது மனக்கண்களை மங்கலாக்கித் தவறான அபிப்பிராயங்கள் வழிவகைகளுக்கு நம்மை நடத்தி, நமது ஆத்மீக சுதந்திரத்திற்கு இடறலாயிராதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்.

இந்தியாவில் பெயர்ப் பிரஸ்தாபம் கீர்த்திபெற்ற ஒரு மேல்நாட்டு மிஷனரி குரு எங்கள் ஆசிரமத்திற்கு வந்திருந்தார். கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தைப் பூலோகத்தில் நாட்டுவதற்கு அடிப்படையான அம்சம் அல்லது கட்டுக் கற்கள் கிறிஸ்தவ குடும்பமேயாதலால் ஆசிரமங்களில் விவாகம் செய்தவர்கள் தான் மிக இன்றியமையாத அவசியம் என்று வாதாடினர். விவாகம் செய்வதும், அதில்லாமலிருப்பதும் விவகாரத்திற்கு அடுத்ததல்ல. ஆண்டவர் நமக்கருளின அழைப்பை தர்க்க சாலைகளில் தீர்மானிக்கமுடியாது. ஆண்டவனின் இரகசியம் அவர் பக்தர்களுக்கு அவர் சமுகத்தின் அந்தரங்கத்தில் வெளிப்படுத்தப்படுகிறது. விவாகத்தைக் குறித்து எந்த கிறிஸ்தவனும் அற்பமாய் எண்ணமுடியாது. ஆண்டவர் அதைக்குறித்து மிகவும் உயர்த்தியே பேசுகிறார். புருஷனும், மனைவியும் ஏகசரீரம் என்றாரே. கடவுள் இணைத்தவர்களை மனிதன் பிரிக்காதிருக்க வேண்டுமென்றார். ரோமான் கத்தோலிக்க சபையார் விவாகத்தை அவர்கள் பூஜிதையாக எண்ணுகிற ஏழு சாக்கிரமெந்துக்களில் ஒன்றாகப் பாவிக்கிறார்கள். மானிட வாழ்க்கையை நான்கு பிரிவாகப் பிரித்து, விவாக நிலைக்கு அதில் ஓர் பிரிவான கிரகஸ்த ஆசிரமம் என்ற உயர் பதவியை இந்து மார்க்கமும் கொடுத்திருக்கிறது. என் அருமை பெற்றோர் சொந்த குடும்பத்தார்களால் நான் பெற்றிருக்கும் ஆத்மீக சரீர நன்மைகளைக் குறித்து இப்புத்தக ஆரம்பத்தில் மிக விவரமாய்க் கூறியிருக்கிறேன். அதற்காக கடவுளை நன்றியோடு போற்றுகிறேன். எனினும் இல்லற வாழ்க்கை இந்த பூலோக இரத்தச் சம்மந்தமானது என்பதை மறந்துவிடக்கூடாது. ஆனால் கிறிஸ்துவின் பரம இராஜ்ய பாந்தம் முற்றிலும் ஆத்மீக கட்டானது.

“அவர் ஜனங்களோடே பேசிக்கொண்டிருக்கையில் அவர் தாயாரும், சகோதரரும் அவரிடம் பேசவேண்டுமென்று வெளியே நின்று

கொண்டிருந்தார்கள்........... அப்பொழுது அவர் என் தாயார் யார்? என் சகோதரர் யார் என்று சொல்லித் தமது கையைத் தமது சீஷருக்கு நேரே நீட்டி இதோ, என் தாயும், என் சகோதரர்களும் இவர்களே. பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்கு சகோதரனும், சகோதரியும் தாயுமாம் என்றார்". மத்தேயு. 12 : 46—50.

"பரலோகத்திலும், பூலோகத்திலும் எல்லா பிதிர்த்துவத்துக்கும் நாமகாரணமாயிருக்கிற பிதாவை நோக்கி முழங்கால் படியிட்டு", எபேசியர். 3 : 15.

"இயேசு : இந்த யுகத்தின் பிள்ளைகள் பெண் கொண்டும் பெண் கொடுத்தும் வருகிறார்கள். அந்த யுகத்தையும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்குதலையும் அடைய பாத்திரராக எண்ணப்படுவோர் கொள்வதுமில்லை கொடுப்பதுமில்லை. அவர்கள் தெய்வதூதரைப் போலாவார்கள். உயிர்த்தெழுதலின் பிள்ளைகளாகிக் கடவுளின் பிள்ளைகளாயிருக்கிறார்கள்". லூக்கா, 20—34—36.

முதன்மையாகவும், விசேஷித்த பிரகாரமாகவும் பெற்றோரின்மேல் விழுந்த பெருங்கடமை என்னவென்றால். தாங்கள் பெற்ற பிள்ளைகளைச் சரீரப் பிரகாரமாகவும் ஆத்ம பிரகாரமாகவும் சரிவர வளர்த்து விடுவதே. இவ்விஷயத்தில், விசேஷமாக பிள்ளைகளை தெய்வ பக்தியில் வளர்ப்பதில் அவர்கள் அசட்டை காட்டுவது பெரும் பாதகமாகும். இவ்விதமாக தன் குடும்பத்தை பராமரிக்காமல் அசட்டை செய்து பொது நன்மைக்கென்று காலமெல்லாம் உழைக்கிறேன் என்று சொல்லும் பெற்றோர் இயற்கைக்கு விரோதமானவர்களாவார்கள். இவர்கள் தங்கள் மணம் புரியும் சமயத்தில் தெய்வ சந்நிதியில் வாக்களித்த பிரதிக்கினையை மீறி, அவர்கள்மேல் வைத்த பொறுப்பை அசட்டை செய்தவர்களாகி விடுகிறார்கள். தங்கள் குடும்ப ஜீவிய நோக்கத்தை அவமாக்குகிறார்கள். 1934ம் வருஷம் நான் ஐரோப்பாவில் ஒரு நண்பர் வீட்டில் தங்கியிருந்தேன். அவருக்கு மூன்று சிறு பிள்ளைகள் இருந்தார்கள். அவர் மனைவியும், அவரும் தேசிய இயக்க பிரசாரத்தில் மிக வைராக்கியமுள்ளவர்கள். அந்த அம்மாள் அடிக்கடி பிள்ளைகளை வீட்டில் விட்டு விட்டு அயலூர்களுக்கு தேசிய இயக்கப் பிரசாரம் செய்யப் போய்விடுவார்கள். தாயில்லாப் பிள்ளைகளைப் போலிருந்த இவர்களைப் பார்ப்பது எனக்குப் பரிதாபமாயிருந்தது. ஒருநாள் நான் அந்த அம்மாள் திரும்பியபின் அவர்களிடம், "ஒரு தாயானவளின் முதல் கடமை பிள்ளைகளை நன்கு கவனித்து வளர்ப்பதே. இங்குமங்கும் ஊர்சுற்றி பொது அரசியல் இயக்கங்களின் மேலுள்ள வைராக்கியத்தால் குடும்பக் காரியங்களை அசட்டையாய் விட்டுவிடுவது சரியல்ல", என்றேன் என் நண்பர்களுக்கு அவர்கள் வீட்டில் விருந்தாளியாக போயிருந்த நானிப்படி பேசியது மனவருத்த

மாயிருந்திருக்கலாம். ஆனாலும் அச்சமயத்தில் நான் இதைக் கண்டித்துச் சொல்லவேண்டியதிருந்தது என் கடமையே என்று இன்றும் உணருகிறேன். இப்படிப்பட்ட பெற்றோர்கள் ஐரோப்பாவில் மாத்திரமல்ல, நமது தேசத்திலும், இருக்கிறார்களென்பதற்கு நான் அறிந்த உதாரணங்கள் கூறக்கூடும். பொது நன்மைக்காக அலைந்து திரிந்து இராப் பகலாய் மற்றவர்கள் ஆத்ம நன்மைக்காக ஓயாது உழைக்கும் நல்ல பக்தரின் குடும்பங்கள் பிள்ளைகள் அபக்தராயும், சிலவேளை துன்மார்க்காரகவும்கூட கெட்டழிந்து போகிறதற்குக் காரணம் இந்த பக்தர்கள் தக்கள் குடும்ப விஷயத்தில் தங்களுடைய முதன்மையான கடமைகளைச் செய்யத்தவறினதில்தான் என்று ஒருவாறு சொல்ல இடமுண்டல்லவா?

ஒரு தாய் தகப்பன் தன் பிள்ளைகளைத் தன்னை மறந்து சிநேகிப்பதும் பிள்ளைகளுக்காக காட்டும் தியாகமும் மிக அருமையான காரியமே, ஆனால் இது இயற்கையே. தங்களுக்குத் துரோகம் செய்யும் பிள்ளைகளையும் கூட தாய் தகப்பன் சிநேகிக்காமலிருக்கமுடியாது. ஆனால் நான் சரீரப் பிரகாரமாகப் பெறாத பிள்ளையை என் பிள்ளையைப் போலும், என் கூடப்பிறவாதவர்களை என் கூடப்பிறந்த சகோதரர், சகோதரிகள் போலும் சிநேகிப்பதுதான் கிறிஸ்துவின் திவ்விய அன்பின் மயமாகும். தன் தாய், சகோதரர் குடும்பம் என்று கிறிஸ்துவை பாவித்தவர்கள் பிதாவின் பிதிர்த்துவமானவர்களும், அவர் சித்தத்தின்படி நடக்க தங்களை ஒப்புவித்த தெய்வமக்களும் ஆனவர்களே. இந்த ஆத்மீக சம்மந்தமுள்ள குடும்பத்தைப் பூலோகத்தில் ஸ்தாபிப்பதுதான் அவர் திவ்விய பிரதம நோக்கம். இதுவே பூமியில் வர வேண்டிய அவர் இராஜ்ஜியம். கிறிஸ்துகுல ஆசிரமம் தொடங்கியது மேல் நாட்டு மூலையிலுள்ள வெள்ளை மனிதரொருவருக்கும், இந்தியாவில் இன்னொரு மூலையிலுளள ஒரு கறுப்பு மனிதனுக்கும் உண்டான சிநேக பாந்தத்தினாலேயே. கடந்த 25 வருஷங்களுக்கு மேலாக நாங்களிருவரும் ஆத்மீகக் காரியங்களில் ஏதோ ஒரு மேல் பூச்சான விதமாக மாத்திரம் அல்ல, ஆத்மீகக் காரியங்களிலும் உலகப் பொருட்கள் மற்றும் எல்லா விஷயங்களிலும் ஒரே ஐக்கியமாய் யாதொரு வித்தியாசமுமில்லாமல் ஜீவித்து வருகிறோம் என்று மிகத் தாழ்மையுடன் நான் சாட்சி பகருவேன். இதற்கு மூல காரணம் நாங்களிருவரும் சிநேகிக்கிறவரும் எங்களை மீட்டுத் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டவருமாகிய இரக்ஷா பெருமானின் அன்பே. இதனால்தான் திருப்பத்தூர் ஆசிரமத்திற்கு கிறிஸ்துகுல (குடும்ப) ஆசிரமம் என்று பெயர் சூட்டினோம்.

இந்தப் பெயருக்கேற்ப எக்காலமும் இந்த ஆசிரமம் துலங்கி சாட்சியாக நிற்கவேண்டும் என்ற மூல காரணத்தினிமித்தமே இந்த ஆசிரமத்தின் அங்கங்களின் பரஸ்பர ஐக்கியம் முற்றிலும் ஆத்மீக அஸ்திபாரத்திலே கட்டப்பட்டதாகயிருக்க ஆசிக்கிறோம். பிரம்மாச்சாரி தன் மோகங்களை திவ்விய ஆத்மீக மயமாக மாற்றித் திருப்பிக்

கொள்ளும் முறையும் கடவுள் சக்தியால் இப்படிப்பட்ட ஆத்மீக குடும்பத்தை ஜெனிப்பிப்பதினாலேதான். இது காரணத்தால் தான் இந்த ஆசிரமத்தில் பிரம்மாச்சாரியத்தை முக்கியப்படுத்துகிறோம். ஒரு நாள் திருவாங்கூர் காயலில் தோணியில் பிரயாணம் செய்துகொண்டிருந்தேன். என்னுடன் பிரயாணம் செய்தவர்களில் ஒரு ரோமான் குருவுமிருந்தார். அவரிடம் ஒரு கேள்வி கேட்டேன். "நீங்கள் ஜீவிய காலமுழுவதற்கென்று பிரம்மாச்சாரிய விரதம் செய்துகொள்ளும் போது, இப்படியே ஜீவிய காலமெல்லாமிருந்து விடுவீர்கள் என்று எப்படி உங்களுக்குத் தைரியம் வந்துவிடுகிறது?" என்று கேட்டேன் அதற்கு அவர், "எங்களை நாங்கள் நோக்கி அல்லது எங்கள் பலத்தை நம்பி, நாங்கள் விரதம் எடுக்கிறதில்லை, ஆனால் எங்களை அழைக்கும் அவர்மேல் எல்லாப் பொறுப்பையும் போட்டுவிட்டு, ஆண்டவா நீயே இனி எல்லாம் பார்த்துக்கொள்ள வேண்டியதென்று சொல்லி பிரம்மாச்சாரிய விரதம் செய்துகொள்ளுகிறோம்" என்றார்.

முடிவுவரை நடத்தி ஆண்டு இரக்ஷிக்க எனை
முழுதுமே கையளித்தேன்;
அடிதோறும் பலவினை சூழ்ந்திடும் பொழுதெல்லாம்
ஆதரிப்பதுனதுமேல் உற்ற பாரமே.

(யோவான் பால்மர்)

உத்தம பிரம்மாச்சாரி எல்லா பிள்ளைகளையும் பெற்ற தகப்பன் போல் சிநேகிப்பான். சகல பெண்களையும் தாய்போல், அல்லது உடன்பிறந்த சகோதரிபோல் நோக்குவான். பெண்கள் விஷயத்தில் அவன் கண்கள் கிறிஸ்துவின் கண்கள் போலிருக்கும். அவர் உத்தம பிரம்மாச்சாரி. பல ஆண்களோடு தவறாய் ஜீவித்துவந்த ஒரு சமாரிய ஸ்திரியிடம் அவர் சம்பாஷணை செய்தபோது அவர் மனதிலே எப்படியோ, அப்படியே இவன் மனதிலேயுமிருக்கும். எல்லாருக்கு முன் இயேசுவின் பாதங்களை முத்தமிட்டவள் யார்? "பாவியான ஸ்திரி" என்ற பட்டப்பெயர் வாங்கினவள்தானே? இவள் முத்தத்தை அன்போடு ஏற்றுக்கொண்டது மாத்திரமல்ல, அவள் செய்ததை எல்லாருக்கு முன் புகழ்ந்து அவள் சார்பாகப் பேசினாரே. பிரம்மாச்சாரியின் மனமும், பார்வையும், பரிசுத்தமானதானால் எந்த பெண்ணையும் தாயைப்போல், அல்லது சகோதரியைப்போல் எண்ணுவான்.

பாவப் பேராசை யற்று பார்வை சமத்துவமுற்று
பரஸ்திரியைத் தாயெனப் பணிவானே.
(மகாத்துமாகாந்திக்குப் பிரியமான பாட்டின் ஓரடி)

பிரம்மாச்சாரியின் கண்கள் ஒரு ஆளின் வெளித்தோற்றத்தையல்ல, ஆண் பெண், கறுப்பு, வெள்ளை, சுய நாட்டான், அயல்நாட்டான் என்ற பேதாபேதங்களையும் அல்ல ஆத்மீகமானதும் நித்தியமானது

மான அவன் அல்லது அவள் உள்ளான ஆள் தத்துவத்தையே பார்க்கிறான். இப்படிச் சொல்வதினால் இந்த உன்னத நிலையை ஆசிரமத்திலுள்ள நாங்கள் எவராவது அடைந்துவிட்டோமென்று மேன்மை பாராட்டுவது அல்ல. அது பொய்யாகும். எங்களைகுறித்து அப்படிப்பட்ட அபிப்பிராயத்தை மற்றவர்களுக்குள் உண்டாக்கும் பாவத்திலிருந்து கடவுள் என்னை விலக்கித் தடுப்பாராக. என் பல வீனங்கள், குறைகள் தவறுதல்களை நானறிவேன். கடவுள் இன்னும் அதிகமாக அறிவார்.

எனினும் இவ்வளவு விஸ்தாரமாக இதைக்குறித்துப் பேசுகிறேனென்றால், பிரம்மாச்சாரியம் மெய்க்குடும்பக்காரியங்களை அசட்டை செய்யும் ஆத்மீகத் தன்மையமுள்ளதல்ல. அந்நிலை அவசியமில்லை என்று ஆக்ஷேபிப்பது தவறு. கிறிஸ்துவின் ஆத்மீக குடும்பத்தை இங்கு நாட்டுவதற்கு அது அவசியம் என்று காட்டவே. நான் விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்று வாஞ்சித்த என் தாயார் சில வேளைகளில் என்னிடம், அப்பா, உனக்குப் பெயர்சொல்ல வம்சம் இல்லாது போய்விடுமே என்பதுபோல் அங்கலாய்ப்புடன் ஏக்கத்துடன் சொல்வதுண்டு. பிரம்மாச்சாரிக்கு உண்மையான வம்சம் (சந்ததி) உண்டு என்று நான் இப்போது மெய்யாய் அறிவேன். இது சில வேளைகளில் ஒரு கிரகஸ்தன் வம்சத்திலும் அதிக நிச்சயமானதும், உண்மையானதுமாயிருக்கும். இது ஆத்மீக மயமான வம்சம். கடந்த 20 வருஷங்களாகப் பாலியரின் சகவாசமும், அவர்களோடு நெருங்கிய பாந்தமும் எனக்கு அதிகமாயுண்டு. அவர்களில் சிலர் என் ஆத்மீகப் பிள்ளைகளைப் போலயிருக்கிறார்கள் என்று தாழ்மையோடே சொல்லுகிறேன்.

நமது தேச சேவைக்கு பிரம்மாச்சாரிகள் மிக அவசியமென்பதற்கு இன்னொரு காரணமுண்டு. கிராம மக்களின் தரித்திரம், சுதந்தர உணர்ச்சியின்மை, ஜாதி பேதம் பலவித கட்சிகளால் நிலைகுலைந்து அவர்கள் சீரழிதல், ஒடுக்கப்பட்டாலும் பயத்தினால் பதுங்கி கீழடங்கி நடந்துகொள்ளும் அவர்கள் வாழ்க்கை முதலியவற்றை நாம் உற்று நோக்கில் இவர்கள் முன்னேற்றத்திற்காகவும், சுதந்தரத்திற்காகவும் அஞ்சா நெஞ்சத்துடன் தியாகிகளாய் உழைக்க பிரம்மாச்சாரியம் மிக அவசியமன்றோ?

தற்கால வாலிபரில் நல்ல ஒழுக்கமுள்ளவர்களும் ஒருவாறு தெய்வ பக்தியுள்ளவர்களுமான வாலிபரைப் பார்த்திருக்கிறேன். இவர்களில் சிலர் தங்களால் ஆனமட்டும் நல்இயக்கங்களில் ஈடுபட்டு ஆங்காங்கு தொண்டுசெய்தும் வருகிறார்கள். ஆனால் பொதுவாகச் சொன்னால் தற்காலவாலிபருக்குள், விசேஷமாக உயர்கல்வி பெற்றவர்களுக்குள் திவ்விய தரிசனம் பெற்றவர்களாய் வைராக்கிய புருஷர்களாக தங்களைப் பிறர் நன்மைக்கென்று தியாகம்செய்ய பரிபூரணமாய் ஒப்புக்கொடுப்பவர்கள் மிகவும் சொற்பமே. தாங்கள் கடவுளின்

வல்லமையை முன்னிட்டு மகத்தானதும் பெரிதுமான காரியங்களைச் செய்யக்கூடுமென்ற சத்தியம் அவர்களைப்பிடித்து இன்னும் அசைக்கவில்லை. இந்த வருஷ ஆரம்பத்தில் நல்ல பக்தனுயிருந்த ஒரு வாலிப டாக்டரோடு சற்று நெருங்கிப் பழக எனக்குச் சமயம் கிடைத்தது. அவர் என்னோடு பேசி பெருமுச்சுடன் கலந்து ஊக்கமாகச் செய்த ஜெபமும், என்னிடம் வெளியிட்ட தமது ஆத்மீக வாஞ்சைகளும் இன்னும் என்காதில் தொனித்துக்கொண்டிருக்கின்றன. அவரைக் குறித்து அதிக நம்பிக்கை உண்டாகச் செய்துவிட்டார். தன்னைத் தியாகம் செய்து, இந்தியாவில் ஒரு பெரிய ஸ்தாபனத்தை இணைத்திருப்பதாகவும், தான் எந்த தியாக ஜீவியத்திற்கும் தன்னை ஒப்புக்கொடுக்க ஆயத்தமாயிருப்பதாகவும் சொன்னார். கூடிய சீக்கிரத்தில் இடையிலே ஆசிரமத்திற்கும் வந்து ஒருவேளை ஆண்டவர் அவரை இந்த ஆசிரம ஊழியத்திற்கு அழைப்பதாயிருந்தால் எங்களோடு சேர்ந்து வைத்திய தொண்டு செய்யவும் ஆயத்தமாயிருப்பதாகவும் சொன்னார். ஆனல் அப்படி அவர் இதுமட்டும் ஆசிரமம் பார்க்க வராததினல் சில வாரங்களுக்கு முன் அவரைக்குறித்து அவரை நன்கறிந்த ஒரு நண்பரிடம் விசாரித்தேன். அவர் பட்டாளத்து டாக்டராக உயர் உத்தியோகத்தில் இப்போது அமர்ந்துவிட்டதாக அறிந்தேன்.

இந்தியாவின் சேவகா சங்கம் என்ற ஒரு சங்கத்தில் ஒரு முக்கிய அங்கமான ஒரு மகான் ஒருநாள் என்னோடு புகைவண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். அவர் என்னிடம், "நமது இந்தியா தேசத்தில் தற்காலத்தில் உன்னத தரிசனங்கள் கண்டவர்களாய் தன்னய மற்று தியாகத் தொண்டு புரியத் தங்களை ஒப்புக்கொடுத்திருப்பவர்கள் வயது முதிர்ந்தவர்களாகிய மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு போன்றவர்களே! சார்ளி சாப்பிளன் போன்ற ஆங்கில கோமாளிகளே. இப்படி நமது வாலிபர் இந்த ஸ்திதியில் இருந்தால் இப்போதுள்ள வயது முதிர்ந்த தலைவர்களுக்குப் பின் நமது தேசத்திற்கு என்ன கதியுண்டாகுமோ?" என்று மிகத் துயரத்தோடு சொன்னார். இந்த என் உடன் பிரயாணிக்குத் தற்கால இந்திய வாலிபரைப் பற்றியிருந்த கேவலமான அபிப்பிராயம் மிகையாயிருக்கலாம். ஆனல் அவர் சொன்னதில் கொஞ்சமாவது சத்தியமுண்டு என்பதை யாரால் மறுக்கமுடியும்! இதற்குக் காரணம் ஒருவாறு இந்திய பெற்றோர்களும் தானல்லவா? தங்கள் மக்கள் மிகப் பாலிய பிராயத்தில் கூட தாங்கள் படித்து ஜில்லாக் கலெக்டர், உயர்பதவி டாக்டர், இஞ்சினியர் அல்லது பிரதம மந்திரி பதவியடையவேண்டுமென்ற அவாவைத் தங்களுக்குத் தெரிவித்தால் எவ்வளவு சந்தோஷமடைந்து அவர்களை உற்சாகப்படுத்துகிறார்கள். அவர்கள் கஷ்டமான பரீட்சைகளில்கூடத் தேற, அல்லது அதிக சம்பளம் கிடைக்கும் உயர் பதவியில் பின் காலத்தில் அமர, எத்தனை பிரயாசம் எடுக்கிறார்கள்! ஆனல் தங்கள் மக்களில் யாராவது தங்களை ஏதாவது தியாகத் தொண்டிற்கு ஒப்புக்

கொடுக்க ஆசைகொண்டால் அவர்களை எவ்வளவாக எச்சரித்து மிகவும் கவனத்துடன் யோசிக்கவும், மிகுந்த தாமதத்துடன் காத்திருக்கவும் சொல்லுகிறார்கள்! சாதாரணமாக மற்றவர்கள் போல் நல்ல பதவியிலிருந்து சம்பாத்தியம் செய்துகொண்டு, அத்துடன் சமயம் கிடைக்கும்போது கடவுளின் ஊழியத்தையும் செய்துகொள்ளக்கூடாதாவென்று ஆலோசனையும் சொல்லுகிறார்கள். சில பெற்றோர் நேராக தடுப்பதினாலும், அல்லது தங்கள் முகத்தினால் மனவருத்தத்தைக் காட்டுவதினாலும் தங்கள் மக்கள் தியாகத் தொண்டு செய்யத் தடை செய்து குறுக்கிடுகிறார்கள்.

நமது சர்வ கலாசாலை உயர்கல்வியும் ஒரு பெரிய இடறலே. உயர் கல்விக்கு இத்துணை அதிகம் செலவழித்து விட்டதால் அதற்குப் பிரதி பலன் வேண்டுமென்று பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள். மகாத்மா காந்தியவர்களிடம் கடந்த வருஷம் அக்டோபர் மாதம் நான் பேசிக் கொண்டிருந்தபோது கிராமத் தொண்டுசெய்ய நமது தற்கால கலாசாலைக் கல்வி ஒரு பெரும் தடையென்று அவரும் என்னிடம் மன வருத்தத்தோடு சொன்னார். இப்படி பெற்றோர் குற்றம் ஒரு பக்கமாகவும் சர்வ கலாசாலை கல்வி இன்னொரு பக்கமாகவும் இடையூறு செய்கின்றன. எனினும் இவற்றிற்கு மேலாக வாலிபரின் தரிசனமின்மையும், அவர்கள் ஆழ்ந்து யோசியாத மனநிலையுமே அவர்கள் தங்கள் பரிபூரண ஆள் தத்துவத்தை அடையச் செய்யும் தியாகத்தொண்டிற்கு தங்களைத் தத்தஞ் செய்வதற்குப் பெருந் தடைகளாய் இருக்கின்றன. இதனால் கடவுளின் இராஜ்ஜியம் வர தைரியம் துணிவுடன் அவர்கள் ஒன்றும் செய்யாது தூங்குகிறார்கள். ஏதும் பெரிய காரியங்களில் துணிந்து ஈடுபடவேண்டிய திடச்சித்தமும் அவர்களுக்கில்லாமல் போகிறது. "நீங்கள் நித்திரையை விட்டு எழுந்திருக்க வேளையாயிற்றென்று அறிந்தவர்களாய் இப்படி நடக்கவேண்டும். ....இரவின் பெரும் பாகம் சென்று போயிற்று" ரோமர் 13 : 11, 12. இந்த வார்த்தைகளை அநேக நூற்றாண்டுகளுக்கு முன் கேட்ட வட ஆப்பிரிக்கா வாலிபனாகிய அகுஸ்தின், உடனே தன் லௌகீக மாமிச ஆசைகளை நிறைவேற்றும் வாழ்க்கையைக் களைந்துவிட்டு, ஒரு புதிய ஆத்மீக ஜீவன் அடைய தன்னை ஒப்புக்கொடுத்து உலகத்தில் ஒரு பெரிய மகாத்துமாவாக விளங்கினார்.

நமது தேசத்திற்கு நம்மைத் தியாகஞ் செய்ய ஏவும் தரிசனம் நமக்கு எப்படி வரும்? என் சொந்த ஜீவியத்தில் பாலிய பிராயத்தில் என்னை ஆண்டவருக்கு ஒப்புவித்த பின்தான் தேசாபிமானமும் தேசத்தைப் பற்றிய வைராக்கியமும் வந்தன. தெய்வன்பு தன்னயமற்ற தேச அன்பிற்கு என்னை ஏவ ஆரம்பித்தது. கிறிஸ்துவின் அன்பு நம்மைப் பெற்ற மாதாபிதாவை இன்னும் அதிக உண்மையான அன்புடனே நேசிக்கச் செய்யும். அப்படியே அந்த அன்பு நமது தேசத்தையும் இன்னும் அதிக ஆர்வத்துடன் சிநேகிக்க நம்மை ஏவும், நான் முதலாவதாக கிறிஸ்தவன், பின்னால்தான் இந்தியன் என்ற விதமாகச்

சிலர் பிரித்துப் பேசுவது எனக்கு சர்வ மூடத்தனமாகத் தோன்றுகிறது இரண்டையும் இப்படி துண்டு துண்டாக அறுத்து வித்தியாசப்படுத்துவதும் அர்த்தமற்ற வீண்பேச்சு உத்தமகிறிஸ்து பக்தன் மெய்யான தேசபக்தனுமாயிருப்பான் என்பதே என் அனுபவம்.

ஆசிரமத்துக்கும் திருச்சபைகளுக்கும் என்ன சம்மந்தம் இருக்க வேண்டும்? பூர்வீக ஆசிரமங்களுக்கும், இந்து ஆலயங்களுக்கும் என்ன சம்மந்தம்? ஆலயங்களும் குருக்களும் பூசைகளும் சடங்குகளும் அடிக்கடி ஆழந்த அர்த்தமில்லாததும் மக்களின் அனுதின வாழ்க்கை நடவடிக்கைகளை உள்ளே தொடாத வெறும் மேல்பூச்சாய் போய்விடுவதும் நாமறிவோமே. அநேகருக்கு கோவிலுக்கிப்போய் சபா சடங்காசாரங்களை அனுசரிப்பது மாத்திரம் பக்தி முறையாய் விடுகிறது. வேதவாசிப்பு, குறித்த நேரத்தில் ஜெபஒழுங்குகள், மனதையும் உடலையும் கிளர்ச்சி செய்யும் பாட்டுக்களைப் பாடுதல், பிரசங்கம் கேட்குதல், இதிலேயே பலர் திருப்தியாகிவிடுகிறார்கள். இவ்விதமான மனோ சலனத்தை அடுத்த ஒரு பாகமான பாதி பக்தி அவர்களைக் கிறிஸ்து தமது சீஷருக்கு குறிப்பிட்ட முற்றும் அவரைப் பின்பற்றும் பரிபூரண பாக்கியம் அடையாதபடி தடுத்துவிடுகிறது. உயர்ந்த ஞான அர்த்தமுள்ள பாட்டுகள் ஜெபங்களை அனலோடு பாடி ஜெபிக்கிற நாம் அவற்றின் ஆழ்ந்த அர்த்தத்தின் ஜீவியத்தில் உண்மையாக நடந்துகொள்வதில்லை. ஆனால் ஆண்டவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற உத்தம பக்தி இப்படி மெதுவான மனோசலனத்தில் காணப்படுவதல்ல, பசி, பிணி, நிர்வாணம், சிறை முதலியவற்றால் வருந்துபவருக்கு பணி செய்வதில் திவ்விய சக்தி விளங்கும்படி மற்றவர்கள் நன்மைக்கு என்று பிழைக்கும் உத்தம ஜீவியம் அல்லவா? கடைசி நியாயத்தீர்ப்பில் நல்லோர் பொல்லோர், கிறிஸ்துவின் உத்தம சீஷர், அவர் அருளும் நித்திய ஜீவனுக்குரியவர்கள் என்று எந்த அளவின்படி மனுஷகுமாரன் தமது மகிமையின் சிங்காசனத்தில் விற்றிருக்கும்போது பிரித்து நியாயந்தீர்க்கப்போகிறார்? மத்தேயு 25 : 31 முதல் 46 வசனம் வரை கவனமாய் வாசிக்கவேண்டும். கிறிஸ்தவ வாலிபர் சிலர் தங்கள் விசுவாசம் இழந்து நாஸ்திகர்போல் திரும்பிவிடுவதற்கு ஒரு முக்கிய காரணத்தை நானறிவேன். தங்களுக்கு முன்பாக அவர்கள் அனுதினமும் கவனிக்கும் கிறிஸ்தவர்கள் அல்லது கிறிஸ்தவ ஊழியர் உள்ளான ஜீவியமும் அவர்களின் வெளிப்பேச்சும் ஒன்றிற்கொன்று ஒவ்வாமல் இருப்பதினாலேதான். உயர்ந்த கல்வி பெற்ற ஒரு கிறிஸ்தவ வாலிபனை அவன் தகப்பனார் ஆசிரமத்திற்கு அனுப்ப விரும்பினார், ஆனால் அவர் அவனைப்பற்றி எனக்கு தனியாக எழுதின கடிதத்தில் அவன் தன் கிறிஸ்தவ விசுவாசத்தை இழந்துவிட்ட நிலையைக் குறித்தும் மிகவும் வருந்தி எழுதினார். இவனுக்கும் ஒரு கிறிஸ்தவ பிரசங்கிக்கும் இதன் முன் தர்க்கம் நடந்ததாகவும் அறிந்தேன். பின்பு அந்த வாலிபன் என்னைப் பார்க்க வந்தான். அவனைப் பார்த்ததும் அவனை சிநேகிக்கத் தக்க சுபாவம் அவனிலிருந்ததாக பளிச்சென்று எனக்குத்

தென்பட்டது. ஐயா, உங்கள் ஆசிரமத்திற்கு நான் வந்தால் கிறிஸ்தவ விசுவாசப்பிரமாணங்களை நான் நம்புகிறேனென்று வாக்களிக்க வேண்டியதாயிருக்குமோ என்று வினவினன். தம்பி, எனக்கு உன் ஜீவியமே விசேஷ ஆசிரமம் வேதசாஸ்திர தர்க்கசாலையல்ல, உத்தம ஜீவியம் செய்பவர்களின் ஐக்கியமும் அன்பும் திவ்விய சக்தியும் விளங்கவேண்டிய வீடு அல்லது கிறிஸ்துவின் குடும்பம் என்ற கருத்தாய் உத்தரவு சொன்னேன் ஆசிரமத்தில் இப்போது அவனைவிட ஜெபத்திற்கு ஒழுங்காகவரும் தொண்டரில்லை அன்புடனும் சகோதர ஐக்கியத்துடனும் மிகுந்த அக்கரையாக தொண்டுசெய்து வருகிறன் அவன் தன் விசுவாசம் கெட்டதற்கு காரணத்தையும் ஒரு ஆசிரம சகோதரனிடத்தில் சொன்னன். அவன் படித்த கிறிஸ்தவ மிஷன் கல்லூரியில் தலைவர் முதலியோரின் உண்மையில்லாத போலி கிறிஸ்தவ ஜீவியமே. கிறிஸ்துமார்க்கத்தை நன்கறிந்த ஐரோப்பாவின் தற்சமய பாழான நிலைமைக்குக் காரணமும் இதல்லவோ? கடந்த 2 வருஷங்களாக காலம்சென்ற சார்ளி ஆன்டிரூஸ்மகாத்மா எங்கள் ஆசிரமத்தில் அதிகமாய் தங்கியிருந்தார். மத்தேயு 5:47 ம் வசனத்தில் கிறிஸ்து கேட்கும் கேள்வியை அவர் எங்களிடம் வற்புறுத்திக்கேட்டு மற்றவர்களைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷமாய் செய்கிறதென்ன? என்று கேட்டு வற்புறுத்துவார்.

தேசங்களைப் பாழாக்கும் யுத்த அழிச்சாட்டங்கள் நடைபெறும் இக்காலத்திலும் இந்த ஆசிரமம் இருப்பதினல் மனுஷருக்குள் மெய்ச் சமாதானம் உண்டாவதற்காக நாங்கள் என்ன விசேஷமாய் செய்கிறேமென்று எங்களை நாங்கள் கேட்டுணர்கிறேம் சண்டை, கட்சிகள், யுத்தங்களைத் தடுக்க நாங்கள் செய்யக்கூடியதென்ன? முதலாவது எங்கள் மூலையில் எங்கள் ஆசிரம ஜீவியத்திலேயே எங்கள் வேலையை ஆரம்பிக்க வேண்டும் என்று உணர்கிறேம். சண்டைகளுக்கு காரணம் நானென்கிற ஆணவமே என்று எங்கள் ஆசிரம சகோதரர்கள் நன்ருக உணரும்படி செய்ய முயல்கிறேம். இந்த "நான்", தனியே ஒருவனை சார்ந்ததாக இருக்கலாம். அல்லது என் ஜாதி, என் வருணம் என் தேசம் ஏகாதிபத்தியம், என்ற தன்னயம் விரிந்த மிகையான "நான்" தலைவிரித்து தாண்டவமாடலாம். சமயசம்பத்து, விவாகம் முதலிய இகத்தின் கவர்ச்சிகளை ஒருவன் துறந்தபின்கூட மேற்கூறிய துர் ஆணவம் ஒருவனை விடாது பற்றிக்கொண்டிருக்கலாம், ஆசிரமத்தில் எந்த சகோதரனுக்காவது இன்னெரு சகோதரனின் மேல் மன வருத்தம், கோபம் அல்லது ஏதாவது அன்புத் தாழ்ச்சி உண்டாக்கும் மன நிலை இருந்தால் சூரிய அஸ்தமன சந்தியாவுக்கு முன் அவனிடம் சென்று தனியே அவனிடம் பேசி சரிப்படுத்திக் கொள்ளும்படி சகோதரர்களுக்கு புத்தி செலுத்துவோம். தேசத் தலைவர்களும் இவ்விதமாகச் சந்தித்து தன்னயமற்ற அன்பின் ஆவியோடு கலந்தும் பேசிக் கொள்வார்களானல் உலகம் எத்துணை வித்தியாசமாகிவிடும். எங்க

ளில் ஒருவர் இந்த வருஷம் மகாத்மா காந்தி அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தபோது அவரும் பிரிட்டிஷ் தலைவர்கள் இந்திய விஷயங்களைக் குறித்து எங்களில் சிலரிடம் நேரே வந்து மாத்திரம் கலந்து பேசிக்கொள்வார்களானால் எவ்வளவு இலகுவாய் ஒருவர் மனதை ஒருவர் அறிந்து சமரசம் செய்துகொள்ளலாம் என்றார்.

ஒரு காரியம் ஆசிரமத்தில் என்னை மிக சந்தோஷப்படுத்தி உற்சாகமுள்ளவனுக்குகிறது. எங்கள் ஆசிரமத்தில் இளைய சகோதரருக்குள் ஏதாவது சமயங்களில் "நான்" என்ற ஆணவம் மேற்கொண்டு மனவருத்தம் ஏற்பட்டால், அது என் காதிற்கெட்டினால் என் சுகவீனம் அதிகரித்துவிடுமே என்று என் மேலுள்ள அன்பினால் தூண்டப்பட்டுப் பயந்து அவர்களே தங்களுக்குள் சமாதானம் ஆகிவிடுகிறார்கள் கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைக்கும் இந்த ஐரோப்பிய நாட்டாரும் தங்கள் ஆண்டவனும் சிலுவையில் அவர்களுக்காக உயிர்துறந்த அன்பின் நாதனுமாகிய இரக்ஷா பெருமானுக்கு மனவேதனையுண்டு பண்ணி அவரை வருத்துமே என்று பயந்து, தங்கள் "நான்" என்ற சுயநய ஆணவங்களை அடக்கி ஒழிப்பார்களென்றால், தேசத்திற்குத் தேசமுள்ள சம்பந்தம் எத்துணை உன்னத நிலையுள்ளதாகும்! "ஆனாலும் மனுஷ குமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ?" எனினும் ஆண்டவர் நாமத்திற்கு ஸ்தோத்திரம். பூமியில் பல இடங்களில் சிற்சில தீவுகள் போல தமது உத்தம பக்தரின் சகோதர ஐக்கியக் கூட்டுறவுகளை ஸ்தாபித்திருக்கிறார். இப்படிப்பட்ட ஆசிரமங்களோ, மற்றும் வேறு பெயர் தரித்த ஐக்கியக் கூட்டுறவுகளோ, இவைகளெல்லாம் உலகத்திற்கு உப்பு போல மனுஷரை வசப்படுத்திச் சாரமூட்டி அவருடைய அன்பின் இராஜ்ஜியம் வரவே வேலை செய்து வருகின்றன. கடல் தண்ணீரால் நிறைந்திருக்கிறது போல இவ்விதமாக பூமியும் கடவுளை அறியும் மெய்யறிவால் நிறைவதாக.

எனக்குத் தெரிந்தமட்டும், இந்தியாவில் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்ட கிறிஸ்தவ ஆசிரமம் திருப்பத்தூர் கிறிஸ்துகுல ஆசிரமமே. இது 1921 மார்ச்சு 7ந்தேதி ஸ்தாபிக்கப்பட்டதன்பின் பல கிறிஸ்தவ ஆசிரமங்கள் ஆரம்பித்திருக்கின்றன. பின் வந்த இந்த ஆசிரமங்கள் ஸ்தாபித்தவர்களில் பலருக்கும் திருப்பத்தூர் ஆசிரமம் ஸ்தாபித்தவர்களுக்கும் மிக நெருங்கிய சம்மந்தமிருந்திருக்கிறது. திருப்பத்தூர் ஆசிரமத்தால் சமுதாயத்திற்கு என்ன பிரயோஜனம் வந்திருக்கின்றதென்று கேள்விஎழும்பும்போது இந்த சத்தியத்தைக் கடவுளுக்குரிய நன்றியோடு ஞாபகப்படுத்திக் கொள்ளுவது நன்று.

1938-ம் வருஷம் தாம்பரத்தில் நடைபெற்ற அகில உலக கிறிஸ்தவ மகாநாட்டிற்கு நானும் அழைக்கப்பட்டிருந்தேன். சார்லி ஆண்டிரூஸ்

மகரிஷி வந்திருந்தார். பல தேசங்களிலிருந்து அங்கு வந்திருந்த பிரதிநிதிகளுக்குள் இந்திய ஆசிரமங்களைக் குறித்து அறிய மிக ஆவல் அக்கறை இருந்ததைக் கண்டோம். இதை நன்கு அறியும்படி ஒரு விசேஷித்த கூட்டமொன்று அவர்களில் சிலர் ஒழுங்கு செய்து சார்லி ஆண்டிரூஸ் மகாத்துமாவையும் என்னையும் அதில் பேசச் சொன்னார்கள். ஸ்காத்துலாந்து தேசத்தில் அயோனாதீவில் ஒரு சகோதர ஐக்கியக் கூட்டுறவை ஸ்தாபித்திருக்கும் மக்கிலாவுட் என்னும் ஒரு பெரியார் அக்கிராசனம் வகித்தார். நாங்களிருவரும் பேசியபின் தங்கள் ஆழ்ந்த சிந்தையையும் அக்கரையும் வெளிப்படுத்தி பல கேள்விகள் பலர் கேட்டார்கள். ஐரோப்பாவிலிருந்து வரும் புதிய மிஷனரிகள் சிலரை முதல் வந்தவுடன் அவர்கள் தகுதியைப் பரீட்சித்தறியவும் அவர்களைப் பயிற்சிக்கவும் இந்திய கிறிஸ்தவ ஆசிரமங்களுக்கு அனுப்புவது நன்று என்ற ஒரு தீர்மானமும் அந்த பெரும் மகாநாட்டில் எல்லாப் பிரதிநிதிகளும் அடங்கிய மகாசபையில் பிரேரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. மேல்நாட்டார் சமுதாய கட்டுப்பாடுகள் ஒழுங்குகளை முக்கியப்படுத்துகிறார்கள். இந்த ஆசிரமங்களோ ஆள் தத்துவங்களை முக்கியமாக மேன்மைப்படுத்துகிறது. ஆசிரமங்கள் சமுதாய கட்டுப்பாடு ஒழுங்குகளை ஆதரித்த ஒரு ஸ்தாபனமல்ல. ஜீவனுள்ள கற்களாகிய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டது. உள்ளான ஆள் தத்துவம் பரிபூரணமடைய ஜீவித்து வெளிவரும் சாதனை என்பதே ஆசிரமத்தின் மூலாதாரம்.

சாதனை என்றால் அகம் வெளியாகும் ஜீவசாதனை அல்லது நடக்கை என்பதாகும்.

“நாம் அனைவருங் கடவுளின் குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும் முற்றறிவிலும் ஒருமைப் பட்டவர்களாகிப் பூரண புருஷனாகும் வரைக்கும், கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்கு வந்தெட்டும் வரைக்கும்” இந்த ஆசிரமங்கள் வளர்ந்து விர்த்தி பெற்று வாழ்வதாக. எபேசியர். 4 : 12.

—0—

முடிவுரை

1936 ம் வருஷம் செப்டம்பர்மாதம் திருநெல்வேலி ஜில்லாவில் இருக்கும் குற்றாலத்தில் என் இளைய சகோதரி இன்னாசியம்மாள் கிருஷ்ணையாவுடன் தங்கி இளைப்பாறிக் கொண்டிருக்கும் நாட்களில் என் சரிதையை முதலாவதாக எழுத ஆரம்பித்தேன். ஆங்கிலத்தில் நான் எழுதிக்கொண்டிருந்த இதை எனக்கு மிக அருமையான முத்த சகோதரி மரியவியாகுலம் அம்மாளவர்கள் தமிழில் மொழி பெயர்க்க ஆரம்பித்தார்கள். அவர்கள் கடந்த 1939ம் வருஷம் அக்டோபர் 12ந் தேதி ஆண்டவனின் இளைப்பாறுதலில் பிரவேசித்துவிட்டபடியால் ஆங்கிலத்தில் எழுதியதை நானே தமிழில் திருப்ப நேரிட்டது. ஆனாலோ இப்படி செய்யும்போது அது இனி மொழி பெயர்ப்பாகவல்ல, ஒரு புதிய நூலாகவே மாறிவிட்டது. முன் மறைந்திருந்த பல காரியங்கள் பலத்த ஊற்றுப்போல் சுரந்து ஞாபகத்தில் எழும்பின. இதனால் ஆங்கிலத்தில் எழுதியவைகளைக் கூட திரும்பவும் மாற்றியும், கூட்டியும் எழுத நேர்ந்துவிட்டது.

என் சுகவீனத்தினிமித்தம் டாக்டர்கள் உத்தரவுப்படி கன்னியாகுமரியிலும், தென்காசிக்கருகிலுள்ள குற்றாலத்திலும் கொஞ்சங் குறைய 2 மாதங்கள் இந்த வருஷம் நான் தங்கி இளைப்பாறநேரிட்டது. தமிழில் என் சுய சரிதையை எழுதும் வேலையை பூர்த்தி செய்ய இந்த நாட்கள் நல்ல சமயமாயிருந்தன. இதைத் தமிழில் அச்சிடுவதில் என் இளைய சகோதரி இன்னாசியம்மாள் கிருஷ்ணையாவின் உதவி அதிகம். அவர்கள் உதவியில்லாதிருந்தால் இவ்வளவு சீக்கிரத்தில் அச்சிட்டு முடிக்க சாத்தியமாய் இருந்திராது. இதை நன்றியோடு நினைக்கிறேன். என் ஜீவியத்தில் என் சகோதரிகள் மூவரும் எனக்கு மிகுந்த உதவியாகவும் ஆசீர்வாதமாகவும் இருந்திருக்கிறார்கள்.

ஆசிரம சகோதரர்கள் மூவரும் ஒருவர் பின் ஒருவராக இந்த நாட்களில் என்னுடன் முறையே தங்கி என் சுகத்தை கவனித்தும் என் ஆத்மீக தோழராகவுமிருந்தார்கள். எனக்குதவியாக வந்த சின்ன அண்ணன் (டாக்டர் பேட்டன்) தம்பிமார்கள் தேவானந்தம் தாவீது, இராஜா சவரிராயன் இவர்கள் மூவரும் எனக்கு மிகுந்த ஆசீர்வாதமாயிருந்தார்கள், இவர்களால் எனக்குக் கிடைத்த உதவி அதிகம். இன்ப ஐக்கியத்திலும் ஜெபத்திலும், நல்லாலோசனைகளிலும் ஒருவரோடொருவர் கலந்துகொண்டதினாலே உண்டான ஆத்மீக நன்மைகளும் அனந்தம்.

கன்னியாகுமரியில் நான் சாயங்காலம் உலாவப்போகும் வேளைகளில் அங்குள்ள ஏழை மீன் படவர்கள் விசேஷமாக வாலிபர் சிறுவர்கள் என்னுடன் சேர்ந்துகொள்வார்கள். இந்த மீன் படவர்களெல்லாம் ரோமான் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள். கடலோரத்தில் சிற்ப

மாண்பு பொருந்திய ஒரு பெரிய ஆலயம் கட்டியிருக்கிறார்கள். இது கட்டுவதற்கு கஷ்ட ஜீவியம் செய்து, தாங்கள் ஏழைகளாயிருந்தாலுங் கூட தாராளமாக காணிக்கை கொடுத்துவந்தார்களாம். ஆனால் இவர்கள் பணத்தைப் பெற்றுக்கொண்ட சபை அதிகாரிகள் சரியான கணக்கு கொடுக்க மறுத்துவிட்டதால் இவர்களுக்குள் கலகம் உண்டாகி ஊரார் இரண்டு கட்சிகளாகப் பிரிந்துவிட்டார்கள். இந்த கலகத்தினால், கோயில் மூடப்பட்டு கடந்த பத்து வருஷங்களாக இங்கு பூசை நடக்கவில்லை. இந்த தங்களுடைய துயரங்களை என்னிடத்தில் விரிவாகச் சொல்லுவார்கள்.

இவர்கள் மிகுந்த கஷ்ட ஜீவனம் செய்பவர்கள். மூன்று மரத் துண்டுகளை இணைத்துக்கட்டிய கட்டுமரம் என்ற சிறு தோணிகளில், கடலின் பலத்த அலைகளையும் எதிர்த்து. தைரியமாய் நடுசமுத்திரம் செல்லுகிறார்கள். நடுஇரவில் புறப்பட்டு போகிறவர்கள் மறுநாள் பிற்பகல்தான் கரைக்குத் திரும்புவார்கள். அவ்வளவு நேரமும் கடலின் அலைகளால் மோதப்பட்டு, மிகவும் அசைவாடிக் கொண்டிருக்கும் கட்டு மரங்களில் நின்ற நிலையில்தான் நின்றுகொண்டேயிருப்பார்கள், பல தடவை மீன் கிடையாமல் மனச்சோர்வு ஆயாசத்துடன் கரைக்குத் திரும்புவார்கள். சில மாதங்களில் மீன்கள் அதிகமாய் அகப்படும். ஒரு கட்டு மரத்தில் சாதாரணமாக மூன்றுபேர் கடலுக்குள் செல்வார்கள். கட்டுமரத்தின் அமரமாகிய பின் பாகத்தை மிக சாமர்த்தியமாக கவனித்துக்கொள்பவன் இம்மூவரில் அதிக அனுபவமுள்ளவன் ஒருவன். பெரிய அலைகள் மோதும்போது அமரத்தைக் கவனிப்பதும், தவறி விழாதபடி தன்னை ஒரே நிலையில் காத்துக்கொள்ளுவதும் இலகுவான காரியமல்ல. என்னே இவர்கள் சாமர்த்தியம்! இவர்கள் மேல் நாட்டில் வெள்ளை மனிதர்களாகப் பிறந்திருந்தால், உயர் பதவியுள்ள கப்பல் மாலுமிகள், அல்லது வியாபார கப்பல்களில் உத்தியோகஸ்தர்களாக விளங்கியிருப்பார்கள். நமது ஜனங்களைச் சுதந்தரதிற்கு நடத்தும் தலைவர் எழும்புவார்களாக!

கன்னியாகுமரியில் மீன்படவர்கள் தாங்கள் கடல் செல்லும்போது நடக்கும் அனுபவங்களைப்பற்றிச் சொல்லுவார்கள். சில வேளைகளில் பலத்த காற்றினாலும் பெரிய அலைகளினாலும் இவர்கள் கட்டுமரமும் அதிலுள்ள ஆட்களும் சமுத்திரத்தின் தூரபாகங்களுக்குக் கொண்டு போகப்படுவார்கள். இப்படி உயிரிழந்தவர்களும் பலருண்டு சிற்சில வேளைகளில் கொஞ்சங்குறைய 100 மைலுக்கப்பாலுள்ள இலங்கைக் கரைக்குப் போய்ச் சேர்ந்துவிடுவார்களாம். சமுத்திரத்தில் பெரும் கொம்பஞ்சுறுக்கள், திமிங்கிலங்கள் முதலிய பயங்கரமான கடல் பிராணிகளைப் பார்த்திருக்கிறார்களாம். ஒரு நாள் அவர்கள் பிடித்துக் கொண்டுவந்த கொம்பஞ்சுறுவையும் நான் பார்த்தேன். இரு பக்கமும் பலத்த கூரான முட்கள் நிரம்பிய நீண்ட இந்த கொம்பை முன்னாலே வீசிக்கொண்டே இது வருமாம். ஒரு வெட்டுப் போட்டதென்றால் பலத்த சேதம் உண்டாகும். நான் அங்கு போவதற்கு சில மாதங்

களுக்கு முன் ஒரு திமிங்கிலம் ஏதோ காயப்பட்டு கடற்கரையில் வந்து கிடந்ததாம். ஏராளமான ஜனங்கள் இந்த காட்சியைப் பார்த்தார்களாம். ஏதோ ஒரு பிரிட்டிஷ் கப்பல் இந்த திமிங்கிலத்தை எதிரிகளின் மூழ்கப்பல் என்று தவருக எண்ணிச் சுட்டுவிட்டதாகப் பிரஸ்தாபம் என்னுடன் பேசிக்கொண்டிருந்த சில வாரங்களுக்கு முன் கரைக்கு 2 மைல் தூரத்திற்குள் ஒரு பெரிய திமிங்கிலம் பார்த்தார்களாம். இவர்களில் சற்று அனுபவமுள்ளவர்கள் திமிங்கிலத்துக்கருகில் போய் அதன் முதுகைத் தடவிக்கொடுப்பார்களாம். பார்ப்பதற்கு கடலின் நடுவிலுள்ள ஏதோ ஒரு பாறையான சிறு தீவுபோல் தோன்றுமாம். ஆனல் திடீரென்று கடலுக்குள் மூழ்கிவிடுமாம், இதன் பக்கத்தில் ஏராளமான மீன்கள் சூழ்ந்துகொண்டு இருக்குமாம். இதனல் திமிங்கிலம் காணப்படும் பாகங்களில் வலை வீசினல் ஏராளமான மீன்கள் அகப்படுமாம். இந்த பிரமாண்டமும் பயங்கரமுமான கடல் பிராணியைப் பார்க்கும்போது உங்களுக்கு பயமில்லையா? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் திமிங்கிலம் எங்களுக்கு ஒரு தீங்கும் செய்ததில்லை. அதனல் அதற்குப் பயப்பட அவசியமில்லை என்று சொன்னர்கள்.

நான் குற்றாலத்தில் இருக்கும்போது மலைப் பாகங்களில் உலாவப் போவேன். இம் மலைப் பிரதேசங்களில் அடர்ந்த வனங்கள் நிரம்ப உண்டு. இங்கு புலி, சிறுத்தை, கரடி முதலிய காட்டு மிருகங்களும் பல உண்டு தினந்தோறும் காலை முதல் மாலை மட்டும் இந்த மலைகளைச் சார்ந்த காடுகளுக்குள் பக்கத்தில் கிராமத்தில் வசிக்கும் ஏழை கிராமத்தார் தங்கள் மாடுகளை மேய்க்கச் செல்லுவார்கள். பகலெல்லாம் மாடுகளோடு தனியே இந்தக் காடுகளில் தங்கி மாலையில் திரும்புவார்கள். அவர்களிடத்தில் நான் "புலி சிறுத்தைகளை நீங்கள் பார்க்கிறதுண்டா?" என்று கேட்டேன். "ஆம் பார்த்திருக்கிறோம். மாடு கன்றுகளைப் பிடிக்க அவை வரும்." என்றர்கள். "உங்களுக்கு பயமில்லையா?" என்று வினவினேன். "எங்களுக்குப் பயமொன்றுமில்லை இம்மிருகங்கள் எங்களுக்கு ஒரு தீங்கும் செய்வதில்லை, மாடு கன்றுகளுக்கு அருகே அவைகள் வரும்போது நாங்கள் சத்தமிட்டால் அவைகள் ஓடிவிடும்," என்று தைரியமாய்ச் சொன்னர்கள்.

இவற்றை எல்லாம் ஏன் விவரமாகச் சொல்லுகிறேன்? இந்த ஏழை மக்களிடமிருந்து ஒரு அரிய பாடமொன்று கற்றுக்கொண்டதினலேதான். பெருங் கடலிலோ, வனங்களிலோ எங்கு சென்ருலும் இந்த ஏழை மக்கள் அங்குள்ள காட்டு விலங்குகள் குரூரமான பிராணிகளுக்குப் பயப்படுகிறதில்லை. இந்த காட்டு மிருகங்கள் இவர்களுக்கு தீங்கு செய்யாதென்கிற தைரியம் இவர்களுக்கு இருக்கிறது. பயம் இன்மையினிமித்தம் தன்னை நாகரீக மனுஷனென்று சொல்லிக் கொள்ளுகிற மனுஷன் தனியே செல்ல பயப்படும் இடங்களுக்குச் செல்ல இவர்கள் அஞ்சுகிறதில்லை. கடவுள் பேதைகளும், படியாதவர்களுமாகிய இவர்களுக்கு ஞானிகளுக்கும் விவேகிகளுக்கும் தெரி

யாத இரகசியத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். தீரநெஞ்சம் தீர்க்க மனமுமுள்ள இவர்கள் மனோ தைரியம் ஆச்சரியகரமானது!

குற்றாலத்தில் நான் இருக்கும்போது பாவநாசத்திற்கும் போயிருந்தேன். அழகிய பெரும் நீர்வீழ்ச்சியின் காட்சி இங்கு செல்பவர்களின் கண்களைக் கவரும். மலைகளிலிருந்து விழும் பேரருவியிலிருந்து சுரக்கும் நீரோட்டம்தான் தாம்பிரபரணி நதியின் ஆரம்பம். இங்கு திரண்டு, புரண்டு, உருண்டு தீவிரமாய் ஓடும் ஆற்றின் குளிர்ந்த நீரில் நான் மூழ்கிக் குளித்தேன். பல மீன்கள் என் உடம்பை நெருங்கி வாழ்த்துதல் கூற ஆரம்பித்தன. இதற்குச் சற்று கீழே பாவநாசத்தின் கோயிலுக்குக் கீழ் ஆற்றிற்கு இறங்கி வரும் பல படிகள் இருக்கின்றன. இப்படிகளில் ஒருவன் இறங்கி ஓடுகிற நீரைக் கிட்டியவுடன் ஏராளமான மீன்கள் பெரும் மந்தைபோல் கூட்டமாக அவன் பாதத்தின் அருகில் ஓடி வரும். ஒன்றின்மேல் ஒன்று விழுந்துகொண்டு அவனை வரவேற்றுக்கொள்ளும். கையை மாத்திரம் சற்று நீட்டினால் அவைகளில் ஏராளமான மீன்களைப் பிடித்துக்கொள்ளலாமென்பதுபோல் தோன்றும். பயமென்பது இவைகளுக்குச் சற்றேனும்கிலுமில்லை. ஏன்? இங்கு ஒருவரும் இவைகளைப் பிடிக்கிறதில்லை. இதற்கு மாறாக, பார்க்க வருகிறவர்கள், யாத்திரிகர் முதலியனர் கடலை முதலிய தின்பண்டங்களை இந்த மீன்களுக்குக் கொடுத்து உபசரிக்கிறார்கள்.

இன்னொரு காரியம் என் ஞாபகத்திற்கு வருகிறது. இந்த எங்கள் ஆசிரமத்தில் ஏராளமான காட்டுபுறாக்கள், கிளிகள் முதலிய பல பறவைகள், குரங்குகள், அணில்கள் முதலிய இப்படிப்பட்ட ஏராளமான விருந்தாளிகள் எங்களுடன் வசிக்கிறார்கள். குரங்குகளும், அணில்களும் இன்பமாக கூட்டாளிகள் அல்ல. எங்கள் மேசைகளில் நாங்கள் கடிதங்கள் வைத்திருக்கும் இழுப்பு பெட்டி அறைகளை (டிராயர்களை) இந்த அணில்கள் தங்கள் பிரசவஅறைகளாக மாற்றிக்கொள்ளுகின்றன. காகிதங்களைத் தங்கள் குட்டிகளை கிடத்திவைக்க மெதுவான படுக்கையாக ஒழுங்குபடுத்திக்கொள்ளுன்றன! குரங்குகளோ எங்கள் ஆசிரம தோட்டத்திலுள்ள பழவர்க்கங்களையும், வயல்களில் விளையும் கடலைக்கொட்டை, தானியங்கள் முதலியவற்றையும் தாராளமாக புசித்து அனுபவிப்பதுமல்லாமல், நாங்கள் வெளியே போயிருக்கும் நேரங்களில் சுருட்டப்பட்டிருக்கும் படுக்கைகளை அவிழ்த்து அதற்குள் ஏதாவது நாங்கள் ஒளித்து வைத்திருக்கிறோமா என்று தேட ஆரம்பித்துவிடுகின்றன! வைத்தியசாலையில், வியாதியஸ்தர் அவசர வேளைகளில் தொண்டர்களை அழைக்க வைத்திருக்கும் மணிகளையும் இந்தக் குரங்குகள் அடித்து எங்களை ஏமாற்றிவிடுகின்றன! மாலை சந்தியா வேளைகளில் ஜெபாலயத்திற்கு வெளியே நாங்கள் தியானத்திற்கு அமர்கையில் காட்டுப்புறாக்களும், கிளிகளும் கோபுரங்களில் அழகிய வடிவமாக ஒரு மாலைபோல் சாலைகோபுர உச்சியில் அமைக்கப்பட்டிருக்கிற சிங்கமுக சித்திரவேலை வடிவு

கட்டிடத்தில் உட்கார்ந்துகொள்ளும். சந்தியா தியானத்தில் இந்த இயற்கைத் தோழர்களின் கூட்டுறவு எங்கள் தியான இன்பத்தை அதிகரித்து, கடவுளை நாங்கள் ஸ்தோத்திரிப்பதற்கு எங்களைத் தூண்டி ஏவும். ஒருநாள் கோபுரத்தடியில் வீணைவாசிக்கப்படும் போது, கோபுரத்திலிருந்த கிளிகளில் ஒன்று வீணையின் தொனி கோபுரத்திற்கு ஏறும் திசைக்குத் தன் காதை திருப்பிக் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்ததை நாங்கள் பார்க்க ஆச்சரியமாயிருந்தது. இந்த ஆசிரமத்தில் மேற்கூறிய இயற்கையின் மக்களாகிய பிராணி களும் நாங்களும் இவ்விதம் நெருங்கி ஜீவிக்க ஏன் சாத்தியப்படு கிறது? ஒரு துப்பாக்கிச் சத்தம்கூட தங்களை பயமுறுத்தாது, தங்க ளுக்கு தீங்கு நேரிடாது, என்ற நிச்சயம் இவைகளுக்கிருக்கின்றன. இதுதான் காரணம் என்று நினைக்கிறேன்.

கடவுளின் மேலுள்ள விசுவாசத்தினாலும், அவரால் சிருஷ்டிக்கப் பட்ட பிராணிகளை நம்புவதாலும், எவ்வுயிரையும் தன்னுயிர்போல் எண்ணுவதினாலும் தெய்வ பக்தர்கள் "சிங்கங்களின் வாயை அடைத் தார்கள்" (எபிரேயர் 11: 33) தானியேல் மகாத்மா சிங்கக்குகையில் போடப்பட்டபோது அந்த சிங்கங்கள் அவருக்கு ஏதும் தீது செய்யா மலிருந்ததென்ன காரணத்தாலென்று இதனால் அறிந்து கொள்ளலாம். "சிங்கங்கள் என்னை சேதப்படுத்தாத படிக்கு கடவுள் தமது தூதனை அனுப்பி அவைகளின் வாயை கட்டிப்போட்டார்: அது ஏனென்றால் அவருக்கு முன்பாக நான் குற்றமற்றவனாய் காணப்பட்டேன், (தானியேல் 6:22.) எம்பெருமான் நாற்பதுநாட்கள் வனாந்தரத்தில் காட்டு மிருகங்களின் நடுவிலே சஞ்சரித்துக் கொண்டிருந்தார் என்று சுவிசேஷத்தில் வாசிக்கிறோமல்லவா? (மாற்கு 1:33) பிரான்ஸிஸ் மகாத்மா பறவைகளோடு விளையாடி தனது நெருங்கிய நண்பர்கள் போல் அவைகளைப் பாராட்டி நடந்துகொண்டதும் இதனால் நமக்கு விளங்கும்.

நமது இந்தியா தேசம் இப்பிரபஞ்சத்தின் சர்வசிருஷ்டிகளோடும் ஐக்கியமாக ஒத்துவாழ, தொன்று தொட்டு வாஞ்சித்துவருவது நமக்குத் தெரிந்த விஷயமே. பயம் எங்கேயோ அங்கே சந்தேகமும் சண்டையும் சுரக்கும். ஆனால் "பரிபூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்". அன்பு எங்கேயோ அங்கே ஒற்றுமையும் சமாதானமும் இருக்கும். ஆசிரமத்தில் அனுதினமும் அதிகாலை வேளையில் ஜெபா ராதனை நடந்து வருகிறது. இந்த ஆராதனை இறுதியில் நமது முற்பிதாக் கள் பக்தி விநயமாக சொல்லிய பின்வரும் வார்த்தைகளைச் சொல்லி முடிக்கிறோம். அதாவது:-ஓம்! சாந்தி, சாந்தி, சாந்தி! அனாதி முத லுள்ள கடவுளே, சமாதானம், சமாதானம், சமாதானம்! என்று அர்த்தமாகும். ஆனாலும் உலகத்தைப் பார்க்கும்போது சமாதானம் என்பதைக் காணோம். ஐரோப்பாவிலும் கிழக்கு ஆசியாவிலும் பயங்கர போர்கள், பகையும், குழந்தைகள், பெண்களைக்கூட ஆகாயத்திலிருந்து

வீசும் குண்டுகளினால் நாசமாக்கும் சம்பவங்களும் அனுதினமும் நடைபெறுகிறது. ரோமர் 8—19, 22. "கடவுளின் புத்திரர் வெளிப்படுவதற்குச் சர்வசிருஷ்டியானது பேராவலோடு காத்துக்கொண்டிருக்கிறது". இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தவித்து பிரசவ வேதனைப்படுகிறதென்பது நமக்குத் தெரியுமே. ஐரோப்பா கிறிஸ்துவின் இராஜ்ஜிய தரிசனம் கண்டு ஜனங்களை வசப்படுத்தி நடத்தும் உத்தம தலைவரில்லாமல் பாழாகிறது. கடவுளின் புத்திரர் வெளிப்பட்டு, மக்களை தெய்வ இராஜ்ஜிய பாதையில் நடத்த உத்தம நல் மேய்ப்பர் உன்னத தரிசனமுள்ளவர்கள் அவசியம்.

"சேர்ந்து சிதறுண்டலையும் ஆட்டுமந்தைத் திரள்போல்
ஓர்ந்து நோக்கில் உத்தம நல்மேய்ப்பனுமில்லாமல்
காய்ந்துவாடும் மக்கள் துயர்கண்ணுற்று நோக்குகையில்
சாய்ந்து சுகிப்பேனோ கண்ணீர் சிந்தாதிருப்பேனோ?"

எனக்கு இளைப்பாறுதலுக்காகக் கிடைத்த நாட்களில் ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதிக்கொண்டிருந்த சுய சரிதையை முடிக்க உதவியாயிருந்தது. காலம் சென்ற தீனபந்து ஆண்டிரூஸ் ஐயரவர்கள் நான் ஆங்கிலத்தில் எழுதியதை வாசித்து அதை எழுதுவதற்கு பல நல்லாலோசனைகள் சொன்னார்கள். ஜீவபாதையில் என்னை இதுகாறும் ஆதரித்து நடத்திவந்த ஆண்டவனின் அருஞ்செயல்களை, சாட்சியாக எனக்கு நெருங்கிய இஷ்டர்களுக்கு கூறும்படியாகவே முதலாவதாக இதை ஆரம்பித்தேன். தீனபந்து ஆண்டிரூஸ் ஐயரவர்கள் இதை வாசித்தபோது நான் இதை மற்றவர்களுக்கும் பிரஸ்தாபம் செய்யவேண்டுமென்று வற்புறுத்தித் தூண்டினார். அவர் உயிரோடிருந்தால் அவரையே இதற்கு முன்னுரை எழுதக் கேட்டிருப்பேன். ஆசிரமத்தில் இருக்கும் என் இளைய சகோதரரில் பலர் இதை எழுதுவதில் எனக்கு உதவியாயிருந்திருக்கிறார்கள். சின்ன அண்ணன் (டாக்டர் பேட்டன்) இதை வாசித்து எனக்கு பல நல்லாலோசனைகள் கூறியிருக்கிறார்கள்.

ஒருவன் தன் பழையகால ஜீவியத்தின் ஆத்மீக அனுபவங்களையே முக்கியப்படுத்தி, பழைய பண்டங்களின்மேலேயே தன் நம்பிக்கையை வைத்துப் பாராட்டிக்கொண்டுபோவது நன்மையாயிருக்காது. எனினும் கடந்த காலங்களின் அனுபவங்களையும், தெய்வன்பின் மகத்துவத்தையும், ஆண்டவரின் அரும்பெரும் நடத்துதலையும் ஒருவன் ஞாபகப்படுத்திக் கொள்ளுவது அவனுக்குத் தைரியத்தையும், பலத்தையும் கொடுக்கும். "என்னோடேகூட யெகோவாவை மகிமைப்படுத்துங்கள் நாம் ஏகோபித்து அவர் திருநாமத்தை உயர்த்துவோமாக.' (சங்கீதம். 34: 3.)

சவரிராயன் ஏசுதாசன்.

நல்லாயன் அச்சகம், மாரிகுப்பம், கோலார் தங்கவயல்.

டாக்டர் ஜேசுதாசன் அவர்களின்
வாழ்க்கை வரலாறு.

நாம் எல்லோரும் பெரியண்ணன் என்று அன்போடு போற்றிய டாக்டர் **ஜேசுதாசன்** அவர்கள் தம்முடைய வாழ்க்கை வரலாற்றை எழுதி வெளியிட்ட துணிவு உடையவர். அவர்கள் இவ்வுலகத்தில் 87 ஆண்டுகள் வாழ்ந்திருந்தார்கள். 1969 ஏப்ரல் வரையில் வாழ்ந்திருந்த பெரியண்ணன் 1958ம் ஆண்டு டிசம்பர் வரையில் தம் வரலாற்றை எழுதியுள்ளார். எஞ்சிய 10 ஆண்டுகளுக்கு அவருடைய வரலாற்றை அவர் எழுதவில்லை. ஆனால் 1964 செப்டம்பர் வரை அவருடைய நாட்குறிப்பு கிடைத்திருப்பது நம்முடைய நல்ல பேறு என்று கூற வேண்டும்.

பெரியண்ணன் தம் இளமையில் மேலை நாடுகளுக்குச் சென்று மருத்துவக் கல்வியைப் பயின்று பெரிய டாக்டர் பட்டம் பெற்றுத் தாய் நாட்டுக்குத் திரும்பியவர். இங்கு வந்த பின்னர் தம் வாழ்நாளில் பெரும் பகுதியை ஏழை மக்களின் நோய்களைப் போக்கும் மருத்துவராய்த் தொண்டுசெய்து கழித்தார். உடல் நோய்களைப் போக்கும் மருத்துவத்தில் பயிற்சிபெற்ற அவர் மக்களின் உள்ளத்து நோயையும் போக்கும் உத்தமராய் வாழ்ந்தார். அவருடைய இறுதி நாட்களில், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பின் பெருமையை மக்களுக்கு எடுத்துச்சொல்லி எல்லோரும் இந்த உலகத்தில் ஒரு தாயின் வயிற்றில் பிறந்த மக்களைப்போல், சாதி, சமய, நிற வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையாக, சமாதானமாக வாழவேண்டுமென்று மிகவும் விரும்பினர். போர் இல்லாத ஒரு சமாதான சமுதாயத்தில் அவர் நாட்டம் கொண்டிருந்தார்.

1949ம் ஆண்டு பெரியண்ணன் அவர்கள் ராஜா அண்ணனுடன் ஐரோப்பா கண்டத்தில் பல நாடுகளுக்குச் சென்று வந்தார். ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்வீடன், ஆஸ்ட்ரியா, இங்கிலாந்து முதலிய நாடுகளில் அவர் பயணம் செய்துவந்தார். ஜெர்மெனியில் ஹான்ஸ் ஹாய்பெல்டர் என்னும் டாக்டர் இவருடைய பழைய நண்பர். இவருடைய வீட்டில் ஒரு வாரம் தங்கினர். ஜெர்மனியின் தொழில் நகரமான சோலிங்கனில் எட்மண்ட் ரிபன்ட்ராஸ்ட் என்னும் நண்பர் வீட்டில் மூன்றுநாள் தங்கியிருந்தார். ராஜா அண்ணன் அவர்களை, தம்முடைய பழைய நண்பர்களுக்குப் பெரியண்ணன் இந்த சந்தர்ப்பத்தில் அறிமுகப் படுத்தி வைத்தார்.

இந்தப் பயணத்தில், எல்லா நாட்டு மக்களிடமும் சமாதான, அமைதி வாழ்க்கையைப் போதிப்பதே பெரியண்ணன் அவர்களின் பிரதான நோக்கமாக இருந்தது. குவேக்கர்ஸ் (Quakers) என்ற இயக்கத்தினர் பல கூட்டங்களை ஏற்பாடு செய்து, பெரியண்ணன் அவர்களை அவற்றில் பேசும்படி அழைத்தார்கள். காந்திஜீ அவர்கள் போதித்த அஹிம்சை மார்க்கத்தை இந்திய நாட்டு மக்கள் ஏற்றுக் கொண்ட விதத்தை அறிந்து கொள்ளும் ஆர்வமே அந்த நாட்டு மக்களின் மனத்தில் நிறைந்திருந்தது. காந்திஜீயின் அஹிம்சை வழிகளைப் பெரியண்ணன் அவர்களுக்கு விளக்கிக் கூறி வந்தார்கள்.

எப்போதும், எந்த நிலையிலும் மற்றவர்களுக்குத் தொண்டு செய்வதையே தம் குறிக்கோளாகப் பெரியண்ணன் கொண்டு வாழ்ந்தார், 1959ம் ஆண்டு தொடக்கத்தில் அவர்கள் குற்றாலத்தில் தம் ஆசிரமத்தில் தங்கியிருந்தார். அங்கு ஆசிரமத்தில் காவலாளியாகப் பணி செய்தவரின் குடும்பத்தில் ஒரு பெண் இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்த பின்னர் உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டாள். அவளுடைய சகோதரர் மாடசாமி என்பவர் இரவு 3-30 மணிக்கு வந்து பெரியண்ணனை எழுப்பி தம் சகோதரியை வந்து பார்த்துக் காப்பாற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அந்த இரவில் இருட்டில் பெரியண்ணன் சைக்கிளில் ஏறி அவர்களுடைய வீட்டுக்குச் சென்று வேண்டிய சிகிச்சைகளைச் செய்தார். அதுமட்டுமல்லாமல், குடும்பத்தாருடன் சேர்ந்து ஜெபம் செய்து ஆண்டவருடைய அருளையும் வேண்டினர். மனிதர்களுடைய தொண்டு எவ்வளவு தூய்மையானவை என்றாலும், ஆண்டவருடைய கிருபையினாலேயே அவைகள் வலிவுடையதாகும் என்பதை பெரியண்ணன் பூரணமாக நம்பினர்.

அங்கவீட்டிலிருந்து அந்த இரவில் திரும்பி வருகையில் பெரியண்ணன் சைகிளில் இருந்து தவறி கீழே விழுந்துவிட்டார். முதுகில் அடிபட்டது. அந்தக் காயத்தின் தன்மையை அவர் அப்போது உணரவில்லை. அன்று இரவே அவர் சென்னைக்குச் சென்று திருப்பத்துருக்கு திரும்பிய பின்னர் முதுகில் வலி அதிகமாய் விட்டது. இராணிப்பேட்டை ஆஸ்பத்திருக்குச் சென்றார். அங்கு டாக்டர் ஜுலியஸ் அவர்கள் பெரியண்ணனைப் பரிசோதனை செய்து பார்த்த பின்னர், வேலூர் C. M. C. ஆஸ்பத்திரியில் சேர்ந்தார். வேலூரில் சில நாள் சிகிச்சைபெற்றபின்னர் மீண்டும் ராணிப்பேட்டை சென்று பூரண குணமடையும் வரை அங்குத் தங்கியிருந்தார்.

1963ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7ம் தேதியில் காந்தியடிகளின் சேவா கிராமத்தில் சாந்திசேனை கவுன்சிலின் நிருவாகக் குழுக்கூட்டம் நடைபெற்றது. அமைதிப்பணி ஆற்றும் தொண்டர்களுக்குப் பயிற்சியளிக்கும் விஷயம் அக்கூட்டத்தில் ஆலோசனைக்கு வந்தது. அக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நாகப்பூருக்குச் சென்றிருந்த பெரியண்ணன் அவர்கள், அந்த விஷயத்தைக் குறித்துத் தம்முடைய

கருத்துக்களை ஒரு கட்டுரையாக எழுதி வைத்துக்கொண்டார்கள். இக்கட்டுரை, ஆலோசனையில் கலந்துகொண்டவர்களுக்குப் பெரிதும் உதவியாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

பெரியண்ணன் நாகப்பூர் சென்றிருந்தபோது, காந்தியடிகளின் அறவாழ்க்கையில் பயிற்சிபெற்ற அடியவர் திரு. அரியநாயகம் அவர் உடல் நலம் குறைந்து நாகப்பூர் மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரியில் (College Hospital, Nagpur) படுக்கையில் இருந்தார். திரு. அரிய நாயகம் அவர்களைப் பெரியண்ணன் அடிக்கடி சென்று பார்த்து வந்தார். காந்திஜீ நடத்திய தேசீய இயக்கத்தில் இந்தியக் கிறிஸ்துவர்கள் பூரண பங்கு பெறவில்லை என்று திரு அரியநாயகம் அவர்கள் கருதினர். அதைப்பற்றி அவர் ஏமாற்ற உணர்ச்சியும் பெற்றிருந்தார்.

1963ம் ஆண்டு இறுதியில் பெரியண்ணன் கோலார் தங்கவயலுக்குச் சென்றார். மாரிக்குப்பத்தில் உள்ள அவருடைய நண்பர் சாது சுந்தரமணியின் வீட்டில் தங்கினர். 1-12-1963 அன்று C. S. I. நல்லாயன் ஆலயத்தில் சிலுவைச் சின்னம் பொறித்த கொடி ஏற்றினர்கள். அந்த விழாவில் பெரியண்ணன் பேசும் வாய்ப்பு ஏற்பட்டது. கிறிஸ்து பெருமானின் கொடி, சிலுவையின் மூலமாக அவருடைய அன்பின் வெற்றிக்கு அடையாளமாகத் திகழ்கின்றது. ஆனல், அரசர்களின் கொடிகள் போரிலும், கொடுமையிலும் பெற்ற வெற்றுகளின் சின்னங்களாகும் என்று பெரியண்ணன் பேசினர்.

2—12—63 திங்கட்கிழமை இரவு மஸ்கம் C. S. I. கோயிலில், அமெரிக்க ஜனதிபதி ஜான் F. கென்னடியின் நினைவைப் போற்றும் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்குப் பெரியண்ணன் தலைமை தாங்கினர். அமெரிக்காவில் வெள்ளையருக்கும் நீக்ரோக்களுக்கும் இடையில் இருந்துவரும் வேற்றுமைகளைப் போக்குவதற்காக திரு கென்னடி அரும்பாடு பட்டார். தவிரவும் உலகத்து நாடுகளிடையேயும் சமாதானம் நிலவுவதற்காக உழைத்தார் ஜான் கென்னடியின் பல்வேறு உயர்ந்த பண்புகளைப்பற்றி பிராடெஸ்டன்ட் குருமார்களும். கத்தோலிக்க பாதிரியார்களும் பேசினர்கள். பெரியண்ணன் தமது தலைமை உரையில் கென்னடியைக் காந்திஜிக்கு ஒப்பிட்டுப் பேசினர், இந்து முஸ்லீம் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக காந்திஜீ தம் உயிரையே அர்ப்பணித்தது போல, அமெரிக்காவில் நீக்ரோக்கள் வெள்ளையரிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக கென்னடி தம் உயிரை நீத்தார் என்று பெரியண்ணன் பேசினர்.

கத்தோலிக்கர்களும், பிராடஸ்டென்ட் கிறிஸ்துவர்களும், ஹிந்துக்களும் பெரியஅளவில் அக்கூட்டத்திற்கு வந்திருந்தனர். பிராடெஸ்டன்ட் கோயிலில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் கத்தோலிக்க

பாதிரிமார்களும் பங்கேற்றது அந்தக் கூட்டத்தில் ஒரு சிறப்பு அம்ச மாக இருந்தது. கிறிஸ்துவ சமயத்தில் உள்ள பல்வேறு பிரிவினரும் ஒன்றாய் இணைந்து காட்டிய உணர்வு முதன்முதலாக அப்போதுதான் ஏற்பட்டிருந்ததால், அது ஒரு பெரிய உணர்ச்சிமிக்க அனுபவமாகப் பெரியண்ணன் அவர்களுக்கு விளங்கியது. இவ்வாறான ஓர் இணைப்பே பெரியண்ணன் அவர்களை மிகவும் கவர்ந்தது; அக்கூட்டத் திற்குத் தலைமை தாங்கவும் சம்மதிக்கச் செய்தது.

உலகத்தில் சமாதானம் நிலவவேண்டும் என்றும், இராணுவத் துக்காகச் செலழிக்கப்படும் கோடிக்கணக்கான ரூபாய்கள் ஏழை மக்களின் நல்வாழ்வுக்காகத் திருப்பப்படவேண்டும் என்றும் நல்லறி ஞர்கள் எல்லோரும் ஒருசேரக் கூறுகின்றார்கள். காந்தி அடிகள் இராணுவச் செலவுகளை முற்றிலும் எதிர்த்தார். ஆனால், இந்தியா விடுதலை பெற்றபின்னர் இராணுவச் செலவுகள் குறையவில்லை; பெரு கிக் கொண்டே போகின்றது. தவிர இந்தியாவில் பெண்களுக்கும் இராணுவப் பயிற்சி அளிக்கத் தொடங்கிவிட்டார்கள். பெண்களுக்கு ராணுவப்பயிற்சி அளிப்பதைப் பெரியண்ணன் தம்முடைய பேச்சிலும் எழுத்திலும் வன்மையாகக் கண்டித்துவந்தார். பெண்களுக்கு இராணு வப் பயிற்சி அளிப்பது இந்திய மரபுக்கு மாறானது; தாய்க்குலத்தின் மென்மைப் பண்புகளை அழித்துவிடும். அன்புள்ளத்தின் ஊற்றுக்காலை அடைத்துவிடும் என்று பெரியண்ணன் எண்ணினார்.

ஜெர்மனியிலுள்ள, பெரியண்ணன் அவர்களுடைய நண்பர், டாக்டர் ஹன்ஸ் என்பவரிடமிருந்து பெரியண்ணனுக்கு ஒரு கடிதம் வந்தது. கடந்த இரண்டு உலகப் போர்களில் ஜெர்மனி மக்கள் இராணுவ மய மாகிவிட்டார்கள் என்று உலகம் பழித்தது. ஆனால், அங்கே இளம் பெண்களுக்கு இராணுவ சேவையை அவர்கள் கட்டாயமாக்கவில்லை; இராணுவ ஆயுதங்களில் பெண்களுக்குப் பயிற்சியும் அளிக்கவில்லை. ஆனால், இந்தியாவில், மாணவிகளுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கப் படுகிறது. இதனை டாக்டர் ஹன்ஸ் அவர்கள் தம்முடைய கடிதத்தில் வருத்தத்தோடு குறிப்பிட்டிருந்தார்

இந்த உலகத்தில் சமாதானம் நிலைக்கவேண்டும்; எல்லா மக்களும் அன்பினால் பிணைக்கப்பட்டு சகோதரர்களாய் வாழவேண்டும் என்ப தில் பெரியண்ணன் அவர்களுக்கு எப்போதும் பேரார்வம் இருந்து வந்தது. அந்த நிலையில் இயேசு பெருமான் மீண்டும் இங்கு வந்து மானிட வர்க்கத்தின் இணையில்லாத் தலைவராய் ஆட்சி புரிவார். அந்த நாளை இங்கு விரைவாகக் கொண்டுவருவதற்கு நாம் முயற்சி செய்யவேண்டும். கடவுளிடம் அன்பு செலுத்தி, அவருடைய சேவையில் தம்மை அர்ப்பணித்துக்கொள்கின்ற இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக் கும் நிலையாக, குற்றாலத்தில் உள்ள "தேவசகாய வீடு" அமைய வேண்டும் என்பது பெரியண்ணன் அவர்களின் ஆவலாகும். பயிற்சி

பெற்ற இளைஞர்கள் மக்களிடம் சென்று அன்பு மார்க்கத்தைப் போதித்து கடுமையாக உழைப்பார்களானால், பரலோக சாம்ராஜ்யம் இங்கு அமையும் என்பது அவருடைய நம்பிக்கை.

இரயில்களிலும், பஸ் நிலையங்களிலும் பிச்சை எடுப்பவர்களைக் கண்டு பெரியண்ணன் மனம் நொந்தார். அவர்களில் பெரும்பாலோர், உழைத்து பிழைப்பதற்குரிய நல்ல உடல்களைப் பெற்றிருப்பவர்கள். பயனுள்ள வேலைகளில் அவர்களை ஈடுபடுத்துவது இயலாத காரிய மல்ல. அவர்களைப் பிச்சை எடுக்க விட்டிருப்பது அவர்களுக்கும் நல்ல தல்ல; நாட்டுக்கும் நல்லதல்ல; அரசாங்கம் முயற்சி செய்தால், இந்தப் பிரச்சினையைத் தீர்க்கமுடியுமே என்று அவர் அடிக்கடி சொல்லுவார்.

ரெவரண்ட் டாக்டர் பியர்ஸ் பீவர் என்பவர் கிறிஸ்துவ ஆசிரமங் களைப் பற்றி விரிவான ஆராய்ச்சி ஒன்று நடத்திக்கொண்டிருந்தார். அவர் திருப்பத்தூர் கிறிஸ்துகுல ஆசிரமத்துக்கும் வந்து சில நாட்கள் தங்கி இருந்தார். அவர் அங்குள்ள தொண்டர்களிடையே பேசினார். அவர் பேசியபின்னர் தொண்டர்கள் எழுப்பிய ஐயங்களுக்கும் கேள்வி களுக்கும் பதில் சொன்னார்.

சேவையின் லட்சியத்தில் ஒரு புதிய நோக்கை அளிக்கும் வகை யில் சில ஆலோசனைகளை டாக்டர் பியர்ஸ் வெளியிட்டார். அவைகள் பயனுள்ளவையாகவும், எண்ணத்தைத் தூண்டுபவைகளாகவும் இருந் தன. இந்துக்களை நம்மிடம் அழைத்து நம்முடைய கிறிஸ்துவ சமயத் தைப் பற்றி நாம் சொல்லுவதை அவர்கள் கேட்டுக்கொள்ளவேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். அதுபோலவே, அவர்களுடைய சம யத்தைப் பற்றி அவர்கள் சொல்லுவதையும் கேட்டுக்கொள்ள நாம் நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் நம்முடைய பிரார்த்தனைக் கூட்டங்களில் அவர்கள் வந்து கலந்துகொள்ளவேண்டு மென்று நாம் விரும்புவதானால், அதுபோலவே. அவர்கள் பிரார்த் தனை செய்யும்போது, அவர்களோடு இருந்து பிரார்த்தனை செய்வ தற்கும் நாம் ஒப்பவேண்டும். அவர்களைப்போல நாம் பாடி வழிபட வேண்டுமென்பதில்லை. அவர்களுடமிருந்து நம்முடைய வழியில் நாம் தியானம் செய்து, பிரார்த்தனை செய்யவேண்டும் என்று டாக்டர் பியர்ஸ் கூறினார். டாக்டர் பியர்ஸ் அவர்கள் வெளியிட்ட கருத்தில் அடங்கியுள்ள ஆழ்ந்த உணர்வுகளையும், பரந்த கோட்பாடுகளையும் பெரியண்ணன் பெரிதும் பாராட்டினார்.

சென்னையில் திருமதி. தம்புசாமி என்பவர் வயிற்றுக்கோளாறினல் நோயுற்றிருந்தார். அவர்கள் பிழைத்துக்கொள்ளும் நம்பிக்கை இல்லை யென்றும், மூன்று மாதத்துக்கு மேல் நீடிக்கமுடியாது என்றும் டாக் டர்கள் அவரிடம் சொல்லிவிட்டார்கள். பெரியண்ணன் சென்னையி லிருக்க நேரும்போது, நாள்தோறும் அந்த அம்மாளுடன் சேர்ந்து

பிரார்த்தனை செய்துவந்தார். ஒன்பது மாதங்கள் கழிந்தபின்னர் திருமதி தம்புசாமி குணமடைந்து, எழுந்து உலவும் சக்தி பெற்றார். "உலகம் அறிந்தென எண்ணுகின்ற காரியத்தைவிட மேலான பல காரியங்கள் பிரார்த்தனை செய்வதனால் கைகூடுகின்றன" கடவுளை நம்பிப் பிரார்த்தனை செய்வதன் மூலம் மனித உள்ளம் நம்பமுடியாதவற்றையெல்லாம் சாதிக்கமுடியும் என்பதனைப் பெரியண்ணன் உறுதியாக நம்பினார். இதனை நிரூபிக்கும் வகையில் அவருடைய அனுபவங்கள் பல இருந்தன. அவர் சிகிச்சை செய்த நோயாளிகள் பலருடைய திறத்திலும் இதனை அவர் உணர்ந்திருந்தார்.

கிறிஸ்துவ ஆலயங்களில் மேலைநாட்டு மரபுகளைப் பின்பற்றும் வழக்கத்தை விடுத்து, கிறிஸ்து பெருமானை இந்திய தோற்றத்தில் விளங்கச் செய்யவேண்டும் என்ற கருத்தை டாக்டர் பியர்ஸ் பீவர் சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசும்போது வலியுறுத்திக் கூறினார். அப்போது அந்தக் கூட்டத்தைத் தொடங்கிவைத்த பெரியண்ணன், திருப்பத்தூரில் கிறிஸ்து குலஆசிரமத்தின் நோக்கங்களையும், செயல் முறைகளையும் விளக்கிச் சொன்னார், ஆசிரமத்தில் நிலையான அங்கத்தினர்களாக இருப்பவர்கள் பிரும்மச்சாரிகளாக இருக்கவேண்டிய அவசியத்தையும் விளக்கினார். அப்போது பிரும்மச்சாரியம் என்பதற்கு அவர் கொண்டிருந்த உன்னதமான அர்த்தத்தை எடுத்துச் சொன்னார். பிரும்மச்சாரியம் என்பது திருமணம் செய்துகொள்ளாமலிருப்பது மட்டுமல்ல, ஒருவர் தம்முடைய வீடு, வசதிகள், சொத்து, சுகம் புகழ் எல்லாவற்றையும் அன்பாக துறந்துவிடவேண்டும் என்று அவருடைய உள்ளத்தில் தாமாக மேலோங்கி எழும் தூண்டுதலாகும் என்று பெரியண்ணன் விவரித்துக் கூறினார்,

கிறிஸ்துகுல ஆசிரமத்தில் 43-வது ஆண்டு விழா 7-3-64ல் நடைபெற்றது. ஜெபாலயக் கூட்டத்தில் அன்று பேசிய பெரியண்ணன், ஆசிரமவாசி, தன்னுடைய வாழ்க்கையில், இயேசுபெருமானின் தூய அன்பு வாழ்க்கை பிரதிபலிக்குமாறு நடக்கவேண்டும் என்று வலியுறுத்தினார். உலக சுகங்களையெல்லாம் துறந்து கிறிஸ்துநாதரின் அன்புநெறிக்கு மற்றவர்களையும் ஈர்க்கும் சக்திபெறவேண்டும் என்று கூறினார்.

மாலையிலும், இரவு நேரங்களிலும் கிறிஸ்துகுல ஆசிரம வழியாக மக்கள் கூட்டம் கூட்டமாகத் திருப்பத்தூருக்குச் சென்று சினிமா பார்த்துத் திரும்பிப் போவதைப் பெரியண்ணன் பல நாட்கள் பார்த்து உள்ளம் நொந்தார். சினிமா பார்ப்பதனால் மக்களுக்கு அறிவு வளர்ச்சி ஏற்படுவதில்லை; மக்களின் உள்ளத்தில் ஆழ்ந்து கிடக்கும் தீய உணர்ச்சிகளே கிளர்ந்தெழுகின்றன, என்று வருந்துவார். புகை பிடிக்கும் பழக்கம் வளர்ந்து வருவதை அவர் உணர்ந்து வருந்தினார். இளைஞர்கள் பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கவலையூட்டும் பிரச்சினை ஆகிவிட்டார்கள் என்பதனை உணர்ந்து வருந்தினார்.

இயேசுநாதரைப் போற்றித்தொழும் பல்வேறு வகுப்பினரிடையே உள்ள வேற்றுமைகளையெல்லாம் பெரியண்ணன் உள்ளத்தில் முழுவதும் நீங்கிவிட்டிருந்தன. ஆண்டவருடைய மக்கள் அனைவரிடத்திலும் ஆன்மீகத் தோழமை கொள்வது ஆனந்தமானது; தெய்வீகமானது என்று பெரியண்ணன் எண்ணினர். இந்து, முஸ்லீம் ஆகிய எல்லோரிடத்திலுமே அவர் இவ்வாறே எண்ணியிருந்தார்.

1964 ஜூலையில் பெரியண்ணன் இலங்கைக்குச்செல்ல முயற்சி செய்தார். ஆனால், அவர் அங்குச்செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. "கடவுளின் சித்தமே சரியானது; நன்மையானது" என்று உணர்ந்தவராதலால், பெரியண்ணனின் மனம் அதைக்குறித்து வருந்தவில்லை; அவர் அமைதியாகவே இருந்தார்.

கடவுளின் இருப்பை மறந்த இந்த வாழ்க்கையிலும் உண்மையான அன்பைப் பேணும் இளைஞர்கள் ஒருசிலராவது இருக்கின்றனர் என்பதை உணர்ந்து பெரியண்ணன் மகிழ்வடைவார் இருண்ட இவ்வுலகத்தில் இது ஒளிவிடும் நட்சத்திரமாக விளங்குகின்றது என்று சொல்லுவார்.

1964 செப்டம்பரில், சமயநெறி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் சிலர் கிறிஸ்துகுல ஆசிரமத்துக்கு வந்திருந்தார்கள். இந்தியாவில் பல்வேறு மொழி பேசுகின்ற பிரதேசந்திலிருந்து அவர்கள் வந்திருந்தார்கள். ஸ்வீடன் நாட்டைச்சேர்ந்த ஒருவரும் இருந்தார். ஜெர்மனி நாட்டைச்சேர்ந்த ரெவரண்ட் டாக்டர். உகால்டு கிராபே (Rev. Dr. Hugald graffe) அவர்களும் இவர்களோடு வந்திருந்தார். நாள்தோறும் இவர்களுடன் விவிலிய (Bible) நூலில் ஒரு பகுதியைப் படிப்பதும், சுற்றுப்புறமுள்ள கிராமங்களுக்கு இவர்களை அழைத்துச் சென்று வருவதுமாக பெரியண்ணன் இருந்தார். அந்த இளைஞர்கள் விவிலிய நூலைப் படிப்பதிலும், தெய்வீக பேச்சுக்களிலும் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தார்கள்.

1964 அக்டோபரில் குற்றாலத்தில் இருக்க, பெரியண்ணன் விரும்பினர். அக்டோபர் 2ம் தேதி காந்திஜீயின் பிறந்த நாளாகையினால், அவருடைய எண்ணத்தில், அரசியலிலும், சமுதாயத்திலும் காந்திஜீ போற்றி வந்த தூய்மை இயற்கையாக எழுந்திருக்கவேண்டும். சமுதாயத்தில் அரசியல், சமயத்தலைவர்கள் தூயோராகவும், சுயநலமற்றவராகவும் இருக்கவேண்டுமெனக் கடவுளின் அருளை வேண்டினர்; மக்களிடத்தில் உண்மையான அன்புடையவர்களாக இருக்க அவர்கள் தூண்டப்படவேண்டும் என்று பிரார்த்தனை செய்தார்.

பெரு முயற்சிக்குப் பின்னர் 1964 ஆகஸ்டில் இலங்கைக்குச் சென்று 20 நாட்கள் தங்கியிருக்க பெரியண்ணனுக்கு அனுமதி கிடைத்தது. இலங்கைக்குப் புறப்படுமுன், இண்டியன் ஓவர்சீஸ் பேங்கில்

கல்லூரி (Indian Overseas Banking College) முதல்வர் திரு. வேத முத்து அவர்கள். தம்முடைய மாணவர்கள் கூட்டத்தில் பேசுமாறு பெரியண்ணனைக் கேட்டுக்கொண்டார். பாங்குத் தொழிலில் ஈடு படவிருக்கும் இளைஞர்களிடம் பேசுவது இதுவே முதன் முறையான தால், பெரியண்ணனுக்கு இது ஒரு சிறப்பான வாய்ப்பாக இருந்தது. "பணம் - அதன் அபாயங்களும் அதனால் ஏற்படும் சலுகைகளும்" என் பது பற்றிப் பேசினார். பணத்தைக் கையாளுவதில் மிக விழிப்போடு இருக்கவேண்டும்; தவறினால் அது மரணபாயத்தையும் உண்டாக்கும் என்று உதாரணங்களுடன் பேசிப், பணத்தின் மீதான ஆன்மீக நோக்கை விவரித்தார்' பொதுப் பணங்களைக் கையாளும் வாய்ப் புள்ளவர்கள் எவ்வாறு மனச்சாட்சிக்குப் புறம்பாகாமல் பணத்தைக் காப்பாற்றிச் செலவுகளைக் கணக்கெழுதுவதில் விழிப்புடனிருக்க வேண்டுமென்றும், அவர்கள் கடைபிடித்தொழுகும் தூய வழியைப் பொறுத்து ஆன்மீக வளர்ச்சியும் அவர்களுக்கு உண்டு என்று காந்திஜி குறிப்பிடுவதையும் நினைவு படுத்தினார். எதிர்காலத்தில் பாங்கியின் அலுவலராகக் கூடிய அந்த இளைஞர்கள் பெரியண்ணன் பேச்சை மரி யாதையுடனும், கவனத்தோடும் கேட்டார்கள்,

யாழ்ப்பாணத்தில், இனுவில் என்ற இடத்தில் உள்ள கிறிஸ்து சேவா ஆசிரமத்தின் வெள்ளி விழா 1964 ஆகஸ்ட் 21, 22 தேதிகளில் நடைபெற்றது. அந்த விழாவில் பெரியண்ணன் கலந்துகொண்டார். மாலை நடைபெற்ற பெரிய பொதுக்கூட்டத்தில் பெரியண்ணன் பேசி னார். 1921ல் திருப்பத்தூரில் முதல் முதலாக கிறிஸ்துவ ஆசிரமம் தொடங்கியதிலிருந்து கிறிஸ்துவ ஆசிரமங்கள் அனைத்தும் எல்லா இனத்தவரும், எல்லா நாட்டவரும் கிறிஸ்துவினிடத்தில் இணைந்து ஒன்றுபட்டிருக்கப் பாடுபட்டு வருகின்ற ஒற்றுமையைக் குறித்துப் பெரியண்ணன் பேசினார்.

கிறிஸ்துவர்களின் விவசாயக் குடியிருப்பான "நவஜீவனை" 26-8-64 ல் பெரியண்ணன் சென்று பார்த்தார். இங்கு இளைஞர்களுக் குப் பயிற்சி அளிக்கிறார்கள். 28-8-64ல் குருங்கல்லா ஆசிரமத்தைப் பார்த்தார். தென்னந்தோப்பினிடையே அமைந்த இந்த ஆசிரமம் தியானத்துக்கு உகந்த இடமாகத் திகழ்கிறது.

53 ஆண்டுகளுக்கு முன்னர் பெரியண்ணன் ஒரு அவுஸ் சர்ஜனை அவருடைய வேலையைத் தொடங்கிய அரசாங்கப் பொது மருத்துவ மனைக்கு தம்பி ராஜா என்பவருடன் சென்றார். திருப்பத்தூர் ஆசிரமத் தில் முதல் தொண்டர்களில் ஒருவராகப் பணிசெய்த டாக்டர் விக்டர் நாகநாதன் என்பவரைக் காண்பதே அங்குப் பெரியண்ணனின் பிர தான நோக்கம். அவரைக் கண்டு கை குலுக்கியபோது, அவர் பேரா னந்தம் அடைந்தார். பெரியண்ணன் கைகளை அவர் பிடித்துக்கொண்டு முத்தமிட்டபோது அவருடைய கண்கள் ஆனந்தக் கண்ணீராகச் சொரிந்தது.

அந்த மருத்துவ மனையில், பெடரல் கட்சியின் தலைவர் திரு. செல்வநாயகம் அவர்களைப் பெரியண்ணன் கண்டு பேசினர். திரு. செல்வநாயகம் காந்திஜீயை நினைவு கூர்ந்தார். இலங்கை வாழ் இந்திய வம்சா வழியினர்களின் உரிமைகளை திரு. செல்வநாயகம் ஆதரித்தார்.

ஒருநாள் மாலை இலங்கையில் கடற்கரை ஓரத்தில் பெரியண்ணன் தனியே தியானத்தில் இருந்தபோது, அங்கு ஓர் இளைஞர் வந்தார். அவர் பெரியண்ணனிடம் தம் உள்ளத்தைத் திறந்து பேச விரும்பினர் தம் குடும்பக்கஷ்டங்களையெல்லாம் விரிவாக எடுத்துச்சொன்னர். பெரியண்ணன் அந்த இளைஞருக்கு ஆறுதல் சொல்லி, அவருடைய துன்பங்கள் நீங்க பிராத்தனை செய்தார். அவர் பெயர் கிருபநாதன். அவர் ஒரு தமிழ்க் கிறிஸ்துவர். பெரியண்ணனுக்கு இது ஓர் அதிசியமான அனுபவமாக இருந்தது. 82 வயதை நெருங்கிக் கொண்டிருந்த பெரியண்ணன், கடவுள் தமக்கு ஓர் ஆன்மீகப் புத்திரனை அளித்திருப்பதாக எண்ணினர். மீண்டும் இம்மண்மீது சந்திக்கவில்லையானல், நாம் தேவலோகத்தில் ஒன்ருக இணைந்திருப்போம் என்று பெரியண்ணன் அந்த இளைஞரிடம் சொல்லியனுப்பினர்.

1-9-1964 ல் பெரியண்ணன் கண்டிக்குச் சென்ருர். மாலையில் பல் கழகக் கட்டடங்களையும், பிரார்த்தனைக் கூடங்களையும் சுற்றிப் பார்த்தார், அந்த இடம் முழுவதும் மிகவும் அழகாய் இருந்தது. குன்றுகளும் காடுகளும் சூழ்ந்திருந்தன். மஹாவள்ளகங்கா அருகே ஓடிக்கொண்டிருக்கின்றது.

3-9-64ல் மட்டக்கிளப்புக்குச் சென்ருர். மஹாவள்ளகங்கா கடலில் கலக்கும் அழகிய காட்சியைக் கண்டார். அழகான குறிஞ்சிநிலம் கண்களைக் கவர்ந்தது. அங்கே பெரியண்ணன் பேரானந்தத்தில் மூழ்கிக் கவிதை பாடத் தொடங்கிவிட்டார்.

6-9-64ல் சென்னைக்குத் திரும்பி 8-9-64ம் தேதி திருப்பத்தூர் ஆசிரமத்தை அடைந்தார்.

8-9-64ல் பெரியண்ணனுடைய பிறந்தநாள் விழாவைக் கொண்டாடியபோது, இளைஞர்கள் சிலர் ஒரு புதிய பெட்டியை அன்பளிப்பாகக் கொடுத்தார்கள். முதிர்ந்த வயதில் பெரியண்ணன் அடிக்கடி பயணத்தை மேற்கொள்ளுவதை அனுதாபத்துடன் எணணிய இளைஞர்களுடைய உள்ளத்தில் பெட்டியின் நினைவு வந்ததுபோலும்.

பெரியண்ணனிடத்தில் இளைஞர்கள் கொண்டுள்ள அன்பைப் பற்றியும், இளைஞர்மீது பெரியண்ணனுக்குள்ள செல்வாக்கைப் பற்றியும் சின்னண்ணன் டாக்டர் பேட்டன் அவர்கள் மிக அழகாகக் குறிப்பிட்டுப் பாராட்டினர்கள்

13-9-64 ல், "மரணமற்ற பெருவாழ்வும், ஏசுவின் மீட்சியும்" என்ற பொருளைக்குறித்துப் பெரியண்ணன் ஆசிரம ஜபாலயத்தில் பேசினார். வானத்திலும் மண்ணிலும் உள்ள தூயோர்களின் சேர்க்கையில் காணும தெய்வீக இணைப்பு எவ்வளவு இனிமையானது என்று அவர் எண்ணிக் கொண்டிருந்தார்.

நல்லாயன் அச்சகம், மாரிகுப்பம், தங்கவயல்.